2981

T.N.L.A. Debates

official Report

Vol 41 NO 1

27th April 1987

V2l1,31 N87
N87·41·1
136526

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் : திரு. சுந்தர் லால் குரானா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2. | நிதி அமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. | உணவு அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 8. | வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 9. | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 10. | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. | வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. | பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |



# உள்ளடக்கம்

27—4—1987


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். . | i—ii |
| Personnel of the Government of Tamil Nadu. . | iii—iv |
| தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி) . . . . | vii—viii |
| தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியல் (அகர வரிசைப்படி) . . | ix—xvii |
| 1. இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப் படுதல்—பொது விவாதம் . . . . | 1—70 |
| *திரு. வை. பாலச்சந்திரன் . . . . | 1—3 |
| திரு. கு. தமிழரசன் . . . . | 3—7 |
| திரு. கே. முத்துவேல் . . . . | 7—9 |
| திரு. அ. கா. அ. அப்துல் சமத் . . | 9—13 |
| *திரு. கே. சுப்பராயன் . . . . | 13—20 |
| *திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் . . . . | 20—24 |
| *திரு. கு. ரமணி . . . . . . | 24—34 |
| திரு. கி. மனோகரன் . . . . | 34—47 |
| திருமதி டி. யசோதா . . . . | 49—57 |
| மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் . . | 57—70 |
| 2. வரவு-செலவுத் திட்டம், 1987-88—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) | |
| (அ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் . . . . . . | |
| (ஆ) கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு . . . . . . | 70—134 |
| மாண்புமிகு திரு சு. முத்துசாமி . . | 70, 71, 115—133 |
| *திரு. ஆர். எஸ். ஆறுமுகம். . . . . | 72—78 |
| திரு. கே. உச்சி . . . . . . | 78—85 |
| திரு. ச. குமரகுருபர ராமநாதன் . . | 86—92 |
| *திரு. ஆ. பிரேம்குமார் . . . . | 93—101 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் . . . . | 101—110 |
| திரு. எஸ். என். இராமசாமி . . | 111—115 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் . . | 134—136 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR: THIRU SUNDAR LAL KHURANA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. The Chief Minister. .. | Hon. Dr. M. G. Ramachandran. |
| 2. The Minister for Finance. | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food. | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture. | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health. | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport. | Hon. Thiru S. Muthusamy. |
| 8. The Minister for Housing and Handlooms. | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V. V. Swaminathan. |
| 10. The Minister for Noon Meal, Social Welfare and Khadi. | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi-Dravidar Welfare. | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works. | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செம்மலை

திரு. டி. ஆர். வேங்கடரமணன்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| பத்மநாப நம்பியார், திரு. பி.எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| ஸ்ரீனிவாசன், திரு. சா., பி.எஸ்.ஸி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஸ்ரீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ., .. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. வ.சா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா.கு., பி.ஏ. ... | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| தம்பி ஐயங்கார், திரு. எஸ். | .. | தலைமை நிருபர் (பேரவை) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **அ** | | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன், திரு. கே. | .. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | .. | இளையான்குடி |
| **ஆ** | | |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி, திரு. | | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம், திரு. அ. | .. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச்.ஜி. | .. | பெண்ணாகரம் |
| 15. ஆறுமுகம், திரு. ஆர்.எஸ். | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 16. ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்-2 |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | .. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன், திரு. மு. | .. | உளுந்தூர்பேட்டை |
| **இ** | | |
| 20. இரகுபதி, திரு. கோ. | .. | காட்பாடி |
| 21. இரத்தினம், திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு, திரு. செ. | .. | முசிறி |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். | .. | அரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ச—தொடர்ச்சி. | |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் (செ.வ.) |
| 77. சித்தன், திரு. என்.எஸ்.வி. | .. | திருமங்கலம் |
| 78. சிந்தன், திரு. வி. பி. | .. | வில்லிவாக்கம் |
| 79. சிவக்குமார், திரு. ஆர். | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 80. சிவக்குமார், திரு. எம். | .. | கூனூர் (செ.வ.) |
| 81. சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம் |
| 82. சிவப்பிரகாசம், திரு. சீ. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 83. சிவராமன், திரு. எஸ். | .. | சின்னசேலம் |
| 84. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 85. சின்னக்குழந்தை, திரு. மு. | .. | ஆரணி |
| 86. சின்னசாமி, திரு. வே.கு. | .. | பவானிசாகர் |
| 87. சின்னராசு, திரு. க.இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 88. சின்னராசு, திரு. மா. | .. | மேட்டுப்பாளையம் |
| 89. சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவன்கோடு |
| 90. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | | திருச்செந்தூர் |
| 92. சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை |
| 93. சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 94. சுப்புராயர், திரு. சி. | .. | கம்பம் |
| 95. சுவாமிநாதன், திரு. வி.வி. | .. | புவனகிரி |
| 96. செங்காளியப்பன், திரு. ஆர். | .. | சிங்காநல்லூர் |
| 97. செங்கோட்டையன், திரு. கு.அ. | | கோபிச்செட்டிப் பாளையம் |
| 98. செங்கோட்டையன், திரு. பெ. | | கபிலர்மலை |
| 99. செம்மலை, திரு. செ. | .. | தாரமங்கலம் |
| 100. செல்லமுத்து, திரு. எம். | .. | திருவாரூர் (செ.வ.) |
| 101. செல்லப்பா, திரு. வி.கோ. | .. | கடலூர் |
| 102. சேகர், திரு. கே.பி.கே. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 103. சொர்ணலிங்கம், திரு. கா. | .. | திருவாடானை |
| 104. சோனைராசு, திரு. க. | .. | மருங்காபுரி |
| 105. சௌந்திரராஜன், திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம் |
| 106. சௌந்திரராஜன், டாக்டர் கே. | .. | தியாகராயநகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ஞ | |
| 107. ஞானசுந்தரம், திரு. சா. | .. | மன்னார்குடி |
| | ட | |
| 108. டேனியல்ராஜ், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| | த | |
| 109. தங்கமணி, திரு. மு. | .. | மாயூரம் |
| 110. தங்கமணி, திரு. கே.எம். | .. | திண்டிவனம் |
| 111. தங்கராசு, திரு. ஏ. | .. | குறிஞ்சிப்பாடி |
| 112. தங்கராசு, திரு. செ. | .. | மங்களூர் (செ.வ.) |
| 113. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 114. தங்கவேலு, திரு. வி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 115. தமிழ்மணி, திரு. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 116. தமிழரசன், திரு. கு. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117. தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 118. தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 119. தியாகராசன், திரு. ஆர். | .. | விருத்தாசலம் |
| 120. திருஞானம், திரு. பி.ஆர். | .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 121. திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 122. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | .. | உடுமலைப்பேட்டை |
| 123. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | .. | மொரப்பூர் |
| 124. தீர்த்தராமன், திரு. ப. | .. | பாலக்கோடு |
| 125. துரை அன்பரசன், திரு. | .. | நெல்லிக்குப்பம் |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | தஞ்சாவூர் |
| 127. துரை கோவிந்தராசன், திரு. | .. | திருவையாறு |
| 128. துரைசாமி திரு. சைதை சா. | .. | சைதாப்பேட்டை |
| 129. துரைராசு, திரு. எஸ்.பி. | .. | காரைக்குடி |
| 130. துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 131. தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை சென்ட்ரல் |
| 132. தேவராஜ், திரு. வி.எம். | .. | வேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **ந** | | |
| 133. நடராசன், திரு. ஆ. | .. | பேரூர் |
| 134. நரசிம்ம பல்லவன், திரு. க. | .. | உத்திரமேரூர் |
| 135. நரசிம்மன், திரு. பூ.மு. | .. | பள்ளிப்பட்டு |
| 136. நல்லமுத்து, டாக்டர் க. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நல்லுசாமி, திரு. என். | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 138. நாச்சிமுத்து, திரு. கே.பி. | .. | மேட்டூர் |
| 139. நாராயணன், திரு. பு.கோ. | .. | பவானி |
| 140. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | | ஆத்தூர் |
| **ப** | | |
| 141. பஞ்சவர்ணம், திரு. வி.எஸ். | .. | அருப்புக்கோட்டை |
| 142. பட்டாபிராமன், திரு. செ. | .. | திருவள்ளூர் |
| 143. பரமசிவம், திரு. பா.ந. | .. | பல்லடம் |
| 144. பழனி, திரு. த. | .. | ஆற்காடு |
| 145. பழனிச்சாமி, திரு. கா.செ. | .. | காங்கேயம் |
| 146. பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 147. பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மாதேவி |
| 148. பாண்டுரங்கன், திரு. மு. | .. | கலசப்பாக்கம் |
| 149. பாப்பா, சுப்பிரமணியன் திரு. | .. | குத்தாலம் |
| 150. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | .. | திருவொற்றியூர் |
| 151. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 152. பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி |
| 153. பாலகிருஷ்ணன், திரு. வி. | .. | சிவகாசி |
| 154. பாலச்சந்திரன், திரு. வை. | .. | பத்மநாபபுரம் |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. க. | .. | சீர்காழி (செ. வ.) |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | | அம்பாசமுத்திரம் |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. | | வேடசந்தூர் |
| 158. பாலாஜி, திரு. கே. | .. | காஞ்சிபுரம் |
| 159. பாலுச்சாமி, திரு. ஏ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 160. பாலுசாமி, திரு. அ. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **ப—தொடர்ச்சி** | | |
| 161. பிரணவநாதன், திரு. அ. | .. | கடலாடி |
| 162. பிரேம்குமார், திரு. ஆ. | .. | திண்டுக்கல் |
| 163. புருசோத்தமன், திரு. எஸ். | .. | அரியலூர் |
| 164. புஷ்பராசு, திரு. த. | .. | திருமயம் |
| 165. பெரியசாமி, திரு. அ. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 166. பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம் |
| 167. பெருமாள், திரு. தெ. | .. | கடையநல்லூர் |
| 168. பெருமாள் பிள்ளை திரு. கோ. | | கன்னியாகுமரி |
| 169. பொன் முத்துராமலிங்கம், திரு. | | மதுரை (மேற்கு) |
| 170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | | பழனி (செ.வ.) |
| 171. பொன்னுசாமி, டாக்டர் அ. | .. | பெருந்துறை |
| 172. பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| **ம** | | |
| 173. மணவாளன், திரு. எஸ்.பி. | .. | திருப்பத்தூர் |
| 174. மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம் (செ. வ.) |
| 175. மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 176. மனோகரன், திரு. இ. | .. | புரசைவாக்கம் |
| 177. மனோகரன், திரு. இ.நா.கோ.அ. | | திருநாவலூர் |
| 178. மாசிலாமணி, டாக்டர் ந. | .. | ஜெயங்கொண்டான் |
| 179. மாதவன், திரு. செ. | .. | திருப்பத்தூர் |
| 180. மாதையன், திரு. யு.பி. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 181. மாரிமுத்து, திரு. த. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 182. மாரிமுத்து, திரு. மு. | .. | திருப்பரங்குன்றம் |
| 183. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | .. | வேதாரண்யம் |
| 184. முகம்மது கனி, திரு. ஜே. | .. | புதுக்கோட்டை |
| 185. முகம்மது சலீம், டாக்டர் த. | .. | பெரியகுளம் |
| 186. முசிறிபுத்தன், திரு. பி. | .. | குளித்தலை |
| 187. முத்துசாமி, திரு. சு. | .. | ஈரோடு |
| 188. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | | உசிலம்பட்டி |
| 189. முத்துவேல், திரு. கே. | .. | முதுகுளத்தூர் |
| 190. முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |
| 191. முருகானந்தம், திரு. டி.என். | .. | செஞ்சி |
| 192. முனிரத்தினம், திரு. இரா.சா. | .. | கும்மிடிப்பூண்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
| --- | --- |
| **இ—தொடர்ச்சி.** | |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல... | தாம்பரம் |
| 25. இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல் |
| 26. இராசரத்தினம், திரு. எம். .. | விழுப்புரம் |
| 27. இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர் |
| 28. இராசாம்பாள், திருமதி. த. .. | தலைவாசல் (செ.வ.) |
| 29. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 31. இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 32. இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 33. இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். .. | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணா நகர் |
| 37. இராமச்சந்திரன், திரு. பி.என். | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி, திரு. எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 41. இளங்கோவன், திரு.ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| **ஈ** | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். — | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **உ** | |
| 43. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 44. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| **எ** | |
| 45. எத்திராசன், திரு. இ. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
| --- | --- |
| **க** | |
| 46. கணபதி, திரு. கே.ஆர். .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு, திரு. மா. .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி, திரு. கா.வே. .. | இணைத்துக்கடவு |
| 49. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 50. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. .. | ஆயிரம் விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி.இரா. .. | அணைக்கட்டு |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜு, திரு. ஜி. .. | சேலம்-1 |
| 57. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 58. குப்புசாமி, திரு. வே. .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன், திரு. .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம் |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி |
| 65. கோவேந்தன், திரு. எம்.ஆர். .. | பேராவூரணி |
| **ச** | |
| 66. சங்கரலிங்கம், திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம், திரு. இரா. — | திருத்தணி |
| 68. சண்முகம், திரு. என். .. | சோளிங்கர் |
| 69. சண்முகம், திரு. ப.உ. .. | மேல்மலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 74. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 75. சரோஜா, திருமதி. இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ய | |
| 193. யசோதா திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| | ர | |
| 194. ரகுமான்கான், திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 195. ரமணி, திரு. கு. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196. ரவீந்திரன், திரு. ஏ.எஸ். | .. | திருவண்ணாமலை |
| 197. ராமஜெயம், திரு. ம.நா. | .. | வானூர் (செ.வ.) |
| 198. ராமன், திரு. கி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 199. ராஜாபாபு, திரு. ஜெ. | .. | பேரூர் |
| 200. ரெங்கசாமி, திரு. ஆர். | .. | கோவில்பட்டி |
| 201. ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | நாகர்கோவில் |
| | ல | |
| 202. லட்சுமி, திருமதி பி. | .. | அவினாசி (செ.வ.) |
| | வ | |
| 203. வடிவேல், திரு. கு. | .. | கரூர் |
| 204. வளர்மதி, திருமதி பா. | .. | மயிலாப்பூர் |
| 205. விஜயபாலன், திரு. என். | .. | பூம்புகார் |
| 206. விஜயலட்சுமி, பழனிச்சாமி திருமதி | | வீரபாண்டி |
| 207. வீராளம்புலம், திரு. க.வெ. | .. | மேலூர் |
| 208. வீரப்பன், திரு. கோ. | .. | நாகப்பட்டினம் |
| 209. வீரப்பன், திரு. ஆர்.எம். | .. | திருநெல்வேலி |
| 210. வீராசாமி, திரு. நா. | .. | ஒரத்தநாடு |
| 211. வெங்கடரெட்டி, திரு. டி. | .. | ஓசூர் |
| 212. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 213. வெங்கடாசலம், திரு. கி. | .. | வரல்குடி |
| 214. வெங்கடாசலம், திரு. டி.எம். | .. | பரகூர் |
| 215. வெங்கடரமணன், திரு. டி. ஆர். | .. | தென்காசி |
| 216. வேணுகோபால், திரு. எஸ். | .. | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர். |
| 217. வேணுகோபால், திரு. கே.வி. | .. | தல்லி |
| 218. வேலு, திரு. கடலூர் இ.வி. | .. | கண்டரம்பு[illegible] |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ஜ | |
| 219. ஜெகதீசன், திரு. ஆனூர் பு.கோ. | | செங்கல்பட்டு |
| 220. ஜான் வின்சென்ட், திரு. மு. | .. | நாங்குநேரி |
| 221. ஜெகதீசன், திரு. க. | .. | அரவக்குறிச்சி |
| 222. ஜெயச்சந்திரன், திரு. சா. | .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 223. ஜெயராமன், திரு. வே. இரா. | .. | தேனி |
| | ஹ | |
| 224. ஹேமச்சந்திரன், திரு. ஜெ. | .. | திருவட்டாறு |
| | ப | |
| 225. பிரான்சிஸ், திரு. ஜி.கே. | .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | | |
|---|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 27, திங்கட்கிழமை

சித்திரை 14, பிரபவ, திருவள்ளுவர் ஆண்டு—2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன் அவர்கள்** தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

> "நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> கொல்லாமை சூழும் நெறி".

நல்ல வழி என்று அற நூல்களால் சொல்லப்படுவது எது என்றால் எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுதல் —பொது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த சில நாட்களாக இலங்கையில் தமிழர்கள் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்படுவது பற்றிய பொது விவாதம்.

***திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் தொடர்ந்து படுகொலைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் அவர்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் அழிக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் அங்கே இருக்கிற அரசும், அங்கேயிருக்கிற இராணுவமும் ஈடுபட்டிருக்கிற செய்தியும் நெஞ்சில் ஈட்டிகளாகப் பாய்கின்றன. அத்தகைய நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நம்முடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே சீரழிக்கப்படுகின்றபொழுது அதைப் பார்த்து கண்ணீர் விடுவதோடு, இங்கே நாம் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கிறோம். அங்கே

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

பள்ளி மாணவர்களும் பெண்களும் வயது வந்தோர்களும் எந்த வேறுபாடும் கருதாமல் கொன்று குவிக்கப்படுவது 20 ஆம் நூற்றாண்டின் கடைந்தெடுத்த காட்டுமிராண்டித்தனமாகும்.

ஒரு நாட்டு மக்களை அந்த நாட்டை ஆள்கின்ற அரசே அழித்து விட வேண்டுமென்ற முயற்சியில ஈடுபடுவது உலக நாகரீகத்திற்கு இழைக்கப்படுகின்ற ஒரு களங்கமாகும். அரசியல் தீர்வு காண வேண்டிய பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் காண முயல்வது இலங்கை அரசின் ரத்த வேட்கையைத் தான் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்து இருக்கிறது.

இது ஒரு நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினை என்று மட்டும் இனிமேலும் நம்முடைய இந்தியப் பேரரசு பார்த்துக் கொண்டிருக்குமேயானால் இலங்கையில் வாழ்கிற தமிழ் இனம் அடியோடு அழிக்கப்பட்டுவிடும் என்பதை இன்றைக்குச் செய்திகள் நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது அந்த நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினை மட்டும் அல்ல, இது உலக மக்களுடைய பிரச்சினை என்று கருதி, அங்கே நடக்கின்ற படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் நமது மத்திய மாநில அரசுகள் ஈடுபட வேண்டும். இராணுவத் தீர்வு தான் அங்கே எடுக்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கு இலங்கை அரசு வருமேயானால், அந்த இராணுவத் தீர்வால்தான் பிரச்சினையை முடிக்க முடியும் என்று இலங்கை அரசு கருதுமேயானால் ஆயுதத்தைக் கையிலே ஏந்துகிற அரசின் வன்முறை அராஜகத்தோடு நாமும் ஆயுதத்தால் பரிகாரம் காண்பதற்கும் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்தின் எந்தப் பகுதியில் உயிர்கள் அழிக்கப்பட்டாலும் அதற்காகக் கலங்க வேண்டிய மனித இனம், இலங்கையில் உயிர்கள் அழிக்கப் படுவதை மட்டும் பார்த்துக் கொண்டு இனிமேலும் கைபிசைந்து கொண்டிருந்தால் இலங்கை இரத்தத்தில் அமிழ்ந்து விடும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது.



1987 ஏப்ரல் 27] [திரு. வை. பாலச்சந்திரன்]

இதுவரை இலங்கைப் பிரச்சினையில் நம்முடைய புரட்சித் தலைவருடைய அரசு மிகப் பொறுப்புணர்வுடன் நடந்து முடிவுகளை மேற்கொண்டு, பேச்சு வார்த்தைகளின் மூலமாக பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயன்று வந்தது. இனிமேல் அந்தப் போக்கில், அந்தக் கொள்கையில், சற்று மாறுபாடு அல்லது வேறுபாடு கொண்டு, அந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முடிவு காண்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஆயுதத்தை ஏந்துவதற்கு இலங்கை அரசு முன் வந்தால் அந்த ஆயுதத்தை ஏந்துகிற இலங்கை அரசுக்கு நாமும் ஆயுதத்தால் பதில் சொல்ல வேண்டும். இன்னமும் சொல்லப் போனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறையினரே இதற்குப் பரிகாரம் காண முடியும். அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று எனது இந்து தேச இயக்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் மீதான கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் நடைபெறும் பொது விவாதத்தில் பங்கு கொண்டு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கைத் தமிழர்கள் நித்தம்நித்தம் படுகொலைகளுக்கும் கற்பழிப்புகளுக்கும் சூறையாடல்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இது தினம் தினம் தொடர்கதையைப் போல பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு வார காலமாக இந்த நிகழ்ச்சிகளின் இறுதிக் கட்டமாக அமைவதைப் போல தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் இலங்கை ஏகாதிபத்திய அரசாங்கம், ஏகாதிபத்திய அரசுக்குக் கூலியாக இருந்து கொண்டிருக்கிற இராணுவம் குண்டுகளைக்கூட வீசத் தொடங்கியிருக்கிறது.

இது எங்கோ நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சி அல்ல; இந்தத் தமிழகத்தின் எல்லை ஓரத்திலே 25 கிலோ மீட்டரிலே நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சி. அங்கே நமது சொந்தச் சகோதரர்கள், மொழியாலும் உணர்வாலும் நம்முடைய உடன்

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 27

சிறப்புகளாக இருந்து கொண்டிருக்கிற சகோதரர்கள், எத்தனையோ கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தமிழர்களாகிய நாம் தாங்கிக் கொள்ளவே முடியாது.

ஒரு சின்ன நாடு, ஒரு குட்டி அரசு, இவ்வளவு பெரிய கொடுமைகளைத் துணிச்சலாகச் செய்து கொண்டிருப்பதற்குக் காரணம், நிச்சயமாக அமெரிக்க ஏகாதிபத்தியப் பின்னணிதான் என்று சொன்னால் அது பொய்யாக இருக்காது. உலகம் முழுவதும் இருக்கிற நாடுகள் எல்லாம் கூட இதை நிதானமாக பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றன. இலங்கையிலே மனித உரிமைகள் பறிபோகும்போது ஐ.நா. மன்றம்கூட அமெரிக்கப் பின்னணியிலே இருப்பதனால் அமைதியாக இருந்து கொண்டிருக்கிறது.

மாநில அரசைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர்களுக்கு என்ன, என்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அந்த உதவிகளை எல்லாம் ஒரு சகோதர மாநில அரசாக இருந்து, செய்து, பொறுப்போடு செயல்பட்டு வருகிறது என்பதை நாம் நிச்சயம் சொல்லியாக வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக, பலமுறை சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, ஆலோசனைகளைப் பெற்று, காரியங்களை ஆற்றி வருகிறார்கள். பிரதமராக திருமதி இந்திராகாந்தி அவர்கள் இருந்தபொழுது, சர்வகட்சி மூலமாக ஒரு தூதுக் குழுவை அமைத்து, பிரதமர் இந்திரா அவர்களைச் சந்தித்து, இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஓராண்டுக்கு முன்புகூட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு விடிவு காலம் வந்தாக வேண்டும், இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டாக வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் அவர்களைச் சந்தித்து எடுத்துச் சொன்னார்கள். இரண்டு முறை இந்த மாநில அரசு அனைத்து மக்களுடைய ஒத்துழைப்போடு பொது வேலை நிறுத்தத்தைச் செய்து காட்டியது. ஒருமுறை அனைத்துக் கட்சித் தலைவர்களையும்



1987 ஏப்ரல் 27] [திரு. கு. தமிழரசன்]

இங்கேயிருந்து, நம்முடைய பிரச்சினைகளுக்கு உலக மக்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஐ.நா மன்றத்திற்கு நம்முடைய உணவுத் துறை அமைச்சர் பன்ருட்டியார் அவர்களை அனுப்பி இந்தப் பிரச்சினையை உலக மக்களின் முன்னால் வைத்து, உலக மக்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கைத் தமிழர்களுக்கு நிதி உதவி தந்தாகவேண்டுமென்று ஒரு நிவாரண நிதி ஏற்படுத்தி, அனைத்துக் கட்சி ஆதரவோடும் ரூ. 1½ கோடி வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய சகோதர மக்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அந்தக் கொடுமைகளிலிருந்து அவர்களை மீட்பதற்கு நம்முடைய மாநில அரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு, என்னென்ன காரியங்களை ஆற்ற வேண்டுமோ அவற்றையெல்லாம் கட்சி மாறுபாடு இல்லாமல், கட்சி அரசியல் இல்லாமல், சுய விளம்பரங்களை எதிர் நோக்காமல் செய்திருக்கிறது. மத்திய அரசுதான் இதற்கு ஒரு தீர்வு கண்டாக வேண்டும். இதற்குத் தீர்வு காண வேண்டிய சகல அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசு இதிலே தமிழர்கள் பிரச்சினை என்பதனால் மெத்தனமாக இருக்கிறது என்றே நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

பஞ்சாபைச் சேர்ந்த சீக்கியர்கள், லண்டனிலே வாழ்கின்ற சீக்கியர்கள், அங்கே ஒரு இனக் கலவரத்தின்பொழுது, 50 பேர்கள் மாண்டார்கள். அன்றைக்குப் பிரதமராக இருந்த இந்திரா அவர்கள் உடனடியாக அதற்குத் தீர்வு காணவேண்டுமென்பதற்காக, ஒரு மத்திய அமைச்சரை இலண்டனுக்கு அனுப்பி, அங்கேயே 2 மாத காலம் தங்க வைத்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னால்தான் இந்தியாவுக்கு அந்த அமைச்சர் வந்தார். ஆனால், தமிழர்கள் பிரச்சினை, 7, 8 ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. தினம்தினம் அங்கே தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள், கொடுமைப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஏனோ மெத்தனமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லவேண்டும்.

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 27

இதற்கு இராணுவத் தீர்வு ஒரு வழியாக இருக்கும் என்று இந்திய தேசியக் குடியரசுக் கட்சி கருதவில்லை. அரசியல் தீர்வுதான் ஒரு சரியான தீர்வாகும், அரசியல் பேச்சு வார்த்தைகளின் மூலம்தான் அது தீர்க்கப்பட வேண்டுமென்பதிலே ஒரு தேசிய கட்சி என்ற வகையிலே இந்தியக் குடியரசுக் கட்சிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

தன்னுடைய தாயாரைக் கொன்ற சீக்கியர்களிடம்கூட பேச்சு வார்த்தையின் மூலம் ஒரு உடன்பாடு கண்ட பிரதமர் அவர்கள், பேச்சுவார்த்தை மூலம் விரைவாக இதற்கு முடிவு காண வேண்டும். அங்கேயிருக்கிற இலங்கை ஜனாதிபதியோடு தொடர்ந்து பேச்சுவார்த்தை மூலம் இதற்கு முடிவு காணப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து. இலங்கை துண்டாடப்பட வேண்டுமென்பதிலே ஒரு கட்சி என்பதாலே எங்களுக்கு உடன்பாடு கிடையாது. அங்கே தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்ற சுயாட்சி நிரம்பிய மாநிலம் பெற வேண்டும். அதற்கு மத்திய அரசு தன்னுடைய முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தி, பேச்சு வார்த்தைகளின் மூலம், அவர்களைப் பணிய வைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து.

இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற போராளிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளையும் அவர்களுக்கு இடையிலே இருக்கிற சில பிரிவுகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஜெயவர்த்தனே தொடர்ந்து நாட்களைக் கழித்துக் கொண்டிருப்பதும் அந்த இடைவெளியிலே இலங்கைத் தமிழர்களைக் கூண்டோடு அழித்து விட வேண்டுமென்று திட்டமிட்டு காரியங்களை நடத்தி வருவதையும் நாம் பார்த்து வருகிறோம்.

(முற்பகல் 10-10)

எனவே, இந்தப் போராளிகளுக்கு இடையே இருக்கின்ற வேறுபாடுகளை, மாறுபாடுகளை தவிர்ப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய முழு செல்வாக்கையும் பயன்படுத்தி இவர்களை ஒருங்கிணைத்து மத்திய அரசு ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்



987 ஏப்ரல் 27] [திரு. கு. தமிழரசன்]

வதற்கு நம்முடைய மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று எங்களுடைய இயக்கத்தின் சார்பாக வலியுறுத்தி விடை பெறுகிறேன்.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இலங்கையில் தமிழர்கள் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்படுவதைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையிலே நேரம் ஒதுக்கியதற்கு நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வோட் பிளாக் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்து ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விழைகின்றேன். இலங்கையில் சில ஆண்டுகளாக தொடர்ந்து தமிழர்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள். இதற் கெல்லாம் காரணம் இலங்கை அரசுதான், அதை ஆண்டுக் கொண்டிருக்கின்ற ஜெயவர்த்தனா அரசுதான். உலகத்திலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு அங்கே வாழ்கின்ற குடிமக்களை, அங்கே வாழ்கின்ற தமிழர்களை இந்த அரசு அழித்துக்கொண்டு வருகின்றது. அவர்களுடைய உடைமை களும், சொத்துக்களும் சூறையாடப்படுகின்றன என்பதை நாம் பத்திரிகையின் வாயிலாக கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறோம், பார்த்துக்கொண்டிருக்கிறோம். அங்கேயிருக்கின்ற தமிழர்கள் உடைமைக்கும், உயிருக்கும் பயந்து, அங்கிருந்து தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து வருகின்ற தமிழர்களை நம்முடைய மத்திய அரசும், மாநில அரசும் நல்ல முறையிலே அவர்களைப் பாதுகாத்து வருவதற்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கிருக்கின்ற தமிழர் களுக்கு மட்டும்தான் அந்த நிலையா என்றால் இல்லை. நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற என்னுடைய மாவட்டத்தி லுள்ள இராமேஸ்வரத்தில் வாழ்கின்ற மீனவர்களும் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். நீண்ட நெடுந் தூரம் சென்று, கடலிலே சென்று மீன் பிடிக்க அஞ்சுகின்ற சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் இராமேஸ்வரத்தின் பக்கத்தில் உள்ள கச்சத் தீவை இலங்கை அரசுக்கு மத்திய அரசு கொடுத்ததுதான். அப்படி மத்திய அரசு இலங்கை அரசுக்குக் கொடுக்கும்போது எங்களுடைய அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினராகயிருந்த எங்களுடைய தேவர் த்த தேவர்

திரு. மூக்கையா தேவர் அப்போதே எதிர்த்து வெளிநடப்பு செய்தார்கள். பாராளுமன்றத்தில், இதுபோன்ற சிரமமும், சிக்கலும் வரும் என்ற காரணத்தினால்தான் அவர் அப்போதே அதை எடுத்துக் கூறினார். அதை மத்திய அரசு கேட்காமல் அவர்களுக்குக் கொடுத்ததன் காரணமாக அங்கே படைதளத்தை அமைத்து நம்முடைய தமிழ் மீனவர்கள இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் போன்ற பகுதிகளில் வாழுகின்ற மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது அவர்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்குக் கருணை உள்ளம் கொண்ட முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் கச்சத் தீவை நம்முடைய இந்தியாவின் ஒரு பகுதியாக ஆக்கித் தரவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இப்போது கடந்த 5, 6 நாட்களாக இலங்கையிலே மிகவும் கடுமையான முறையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். போராளிகளைத் தாக்குகின்றோம் என்று சொல்லிக்கொண்டும், இலங்கை அரசு, ஜெயவர்தனா அரசு கோரத் தாண்டவம் ஆடுகின்றது. பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். இலங்கையிலே தமிழினம் அழிக்கப்பட்டுவிடும் என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் நாம் அமைதியாக இருப்பது, பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று நினைப்பது நன்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்ற ஒன்றே தவிர வேறு அல்ல.

தமிழர்களை அழிப்பதற்கு இலங்கை அரசு பக்கத்து நாடுகளாகிய பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளுடைய உதவியையும் நாடி, நம்முடைய தமிழர்களை அங்கே அழித்துக் கொண்டிருக்கிறது. தென் ஆப்பிரிக்கா, நமீபியா போன்ற நாடுகளில் எல்லாம் இனப் படுகொலைகள் என்றால், மனித இனம் தாக்கப்படுகின்றது என்றால் குரல் கொடுக்கின்ற மத்திய அரசு, மனித உரிமைக்காகப் போராடுகின்ற மத்திய அரசு, நம்முடைய இனம், நம்முடைய மக்கள் இலங்கையிலே படுகொலை





செய்யப்படுவதை கண்டும், பெண்கள் கற்பழிக்கப்படுவதைக் கண்டும், இலங்கைத் தமிழர்கள் உடைமைகளை பறிகொடுப்பதைக் கண்டும் மெத்தனப்போக்கோடு இருப்பது சரியல்ல. நேரடியாகத் தலையிட்டு இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசும், மாநில அரசும் எடுக்கின்ற நடவடிக்கைக்கு நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. ஆ.கா.அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தேவைப்பட்ட ஒரு நேரத்தில் இந்த விவாதத்தை தமிழக சட்டமன்றத்திலே கொண்டு வந்ததற்காக உங்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் இதற்கு ஒரு முகவுரையாக அரசுத் தரப்பிலிருந்து இதுவரையிலே நடந்த பேச்சுவார்த்தைகள், மைய அரசு எடுத்துக் கொண்டு இருக்கக்கூடிய நடவடிக்கைகள், எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி இலங்கைப் போராளிகள் கொண்டு இருக்கக்கூடிய திருப்தி, இன்னும் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள விரும்புகிறார்கள் என்பது பற்றியெல்லாம் ஒரு சின்ன குறிப்பாவது அரசுத் தரப்பிலிருந்து, அதிலும் குறிப்பாக இதிலே அதிக ஈடுபாடு கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஐந்து நிமிடமாவது எங்களுக்கு விளக்கவுரை தருவார்களானால், எங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு மேலும் வெளிச்சம் தந்ததாக ஆகும் என்று நம்புகிறேன். அப்படி அவர் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் பேசிய பிறகு, இறுதியாக அவர் பேசுவார்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேதனை தரத்தக்க விளைவுகள், நிகழ்ச்சிகள் நம்முடைய சேய் நாடாகிய இலங்கையிலே நடந்து வருகின்றன. சாதாரண மனித உரிமையை, ஒரு வட்டாரத்திலே வாழக்கூடிய மக்கள், மொழி வழி, கலாச்சார வழி தங்களை மேன்மைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்ட ஒரு நாட்டினுடைய குடிமக்கள்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 27

அதற்காக சில உரிமைகளைக் கேட்டுப் பெறவேண்டும் என்று நடத்திய ஒரு முயற்சி, இன்னும் எந்த அளவுக்கு ஒரு இனப் படுகொலையாக உலகமெல்லாம் கண்டு சுழிவிரக்கம் கொள்ளத் தக்க அளவிற்கு ஒரு நாட்டினுடைய இராணுவம்—அன்னிய நாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், அந்நிய நாட்டினரைக் கொல்வதற்காகவும் ஆகத் தயாரிக்கப்பட்ட இராணுவம், உள்நாட்டுக் குடிமக்களை அதிலும் அப்பாவிக் குடிமக்களைக் கூடக் கொல்வதற்குண்டான முறையிலே— திருப்பி விடப்பட்டிருப்பது மிகவும் வேதனை தரத்தக்க ஒரு அம்சமாகும்.

அங்கே குறிப்பாக தமிழ்ப் பெருமக்கள் கொல்லப்படு கிறார்கள் என்னும்போது, இந்தியத் திருநாட்டிலே எந்தப் பகுதியிலேயும் வாழுகின்ற இந்தியர்களைவிட நமக்குக் கொஞ்சம் உணர்வு அதிகம் ஏற்படுகிறது. ஒரு முறை பண்டித நேரு அவர்கள் சொன்னது போல "We are not only geographically and culturally linked with the Ceylon Tamils but emotionally also we are linked with them."

ஆகவே, அங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள், ஏதோ தம்முடைய வீட்டிலே, நம்முடைய குடும்பத்திலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் போன்ற ஒரு உணர்வை நமக்கு உண்டாக்கிக் கொண்டே வருகின்றன. ஏதோ ஒரு நேரத்திலே, கோபதாபம் மிஞ்சிய நேரத்தில், ஒரு சமாதானத்திற்கு வழி காணமுடியாத ஒரு நேரத்தில் இரு தரப்பாரும் வரம்பு மீறிய சில நடவடிக்கை களில் ஈடுபட்ட நேரத்தில் இப்படி நடந்தது என்று சொல்லப் பட்ட காலம் எல்லாம் போய், இது ஒரு தொடர் கதையாக, பல ஆண்டுக் காலம் இதே அளவிலே கூட பாதிக்கப்பட்ட மக்களுக் காகப் பரிவுணர்ச்சி காட்டி நாம் பலமுறை பேசியும், இதற்கான உறுதியான நடவடிக்கைகளை நடுவண் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியும், அவர்களும், நம்முடைய அண்டை நாடான அங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளிலே ஒரு சுதந்திர நாட்டில் இன்னொரு சுதந்திர நாடு எந்த அளவுக்குத் தலையிட முடியுமோ அந்த அளவுக்குத் தலையிடமுடியும் என்ற வரம்பிற்குட்பட்டவர்களாக எடுத்த எல்லா நடவடிக்கைகளுமே ஒரு முடிவிற்குக் கொண்டு வரமுடியாமல் அந்தப் படுகொலைகள் தொடர்கதையாகவே அன்று நடப்பது பற்றி இன்னும் கொஞ்சம்



1987 ஏப்ரல் 27] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

தீர, தீவிரமாக சர்வதேசச் சட்டங்களை எல்லாம் முன் வைத்து அல்லது இதற்கு முன்னாலே பல்வேறு நாடுகளிலே நடந்த இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்திய அரசு எவ்வளவு முன்னெச்சரிக்கையோடும், தீவிரத்தோடும் செயல்பட்டதோ, அதைப் போல், செயல்பட வேண்டிய ஒரு கால கட்டம் வந்திருக் கிறது என்று நாங்கள் உணருகிறோம்.

இலங்கையிலிருந்து வரக்கூடிய தகவல்களைப் பார்த்தால் மெத்த வேதனை தரத்தக்க சம்பவம், கொழும்பிலே அண்மையிலே நடந்த ஒரு சம்பவம், இலங்கை அரசு, யூனிலேட்டரலாக, தானாகவே ஒரு சமாதானத்திற்காக போர் நிறுத்தம் என்று சில நாட்களைக் குறிப்பிட்டு அறிவித்திருந்த ஒரு காலகட்டத்தில் பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படக்கூடிய ஒரு பயங்கரமான வெடிகுண்டு அந்த நகரத்திலே வைக்கப்பட்ட காரணத்தினாலே மிகப் பரிதாபகரமான விளைவுகள் எல்லாம் ஏற்பட்டன.

(முற்பகல் 10·30)

அதனுடைய தொடர்பாக, அந்த நாட்டினுடைய உள்துறை அமைச்சர் பேசும்போது, இனி ஒரு அப்பாவித் தமிழன் கூட இலங்கையிலே நிம்மதியாக வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பட்டவர்த்தனமாக அந்த நாட்டினுடைய நாடாளுமன்றத்திலேயே எடுத்துரைத்து இருக் கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த நாட்டினுடைய பிரதமர் பேசியிருக்கக்கூடிய பேச்சுக்கள், ஒரு அண்டை நாட்டைக் கொஞ்சமாவது அனுசரித்துப் போகக்கூடிய முறையிலோ அல்லது ஒரு அண்டை நாடு மற்றும் பெரிய நாடு, அதிலும் கூட்டுச்சேரா நாடுகளுடைய தலைமையைத் தாங்கிக் கொண்டிருக்கிற நாடு என்றைக்குமே இலங்கை சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ப தில் அக்கறை கொண்டுள்ள நாடு, அந்த நாடு எடுத்துக் கொண் டிருக்கிற எல்லாவிதமான சமாதான முயற்சிகளையும் கொச்சைப் படுத்தக்கூடிய முறையில், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை, ஆயுதம் ஏந்தியவர்களை ஒழிக்கக்கூடிய வரையில் அறவே பேச்சுக்கு இடமில்லை என்று திட்டவட்டமாக அந்த நாடாளுமன்றத்திலே அந்த நாட்டு முதல்வரே அறிவிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அடுத்து அந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக இருக்கக்கூடிய திரு. ஜெயவர்த்தனே அவர்கள்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 27

"இன்னும்கூட பேச்சுவார்த்தைக்கும், ஒரு அரசியல் தீர்வுக்கும் நான் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லியிருப்பதால் இதைப் பார்க்கும் போது இதில் ஜனாதிபதி பேச்சை நம்புவதா அல்லது அந்த நாட்டுப் பிரதமருடைய பேச்சை நம்புவதா அல்லது அந்த நாட்டு உள்துறை அமைச்சரின் அறைகூவலைச் சந்திப்பதா என்பதில் நமக்குப் பெரிய குழப்பம் ஏற்படுகிறது. நம்மைப் பொறுத்த வரையில் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய செய்தி மிகவும் குறைவானவைகளே. அதிலும் பத்திரிக்கைகளில் வரக் கூடிய செய்திகளைத்தான் நாங்கள் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அரசுப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு எங்களைவிட அதிகமாகச் செய்திகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. அங்கே உள்ள தமிழ் மக்கள் இன்று நிர்க்கதியாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆயுதம் ஏந்திப் போராடுகிறவர்கள் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. துரதிருஷ்ட வசமாக அங்கே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற பல்வேறு குழுக் களுக்கிடையே ஏற்பட்டிருக்கிற மனமாற்றங்கள், மன மாச்சர்யங்கள் காரணமாக அவர்களே தங்களுக்கிடையே ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகச் சில அப்பாவித் தமிழர்கள், ஏன் ஒரு சமயத்தில் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளே கூட இந்த விடுதலை வீரர்களால் என்ன காரணத்தாலோ கொலை செய்யப்படக்கூடிய நிலை கூட ஏற்பட்டது. அங்கேயுள்ள தமிழ் மக்கள் யாருடைய தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றே புரியவில்லை. இங்கே உள்ள நம்முடைய அரசுகூட போராடுகிறவர்களில் யாரை அங்கீகரித்து யாரை முன்நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதுகூட எங்களுக்குத் தெளிவாகத் தெரிய வில்லை.

ஆரம்பத்தில் அந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் 14 நாடாளு மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த டி.யு.எல்.எப். என்ற அமைப்பின் தலைவரும், அதன் செயலாளரும் இங்கே அங்கீகரிக்கப்பட்டு அவர்களைத் தமிழர்களின் தலைவர்களாக வைத்து நாம் அவர்களை உபசரித்து அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம். ஆனால் இவ்வளவு நடந்து கொண் டிருக்கும் இந்த நேரத்திலேகூட சமீப காலத்தில் 14 நாடாளு



1987 ஏப்ரல் 27] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

மன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழுவின் தலைவரும் செயலாளரும் இந்த மண்ணிலே நடமாடிக் கொண்டிருக்கும்போது கூட அவர்களுடைய கருத்து என்ன, அவர்களுடைய உணர்வு என்ன என்று நாம் அவர்களிடம் அறிந்திருக்கிறோமா என்பதே எங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

எல்லாவற்றையும்விட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பாரதப் பிரதமர் அவர்களாலே அவசரமாக அழைக்கப்பட்டு, டெல்லி சென்று வந்திருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு என்ன? அதன் விளைவு என்ன? அதனாலே இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்படுமா என்றெல் லாம் நாங்கள் அறிய விரும்புகிறோம்.

எப்படியாவது பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை. இராணுவத் தீர்வு என்பது என்றைக்குமே ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இருக்க முடியாது என்று இந்திய நடுவண் அரசு அடிக்கடி சொல்லிக் காட்டுவதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அப்படி இல்லை என்றால் இதற்குத் தீர்வுதான் என்ன? எந்த முறையில் தீர்வு காண முடியும் என்று அவர்கள் யோசிக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். காரணம் பரிதாபத்திற்குரிய அங்கே உள்ள தமிழர்கள் ஒவ்வொரு நாளும்—ஏன் ஒவ்வொரு வினாடியும்—அடுத்த வினாடியில் என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டி ருக்கிறார்கள். அப்படி பயந்து கொண்டிருக்கும் அந்த மக்களுக்கு நிம்மதியான வாழ்வை, நிலையான வாழ்வைப் பெற்றுத் தருவதற்கு நடுவண் அரசு மிக விரைவாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய தமிழக அரசும் இந்த அவையும் ஒருமித்த உணர்வை உடனடியாக எடுத்துக் கூற வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

* திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் அனைத்துக் கட்சியில் இருக்கக்கூடிய பொது மக்களின் கடுமையான ஆத்திரத்திற்கும் எதிர்ப்புக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிற இருந்த உணர்ச்சிபூர்வமான இந்த விஷயம் சம்பந்தப்பட்ட வரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 27

சார்பாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை முன் வைக்க விரும்புகிறேன். மனித குல வரலாற்றில் குறிப்பிடுகிற ஒருசில இனப் படுகொலைகளுள் சமீபத்தில் இலங்கையில் நடந்து வருகிற தமிழ் இனப் படுகொலையும் ஒன்று என்று சொல்கிற அளவுக்கு இரக்கமற்ற கடுமையான தாக்குதல் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுவது என்பது கடுமையான கண்டனத்திற்கும் வேதனைக்கும் உரியதாகும். இத்தகைய இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான முறையிலும் இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கும் பொருத்தமான—நடவடிக்கைகள் வேண்டுமென்று பொதுவாகவும் சிலபல நேரங்களில் குறிப்பாகவும் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. இன்றைய நிலையில், இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கிற போது அந்தப் பிரச்சினையை மட்டும் தனித்துப் பார்ப்பது அறிவியல் பூர்வமான பார்வையாகவோ, பிரச்சினைக்குத் தீர்வு கூறும் பார்வையாகவோ இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைக்கு பின்னணியாக இருப்பது எது, இந்தப் பிரச்சினையின் தோற்றுவாய் எது, இந்தப் பிரச்சினையை மேலும் மேலும் முற்றவிட்டு, பின்னால் இருந்து ஆட்டுவிக்கக் கூடியவர்கள் யார் என்று தெளிவாக இனம் காட்டக் கூடிய கடமை தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள அரசாங்கங்களுக்கும், தனிப்பட்ட பிரஜைகளுக்கும் உண்டு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சின்னஞ்சிறு நாடு, 1¼ கோடி மக்களைக் கொண்ட சின்னஞ்சிறு நாடு அது. இன்னும் ஒரு மூன்று மாத காலத்தில் இலங்கையில் ஒரு பைசா கூட இருக்காது என்ற அளவுக்கு திவாலாகிப் போன நிதி நிலைமை இருப்பதாக நிதி மந்திரி அங்கே அறிவிக்கிறார். டோட்டல் ரெவின்யூ எவ்வளவோ அந்த அளவுக்குப் பட்ஜெட் பற்றாக்குறையாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு சிக்கலான பொருளாதார நிலையில், தமிழ் நாட்டிலே இருக்கும் ஊர்க்காவல் படை ஓங்கி ஊதினால் கடலில் மூழ்கிவிடும் சின்னஞ்சிறிய நாடு, வரலாற்றுச் சிறப்புமிக்க, சக்தி மிக்க ஒரு ஜனநாயக நாட்டோடு மோதுகிறதென்றால் அதற்கு ஜெயவர்த்தனாவோ அல்லது சிங்களப் படையோ மட்டும் காரணமல்ல, தனிப்பட்ட



1987 ஏப்ரல் 27] [திரு. கே. சுப்பராயன்]

இலங்கை மட்டும் தான் காரணம் என்று மட்டும் பார்ப்பது பிரச்சினைகளின் முழுத் தன்மையைப் பார்ப்பதாக ஆகாது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், ஒரு சின்னஞ்சிறு நாடு 75 கோடி மக்கள் வாழ்கிற நாட்டுக்கு எதிராக துணிந்து நின்று தைரியத்தோடு நிற்குமென்று எதிர்பார்ப்பது சரியல்ல. இதற்குப் பின்னால் ஒரு சக்தி இருக்கிறது. அந்தச் சக்தி எது என்பதைத்தான் தமிழ் நாட்டின் அரசாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சிகளாக இருந்தாலும் சரி, உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு மிக முக்கியமான பிரச்சினையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினையை தயவு செய்து தமிழ் நாட்டின் அரசியலுக்கு ஒருபோதும் பயன்படுத்தலாகாது. தமிழ் நாட்டின் அரசியல் பிரச்சினைக்கு அவற்றை பயன்படுத்திக் கொள்ள விரும்புவது ஒரு பொறுப்புள்ள அரசியல் இயக்கத்தின் பொறுப்புள்ள பணியாக இராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உணர்வுபூர்வமாக உதவ விரும்புவது உண்மையானால், இதய சுத்தியோடு உதவுவதாக இருந்தால், நாட்டின் ஐக்கியப்பாட்டின் உறுதியாக நின்று தமிழகத்தின் எல்லைக்குள் எவ்வளவோ அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், இந்திய எல்லைக்குள் எவ்வளவோ அரசியல் முரண்பாடுகள் நீடித்தாலும், அவற்றை இந்தப் பிரச்சினையில் பயன்படுத்தாமல் ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழர் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண ஐக்கிய உணர்வோடு செயலாற்ற வேண்டுமென்று அந்தரங்க சுத்தியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அங்கே தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பது ஜெயவர்த்தனா மட்டும் அல்ல; சிங்களச் சிப்பாய்கள் மட்டும் அல்ல. அவற்றுக்கு முக்கியமான காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இந்துமகாசமுத்திரத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகளையும், சர்வதேச நிலைமைகளையும், சர்வதேச நிலைமையில் இந்திய அரசின் மதிப்புமிக்க பாத்திரத்தையும் மறந்துவிடக்கூடாது.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 27

உலக அரங்கில் நடுநிலை நாடுகளில் மிக முக்கிய பாத்திரத்தை
வகிக்கும் இந்திய அரசை எந்த வகையிலாவது நிர்பந்தித்து,
நெருக்கி, இந்திய தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்து, இந்திய
சுதந்திரத்திற்கு, சுயாதிபத்திய உரிமைக்கு வேட்டு வைப்பதற்கு
அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிட்டு, இச்செயலில் ஈடுபட்
டிருக்கிறது என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். தமிழ் நாட்டின் தென் எல்லை குமரியிலிருந்து 800
கிலோ மீட்டருக்கு அப்பால் சின்னஞ்சிறு கடல் திட்டு நாலு
சதுர மைல் பரப்பு கொண்ட சின்னஞ்சிறு கடல் திட்டு இருக்
கிறது. அதற்கு டீகோகார்ஷியா என்று பெயர். அந்தத் திட்டு
நம்முடைய தமிழகத்தின் தலைவாயிலில் இருக்கிறது. ஆனால்
5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கா அதை 99 வருடங்
களுக்கு குத்தகைக்கு வாங்கியிருக்கிறது. 4 சதுர மைல் நிலப்
பரப்பு கொண்ட நிலத்திட்டு அது. அங்கே கடல் ஆராய்ச்சி
செய்கிறார்களா? மீன் பிடிக்கிறார்களா? இல்லை. அணு ஆயுதம்
தாங்கிய கப்பலை அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். அங்கே
அமெரிக்க கடற்படை நிறுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில்
கப்பற் படைக்கு Rest and reireation இடம் வேண்டுமென்று
திரிகோணமலைத் துறைமுகத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்
கள். இலங்கை அரசால் அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திரி
கோண மலை துறைமுகம், இயற்கையான உலகத் துறைமுகங்
களில் 6-ஆம் இடத்தை வகிக்கிறது. அந்தத் துறைமுகம் இந்து
மகா சமுத்திரத்தில் இராணுவ முக்கியத்துவம் கொண்ட

(முற்பகல் 10-30)

துறைமுகம். அந்தத் துறைமுகத்தை அமெரிக்கர்கள் கைப்பற்றிக்
கொள்வதும் இந்தியாவின் பங்கை உலக அரங்கில் குறைக்கவும்,
இந்தியாவின் மதிப்பு மிக்க அயல்துறைக் கொள்கையை நிர்
பந்தித்து திசை திருப்புவதற்காகவும், அமெரிக்க ஏகாதிபத்தியம்
அந்த திரிகோண மலையை கைப்பற்றிக்கொள்வதற்கும், இரு
நாடுகளுக்கிடையில் ஒரு அமைதியற்ற சூழ்நிலையை தோற்று
விப்பதற்கும் சிங்கள-தமிழ் இன மோதல்களை திட்டமிட்டு
தூண்டி வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலை
ஏற்படுகின்றபோது, அந்த சந்தடி சாக்கில்தான் தனது சர்வ
தேச நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அமெரிக்க ஏகாதி
பத்தியம் முயற்சி எடுத்து அதில் வெற்றிபெற்றிருக்கிறது



1987 ஏப்ரல் 27] [திரு. கே. சுப்பராயன்]

என்பதுதான் திரிகோணமலையை இன்று அவர்கள் கைப்பற்றி
இருக்கின்ற சம்பவம் காட்டுகிறது. இதை நான் மிக்க பொறுப்
போட்டு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச்
சம்பவம் நடந்ததற்குப் பிறகு இன்றைக்கு நடந்துகொண்டிருக்
கின்ற ராணுவத் தாக்குதல் நிலையில் நான் பொறுப்போடு
சுட்டிக்காட்டுவது, சிங்களத்தில் சிங்களவர்கள் தமிழர்களுக்கு
எதிராகவோ அல்லது தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராகவோ
இருக்கிறார்கள் என்பது அல்ல. அவர்களை முற்றிலும் பின்னா
லிருந்து இயக்கிக்கொண்டிருக்கின்ற மோசாத்தும் அமெரிக்க
சி.ஐ.ஏ. ஸ்தாபனமும், பிரிட்டிஷ் கூலிப்படைகளும் தான்
என்பதை சுட்டிக்காட்டுகிறேன். அவர்களை அப்படி
இயக்குவதற்குக் காரணம், ஏதோ தமிழர்களைக் கொல்ல
வேண்டும் என்பதற்காக அல்ல. தமிழர் பிரச்சினை மட்டு
மல்ல, இது மனித இனப் பிரச்சினை. ஒரு மனித இனப்
பிரச்சினை என்ற முறையிலே இனப்படுகொலைக்கு எதிராகப்
போராட வேண்டுமென்ற முறையிலேதான் இந்தப் போராட்ட
விளைவுகளைப் பற்றி சிந்திப்பதில் இந்த ஏகாதிபத்தியச் சதிச்
செயல்களை நாம் மறந்துவிட முடியாது என்பதை அழுத்தந்
திருத்தமாக சுட்டிக்காட்டிக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே
இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக நான் இந்தப் பேரவையில் கேட்டுக்கொள்வது,
வெறும் அம்புகளோடு போராடிப் பயன் இல்லை, பீரங்கிகளோடு
சண்டைப் போட்டும் பயன் இல்லை. அம்பை எய்தவர்களை,
சூத்திரதாரியை தமிழ் நாட்டுக்கு அடையாளம் காட்டுங்கள்.
இரண்டு விஷயங்களை அமெரிக்க சி.ஐ.ஏ. செய்து வருகிறது,
மோசாத்தே செய்து வருகிறது. தமிழ்நாட்டில் சில பல இடங்
களிலே வன்முறைகளைத் தோற்றுவிப்பது, அப்படி தோற்று
விப்பதன் மூலமாக போராளிகளின் மீது தமிழ் மக்களுக்கு இருக்
கின்ற நல்ல எண்ணத்தை அகற்றி, தமிழ்நாட்டிலே அதிருப்தியை
ஏற்படுத்தி, தமிழ் நாட்டிலேயிருந்து போராளிகளை
அப்புறப்படுத்துவதற்குரிய ஒரு சாதகமான சூழ்நிலை தமிழ்
நாட்டில் தோற்றுவிக்கின்ற தந்திரம்தான் தமிழ்நாட்டில் நடக்
கிறது. இலங்கையில் சிங்களவர்கள் செல்கின்ற பஸ்களில் வெடி
குண்டு வைப்பது, கொழும்புவிலே வெடிகுண்டு வைப்பது இதன்
மூலம் சிங்கள மக்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள அரசாங்கத்தின்

மீதும் இந்திய அரசாங்கத்தின் மீதும், இந்திய மக்கள் மீதும் மேலும் கடுமையான ஆத்திரத்தை தோற்றுவிப்பதன் மூலம் ஒரு பகையுணர்ச்சியையும், பதட்டத்தையும் நிரந்தரமாக தோற்றுவிக்கின்ற யுத்த தந்திர முயற்சிதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இலங்கையை அமெரிக்க சி.ஐ.ஏ. கைக் கருவியாகத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இதற்கு இலங்கை அரசாங்கம் பயன்படுகிறது. ஆகவே தயவுசெய்து தமிழர் சிங்களவர் இன மோதல்கள் என்று இதை சுருக்கி விடாதீர்கள். தமிழர் சிங்களவர் இனச் சண்டை என்று இதை குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். இந்தியா என்கின்ற பழம் பெரும் சிறப்பு வாய்ந்த ஜனநாயக நாட்டிற்கு எதிரான ஏகாதியத்தியத்தின் சதியின் ஒரு வடிவம் தான் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அதுதான் சிக்கலான இந்த நிலையை ஏற்படச் செய்கிறது என்பதை குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறேன். அதே நேரத்தில் ஒரு விஷயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு தீர்வுகாணும் முயற்சி எப்போதிலிருந்து நடந்துகொண்டிருக்கிறது? 1983-லே இருந்து 4 ஆண்டுகாலமாகப் பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு விஷயம், நான்கு ஆண்டுகளாக பேசியும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. பேசுகிறபோது முன்னேற்றம் ஏற்பட வேண்டும் அல்லவா? பேசி முன்னேற்றம் ஏற்படவில்லை. 4 ஆண்டு காலமாக இன்றைய வரைக்கும் பல கட்டங்களில் பேசிப் பேசியும் கூட பிரச்சினையில் நெருக்கடிதான் ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடி தீவிரம் அடைந்திருக்கிறதே தவிர, படுகொலைதான் அதிகரித்திருக்கிறதே தவிர, தாக்குதல்கள் தொடருகின்றனவே தவிர குறையவில்லை. இதிலிருந்து என்ன புலப்படுகிறது என்றால் பேசிப் பயன் இல்லை என்பது போலத் தெரிகிறது. இதே நேரத்தில் பேச்சு வார்த்தை நடத்தி அரசியல் தீர்வு காண்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடக்க முதல் வலியுறுத்தியது, இன்றைக்கும் வலியுறுத்துகிறது. இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் பொருத்தமானது, சரியானது, காலத்தினால் தேவையானது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அரசியல் தீர்வை நிறைவேற்றுவதற்கு என்று பேசுகின்றபோது அவர்கள் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சமூக



உணர்ச்சியை சீர்குலைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இராணுவ மோதலைத்தான், அதற்கான முயற்சிகளைத் தான் மேற்கொள்ளுகின்றார்கள் என்பதைத் சுட்டிக்காட்டிக் கொள்கிறேன். இங்கே நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் சொல்லிக்கொள்வேன். இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவசர நிலையை ஒரு மாதம் நீட்டிப்பதற்கான பிரச்சினை மீது விவாதித்த போது சிலோன் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு உறுப்பினர்தான் இருந்தார். எண்ணிக்கையில் ஒரே ஒருவர்தான் இருந்தார். தோழர் குணசேகரா என்று ஒருவர். அவர்தான் அக்கட்சியின் ஒரே ஒரு நாடாளுமன்ற கம்யூனிஸ்ட் உறுப்பினர். அந்த உறுப்பினர் என்ன சொன்னார்? நான் பிறப்பால் தமிழன். ஆகவே தமிழன் பாதிப்பது பற்றி சொல்வதில் பயன் இல்லை. ஆனால் குணசேகரா இலங்கையில் பிறப்பால் சிங்களவன். தமிழரை கொல்கின்ற சிங்கள அரசாங்கத்தின் நாடாளுமன்றத்தில் நின்றுகொண்டு சொன்னார்கள். சிங்களப் பிரதமருக்கு எதிராகச் சொன்னார்கள். சிங்கள நாயே என்று சுற்றிலும் பலராலும் தூற்றப்படுகின்றபோது, தமிழ் இன மக்களை கொல்லாதே, தமிழர்களின் ஜனநாயகத்தைப் பறிக்காதே என்று ஒரு கம்யூனிஸ்ட் உறுதியோடும், கம்யூனிஸ்ட் தெளிவோடும், கம்யூனிஸ்ட் நேர்மையோடும் இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு சிங்களவன் பேசியிருக்கிறார் என்றால் தமிழர் ஆனாலும் சரி, சிங்களவர் ஆனாலும் சரி, கம்யூனிஸ்ட்டுகள் ஒரே நிலையை எடுத்துக்கொண்டு அங்கும் சரி இங்கும் சரி அரசியல் தீர்வு காணவேண்டும், என்று போராடுகிறார்கள். தமிழர்களுக்கு எதிராக தாக்குதல் கூடாது, ஜனநாயக விரோத இனப் படுகொலை கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் நான் இதைச் சொல்கிறேன். அத, இலங்கை நாடாளுமன்றத்திலே ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதை நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன் ஆகவே, இங்கே பேரவையிலே விவாதிக்கின்ற நேரத்திலே வலியுறுத்துகின்ற விஷயத்தை பொறுத்தவரையில் இராணுவம் அனுப்பப்பட்டு அதன் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சரி அல்ல அது பொருத்தமும் அல்ல. இராணுவம் எப்படி நடவடிக்கை எடுக்க

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 27

வேண்டும் என்பதை முடிவு செய்வது பொதுக் கூட்டத்தின் மூலமும், சட்டமன்றப் பேரவையின் மூலமும் அல்ல. அதற்குரிய பொறுப்பில் இருப்பவர்களால் அது வகுக்கப்பட வேண்டிய ஒன்றேயல்லாமல் சட்டமன்றப் பேரவையால் அல்ல. மேலும் இதுகுறித்து இந்த நேரத்தில் மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள். நம்முடைய போர் தந்திரமானாலும் சரி, பேச்சுவார்த்தையானாலும் சரி இவற்றிலே ஏதோ பலவீனம் இருக்கிறது, அவர்கள் இந்த நமது இராஜதந்திரத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது: அதை மாற்றி அமையுங்கள். காயை அற்புதமாக நகர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, இனப் படுகொலை சம்பந்தமாக இன்னதை செய்யுங்கள் என்று சொல்ல நாங்கள் தயாராக இல்லை. ஆனால் இனப்படுகொலையை உடனடியாக அவர்கள் நிறுத்த; முற்றுப்புள்ளி வைக்க என்ன நடவடிக்கை தேவையோ, பொருத்தமோ அதை உடனடியாகத் தாமதமின்றி நிறைவேற்றுங்கள் என்று சொல்லி முடிக்கிறேன்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இலங்கையில் தமிழர்கள் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்படுவது பற்றிய விவாதத்திலே ஜனதா கட்சியின் சார்பில் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக சுமார் 4½ லட்சம் தமிழர்கள் உலகம் முழுவதும் அகதிகளாக சென்றிருக்கிறார்கள். அவர்களிலே 1¼ லட்சம் தமிழர்கள் இந்தியாவிற்கு அதாவது தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இவ்வாறு அங்கிருந்து அகதிகளாக வெளியேற வேண்டிய அளவுக்கு ஏற்பாடுகளை செய்து ஜெயவர்த்தனே அரசாங்கம் தமிழ் இன மக்களை அழிக்கின்ற செயல்களை செய்கிறது என்று நமக்கு அது எடுத்துக்காட்டியது. இந்த நிலைகளை எல்லாம் மாற்றுவதற்கும், தமிழர்கள் மறுபடியும் அங்கே குடியேற்றப்படுவதற்கு உதவுகின்ற முறையிலே முயற்சிகளை செய்வதாகவும் மத்திய அரசு அதன்பிறகு அறிவித்தது. அதன் காரணமாக இந்தியாவின் தூதுவராக முதலில் பார்த்தசாரதியும், பின்னால் பண்டாரியும் சென்றார்கள். பிறகு வெங்கடேஸ்வரனும் பின்னால் நட்வர்சிங்கும் சென்றார்கள். அதன்பிறகு சிதம்பரமும்



1987 ஏப்ரல் 27] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

கடைசியாக தினேஷ் சிங் போன்றவர்கள் எல்லாம் சென்று பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தார்கள், அதுமட்டுமல்ல, இதிலே பூட்டாசிங் கூட தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்: ஆனாலும் இன்னும் பேச்சுவார்த்தை நல்லமுறையில் முடியவில்லை. பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல்லிக் கொண்டே இலங்கை அரசாங்கம் தன்னுடைய படை வலிமையை பெருக்கிக் கொண்டே தமிழ் மக்களைக் கொன்று குவித்து, அந்த இனமே இலங்கையில் இல்லை என்கிற நிலையில் அவர்களை இல்லாமல் ஆக்குவதற்குரிய முயற்சிகளை செய்துகொண்டிருப்பதை நாம் இன்றையதினம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கே நடைபெறுகின்ற இனப் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கும் தமிழர்களை பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பு அங்கே இருந்த இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை ஒரு லட்சமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த எண்ணிக்கை 24 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோல அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவு இருக்கிறது. அதுபோல பாகிஸ்தானின் ஆதரவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல இஸ்ரேல் கூலிப் படைகளின் ஒத்துழைப்பும் இருக்கிறது. இவ்வளவு செயல்களை இலங்கை அரசாங்கம் செய்துகொண்டிருப்பதை பார்த்த பிறகும் கூட 'இந்திய இராணுவம் இதிலே தலையிடாது' என்று இந்திய அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதுபோல 'தாக்குதல் இருக்கும்வரை பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம்' என்றும் சொல்கிறார்கள். இந்திய இராணுவம் தலையிடாது என்கிற நிலை ஒருவேளை இருந்தாலும் கூட அதை ஏன் இப்படி இந்திய அரசாங்கம் அறிவிப்பு செய்ய வேண்டும்? அதுபோல தாக்குதல் இருக்கும்வரை பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. அப்படி என்றால் அங்கே தாக்குதல்கள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்கிற நிலையை எடுத்த பிறகு பேச்சுவார்த்தையை மறுபடியும் நடத்த இருக்கிறார்களா? இது சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனேயுடன் 30 நிமிடம் பேசியதாகவும்,

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 27

விமான தாக்குதலை உடனே நிறுத்தவும் என்று சொல்லியதாகவும் செய்தி வந்தது. ஆனால் மறுநாளே இலங்கையிலுள்ள தமிழ் சிவிலியன்களும், பெண்களும் தாக்கப்பட்டதாக செய்தி வந்தது. அப்படி என்றால் இந்திய அரசாங்கத்தை ஜெயவர்த்தனே அரசாங்கம் மதிக்கவில்லை என்று தானே அர்த்தம்.

(முற்பகல் 10-40)

இப்படி நடக்கின்ற தாக்குதலுக்கு முக்கிய காரணம், கொழும்பு நகரிலே பஸ் நிலையத்திலே வெடிகுண்டு வைக்கப்பட்டது என்ற ஒரு காரணத்தால் 200 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற காரணத்தினால்.. வன்முறையை நாம் ஆதரிக்கவில்லை. இருந்தாலும்கூட 200 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொன்னால் சதி செய்தது யார்? தடயம் இருக்கிறதா? அதிலே இறந்தவர்கள் யார்? சிங்களவர்களா, தமிழர்களா? இதையெல்லாம் நாம் பார்க்க வேண்டுமல்லவா? கொழும்பு நகரைச் சுற்றிச் செய்திருக்கிறார்கள். வாஸ்தவம். இந்தச் சதியைச் செய்தது யார்? இதைச் சரி பார்க்க வேண்டும். இதைச் சரி பார்க்காமலேயே, ஈழத் தமிழர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லி, அந்தப் பகுதியிலுள்ள மக்களையே அழித்துவிடக்கூடிய நிலையிலே இலங்கை அரசு முனைப்பு காட்டுகிறது. நாம் பேச்சு வார்த்தை பேச்சு வார்த்தை என்று சொல்லி, தமிழ் இன மக்கள் அழிந்து போன பிறகுதான் பேச்சு வார்த்தையை முடிக்கப் போகிறோமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, வியட்நாமிலே அமெரிக்கா தாக்கிய பொழுது மத்திய அரசுக்கு ஏற்பட்ட வேகம் இதிலே ஏற்படவில்லை என்று கருதுகிறேன். அதேபோல பங்களாதேஷ் முக்திபகனிக்கும் நாம் ஆதரவு கொடுத்தோமல்லவா? இன்று பங்களாதேஷும், பாகிஸ்தானும் தனித்தனியாக இருக்கிறது அல்லவா? நாம் இதையெல்லாம் எப்படிச் செய்தோம்? அரசியல் தீர்வு காண்பதற்கு நம்மால் மத்திய அரசினாலே ஏற்படுத்தப்பட்ட நிலைமை, சந்தர்ப்பங்கள், அதாவது தந்திரம் என்று கூடச் சொல்லலாம். அதுமாதிரி இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 27] [திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்]

இதிலே பேச்சுவார்த்தை என்பதிலே ஜெயவர்த்தனே அரசுக்கு இஷ்டமே கிடையாது என்பது என்னுடைய கருத்து. அவர்கள் சொன்னார்கள், வடக்கு மாகாணம் தனியாகவும், கிழக்கு மாகாணம் தனியாகவும் வைத்துக்கொள்வதிலே, வடக்கு மாகாணத்திற்கு ஒப்புதல் தந்தார்கள்; கிழக்கு மாகாணத்திலே சிங்களவர்கள் ஒரு பகுதி, முஸ்லீம்கள் ஒரு பகுதி, தமிழர்கள் ஒரு பகுதி என்று இருக்கும் என்று சொன்னார்கள். இதைத் தமிழர்கள் ஏற்கவில்லை. அதன்பிறகு சொன்னார். அம்பாறை பகுதி தவிர மற்றவையெல்லாம் தமிழ் மாகாணங்களாக வைத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொள்வதாகச் சொன்னார். அங்குள்ளவர்களுடன் பேசிச் சொல்வதாகச் சொன்னார். பேச்சுக்குப் பிறகு சொல்கிறார், முஸ்லீம்கள் ஏற்கவில்லை என்று. இப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அங்கேயுள்ள மக்களை அழித்து விட வேண்டுமென்ற திட்டத்திலே அவர்களுடைய செயல்பாடு இருக்கிறது. 42 கிராமங்கள் அழிக்கப்பட்டு, புல் பூண்டுகூட இல்லாத நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழ் ஈழத்தைக் கேட்பவர்களது கோரிக்கைகள், இராணுவத் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்; 1984 மார்ச் 1 ஆம் தேதி ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உரிமைக் குழுவிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும்: தமிழ் மக்களுடைய அடிப்படை மனித உரிமைகளை சிங்களவர்களைப் போலவே பாதுகாக்க வேண்டும், சிறையிலுள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்; நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்; தமிழ் பகுதியில் இன்று அமல்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதாரம் மற்றும் தகவல் தொடர்புகள் தடை நீக்கப்பட வேண்டும். இதன் மூலம்தான் அரசியல் தீர்வு காண முடியும் என்று சொல்கிறார்கள். இதைச் செய்வதிலே என்ன சிரமம் இருக்கிறது?

நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொழும்பிலே-இலங்கையிலே இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்லாவிட்டாலும்கூட சைப்ரஸ் நாட்டிலே துருக்கியைச் சேர்ந்த மக்கள் முப்பது சதவீதம் வசிக்கிறார்கள். இனப் படுகொலை என்ற காரணத்தைக்காட்டி துருக்கி நாடு சைப்ரஸ் தீவுக்கு, சைப்ரஸ் நாட்டிலே தன்னுடைய படையைக் கொண்டு

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 27

நிறுத்தியிருக்கிறது. அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு ஏற்பாட்டைச் செய்தது. ஆனாலும் அந்தத் துருக்கி இராணுவம் சைப்ரஸ் நாட்டிலே இருக்கிறது. இதுவெல்லாம் இந்த நாட்டினுடைய ஐக்கிய நாடுகளினுடைய சபைத் தீர்மானத்தை அனுசரித்தது. ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்திலே இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. துருக்கி நாட்டை எந்த நாடும் குறை சொல்லவில்லை. இம்மாதிரி ஒரு நிலையை இந்திய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும்படி கூறும் நண்பர் எவரும் மிகப்பெரிய எதிரியாகக் கருதப்படுவார் என்று அந்த நாட்டினுடைய பிரதமர் பிரேமதாசாவே பேசிவிட்ட பிறகு இனிமேல் இந்திய அரசு என்ன செய்ய இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று சொல்வதை நிறுத்தி ஒரு முடிவை, தமிழ் ஈழமக்களை வாழ வைக்கின்ற முடிவை, ஒரு சமரச ஏற்பாட்டை இந்திய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நாம் போட வேண்டுமென்று கேட்டு, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் நமது மதிப்புமிக்க பிரதமர் இராஜீவ்காந்தி அவர்களிடம் அழைத்துச்சென்று, தமிழக மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

***திரு. கு. ரமணி:** மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை ஆரம்பித்து வைப்பதில் என்ன எதிர்பார்த்தோம் என்றால் அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்து ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராஜீவ் காந்தியுடன் நேரடியாகப் பேசி வந்தபிறகு, அங்கே பேசியதைப்பற்றி விவாதிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். இதுவரையிலும் நடந்துகொண்டிருக்கிற பிரச்சினை முழுவதையும் சொல்ல வேண்டுமென்று நாம் கேட்கவில்லை. இப்போதுள்ள நிலைமைபற்றி மிக முக்கியமான சில விஷயங்களை



1987 ஏப்ரல் 27] [திரு. கு. ரமணி]

முன்னால் வைத்து அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து விவாதத்தை ஆரம்பித்து வைத்திருந்தால் எங்களுக்கு எல்லாம் பிரயோஜனமாக இருந்திருக்கும். அப்படி வந்திருந்தால் இன்னும் சிக்கலான காரியங்கள் என்ன என்பதைச் சொல்வதற்கும், அதற்கு என்ன செய்யலாம் என்று, எங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கும் வசதியாக இருந்திருக்கும். அதைச் செய்யவில்லை. அந்த மாதிரி [illegible] எடுத்து காரியங்கள் செய்வது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எல்லோரும் பேசிய பின்னால் விரிவாகப் பேசுவோம் என்று சொல்கிறார்கள்.

இப்போது இலங்கையில் நடக்கும்படியான இந்த பரஸ்பர சண்டையில் தமிழ் மக்களை அழிக்கும்படியான ஒரு நிலைக்கு திட்டமிட்டு, ஒரு யுத்தத்தை அந்த மக்கள்மீது பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். தமிழ் மக்கள் அல்லது தமிழர்களுக்கு ஒரு தனி நாடு அங்கே வேண்டுமென்று சொல்லுகிற புலிகள் இயக்கத்தோடு இருக்கும்படியான தனி நாடு கோரிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்ரீலங்காவிற்குள்ளே ஒரு தனித் தமிழ் இலங்கையை உருவாக்க முடியாது. பேச்சுவார்த்தை நடத்தி, செட்டில்மெண்டுக்கு வரவேண்டும், இல்லை என்றால் அழிவுதான் என்று சொல்கிறோம். அவர்கள் சொல்லுகிறபடி அழிவுக்கு வந்துவிடக்கூடாது. அது பெரிதும் அபாயகரமானது. அந்த அபாயம் இலங்கைக்கு மட்டுமல்ல; இந்தியாவுக்கும் ஆபத்தானது. இலங்கையின் தற்போதைய வழிமுறை, அணுகுமுறை, இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகாது. பேச்சுவார்த்தை மூலம் காரியத்தை நடத்த முடியும். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் தேதி ஆலோசனை ஓரளவுக்கு அடிப்படையை உருவாக்கியிருக்கிறது என்பது இரண்டு பக்கத்திலும் பேசப்பட்டது. அதன்பேரில்தான் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ் மக்களுக்கு உரிய ஜனநாயக உரிமை வழங்கப்பட்டு, அவர்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் இருக்கும்படியான ஒரு மாநில சுயாட்சி போன்ற ஏற்பாடு, அரசியல் ஏற்பாடு அங்கே செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் சிறந்த முறை. இந்த முறையில்தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 27

அந்த அடிப்படையிலே இருபக்கமும் ஒரு புரப்போசல் வைத்து, யோசனை சொல்ல வேண்டும். ஆனால் அதற்கு இடமில்லாமல் இருபக்கமும் தாக்குதல் நடக்கிறது. எங்களை அழிக்க வேண்டு மென்று தாக்குதல் நடத்துகிறார்கள்; நாங்கள் திருப்பித் தாக்கு கிறோம் என்று சொல்லி தாக்குதல் நடத்துகிறார்கள். அதுதான் இன்றைக்கு உச்சக்கட்டத்திற்கு வந்து, இன்றைக்கு இலங்கை அரசு தமிழர்கள் வாழும் பகுதிகளில் விமானத்தின் மூலமாக குண்டுகளை வீசி வருகிறது. இலங்கையின் வட பகுதியில், குறிப் பாக யாழ்ப்பாணம் பகுதியில் குண்டுகள் வீசி, பலமான தாக்குதல் நடத்தி, நூற்றுக் கணக்கான மக்கள் அங்கே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் படுகொலையில் எதுவும் தெரியாத அப்பாவி மக்கள் சாகடிக்கப்படுகிறார்கள். இப்படி ஒரு யுத்தம் நடத்த வேண்டும்: யுத்தத்தின் மூலம் தீர்வு காண வேண்டுமென்று அந்த மக்கள் சொல்லவில்லை. இப்படிப்பட்ட மக்கள்மீது குண்டு வீசித் தாக்குவது, அந்தக் குடும்பங்களை அழிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

இதற்கு முன்னாலே எரிபொருள் சப்ளை செய்யமாட்டோம் என்று சொல்லி எரிபொருள் சப்ளையைத் தடுத்து, ஒரு மனிதன் மூச்சுவிட முடியாமல், மூச்சை அடக்கிப்பிடித்து கொலை செய்தால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட நிலையை அங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் போன்ற எண்ணெய் வகைகளை சப்ளை செய்ய மாட்டோம் என்று சொன்னால் எந்த நிலையில் அந்த மக்கள் வாழமுடியும்? பெட்ரோல், டீசல் எல்லாம் போனால் விடுதலைப் புலிகள் இடையிலே அவற்றைப் பெற்றுவிடுவார்கள்; அவர்களைத் தடுத்து நிறுத்த இதுதான் வழி என்று கூறி இப்படிப்பட்ட நட வடிக்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது கொடுமை யான செயல்: அக்ரமமான செயல், அநியாயமான நடவடிக்கை; உலகம் முழுவதும் கண்டிக்கவேண்டிய கடுமையான நடவடிக்கை. இந்தமாதிரியான நடவடிக்கையை ஒருபக்கம் நடத்திக்கொண்டு, பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டிருக் கிறார்கள். இது அவர்களுடைய தந்திரம். பேச்சுவார்த்தை என்று சொல்லிக்கொண்டே அதற்கு அடிப்படையாக இருக்கிற தமிழ்மக்களை, படுகொலை செய்கிறார்கள். பேச்சுவார்த்தை



1987 ஏப்ரல் 27] [திரு. கு. ரமணி]

என்று சொல்லிக்கொண்டு தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளைத் தாக்குவதால் இலங்கையின் ஒரு பகுதியை விடுதலைபெற்ற நாடாக, தமிழ்ப் பகுதியாக ஆக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்துகிறார்கள். விடுதலைப் பெற்ற நாடாக ஆக்கவேண்டுமென்று முயற்சி செய்வதை அடியோடு முடித்துவிடுவோம், இதோடு முடித்துவிடுவோம் என்று உலகத் திற்குச் சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட அழிவுப் பாதையிலே அவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பும் கடமையும் இந்திய அரசாங்கத்திற்கு உண்டு. நம் முடைய தமிழகத்திற்கும் இதனால் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அகதிகள் வருவதும், வேறுவிதமான துன்பங்கள் ஏற்படுவது மான நிலைமை இருக்கிறது. தமிழ் மக்களுக்கு அங்கே ஏற்படும் படியான ஒவ்வொரு காரியத்தைப் பொறுத்தவரையிலும் இங்கே இருக்கின்ற தமிழ் இன மக்களினுடைய எண்ணங்களில், உள்ளங் களில் அது பிரதிபலிக்கும். அந்தப் பிரதிபலிப்பு மோசமான நிலைமையை உருவாக்கும்படியான கஷ்டம் இங்கேயும் இருக் கிறது. நம்முடைய பொருளாதாரத்திற்குக் கூட கஷ்டங்கள் உருவாகும். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படு கின்றன. ஆகவே இதில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதைப் பொறுத்தவரையில் ஒரு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். உறுதியான நடவடிக்கை என்று சொன்னால், என்ன சொல்கிறார்களோ அதில் ஜெயவர்த்தனா அரசாங்கம் நின்று நிறைவேற்றுகிறார்களா அல்லது ஏமாற்றுவதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களா என்பதை உலகுக்கு அம்பலப் படுத்தி, தமிழர்களுக்கு முன்னால் அம்பலப்படுத்தி, உலக ஜன நாயக சக்திகளுக்கு முன்பாக அம்பலப்படுத்தி அப்படிப்பட்ட ஒரு நிலைமையைக் கொண்டுவந்தால்தான் அந்த ஜெயவர்த்தனா அரசாங்கத்தினுடைய இப்படிப்பட்ட ஜனநாயக விரோதமான கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முடியும். அப்போதுதான் சமரசப் பேச்சுவார்த்தை வெற்றி பெறக்கூடிய வகையில் உருவாகி, அதிகாரத்தை எப்படி எல்லாம் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒரு சரியான நிலைமை

[திரு. கு. ராமணி] [1987 ஏப்ரல் 27

ஏற்படுகின்ற வகையிலே நல்ல முறையிலான பேச்சுவார்த்தையாக அமையும். அந்தக் காரியத்தைச் செய்வதில் இந்திய அரசாங்கத்திற்குச் சரியானபடி லகானைப் பிடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும்.

ஒரு காரியம் என்னவென்றால் அப்படிப்பட்ட ராஜ தந்திரிகளை, திறமையான வகையில் பேசி, சரியானபடி நிர்ப்பந்தம் கொடுக்கிற வகையில் பேச்சுவார்த்தையை நடத்தி அந்த முறையில் இந்திய அரசாங்கம் ஒரு நல்ல ஆதரவையும், ஒரு ஜனநாயக முறையான ஆதரவையும் திரட்டுகின்ற நிலைமைகளை உருவாக்குவதற்காக நியமிக்க வேண்டும். பேச்சுவார்த்தையை நிராகரிக்காமல், அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் ஊடுருவல் காரணமாகச் சண்டையைப் பெரிதாக ஆக்காமல், சிங்களவன்-தமிழன் சண்டையாக மாற்றி இனப் படுகொலையைத் தூண்டிவிடுகிற அப்படிப்பட்ட இடத்திற்குக் கொண்டுபோகாமல் தடுத்து நிறுத்தவேண்டும். அந்த வகையில் இலங்கை அரசோடு இந்திய அரசு பேச்சுவார்த்தையை சீரியஸாக நடத்தவேண்டும். அது விளையாட்டுத்தனம் அல்ல. சொல்லிவிட்டு ஏமாற்றுவதும் அல்ல. நாள் கடத்திக்கொண்டு போகின்ற பிரச்சினையும் அல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் வராமல் தடுக்கக்கூடிய ராஜதந்திர முறைகளைக் கையாள வேண்டும். இது படிப்படியாக முன்னேறக்கூடிய முறையில் கையாளப்பட வேண்டும். அதற்கு வேண்டிய நல்ல ராஜதந்திரிகளை நாம் நியமிக்கவேண்டும். ஆரம்பத்தில் திரு. பார்த்தசாரதி அவர்கள் பிரதிநிதியாகப் போய் பேச்சுவார்த்தை நடத்தி ஓரளவுக்கு முன்னேற்றம் வந்தது, அப்போது நாங்கள் எல்லாம் சந்தோஷப்பட்டோம்; நல்ல நிலைமை வரும் என்று நினைத்தோம். ஆனால் திடீரென்று அந்த ராஜதந்திரி எங்கே போனார் என்பதே தெரியவில்லை. அவரை மாற்றிவிட்டார்கள். அன்னிய நாடுகளில் இருக்கக்கூடிய முக்கியமான சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில் நன்கு கூர்மையாகச் செயல்படக்கூடியவர்களைத் திடீரென்று மாற்றிவிடுகிறார்கள். சர்க்கார் என்ன மாற்றத்தைச் செய்யவேண்டும் என்று இங்கே இருந்து கொண்டு நாம் ஆலோசனை சொல்ல வேண்டும் என்பதல்ல பிரச்சினை. தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போது, நாமெல்லாம் பாதிக்கப்படும்போது, ஜனநாயகம் பாதிக்கப்படும்போது சர்வாதி



1987 ஏப்ரல் 27] [திரு. கு. ராமணி]

காரத் தோரணையில் அவர்கள் செய்கின்ற அக்கிரமத்தினை எதிர்த்து நின்று போராடக்கூடிய ஒரு போராட்டமாகும் இது. எனவே நல்ல முறையில் ராஜதந்திரத்தைப் பயன்படுத்தக்கூடிய முறையில் பேச்சுவார்த்தை நடத்தக்கூடியவர்களை அதாவது தகுந்த ஆட்களை இந்திய அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். ஆனால் என்ன நடக்கிறது? அவர்களாகவே முதலில் சொல்ல வேண்டியது; கொஞ்ச காலத்திற்கு கிடப்பில் போட வேண்டியது; பிறகு திரும்பவும் ஆரம்பிக்க வேண்டியது; ஒரு கட்டம் வந்தபோது கொஞ்சம் கோபத்தோடு நிலைமை இப்படிப் போனால் மேற்கொண்டு பேச்சுவார்த்தை இல்லை என்று சொல்லிவிடுகிற நிலைமை வருகிறது. ஆனால் பேச்சுவார்த்தை இல்லாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வே இல்லை. திரும்பத் திரும்பப் பேசித்தான் தீர்க்க வேண்டும். அந்த வகையில் அதிலே ஒரு பிரஷர், நிர்ப்பந்தம் கொடுப்பதாகத் தெரியவில்லை. எனவே அப்படிப்பட்ட நிலைமையைக் கையாளுவதில் இந்திய அரசாங்கத்திற்கு பலவீனம் இருக்கிறது. அந்த பலவீனம் தீர்க்கப்பட வேண்டும். இந்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளையும், பலத்தையும் கொண்டுதான் இந்தப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இன்றைக்கு அங்கே நடக்கக் கூடிய தாக்குதல்கள் இருக்கிறதே—ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு பஸ்களில், இரண்டு லாரிகளில், ஒரு மோட்டார் காரில் போன ஜனங்களை, திரிகோணமலை நகரத்திற்குப் பக்கத்தில் தடுத்து நிறுத்தி 100, 125 பேர்களைத் தூக்கிக் கொண்டு வந்து வரிசையாக நிறுத்தி சுட்டுக்கொன்றுவிட்டார்கள் இன்று வரையில் ஜெயவர்த்தனா அரசாங்கம் அதைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்தால் ஒருபாடு உண்மைகள் வெளியே வரும். ஆனால் அதைப் பொறுத்த வரையில் தமிழர்களுடைய விடுதலைப் புலிகள் போராட்டம் என்ற அளவுக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். இப்படி தாக்க வேண்டியது; பிறகு அவர்கள் செய்துவிட்டார்கள் என்ற நிலைமையைத் தோற்றுவிப்பது என்பதுமான நிலைமை ஏற்படுகிறது. இந்தக் கொலை இங்கே நடந்தவுடனே அதனுடைய பிரதிபலிப்பாக—பிரதிபலிப்பு என்று சொல்கிறார்கள்; ஆனால்

திட்டம் போட்ட நடவடிக்கையாக இருக்கலாம்—கொழும்பு நகரத்தில் பஸ் ஸ்டாண்டிலே ஒரு காரில் அதிகமான சக்தி கொண்ட அதாவது ஹைஎக்ஸ்ப்ளோசிவ் குண்டை வைத்து, அது பல மைல் தூரத்திற்கு வெடித்து கட்டிடங்கள் எல்லாம் சுக்கு நூறாக உடைந்து அதன் காரணமாக 200-க்கும் மேற் பட்ட மக்கள் செத்து, பல நூற்றுக்கணக்கான மக்கள் காயப் பட்டார்கள். சிங்கள மக்களை தமிழர்கள் தாக்குகிறார்கள். தமிழக மக்களை சிங்களவர்கள் தாக்குகிறார்கள். அதைக் கேட்ட உடனேயே சிறைச்சாலையில் இருக்கக் கூடிய கைதிகள் இடையே சண்டை ஏற்படுகிறது. சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளைக் கொல்லுகிறார்கள், தாக்குகிறார்கள். அவர்களை பாதுகாக்க முடியாமல் வேறு சிறைக்கு கொண்டு போகிறது அரசாங்கம். இப்படி நடக்கிறது. இப்படிப்பட்ட கொந்தளிப்பு தொடர்ந்தால் என்ன நடக்கும். தொடர்ந்து இந்த தாக்குதல் போய்க் கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட தாக்குதல்கள் வளர்ந்துக் கொண்டே போனால் ஜெயவர்த்தனே அரசாங்கம் இதுதான் முடிவு என்று தெரியாத வகையில் . . . (மணியடிக்கப்பெற்றது) மணி அடித்து உட்கார வைக்கக் கூடிய பிரச்சினை அல்ல இது இன்னும் நேரம் வேண்டும். அதை தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு கன்செஷன் கொடுத்து 11 நிமிடங்கள் கழித்துதான் மணி அடித்திருக்கிறேன்.

திரு. கு. ரமணி: பேச்சு வார்த்தை நடத்தி செட்டில் பண்ண வேண்டும் என்று சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும். ஆனால் ஒரு மோசமான சூழ்நிலை உருவாகி அதை சமாளித்து வைக்கக் கூடிய நிலைமையோ முறையோ இல்லாமல், செட்டில்மெண்ட் உண்மையாகவே வரவேண்டும் என்ற எண்ணம் இல்லாது ஒரு சர்வாதிகாரப் போக்கை நடத்தும் ஜெயவர்த்தனே யின் அரசாட்சி இன்னும் பலவீனப்பட்டு, உள்நாட்டில் எதையும் செய்ய முடியாமல் போய், கடைசியில் ராணுவமே தலையிட்டு, இந்த அரசாட்சியை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்து, அரசாங் கத்தை தன் கையில் எடுத்துக் கொள்ளாது என்று யாருக்குத் தெரியும். அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் அதுதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வேண்டும். அதைத்தான் அவர்கள்





எதிர்பார்க்கிறார்கள். அதற்குரிய சூழ்நிலையும் அங்கே வளர்ந்து கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட இனப் படு கொலையை, இனச் சண்டையை உடனடியாகத் தீர்த்து வைக்க வில்லை என்றால் அது இந்தியப் பாதுகாப்புக்கே ஆபத்து. இந்தியாவுக்கு மட்டுமல்ல தென் கிழக்கு ஆசியா முழுவதற்குமே அது இடையூறை உண்டாக்கும். ஒரு உலக யுத்தத்திற்கே இழுத்துப் போகக்கூடிய வித்துக்கள்கூட அதன் உள்ளே இருக் கின்றன. அப்படிப்பட்ட சக்திகள் அதன் பின்னால் இருக் கின்றன. இல்லையென்றால் இஸ்ரேலுக்கு இலங்கையில் என்ன வேலை? பாகிஸ்தானுக்கு இலங்கையில் என்ன வேலை? அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அங்கு என்ன வேலை? இப்போது கடைசியாகக் கேள்விப்படுகிறோம், அமெரிக்காவி னுடைய ஏழாவது கடற்படை அங்கே வரப் போகிறது என்கிற மாதிரி செய்தி வருகிறது. அப்படி வந்தால் நிலைமை எங்கே போகும்? என்ன கதி ஏற்படும்?

அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை உருவாகாத வகையில் இப்படிப்பட்ட மோசமான படுகொலைகள் நடந்து கொண்டே இருக்காமல் உடனடியாக தடுக்கப்பட வேண்டும். அதற்காகத் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திட்டவட்ட மாகச் சொல்லிக் கொள்கிறேன், ஆரம்பத்திலிருந்தே எங்கள் கொள்கை அதுதான். சண்டை போட்டு தீர்க்கின்ற விஷயம் அல்ல இது. பலாத்காரத்தினால் தீர்க்கின்ற விஷயமும் அல்ல இது. அங்குள்ள தமிழின மக்களுக்கு ஜனநாயக ரீதியிலே உரிமைகள் வழங்கி அவர்களுக்கு வேண்டிய தனி மாகாணத்தைப் பிரித்து ஜனநாயக முறையில் வழங்கி அவர்களுக்கு வேண்டிய தைச் செய்ய இலங்கை அரசு முன் வந்து, இந்திய அரசின் ஆதரவைப் பூரணமாகப் பெற்றுக் கொண்டு, உலகத்திலுள்ள ஜன நாயக சக்திகளின் ஆதரவையும் பூரணமாகப் பெற்றுக் கொண்டு அந்தக் காரியத்தைச் செய்ய முன்வரவேண்டும். அதற்குரிய முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் நாம் நடத்தியாக வேண்டும். அரசியல் தீர்வுக்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இலங்கை அரசின் ஸ்தாபனங்களும் சரி, தமிழ் மக்களின் ஸ்தாபனங்களும் சரி, பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முன் வரவேண்டும். சாதாரண மக்கள் அனைவரும், இடது சாரி சக்திகளும் எல்லா

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 27

(முற்பகல் 11-00)

தமிழர்களும் எல்லோரும் ஒன்றுபட்டு சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி இதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இப்போது எழுந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் உரிமைப் பேச்சு முறையில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று பேசுவதற்குக் காரணம் ஜெயவர்த்தனா அரசையும் போராளிகளையும் மோதவிட்டு இராணுவ நோக்கங்களின், அரசியல் நோக்கங்களில் ஆதாயம் பெற விரும்பும் அமெரிக்க ஏகாதிபத்தியம் போன்ற சக்திகள் அங்கே முன்கை எடுத்துப் போகின்றன. அதைத் தடுத்து நிறுத்துகிற வகையில் நமது இந்திய அரசாங்கமும், நாமும் செயல்பட வேண்டும். ஒரே ஒரு உதாரணம். ஈரான், ஈராக் சண்டை என்ன? இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு விடுதலை பெற்ற நாடுகள் விரோதிகள் அல்ல; சிநேகிதர்கள். அந்த நாடுகளுக்கு இரண்டு பக்கத்திலும் அமெரிக்க ஆதரவு இருக்கிறது. அந்த இரண்டு பேரையும் மோதவிட்டு எப்படி வாட்டர் கேட் ஸ்காண்டல் என்று அமெரிக்காவில் நடந்ததோ அப்படி இந்த ஈரான் ஸ்காண்டல் இப்போது உலகத்திற்கு முன்னால் வந்திருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதியினுடைய அந்த ஆட்சியிலிருந்து ஆயுதங்கள் கொடுக்கக்கூடாது என்பதற்கு பதில் இரகசியமாக அவற்றைக் கொடுத்து. அது கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்க பாராளுமன்றத்தில் விவாதம் நடக்கிறது. அங்கே நடக்கிற இந்த நிலைமையைத்தான் இங்கேயும் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். கொழும்புவில் நடந்த வெடி விபத்து, யாழ்பாணத்தில் லாரி, பஸ் போன்றவற்றை தடுத்து நிறுத்தி நடந்த படுகொலை, இதற்கெல்லாம் யார் பொறுப்பு என்பதை, ஜெயவர்த்தனா அரசு கண்டுபிடிக்கவில்லை. மக்கள் மீது விமானத்தை அனுப்பி குண்டு வீசியாகிவிட்டது. ஹெலிகாப்டரை அனுப்பி துப்பாக்கிச் சூட்டில் ஆளைக் கொன்றாகி விட்டது. அதைக் கண்டுபிடிக்க ஆள் இல்லை. ஆகவே, நிலைமை எவ்வளவு எக்ஸ்ப்ளோசிவாக இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தபடி நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்த வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் மாநில சுயாட்சி கொடுத்து அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதுதான்



1987 ஏப்ரல் 27] [திரு. கு. ரமணி]

வழி. அந்த வழியை வற்புறுத்தி எவ்வளவு பெரிய நடவடிக்கை நாம் எடுக்கவேண்டுமோ, அதை எடுக்கவேண்டும் அதற்குத் தகுந்த முறையில் இந்திய அரசாங்கத்தினுடைய ராஜதந்திர நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும். அதைத்தான் நாம் சொல்கிறோம். 1986-ம் ஆண்டு டிசம்பர் புரொபோசல் அடிப்படையில் நாம் பேச்சுவார்த்தையை துவக்கலாம். அது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சம்மதமான ஒரு அடிப்படை. அதைத் தூக்கியெறிந்துவிட்டு வேறு எதையோ கொண்டு வந்து வைத்தால் எப்படி நடவடிக்கையெடுக்க முடியும்? ஆகவே அதைக் கொண்டு வர வேண்டும். இலங்கை அரசு இராணுவத் தாக்குதலை நிறுத்த வேண்டும். அதே மாதிரி இராணுவத் தாக்குதலைக் கொண்டு வந்து இதைத் தீர்க்க வேண்டுமென்று யாரும் அந்த வழிமுறையைக் கையாளும் அளவிற்குப் போகக்கூடாது. நாங்கள் இராணுவத் தாக்குதலை எதிர்க்கிறோம். அரசியல் பேச்சு வார்த்தைதான் அதற்கு வேண்டியது. அதே சமயத்தில் தமிழர்கள் வாழும் பகுதியில் துப்பாக்கிச் சண்டை, கொலை என்பது மட்டுமல்ல, குண்டு போட்டது மட்டுமல்ல, அரிசி, பருப்பு, சாதனங்கள் சகலமும் வாங்கி சாப்பிட்டு மனிதன் உயிரோடு இருப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. அந்த பிளாக்கேடை தடுத்து நிறுத்துகிற அளவிற்கு நடவடிக்கை யெடுக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆலோசனையை நாம் நம்முடைய சபையின் மூலமாக உருவாக்கி, மத்திய அரசுக்குத் தெரிவித்து இன்னும் கொஞ்சம் உறுதியான முறையில், திறமையான ராஜதந்திரிகளைப் பயன்படுத்தி, விளையாட்டுத்தனமான முறையில் ஜெயவர்த்தனா போவதற்கு வழியில்லாமல் நடவடிக்கையெடுக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தை மேசைக்கு முன்னால் வந்து உட்கார்ந்து பிரச்னையைத் தீர்க்கும்படியான நிர்ப்பந்தத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைக்குவேறு வழி கிடையாது. இலங்கையில் இருக்கிற ஜனநாயக சக்திகளும் இடதுசாரி சக்திகளும் அதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அத்தனைபேரும் தமிழர்களுக்கு விரோதிகள் அல்ல. இலங்கை மக்கள் சமாதானமாக வாழ விரும்புகிறார்கள். இல்லையென்றால் இலங்கையின் சுதந்திரமே போய் விடும். ஜெயவர்த்தனா அன்னியப் பட்டு இராணுவம் வந்தால் இலங்கையினுடைய சுதந்திரம் பறிபோய் விடும். அது இந்தியாவிற்கே ஆபத்து. அப்படிப் பட்ட

அபாயத்திற்குப் போகக்கூடாது. ஜனநாயக முறையில் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். நம் அரசாங்கமும், மத்திய சர்க்காரும் அந்த வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பெரிதும் பாதித்துக் கொண்டிருக்கிற, கவலைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிற ஈழத் தமிழர்களின் பிரச்னை பற்றி இந்த அவை விவாதிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகளைச் சார்ந்த நாங்கள் எல்லாம் உங்களைச் சந்தித்து கேட்ட நேரத்தில் நீங்கள ஆர்வத்தோடு அதை ஏற்றுக் கொண்டீர்கள். "முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் இருக்கிறார். அவரும் இதில் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். அவர் வந்தால் சில பிரச்சனைகள் நமக்குப் பரிகாரம் காணுகின்ற வகையில் உருவாகக் கூடும்" என்று கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை, விவாதத்தை ஆரம்பித்து வைத்து வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கு முதற்கண் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பு இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம், 1983-ஆம் ஆண்டு வெடித்துச் சிதறிய இனப்படுகொலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 1983 ஆம் ஆண்டு என்று மட்டும் சொல்ல முடியாது. அதற்கு முன்னாலேயே கொஞ்சம் கொஞ்சமாக இங்கேயும் அங்கேயும் இப்படிப்பட்ட படுகொலைகள் நடந்த வண்ணம்தான் இருந்தன. ஆனால் முழு வடிவம் பெற்று, இனப் படுகொலை என்ற அளவிற்கு கூர்மை பெற்ற ஆண்டு 1983. அந்த நேரத்தில், தமிழர்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள், தாய்மார்கள் கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணமாக இருந்த நேரத்திலே எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர்





அவர்கள், "படையெடுப்பு நடத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை" என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கும் இந்த மாமன்றத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். படையெடுப்பு நடத்த வேண்டும் என்று அவர்கள் அப்போது கேட்ட நேரத்தில், அப்படி ஒரு படையெடுப்பு நடத்தியே தீரவேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் சொல்லவில்லை. மாறாக பலகீனமாக இருந்த இலங்கையை இப்படிப்பட்ட ஒரு பயமுறுத்தலின் மூலம் வழிக்குக் கொண்டு வர முடியும் என்று நம்பியே அந்தக் கருத்தை வெளியிட்டார்கள். ஆனால் அவரது கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது மட்டுமல்ல, அந்தக் கருத்துக்களை பொறுப்புள்ள இடத்திலே இருக்கின்றவர்கள் கூட மிகச் சாதாரணமான கருத்துக்களாகக் கருதித் தூக்கி எறிந்தார்கள். அதற்குப் பிறகு படுகொலைகள் வளர்ந்து கொண்டே இருந்தன. நீங்கள் அதை அறிவீர்கள்.

எனக்கு முன்னாலே திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கே பேசிய போது ஒரு உண்மையைச் சொன்னார். 1983 ஆம் ஆண்டிலேயிருந்து இன்றைக்கு நான் பேசுகிற இந்த நேரம் வரை, நாம் ராஜதந்திரிகளைப் பரிமாறிக்கொண்டிருந்தோமே தவிர, வேறல்ல. திரு. ஜி. பார்த்தசாரதி போனால், அங்கிருந்து திரு. ஹமீது வருவார். இங்கிருந்து திரு. பண்டாரி போனால், அங்கிருந்து திரு. லலித் அதுலத் முதலி வருவார். இங்கிருந்து நமது மரியாதைக்குரிய அமைச்சர் திரு சிதம்பரம் அவர்களும், திரு. நட்வர்சிங் அவர்களும் அங்கே போனால், அங்கிருந்து வேறொருவர் வந்து இங்கே பேசுவார். கடைசியில் நமது பிரதம அமைச்சர் அவர்களும், இலங்கை குடியரசுத் தலைவர் அவர்களும் சந்தித்துப் பேசுவது வாடிக்கையாகிவிட்டதே தவிர, பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணுகின்ற வாய்ப்பினை இந்தப் பேச்சுவார்த்தைகளோ, சதுர, வட்ட மேஜை மாநாடுகளோ உருவாக்கவில்லை என்பதைப் பலமுறை இந்த மாமன்றத்திலே தெளிவுபடுத்தி இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் இந்தப் பிரச்சினையை அணுகுகிற நேரத்திலே இலங்கைக் குடியரசுத் தலைவர் திரு. ஜெயவர்த்தனா அவர்கள் பேசும்போது, அரசியல் தீர்வு காண்பதுதான் முறையே தவிர, **Military solution** நிச்சயமாக ஒரு பரிகாரமாக இருக்க முடியாது என்று

அவர்கள் குறிப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள், பேசிக்கொண்டேயிருந்தார்களே தவிர, அதே நேரத்தில் தமிழ் மக்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

(முற்பகல் 11-10)

அதேபோலத்தான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது பிரதம அமைச்சர் நூறுக்கு நூறு அதை நம்பினார். குறிப்பாக 1983 ஆம் ஆண்டு இந்த இனப்படுகொலை நடந்தபோது, அப்போது பிரதம அமைச்சராக இருந்த அன்னை இந்திரா காந்தி அம்மையாரிடம் இந்தப் பிரச்சினையைக் குறித்து பல கேள்விகள் கேட்கப்பட்டன. அங்கேயிருக்கின்ற இந்தப் பிரச்சினையின் ஆழத்தை அல்லது பரிமாணத்தை சொல்ல வேண்டிய முறையில், சொல்ல வேண்டியவர்கள் அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்குச் சொல்லாத காரணத்தால், இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை இல்லை என்று கருதுகிற அளவிற்கு 1 ஆண்டு வரை, அவர்கள் பார்க்கலாம், பார்க்கலாம் என்று விட்டுவிட்டு, அதற்குப் பிறகு பிரச்சினையின் கோரத்தை புரிந்ததற்குப் பிறகு, 'கிராவிட்டி ஆப் தி சிட்டுவேசன்' புரிந்ததற்குப் பிறகு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், ஐக்கிய நாடுகளுக்குச் செல்லுகின்ற போது, வழியில், சைப்ரஸ் தீவிலே இறங்கி பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்த நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். நிச்சயமாக எனது நாடு, இந்தியா cannot be a silent spectator to the inhuman frivolities of the Government of Sri Lanka. என்று குறிப்பிட்டார். அதற்குப்பிறகு பிரச்சினை வளர்ந்தது. ஒரு பக்கத்திலே பொலிட்டிக்கல் சொல்யூஷன் என்று கூறுவதும், மறு பக்கத்திலே இல்லை, இதற்கு ஒரே வழி நிச்சயமாக இராணுவ பரிகாரம்தான் என்று கூறுவதும் வாடிக்கையாகிக் கொண்டு இருப்பதை நான் இந்த அவைக்கு நினைவூட்டி, இலங்கை அரசை நிர்ப்பந்தப் படுத்தினாலொழிய நிச்சயமாக இதற்குப் பரிகாரம் கிடைக்காது என்ற உண்மையை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பாக எடுத்து வைக்க விரும்புகிறேன். யாரும் வருத்தப்படத் தேவையில்லை. ஜெயவர்த்தனேவை இனிமேலும் தமிழர்கள் நம்பத் தயாராக





இல்லை. நாம் இங்கே பேசுகின்ற பேச்சுகள் அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்கு இடைஞ்சலாக அமையக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சியோடுதான் நான் பேசுகிறேன். ஜெயவர்த்தனே ஒவ்வொரு முறையும் பேசுகிறபோது நான் எதற்கும் தயார். ராஜீவ் காந்தி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நான் கேட்பதற்குத் தயார் என்று சொல்லிக்கொண்டு இருந்தாரே தவிர, சொல்லிக்கொண்டிருந்துவிட்டு, கொன்று குவிக்கின்ற காரியத்திலும், அவர் கசாப்பு கடைக்காரனாக இருந்துகொண்டு இருக்கிறார் என்பதையும், 20 ஆம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற குள்ளநரியாக மாறி பணியாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதையும் தயவுசெய்து நாம் மறந்துவிடுவதற்கு இல்லை; மறந்து விடக்கூடாது.

உலகத்திலேயே மிக முக்கியமான வாசகசாலை என்று கருதப்படுகிற, ஏறத்தாழ 90 ஆயிரம் வால்யூம் புத்தகங்களை உள்ளடக்கிய வாசகசாலை ஒன்றை சிங்கள வெறியர்கள் கொளுத்திக்காட்டிய அந்த சோகக் கதைகளை நீங்கள் மறந்து இருக்கமாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். 1983 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எத்தனை பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்றால் தோராயமாக ஒரு கணக்கு தருகிறார்கள். அந்தக் கணக்கு சரியாக இருக்குமா, இருக்காதா? எனக்குத் தெரியாது. அவர்கள் தருகின்ற எண்ணிக்கையவிட அதிகமாக இருக்கக்கூடும் என்றுகூட நான் நம்புகிறேன். கிட்டத்தட்ட 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் தமிழர்களும், தமிழச்சிகளும் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி எனக்கு கிடைத்து இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் எனக்கு அந்தச் செய்தியை வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல துளிக்கூட கவலைப்படாமல், மனித உணர்வுகளைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், மாதாகோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டன. மசூதிகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. கோயில்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இவைகளையெல்லாம் தொடர்ந்து அவர்கள் செய்ததற்குப் பிறகு, நான் பழைய கதைக்குப் போக விரும்பவில்லை, இன்றைக்கு உங்கள் அனைவருக்கும் தெரியும். 'ஏரியல் பாம்பிங்' என்ற பெயரால் இன்றைக்கு 42 கிராமங்கள் அடியோடு காணப்

படவில்லை என்பதும், யாழ்ப்பாணம் பற்றி எரிகிறது என்ற செய்தியும் பதைபதைக்கத்தக்க வகையில் இன்றைக்கு பெரிய அளவில் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைய சூழ்நிலை மிகமிக மோசமாக இல்லை என்று கருதக் கூடிய அளவிற்கு போரை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, போர் பிரகடனத்தில் ஈடுபடுகின்ற, காரியத்தை ஜெயவர்த்தனவும், பிரேமதேசா என்ற அவரது பிரதம அமைச்சரும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற அந்த உண்மையை இந்த நேரத்தில் இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விஷயத்தில் மத்திய சர்க்கார் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை இறுதியில் பேசப்போகின்ற சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதில் சொல்லக்கூடும் என்று நான் நம்புகிறேன். என்னைப்பொறுத்தவரையில் தெளிவாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை, ஈழத் தமிழர்களின் பிரச்சினையை, மனித உரிமைப் பிரச்சினையாக மனித உரிமையைக் காப்பாற்றுகின்ற பிரச்சினையாக ராஜீவ் காந்தி அவர்கள் கருதட்டும். அந்த அடிப்படையில் அவர் நடவடிக்கை எடுக்கட்டும். தமிழர்களின் நலன் பேணுகின்ற, உரிமைகளைப் பேணுகின்ற பிரச்சினையாக இந்தப் பிரச்சினையை இந்த மாநிலம் எடுத்துக்கொள்ளட்டும் என்ற எனது யோசனையை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ராஜீவ் காந்தி அவர்கள் எந்த அளவிற்கு இதில் அக்கறை காட்டுகிறார்கள் என்பதைப் பற்றி, நான் பெரிய சொல்ல விரும்பவில்லை, அண்மையில் வெளியுறவு அமைச்சராக இருந்தவர், விஜயவாடாவிலே பேசும் போது தெரிவித்தார்கள். வடபுலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதாவது நடைபெறுமானால் பதைக்கின்ற அளவுக்கு உணர்ச்சி படைத்த இந்தியத் துணைக் கண்ட அரசு, தென்னகத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது, தமிழர்கள் பகுதியில் இப்படிப்பட்ட கொலை வெறிகள் தூண்டிவிடப்படுகின்ற நேரத்தில், அவர்கள் அதிக அக்கறை காட்டுவதில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள், (குறுக்கீடு) வெளியுறவுச் செயலாளர். இவ்வளவு சொன்னதற்குப் பிறகு சொல்கிறேன். வெங்கடேசன் அவர்கள்





சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அது போதுமான அளவுக்கு கடமை ஆற்றலில்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, காங்கிரஸ் கட்சியும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டணி கட்சிகளாக இருக்கின்ற காரணத்தாலே அந்த நிர்ப்பந்தத்தில் அவர்கள் மாட்டிக் கொண்டு இருக்கின்றார்கள் என்று வெங்கடேசன் அவர்கள் சொன்னார்கள் என்ற கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வெங்கடேசன் அவர்கள் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் தெரிவித்ததைப் போல எவ்வளவு பெரிய Ace diplomat என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டிய தேவையில்லை. அவரே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

பத்திரிகைகளில் வந்த செய்திகள் பதை பதைக்க வைக்கின்ற செய்திகள். “ Lanka PM bangs door on political solution ” அரசியல் தீர்வின் கதவுகளை அங்கே இருக்கின்ற பிரதம அமைச்சர் மூடியிருக்கிறார் என்ற செய்தி கிடைத்து இருக்கிறது. அது மட்டுமல்ல அவர் இன்னொன்றை சொல்லியிருக்கிறார். “ Any friend who tells us to find a political solution will be considered as the biggest enemy ” என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எந்த நடாவது அல்லது எந்த நபராவது அரசியல் தீர்வு காண்பதின் மூலமாகத் தான் இதற்கு ஒரு பரிகாரம் காண முடியும் என்று சொல்வார்களேயானால் அந்த நாடு மிகப் பெரிய எதிரி நாடாக எங்களாலே கருதப்படும் என்ற கருத்தை பிரேமதேசா அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்றால், நான் தெரிவிக்க விரும்புகிறேன் குடியரசுத் தலைவருக்குத் தெரியாமல் அந்தக் கருத்தை சொல்லியிருப்பார்கள் என்று நாம் நம்பவா? அல்லது குடியரசுத் தலைவர் அவர்களும் பிரேமதேசா அவர்களும் சேர்ந்து இந்தக் காரியத்தில் ஈடுபட்டு பிரேமதேசா பேசினார், எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று குடியரசுத்

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 27

தலைவர் தப்புவதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சியா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நடைபெற்றுக் கொண்டு இருக்கிற சம்பவங்களைப் பற்றி இங்கே இருக்கிற அமைச்சர்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். நான் இப்போது கேட்கிறேன் " India is a hostile country ; India is an enemy country ; " என்று ஸ்ரீலங்காவின் பிரதமர் பிரேம தாசா சொன்னதற்கு பிறகு திரு. ராஜீவ் காந்தி அவர்களை சபாநாயகர் அவர்களே உங்கள் மூலமாகவும், இந்த மாமன்றத்தின் மூலமாகவும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**Whether Thiru Rajiv Gandhi considers Sri Lanka as a friendly country?** இதற்கு அவர் பதில் சொல்ல வேண்டிய கால கட்டம் நெருங்கிக் கொண்டு இருப்பதாக நான் நம்புகிறேன். இனிமேல் தமிழர்களின் உயிருக்கு பாதுகாப்புத் தர, பாதுகாப்புக்கு உத்திரவாதம் தர, மேலே இருக்கின்ற மத்திய அரசு தயங்குமானால் மத்திய அரசின் உணர்வுகளைப் பற்றியே உள்ளத்தைப் பற்றியே சந்தேகப்படுகின்ற சூழ்நிலை நமக்கு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு ரமணி அவர்களும், திரு. சுப்பாராயன் அவர்களும் அமெரிக்க ஏகாதிபத்தியம் எந்த அளவுக்கு இதில் விளையாடிக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். உண்மை. இன்றைக்கு **aerial** என்கிறார்களே இது பாகிஸ்தானிலிருந்து கொண்டு வந்த வெடி குண்டு. அந்த பாமை சுற்றி அவர்கள் ரப்பர் வளையம் போட்டு இருக்கிறார்கள். ரப்பராலே பொதியப்பட்டு அதைப் போட்டால் அவர்கள் குடியிருக்கின்ற இடங்கள் மட்டும் அல்ல காலியாகும், அதன் கீழே தோண்டியிருக்கிறார்களே **bunkers and trenches** அதுவும் காலி ஆகும். ஆக எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு இன்றைக்கு பாதுகாப்பு இல்லை. வெறிபிடித்து அலைந்து கொண்டிருக்கின்றது சிங்கள ராணுவப் படை. அதை தடுத்து நிறுத்துகின்ற சக்தி அங்கு இருக்கின்ற அமைச்சரவைக்கு இல்லை என்று நான் வாதிட



1987 ஏப்ரல் 27] [திரு. கி. மனோகரன்]

மாட்டேன், தடுத்து நிறுத்த முடியும். ஓரளவுக்கு சிலபேர் இருப்பார்கள் கேட்காமல், ஆனால் நினைத்தால் தடுத்து இருக்க முடியும். இதுவரை திட்டமிட்டு ராஜீவ் காந்தி அவர்களை ஏமாற்றுகின்ற குற்றச் சாட்டுக்கு நான் ஜெயவர்த்தனே அவர்களை இறையாக்குகிறேன். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நம்பி இருக்கக்கூடும். நம்மைப் பொறுத்தவரையில் இன்னும் ஒன்றை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். சிங்களவர்கள் அத்தனை பேரும் அயோக்கியர்கள் அல்ல. அவர்கள் அத்தனை பேரும் கொடுமைக்காரர்கள் அல்ல. அவர்கள் அத்தனை பேரும் இந்தியத் துணைக் கண்டத்தின் எதிரிகள் அல்ல. உதாரணத்திற்கு சொல்வேன், இதே மாநில அரசு சிங்களவர்கள் நாட்டில் பெரும் புயல் வீசிய நேரத்தில், பெருவெள்ளம் அடித்துக் கொண்டு சென்ற நேரத்தில் அந்த அரசுக்கு உதவுவதற்காக அப்போது நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இருந்தார்கள். உதவுங்கள் என்று அமெரிக்காவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு என்னைக் கேட்டார். எவ்வளவு உதவலாம் என்று கேட்டபோது 10 லட்ச ரூபாய் பெறுமான பொருட்களை அனுப்பி வையுங்கள் என்று சொல்லிவிட்டு இன்னும் ஒன்றைச் சொன்னார். நான் அவருடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். இது பாதிக்கப்பட்ட மக்களுக்காக. இதில் தமிழர்கள் என்றோ, சிங்களவர்கள் என்றோ வேறுபாடு அல்லது பாகுபாடு காட்டக் கூடாது என்பதைச் சொன்னார். இந்த கருத்தை இங்கே நான் ஜெயவர்த்தனே அவர்களிடம் சொன்னேன். அவர் பாராட்டினார். இத்தனையும் செய்ததற்குப் பிறகு, இன்றைக்கு துளிக் கூட இரக்கமற்ற அரக்கனைப் போல அவர்கள் நடந்து கொள்கிற நிலைமையை நாம் எத்தனை நாளைக்கு தாங்கிக் கொண்டிருக்கப் போகிறோம் என்பதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு இந்த அவைக்கு உண்டு. இந்த அவையின் மூலம் மத்திய அரசுக்கு உண்டு என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படியானால் என்ன 'சொல்யூஷன்?' என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் ரமணி அவர்களிடமிருந்து சற்று அளவிற்கு இந்த பரிகாரத்திலிருந்து வேறுபடுகிறேன். போரையே நிறுத்த

[திரு. வி. மனோகரன்] [1987 ஏப்ரல் 27

(மு.ப. 11-20)

வேண்டும், பேசியே தீர்க்கவேண்டும் என்று ரமணி சொல்கிறார். பேசியே தீர்க்க வேண்டுமென்பது தொடர் கதையானால், நான் தெரிவிக்க விரும்புகிறேன், இலங்கையிலே இன்றைக்கு செத்து மடிந்து கொண்டிருக்கிற அத்தனை லட்சம் தமிழர்களுக்கும் நீங்கள் இரங்கல் பா தீட்டவேண்டியிருக்கும், அல்லது இரங்கல் விழா நடத்த வேண்டியிருக்கும் என்பதை மறந்து விடக் கூடாது. வெறும் சிங்களர்கள்மட்டும் அங்கே இருப்பார்கள். சில காட்டிக் கொடுக்கின்ற தமிழ் எட்டயப்பர்களும்தான் அங்கே வாழ முடியுமே தவிர, மற்றவர்கள் அத்தனை பேரையும் ஒழித்துக் கட்டுகின்ற ஒரு உணர்வோடுதான், ஒரு முனைப்போடுதான் இலங்கை அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியானால் அதற்குப் பரிகாரம் என்ன என்று கேட்கக் கூடும். ராஜீவ் காந்தி அவர்களின் பேச்சை மேற்கோளாகக் காட்டினேன். இதிலே காலதாமதப்படுத்தக் கூடாது எந்தக் காரணத்தைக் கொண்டும். 1983-ல் நடந்தது. இப்போது 1987, இடைப்பட்ட 4½ ஆண்டு காலத்திற்குள் எவ்வளவோ படுகொலைகள். ராஜீவ் காந்தி டில்லியில் நடைபெற்ற சமீத் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

"Pretoria remains obstinate, intransigent, obdurate. They think Apartheid can be given an acceptable face. It cannot. Their legislative amendments and administrative changes do not end the racial domination. They prolong it. Freedom in South Africa will brook no further delay. ...." என்று சொல்லிவிட்டுச் சொன்னார் "The question starkly is liberty now, with innocent lives saved or liberty later, in welter of blood."

இந்தக் கருத்தை நான் ராஜீவ் காந்தி அவர்களிடம் சொல்லி நீங்கள் ஏராளமான வசதிகளை, வாய்ப்புகளை காலத்தை, அவகாசங்களை இலங்கை சர்க்காருக்குத் தந்ததன் மூலம் அவர்கள் ராணுவ ரீதியாக தங்களைப் பெருமளவுக்கு வளர்த்துக்கொண்டார்கள், வலுப்படுத்திக் கொண்டார்கள் என்பது மட்டுமல்ல, இன்றைக்கு இந்தியத் துணைகண்டத்தையே பார்த்து, கேள்வி கேட்கின்ற அளவுக்கு சவால் விடக் கூடிய அளவுக்கு சுண்டைக்காய் இலங்கை ஆகிறதுத் தயாராகியிருக்கிறது என்பதை தயவு



1987 ஏப்ரல் 27] [திரு. வி. மனோகரன்]

செய்து மறந்து விடக் கூடாது என்று நான் இங்கே இருக்கின்ற எனது அருமை நண்பர்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சிலபேர் சொன்னார்கள். அதன் அடிப்படையில் உலக யுத்தம் மூளக்கூடும் என்று. நான் இந்தத் தியரியை மறுக்கிறேன். உலக யுத்தம் மூளப் போவதில்லை. இலங்கை அரசு இங்கே குண்டு போடும், வார் நடந்தால் குண்டு தான் போடுமே தவிர, சென்டு போடாது. இது தெரியும். ஆனால் நிச்சயமாக எழுதிவைத்துக் கொள்ளுங்கள். ஒரு பயமுறுத்தல் செய்வதன் மூலம் இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வர முடியும், என்பது எனது நம்பிக்கை. நாங்கள் போராட விரும்பவில்லை. சமாதானத்தை நாடுகிறோம். நாம் வன்கூடவர்கள் அல்ல. வன்முறையாளர்கள் அல்ல. அப்படிப்பட்ட நிலையில் நான் இந்த நேரத்தில் சில கருத்துக்களை மட்டும் ராஜீவ் காந்தி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உடனடியாக செய்ய வேண்டிய காரியங்களாக நான் கருதுகிறேன்.

(1) Severence of diplomatic relations.

தூதுவர் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும்.

(2) Severance of Trade Relations.

வர்த்தக உறவு துண்டிக்கப் படடாக வேண்டும்.

(3) Economic blockade in all trends.

அனைத்துத் துறைகளிலேயும் பொருளாதார முட்டுக் கட்டை தேவை.

(4) Mobilisation of views internationally regarding the genocide perpetrated அகில உலகத்திலே இருக்கிற அரசியல்வாதிகளுக்கு, பெருந் தலைவர்களுக்கு நாடாள்பவர்களுக்கு இந்தப் பிரச்சினையைப்பற்றி இன்றைக்குச் சொல்லி இருக்கிறோமா என்ற கேள்வியை மெத்த பணிவன்போடு நான் ராஜீவ் காந்தி அவர்களிடம் வைக்க விரும்புகிறேன் NAM conference அவர் சேர்மனாக இருந்தவர். உங்களுக்குத் தெரியும். அணிசேராமையே வாக்கு மாநாட்டிற்கு இன்றைக்கு சேர்மனாக இருக்கிறார். உங்களுக்குத் தெரியும். காமன்வெல்த் மாநாட்டிலே இந்தியா ஒரு அங்கம். உங்களுக்குத் தெரியும். ஐக்கிய நாடுகள்

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 27

சபையிலே பேசுகின்ற வாய்ப்பினை அவர் பெற்றார். உங்களுக்குத் தெரியும். ஹராரே மாநாட்டிலே பேசுகின்ற வாய்ப்பினை அவர் பெற்றார். உங்களுக்குத் தெரியும். நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், அந்த மாநாட்டிலாவது, எந்த உச்ச மாநாட்டிலாவது ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைப் பிரச்சினையை பற்றி பேசியிருப்பாரா என்று தயவு செய்து மனதிலே கை வைத்துப் பாருங்கள். உலக அபிப்பிராயம் எப்படி உருவாகும்? இந்திரா காந்தி அம்மையார் பங்களாதேஷ் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் உலக சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் மூலம் உலக அபிப்பிராயத்தை அவராலே உருவாக்க முடிந்தது. அதன் மூலம் நாம் வெற்றிபெற முடிந்ததை மறந்துவிடக் கூடாது. அந்த வாய்ப்பை ராஜீவ் காந்தி அவர்கள் நழுவ விட்டுவிட்டார் என்று நான் நம்புகின்றேன். உலகப்போர் மூளாது. உலகப்போர் வெடிக்காது. இங்கே பேசிய ரமணி அவர்கள் சொன்னார்கள். ஈரான்-ஈராக் போன்றவற்றிற்கெல்லாம் ரகசியமாக ஆயுதங்கள் சப்ளை செய்யப்படுகின்றன அமெரிக்காவால் என்று சொன்னார். அமெரிக்கா சண்டைகளைத் தான் இன்றைக்கு தேடிக்கொண்டு இருக்கிறது. சண்டைகள் மட்டும் அல்ல, சந்தைகளை அவர்கள் உருவாக்கிய துப்பாக்கிகள், அவர்கள் உருவாக்கிய பயங்கர மிலிட்டரி ஹார்டுவேர் இருக்கிறதே அவைகளை விற்பதற்கு ஏற்ற சந்தைகளை அவர்கள் தேடுகிறார்கள். வசமாக அவர்களுக்கு சந்தைகள் சிக்குகின்றன. அதிலே ஒன்று ஈராக் இன்னொன்று ஈரான் என்று இரண்டையும் பயன்படுத்தி அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

உலகப்போர் மூளும், உலகப்போர் மூளும் என்று சொல்கின்ற நண்பர்களுக்குச் சொல்கிறேன். ஆப்கானிஸ்தான் என்னவாயிற்று? ஆப்கானிஸ்தானத்தில் ரஷ்ய துருப்பு நுழைந்த நேரத்தில், உடனடியாக சீனத் துருப்புகள் அதை எதிர்த்து போராட முனைந்ததா? நான் கேட்கின்றேன். அமெரிக்கா உடனடியாக ஓடிவந்து ஆப்கானிஸ்தானத்தை காப்பாற்றுகின்ற பொறுப்பு எங்களுக்கும் உண்டு என்று சொல்லி உலக யுத்தத்திற்கு தன்னை தயார் செய்து கொண்டதா? இல்லை. இருக்கின்ற சூழ்நிலையைச் சொல்கின்றேன்: எந்த நாடும் ஒரு



1987 ஏப்ரல் 27] [திரு. கி. மனோகரன்]

யுத்தத்திற்கு இப்போது தயாராக இல்லை. அந்த அளவிற்கு எந்த நாடும் இன்றைக்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆக ராஜீவ் காந்தி அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் விரும்புவது இன்னொன்று.

All Tamil Ministers in Premadasa Cabinet must offer their resig-
nations. அங்கு இருக்கின்ற தமிழக அமைச்சர்கள் இதற்கு
எதிர்ப்பு தெரிவிக்கின்ற வகையில் தங்களுடைய பதவிகளை
காந்தி அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் விரும்புவது
இருக்கின்ற குடியரசுத் தலைவரின் முகத்திலே வீசி எறிந்து
விட்டு அவர்கள் வெளியேறி தமிழ் சமுதாயத்தின் உரிமை
களுக்காக பாடுபடவேண்டும் என்று நல்ல நண்பர் தொண்டை
மான் அவர்களையும், அவர்களோடு இணைந்து பணியாற்று
கின்ற அமைச்சர்களையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்கிறேன். இவற்றைச் செய்வதோடு நிற்காமல், உலக
அபிப்பிராயங்களைச் சேகரிப்பதுடன் நிற்காமல், இந்தப்
பிரச்சினையின் வேகத்தைச் சுட்டிக்காட்டுவதோடு நிற்காமல்,
ராஜீவ் காந்தி அவர்கள் இன்னொன்றையும் செய்யக் கடமைப்
பட்டிருக்கிறார். Deadline must be fixed

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடருமேயானால், இன்ன
தேதிக்குள் இதை நீ நிறுத்தத் தவறுவாயேயானால் நிச்சயமாக
இந்தியா இலங்கையின் மீது படையெடுப்பதைத் தவிர வேறு
வழியில்லை என்று டெட் லைன் ஒன்றை அவர் சொல்லியாக
வேண்டும். சொன்னால்தான் இன்றையதினம் இருக்கின்ற
ஸ்ரீலங்கா அரசு தன்னை உணர்ந்துகொள்ள வாய்ப்பு இருக்கும்
என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆக உலகப்
போர் மூளும் என்ற அச்சம் நமக்குத் தேவையில்லை. ராஜீவ்
காந்தி அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்து பார்க்கட்டும்
உடனடி விளைவு கிடைக்கின்றதா அல்லவா என்று பார்ப்போம்.
இன்றைக்கு அவர்கள் பேசிக்கொண்டிருப்பதெல்லாம் லத்தின்
48 ஹவர்ஸ் இலங்கையிலே வாழுகின்ற அத்தனை தமிழர்களையும்
அழித்துவிட என்னால் முடியும் என்று கொக்கரிக்கின்றார்
ஜெயவர்த்தனா. அதே போல பிரேமதேசா கொக்கரிக்கின்றார்.
அவர் அதற்கு மேலே சென்று 24 மணிக்குள் நான் தமிழர்களை
ஒழித்துக் கட்டுவேன் என்று கொக்கரிக்கின்றார். நான் திரும்பவும்
விடைபெறுவதற்கு முன்னால் தெரிவித்துக்கொள்கிறேன். இதை

[திரு. வி. மனோகரன்] [1987 ஏப்ரல் 27

ஒரு கட்சியின் பிரச்சினை என்று அருள்கூர்ந்து கருத வேண்டாம். இது மொத்த தமிழர்களின் பிரச்சினை; மானப் பிரச்சினை; உரிமைப் பிரச்சினை; தன்மானப் பிரச்சினை; இதிலே இந்தக் கட்சி லாபம் தேடப் பார்க்கின்றது, அந்தக் கட்சி லாபம் தேடப்பார்க்கின்றது என்ற பேச்சுக்களுக்கு இடம் இல்லாத அளவிற்கு நண்பர்கள் எடுத்துச் சொன்னபடி நாம் அனைவரும் இணைவோம், இணைந்து பணியாற்றுவோம். மேலே இருக்கின்ற ராஜீவ் காந்தி அவர்கள் சர்க்கார் இந்தக் காரியங்களைச் செய்யுமேயானால் தமிழகத்தில் இருக்கின்ற 5 கோடி மக்களும் ராஜீவ் காந்திக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற உறுதிப் பாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லோரும் வழங்கியதைப் போல நானும் வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை அவர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவாதத்தில் யார் ஸ்கோர் செய்தார்கள் என்பது அல்ல பிரச்சினை. தனது கருத்துக்களை எடுத்து வைத்ததன் மூலம் யார் அதிலே வெற்றிக் கொடி நாட்டினார்கள் என்பது அல்ல பிரச்சினை. கருத்துக்களை எடுத்து வைத்ததன் மூலம் கண்ணியமாக எடுத்து வைத்ததன் மூலம் யார் சொன்ன கருத்துக்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்கள் என்ற உணர்வினை நாம் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நோக்கில் எனது பேச்சின் இறுதியில் பதில் சொல்வதற்கு முன்பாக அமைச்சர் பெருமக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

இதற்கு மேல் இந்தப் பிரச்சினை பற்றி நான் பேச விரும்பவில்லை. பிரச்சினையின் சூடு உங்களுக்குத் தெரியும். தயவு செய்து, தமிழர்களை—இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுங்கள். இங்கே இருக்கின்ற விடுதலைப் புலிகள் பற்றி எல்லாம் பேசப்பட்டது. நான் பேச விரும்பவில்லை. அவர்களுக்குள்ளே பேதங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஒரு கட்டம் வரும். நிச்சயமாக அவர்கள் அத்தனை பேரும் இணைவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இணைந்து செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அப்படி செயல்பட அவர்களுக்கு இங்கே இருக்கின்ற முதலமைச்சர் அவர்களும், அங்கே இருக்கின்ற ராஜீவ்காந்தி அவர்களும் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 27] [திரு. வி. மனோகரன்]

ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லாமற்போனால் பெரிய தவறிழைத்தவனாவேன் என்று கருதுகிறேன். திருப்பித் திருப்பி ஜெயவர்த்தனே சொன்னார்—இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் கேம்ப்ஸ் இருக்கின்றன. முகாம்கள் இருக்கின்றன. அங்கே விடுதலைப் புலிகள் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த ஆயுதங்களை மத்திய அரசும் வழங்குகிறது, மாநில அரசும் வழங்குகிறது என்று சொல்லிச் சொல்லி, எதிர்த்துப் போராடி அப்படிக் கிடையவே கிடையாது என்று வாதாடிய பெருமை மத்திய சர்க்காருக்கு உண்டு; மாநில சர்க்காருக்கும் உண்டு. ஆனால், திடீரென்று விடுதலைப் புலிகளிலே சில பேர் கைது செய்யப்பட்டார்கள் என்றும், அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பிடுங்கப்பட்டன; ஒயர்லஸ் கருவிகள் பிடுங்கப்பட்டன என்றும் செய்தி உலகத்திற்குத் தெரிந்தவுடன் சைக்காலாஜிக்கலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்—உலகம் ஒரு அனுதாபத்தோடு திரண்டு வந்து கொண்டிருந்த நேரத்தில் அந்த உலகத்தின் கவனத்தையே திசை திருப்புகிற அளவிற்கு ஜெயவர்த்தனேயின் கரத்தை வலுவூட்டுகின்ற அளவுக்கு அந்த துர்பாக்கியமான சம்பவம் நிகழ்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அந்தச் சம்பவத்திலே ஈடுபட்ட அரசு எதுவானாலும் சரி, அந்த அரசு நியாயமான முறையில் இந்தப் பிரச்சினையை அணுகவில்லை என்பதை எடுத்துச் சொல்லி, உடனடிப் பரிகாரம் காண, இன்றைக்கு தீர்மானம் போட்டோ அல்லது இன்றைக்கு கடிதம் மூலமாகவோ எழுதி அனுப்புவதை விட்டுவிட்டு, நேரடியாக அமைச்சர் ராமச்சந்திரனே போகலாம். அதை அவருக்குச் சொல்லலாம். இந்த அவையின் வேதனையை, கொந்தளிப்பை சொல்லலாம். இதற்கு ஒரு பரிகாரம் காணுங்கள் என்று வற்புறுத்தலாம். அவர்களே வற்புறுத்தி இருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். எப்படிப்பட்ட கருத்துக்களை அவர் சொன்னார் என்று நமக்குத் தெரியாது. அவர் பேசும்போது அந்தக் கருத்துக்களைச் சொல்வார் என்று நம்பி, உடனடி நடவடிக்கை எடுங்கள், அல்லாவிட்டால் எதிர்கால தமிழ்ச் சமுதாயம் உங்களையும், என்னையும் பழிக்கும் என்று கூறி நான் அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) அதற்கு பதில் அப்படி சொல்லிக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) அவரவர் கருத்து அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடு).

**திரு. கு. ரமணி** : என்னுடைய கருத்தை டிஸ்டார்ட் பண்ணிப் பேசினார்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவரவருடைய கருத்து அப்படியே இருக்கின்றது. (குறுக்கீடு) அதற்கு பதில் திரும்பப் பேசினால் பெரிய விவாதம் ஆகிவிடும் (குறுக்கீடு). உங்களுடைய கருத்து அப்படியே அவைக் குறிப்பில் இருக்கிறது.

**திரு. கு. ரமணி** : தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து தவறான முறையில் சொல்லப்பட்டது. அது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் சரியாகச் சொன்னது அவைக் குறிப்பில் இருக்கிறது. அவர் சொன்னதைப் பற்றி நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

**திரு. கு. ரமணி** : நான் சொல்லாத ஒன்றை சொன்னது உண்டு என்று அவர் பின்பாய்ன்ட் பண்ணிச் சொன்னது எப்படி. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதைத்தான் சொன்னேன். உங்கள் இருவர் கருத்துக்களும் அவைக் குறிப்பில் இருக்கின்றன. (குறுக்கீடு) நீங்கள் பேசியதும் இருக்கிறது. அவர் பேசியதும் இருக்கிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடு)

**திரு. கு. ரமணி** : விவாதிக்கிற அளவுக்கு நேரம் வேண்டாம். இரண்டு நிமிடத்தில் சொல்லி விடுகிறேன். தயவு செய்து ஒரு நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நீங்கள் எனக்கு அனுமதி தர வேண்டும் அதைத்தான் நான் கேட்கிறேன். நான் சொன்ன பாயிண்ட் இருக்கிறதே, அந்தப் பாயிண்ட்டிலே திரு. மனோகரன் அவர்கள் கூறிய உலக யுத்தம் வந்தே தீரும், வந்தே தீரும் என்பது அவருடைய கூர்மையான அழுத்தம். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். நான் சொன்னது அது அல்ல. இஸ்ரேல் ஏன் தலையிடுகிறது? பாகிஸ்தான் ஏன் தலையிடுகிறது? மற்ற நாடுகள் இதில் ஏன் தலையிடுகின்றன? இலங்கைக்குள்ளே



ஏன் தலையிடுகின்றன? (குறுக்கீடு) ப்ளீஸ் வெயிட். அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்கனவே தலையிட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இடத்தில் சிங்களவர்கள், தமிழர்கள் என்கின்ற முறையில் அந்த இனச் சண்டையை இரண்டு பக்கமும் தூண்டி விடுவதற்கான உளவு வேலைகளும் நடத்தப்பட்டு, யார் பாம் வைத்தார்கள், யார் தகர்த்தார்கள் என்று கூட கண்டு பிடிக்க முடியாதபடி, அந்த அரசாங்கம் இருக்கிற இடத்தில் ஒரு அந்நிய ஏகாதிபத்தியம் தூண்டிவிடக்கூடிய ஒரு உலகப்போரின் விதைகளைக் கூடப் போடுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடு).

**திரு. கு. ரமணி** : நான் சொல்லாததை மறுபடியும் சொல்லிப் பிரயோசனம் இல்லை. நான் ஆப்கானிஸ்தானத்திற்குப் போக வில்லை. அவர் போய் இருக்கிறார். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : போதும், சொல்லி விட்டீர்கள். அடுத்து, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திருமதி டி. யசோதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இலங்கையில் தமிழர்கள் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்படுவது பற்றிய விவாதத்தில் இந்த மாமன்றத்தில், நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இலங்கையில் நடக்கின்ற கொலை வெறிச் செயல்களை கடந்த சில தினங்களாகத், தொடர்ச்சியாகப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து, தமிழகம் குமுறி, கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இலங்கையில், இலங்கை அரசு தமிழ் மக்களைப் பூண்டோடு அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு முப்படைகளையும் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிட்டு, நித்தமும் 50-க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசி, நூற்றுக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த வண்ணம் இருக்கிறது. ஏராளமான தமிழர்களின்

[திருமதி டி. யசோதா]   [1987 ஏப்ரல் 27]

வீடுகளும், கடைகளும் குண்டு வீச்சால் தீப்பிடித்து எரிந்தபடி காட்சியளிப்பதாக வெளியாகும் செய்திகள் நெஞ்சை உலுக்குவதாக இருக்கின்றன.

இலங்கை ராணுவத்தினுடைய கொலை வெறியர்களின் குண்டு வீச்சுக்கு அஞ்சி ஓடி கோயில்களில் தஞ்சம் புகுந்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. கோயில் மீதும் குண்டுகளைப் பொழிந்து கோயிலோடு சேர்த்துப் பலபேரின் உயிரைத் துள்ளத் துடிக்கக் கொன்று குவித்து எக்காளம் போட்டுக் கொண்டிருக்கிறது.

நல்லூர் கோயில் அருகில் வீசப்பட்ட குண்டு வீச்சால் அந்தப் பகுதியிலுள்ள வீடுகள் தீப்பற்றி எரிந்ததோடு மட்டுமல்லாமல் வீட்டுக்குள் இருந்த தாய்மார்களும், குழந்தைகளும்கூட தீப் பிடித்து எரிந்து உடல் கருகி, சுருண்டு விழுந்து இறந்ததாக வெளியான செய்தியைப் படித்த தமிழ் மக்கள் மாத்திரமல்ல, இந்திய மக்கள் அத்தனை பேருமே வேதனையால் கண்ணீர் வடித்தே இருப்பார்கள்.

பள்ளிக்கூடத்தில் குண்டு வீச்சு நடைபெற்ற காரணத்தால் 15 மாணவர்கள் அங்கே எரிந்து தீக்கு இரையாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அவர்கள் உயிரை இழந்தது மட்டுமல்லாமல்—150 பேர் அங்கே உயிருக்காகப் போராடக்கூடிய அளவுக்கு மிகப் பயங்கரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கிற போது வேதனை ஏற்படுகிறது.

1983 ஆம் ஆண்டில் நடத்திய கொடுமைகளைவிட இந்த முறை மிகவும் உக்கிரமான முறையில் ஜெயவர்த்தனே அரசு தனது தாக்குதலைத் துவக்கிய இந்த நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள் ஏராளமான தமிழ் மக்களைக் கொன்று குவித்து அந்தப் பிணங்களின் மீது தனது அரசு கட்டிலை ஸ்திரமாக அமைத்துக் கொள்ள முனைந்து விட்டது என்றே தெரிகிறது.

கொழும்பு பஸ் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் யாரென்பது இன்றுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை. ஆனால் அதே சமயத்தில் அங்கே கூட்டப்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் ஜெயவர்த்தனே அரசுதான் இஸ்ரேல் கூலிப்படையின்



1987 ஏப்ரல் 27]   [திருமதி டி. யசோதா]

துணையுடன் இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை நடத்தி 200 பேர்களின் உயிரை பலி கொண்டதோடு மட்டுமல்லாமல் இந்தப் பழியைப் போராளிகள் மீது திணித்து அப்பாவித் தமிழர்கள் மீது இராணுவத்தை ஏவி கொலை பாதக செயல் புரிந்து விட்ட தாக பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி இருக்கிறார். அதுமாத்திர மல்லாமல், அவசர நிலையை நீட்டிப்பதற்காக இப்படி ஒரு சதி யைச் செய்ததாகவும் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார். இந்தக் குற்றச் சாட்டுகளுக்குச் சரியான விளக்கம் தருவதற்கு ஜெயவர்த்தனே அரசுக்கு திராணியில்லை. மாறாக, போராளி களுக்கு இந்தியாதான் ஆயுத உதவி செய்கிறது என்று இலங்கை அமைச்சர் ஒருவர் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று இந்தியா மீது ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டைச் சுமத்தி யிருக்கிறார்.

இந்திய வம்சாவளித் தமிழர்களும் பூர்வீகக் குடிகளான தமிழ் பெருங்குடி மக்களும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி சரிசமமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம், உயர்ந்த லட்சியம் எங்கள் ஊனோடும் உயிரோடும் கலந்திருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் எங்கள் பாரதப் பிரதமர் அவர் களும் தமிழக முதல்வர் அவர்களும் விழிப்போடு செயல்பட்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

இங்கேகூட பேசுகின்றபோது சிலர் சொன்னார்கள். பல மாநாடுகள் வெளிநாடுகளில் நடைபெற்றன. அதில் ஸ்ரீலங்கா வைப்பற்றி பேசவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்தார்கள்.

மாநாடுகளில் அஜெண்டாவில் உள்ள நிகழ்ச்சிகளின்படி தான் நடக்கும். அதற்குப் பிறகு வெளியில் வந்த பிறகு அங்கே கான்பரென்ஸ் நடக்கிற நேரத்தில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகிற நேரத்தில் எங்களுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் எடுத்து வருகிற நடவடிக்கை களைப் பற்றி எந்தக் கட்டத்திலும் சொல்வதற்குத் தயங்கிய தில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போலவே முன்னாள் வெளியுறவுச் செயலாளர் பதவி யில் இருந்தவர் இன்றைக்கு ஒரு பிரச்சினைக்குரிய விவரத்தைச் சொல்லியிருப்பதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் கூட

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 27

பொறுப்பில் இருந்து வெளியே வந்த பிறகுதான் இத்தகைய குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறாரே தவிர உள்ளே இருக்கிறபோது அவ்வாறு கூறவில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

(மூற்பகல் 11-40)

இலங்கைத் தமிழர்களோடு நாம் மொழியால் ஒன்றுபட்டிருக்கிறோம், பண்பால் ஒன்றுபட்டிருக்கிறோம், நாகரீகத்தால் ஒன்றுபட்டிருக்கிறோம். இவ்விதம் சகலவற்றிலும் நம்மோடு ஒன்றுபட்டு விட்ட இலங்கைத் தமிழர்களுக்கு சிங்கள வெறியர்கள் இழைக்கும் கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்க முடியாதவர்களாய் உணர்ச்சி வயப்படுவது இயற்கையாகும்.

இந்த உணர்ச்சி இங்குள்ள அனைவருக்கும் பொதுவானதாகும். இதில் யாருடைய உணர்வையும் குறைத்து மதிப்பிடத் தேவையில்லை. அதே சமயம் இந்த உணர்ச்சி வேகத்தால் நம்மிடமிருந்து வெளியாகும் சொல்லும், நம்மால் செய்யப்படும் செயலும் விவேகமற்றதாக இருந்து விடக் கூடாது.

அங்கே செத்து மடிகின்ற பிணங்கள் மீது நடந்து தங்கள் தங்கள் கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்திக்கொள்ள அங்கேயுள்ள கட்சிகள் வகை தேடி வரிந்துகட்டிக்கொண்டு நிற்பது போலவே, இங்கேயும் கோட்டைமீது தங்கள் தங்கள் கொடிகளைப் பறக்க விட வேண்டும் என்ற ஆசையிலே இலங்கை அரசைக் கண்டிப்பதை விட்டு, மத்திய அரசையும், பாரதப் பிரதமரையும், தமிழக முதல்வர் அவர்களையும் குறைத்து மதிப்பிட்டு பேசியும், எழுதியும் வருகிறார்கள். இத்தகைய பேச்சும் எழுத்தும் இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை செய்வதற்கு பதில் தீமை செய்வதாக ஆகும் என்பதை ஏனோ நினைத்துப் பார்க்க மறுக்கிறார்கள்.

உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பதில் கருத்து வேறுபாடு எவருக்குமே இருக்க முடியாது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆபத்து என்ற மாத்திரத்தில் பாரதப் பிரதமரின் அழைப்பு தமிழக முதல்வருக்கு வருகிறது. உடனடியாக ஜெயவர்த்தனாவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அங்கே நடத்தப்படுகின்ற கொலை வெறிச் செயல்



1987 ஏப்ரல் 27] [திருமதி டி. யசோதா]

களுக்கு பரிகாரம் தேடப்படுகிறது என்பதை அறிந்தும்கூட மத்திய அரசும், பாரதப் பிரதமரும் உண்மையான அக்கறை காட்டவில்லை என்றும், நம்புவதில் பயன் இல்லை என்றும் பொறுப்புள்ளவர்களால் சொல்லப்படுமேயானால், இந்தப் பிரச்சினைக்கு வேறு யார்தான் தீர்வு காணுவர் என்றே தெரியவில்லை.

அதுமாத்திரமல்ல. இலங்கையில் இன்றைய தினம் கொலை வெறியர்களுக்கு, கொலைபாதகச் செயலைச் செய்யும் துணிச்சல் வருவதற்கே இத்தகைய அறிக்கைகள் ஒரு காரணமாக ஏன் அமையக்கூடாது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றத் தவறி, நட்டாற்றில் விட்டுவிடுவார்களோ என்ற அச்சம் எவருக்கும் இருக்கத் தேவையில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு எடுக்கின்ற அத்துணை நடவடிக்கைளுக்கும் மத்திய அரசு ஆதரவு அளிக்கத் தவறியதில்லை.

தமிழ் நாட்டிலே எத்தனையோ கடையடைப்புகள் வெவ்வேறு காரணங்களுக்காக நடந்ததுண்டு. மத்திய அரசு கலந்து கொண்டது கிடையாது. இலங்கைத் தமிழர்களுக்காக ஜெயவர்த்தனாவின் கொடுமைகளை கண்டிக்கும் வகையில் ஜெயவர்த்தனா தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி வந்து பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வைப்பதற்காக தமிழக அரசு நடத்திய கடை அடைப்பு, அதுவும் மாண்புமிகு முதல்வரவர்கள் நடத்திய அந்தக் கடையடைப்பை ஆதரித்து இரயிலையும், விமானத்தையும், மத்திய அரசு அலுவலகங்களையும் செயல்படாது நிறுத்தி, தனது உணர்வை மத்திய அரசு வெளிப்படுத்தியிருக்கிறது. இதிலிருந்து இப்பிரச்சினை 6 கோடி தமிழ் மக்கள் பிரச்சினை மட்டுமல்ல, 68 கோடி இந்திய மக்களின் பிரச்சினை என்பதை இலங்கை மட்டுமல்ல, உலக நாடுகள் அறியும்படி செய்துவிட்டிருக்கிறது.

இதன் காரணமாக உதித்த புதிய உக்திதான் இலங்கை பாராளுமன்றத்திலேயே பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்று எவர் சொன்னாலும், அவர்கள் எங்கள் எதிரியாகக் கருதப்படுவார்கள் என்று இலங்கைப் பிரதமர் பிரேமதாசா கூறியுள்ளது. அதுமாத்திரமா கூறினார். இந்தப் பிரச்சினையில் போராளிகளுக்கு ஆதரவாக நட்பு நாடுகள் இருக்குமேயானால்,

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 27

நாங்கள் வேறொரு நட்பை தேடிக்கொள்வோம் என்றும் ஆணவ மாகக் கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒருவிதமான கருத்து 1983-லும் அங்கே இருக்கத்தான் செய்தது. அப்போது நமது தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒன்றை சொன்னார்கள். இந்தியாவின் ஆலோசனையைக் கேட்காமல், நட்புறவைப் பகைத்துக் கொண்டால், இலங்கைக்குத்தான் பாதிப்பு ஏற்படும் என்றும், மேலும் ஒரு படி சென்று இலங்கை சுதந்திர நாடாக விளங்க இந்தியாவின் நட்பும் ஆலோசனையும் தேவை என்றும் சொன்னார்கள். அதையே இப்போதும் சொல்வேன். இலங்கை சுதந்திர நாடாக விளங்க வேண்டுமானால், இந்தியாவின் நட்புற வும், ஆலோசனையும் தேவை. இந்த அறிவுரையை ஏற்று இலங்கை அரசு தனது ஆணவப் பேச்சை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு இரண் டாம்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு வருகிறார்கள். அவ்விதம் உரிமைகளை இழந்த தமிழர்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அங்கே தானே எடுக் கின்ற முடிவையும் சரி, மத்திய அரசு தலையிட்டு எடுத்த முடிவு களையும் சரி, காலையில் ஏற்றுக்கொண்டதை மாலையில் மறு தலிப்பதுதான் ஜெயவர்த்தனாவின் அரசியல் மோசடியாக இருந்து வந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். 1977-ல் நடந்த தேர் தலின்போது ஒரு வாக்குறுதியை தமிழர்களுக்குத் தந்தார். என்ன அந்த வாக்குறுதி? தான் பதவிக்கு வந்தால் தனி நாடு கேட்கும் தமிழர்களுக்காக சர்வ கட்சி மாநாட்டைக்கூட்டி அவர் களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்பதாகும். செய்தாரா? 1983 வரை செய்யவில்லை. 1981-ல் அவரே நிறை வேற்றிய மாவட்ட அபிவிருத்தி சபை சட்டத்தையும் அமல் படுத்தவில்லை. 1983-ல் மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தலைமையில் கூடிய காமன்வெல்த் மாநாட்டிற்கு வந்த ஜெயவர்த்தனா அவர்கள் அன்றைய நம் பிரதமர் இந்திரா காந்தியின் முன்னிலையில் பிரதமர்கள் தாட்சர் அம்மையாரும், முகாபே அவர்களும், கனடியன் நாட்டு பிரதமர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இலங்கைத் தமிழர்



1987 ஏப்ரல் 27] [திருமதி டி. யசோதா]

பிரச்சினைக்கு ஏற்படுத்திய உடன்பாடுகளை அவராலேயே பின்னர் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதுபோல திம்பு பேச்சு வார்த்தை யிலும் இணக்கம் காணத் தவறி விட்டார். 1985 டிசம்பர் மாதம் இந்திய அரசாங்கம் மூலம் டி.யு.எல்.எஃப். சமர்ப்பித்த ஆலோ சனையை பூரணமாக நிராகரித்துவிட்டார். 1986 ஆகஸ்டில் டி.யு.எல். எஃப். உடன் நடத்திய பேச்சு வார்த்தையில் பிரச்சி னைக்கு நல்ல தீர்வு ஏற்படுத்தத் தவறி விட்டார்.

டிசம்பர் 19-ல் திட்டத்தினை ஏற்றுக்கொண்டு தன் நாடு திரும்பியவுடன் நிராகரித்துவிட்டார். இன்றைக்கு அரசியல் தீர்வை ஆதரிப்பதாக கூறுகிறார்கள். பொருளாதார முற்றுகையை நீக்குவேன் என்று சொன்னார். ஆனால் இது வரையிலே நீக்கவில்லை. இப்படி நாணயத்துக்கும் தனக்கும் தொடர்பே இல்லாதவராக நடந்து அங்குள்ள அப்பாவித் தமிழர் களுக்கு நிரந்தரமாக அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு பதிலாக அடுத்தவர் மீது பழி சுமத்தி அரசியல் ஆதாயம் தேடு பவர் இடத்தில் மனிதாபிமானத்துக்கு இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிராயுதபாணியான இலங்கை மக்கள் மீது இலங்கை அரசாங்கமே முப்படையை ஏவி குண்டுகளை வீசி ஆயிரக்கணக்கான உயிர்களை அழிப்பது மனிதாபிமானத்துக்கு முற்றிலும் விரோதமானதாகும்.

இதைத் தவிர்த்து அரசியல் தீர்வு காணவேண்டுமென்று கூறினால், அவர்கள் எங்களது விரோதிகள் என்று கருதப்படு வார்கள் என்றும் இலங்கை அமைச்சர் கூறுவதிலிருந்து யாருமே இந்தப் பிரச்சினையைக் கண்டிக்கக்கூடாது என்கின்ற ஆணவம் மட்டுமல்ல அதே நேரத்தில் வேறு நட்பைத் தேடிக்கொள்வோம் என்று பயமுறுத்துவது என்பது தன்னாது சர்வாதிகாரக் குரலை எதிரொலிக்கச் செய்வதாகும்.

போராளிகளுக்கு ஆதரவு கொடுப்பவரை கைது செய்ய மாட்டோம். அவர்களை சமுதாயத்திலிருந்தே அகற்றிவிடுவோம் என்கின்ற உச்சகட்ட சர்வாதிகார குரலுக்கு தான் இந்த மன்றத் தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வது இதைப்போன்ற சர்வாதி காரிகளாக இருந்த ஹிட்லர், முசோலினி வரலாறு, நாடறிந்த ஒன்றாகும். இதை இலங்கை அமைச்சர் அறியாமலிருந்தால் இனியாவது அறிந்து கொள்வது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 27

தமிழக அரசு டெல்லிக்கு சென்று பிரதமரை சந்திக்கும் முன் சட்டமன்றத்தில் இந்த விவாதம் வந்திருக்குமானால் அது தமிழக முதல்வருக்கு இன்னும் பலம் சேர்க்கக்கூடியதாக அமைந்திருக்கும் என்பதைத் தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் பெற்ற நாடுகள். இந்திய குடிமக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளை இலங்கை தமிழர்கள் அனுபவிக்க முடியவில்லை. எல்லா கால கட்டங்களிலும் இலங்கை குடிமக்கள் இரண்டாம் தர குடி மக்களாகவே நடத்தப்பட்டு வருகின்றனர். இது நாடறிந்த உண்மை.

இழந்த உரிமைகளைப் பெற முயற்சித்து முயற்சித்து தோல்வி கண்ட பிறகு அந்த தோல்வி கண்ட உள்ளங்களிலிருந்து வெடித்துக் கிளம்பிய புரட்சித் திட்டம்தான் தனி நாடு கோரிக்கையாகும். இதை நாமும் அறிந்திருக்கிறோம் மத்திய அரசும் அறிந்தே இருக்கிறது.

பிரிவினையை நம்மால் ஆதரிக்க முடியாது என்றாலும் இலங்கை தமிழர்கள் சிங்கள மக்களோடு சரிநிகர் சமானமாக வாழ்வதற்குரிய நிலையை உண்டாக்க வேண்டும் என்ற துடிப்பில் 1983-லிருந்து தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண பலவிதமான முயற்சிகள் இந்திய அரசாலும் தமிழக அரசாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிரேமதாசா அவர்கள் இங்கே அரசியல் தீர்வு காணவேண்டும் என்று சொல்பவர்கள் எங்களுடைய விரோதிகள் என்று சொன்னாலுங்கூட அதற்குப் பிறகு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தொலைபேசியின் மூலமாக தொடர்பு கொண்ட பிறகுதான் இன்றைக்கு ஜெயவர்த்தனா அவர்கள் நான் அரசியல் தீர்வு காண்பதற்கு ஒப்புதல் அளிக்கிறேன், ஒப்புக் கொள்கிறேன் என்று அவர்கள் இன்றைக்கு மறுபடியும் சொல்லியிருக்கின்றார்கள். பிரதமர் ஒரு கருத்தும், ஜனாதிபதி அவர்கள் ஒரு கருத்தும் என்று கருத்துக் குழப்பம் இருக்கின்ற இந்த நேரத்தில் நாம் இதிலே சற்று வேகப்படுகின்ற அதே நேரத்திலே நிதானத்தோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 27] [திருமதி டி. யசோதா]

(முற்பகல் 11-50)

மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன் கடந்த மார்ச் மாதத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை கண்டிப்பாக அமுல் செய்ய வேண்டும். தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒன்றாவதாக நெருக்கடி பிரகடனத்தை திரும்பப் பெற வேண்டும். இரண்டாவதாக அரசியல் கைதிகளை நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்ய வேண்டும். மூன்றாவதாக பொருளாதார முற்றுகை நீக்கப்பட வேண்டும். நான்காவதாக இனப்பாகுபாட்டு கொள்கைகளும் திட்டங்களும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் தகராறு இல்லை. இலங்கை அரசுக்கும் தமிழர்களுக்கும் தான் உரிமை கோரல் சம்பந்தமாக உருவெடுத்த பிரச்சினை இன்று மிகப் பெரிய அளவில் உருவாகியிருக்கிறது. இந்த நிலையினை போக்கவும் நடந்து விட்ட சோக சம்பவங்கள் மீண்டும் தொடராமல் இருக்கவும், துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு மீண்டும் மீண்டும் உயிர்ச் சேதம் பொருட் சேதம் ஏற்படாது தவிர்க்கவும் மத்திய அரசும் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியும் ராஜ தந்திர முறையில் செயல்பட்டு என்ன விலை கொடுத்தேனும் அப்பாவித் தமிழ் மக்களை காக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இத்துடன் என் பேச்சை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்களிடையே நடத்தப்படுகிற இனப் படுகொலை பற்றி பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அவர்கள் தெரிவித்த அதிர்ச்சியோடும், வேதனையோடும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்குகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் தன்னை இணைத்துக்கொள்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றை குறிப்பிட்டார்கள். 'செய்ய முடிந்ததை நாங்கள் செய்வோம். எங்களால் செய்ய இயலாதவற்றை எங்களை இந்த மன்றத்திலிருப்போர் அறியும்படி [illegible]

[திரு. ச. இராமச்சந்திரன் [1987 ஏப்ரல் 27

அந்த மக்களிடத்தில் சொல்வோம்' என்று சொன்னார்கள். அதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினை இன்றைய தினம் பேரவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறது என்பதை அறிந்து நேற்றையதினம் சுமார் ஒரு மணி நேரம் என்னோடு கலந்து எந்தெந்த கருத்துக்களை நாம் மக்களிடத்தில் தெரிவிக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் தெரிவிக்க கட்டாயம் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிற வகையிலே சிலவற்றை சொல்லச்சொல்லியிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து இலங்கை அரசும் அவர்களோடு நெருங்கிய நண்பர்களும் அதை அறிந்தோ அறியாமலோ, அதைப்போல இந்திய திரு நாட்டிலேயுள்ள சில பத்திரிகைகளும், சில நேரங்களில் தொலைக்காட்சிகளும், வானொலிகளும் கூட சில சம்பவங்களை சரியான முறையில் நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதில்லை. ஆகவே, அந்த பனிப்படலத்தை நீக்கி உண்மை நிலையை விளக்க வேண்டுவது இந்த அரசின் தலையாய கடமையாகும்.

பேச்சுவார்த்தை பற்றியும், கடந்த காலத்தில் தூதுவர்கள் அனுப்பப்பட்டது பற்றியும், இந்திய அரசு நடவடிக்கைகள் எடுத்தது பற்றியும் இங்கே பேசியபோது சில கருத்துக்களையும், யோசனைகளையும் சொன்னார்கள். இன்றையதினம் நாடாளுமன்றத்திலே இந்த பிரச்சினை விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று அறிகின்றேன். ஆகவே, மத்திய அரசின் சார்பில் அவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் அல்லது என்ன நிலை எடுப்பார்கள் என்பதை அங்கே விளக்குவார்கள் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கின்றேன். ஆனால் ஒன்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். பேச்சுவார்த்தைகள் என்கிறபோது இரு புறமும் ஈடுபடுகின்றவர்களின் இயல்பை பொறுத்து தான் பேச்சுவார்த்தை அமைகிறது. இலங்கை அரசை எடுத்துக்கொண்டால் கடந்த கால அனுபவம் என்னவென்றால், இன வெறியையும், மத வெறியையும், மொழி வெறியையும் மையமாக வைத்து செயல்படுகின்ற ஒரு அரசைத் தான் நாம் இலங்கையில் பார்க்கின்றோம். இதற்கு ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை, சில தினங்களுக்கு முன் இலங்கை பாராளுமன்றத்தில் பேசிய அந்த நாட்டின் பிரதம அமைச்சர் பிரேமதாசா அவர்கள் அண்மையில்



1987 ஏப்ரல் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

திருகோணமலையிலும், கொழும்பிலும் நடந்து விட்ட வெடிகுண்டு சம்பவங்கள் பற்றி பேசினார். அவர் பேசியதில் தவறு இல்லை. ஆனால் அவர் பேசியபோது இலங்கை அரசினுடைய உண்மையான சொரூபம், ட்ரு கலர்ஸ், என்ன என்பதை நாமெல்லாம் தெளிவாக புரிந்துகொள்ளும் அளவுக்கு பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற பொழுது சொன்னது,
"When the lives of our people are in danger, we are not prepared to go in for a political solution. எமது மக்கள் உயிருக்கு ஆபத்து என்றால் அரசியல் தீர்வுக்கு நாங்கள் தயாராக இல்லை". இந்த 'எமது மக்கள்' என்றால் யார்? இது வரையில் இராணுவத்தினாலும், காவல்துறையினராலும் வடபுடத்திலேயும், கிழக்கு மாகாணத்திலேயும் கொல்லப்பட்ட தமிழர்கள் அல்ல. திரிகோணமலையிலே, கொழும்பிலே நடந்த வெடிகுண்டு சம்பவங்களின் விளைவாக சிங்களவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றவுடன் ஒரு நாட்டின் அரசு, அந்த அரசின் சார்பிலே பேசுகின்ற பிரதமர் என்ன சொல்கிறார் என்றால், Our people என்றால் யார் என்கிறார், Who are the other மேலும் அவர் இந்தியாவைப் பற்றிச் சொல்கிறபொழுது because we want friendship with India we can not betray our people இந்தியாவோடு நட்புறவு வேண்டுமென்பதற்காக எமது மக்களை நாங்கள் கைவிட மாட்டோம்; ஆகவே அவர்கள் சிங்களவர்களின் பிரதமராக இருக்கிறாரே தவிர, சிங்களவர்களின் ஜனாதிபதியாக இருக்கின்றார்களே தவிர, இலங்கையிலே உள்ள அத்தனை மக்களினுடைய ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருக்கின்றார்களா என்பதை நாம் தயவு செய்து எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எப்பொழுது ஒற்றுமை வரும்? எல்லோரும் ஒன்று என்கின்ற எண்ணம் ஏற்படுகின்றபொழுது ஒற்றுமை வரும். அவர்களே ஒன்றாக நினைக்காமல் தமிழ் மக்களை வேறாக நினைக்கின்ற பொழுது நீங்களும் நானும் சேர்ந்தா இலங்கையிலே ஒற்றுமையை உருவாக்கப்போகிறோம்? இதை இலங்கையிலே இருக்கின்ற சிங்கள மக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்த மக்களின் சார்பிலே நடைபெறுகிற ஒரு அரசின் சார்பில் ஜெயவர்த்தனே அவர்கள் இன்றைக்குப் பேசுகிற பொழுது We are for peace. We are for talks ஆனால் இதே ஜெயவர்த்தனே அவர்கள் 1983 ஆம் ஆண்டு இனப்படுகொலை நடை-

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

பெற்றபொழுது, மக்களுக்கு விடுத்த அறிக்கையிலே அவர் பேசு கிறபொழுதும் சொன்னார், சிங்கள மக்களை எண்ணித்தான் 'எமது மக்கள் ஆபத்துக்கு உள்ளானால் நான் சும்மா இருக்க முடியுமா?' எமது மக்கள் சும்மா இருப்பார்களா என்று கேட் டார். இவர்கள் " Our people " என்கிறார்களே, Then who are the other people? இந்த உள்ளுணர்வு அவர்களுக்கு இருக்கின்ற வரை அவர்கள் பேச்சு வார்த்தையிலே ஈடுபடுகிறோம் என்று சொல்வதை எந்த அளவிற்கு நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். Who are the other people? என்றால் அதற்கும் பிரேமதாசா சொல்கிறார். சொல்லாமல் விடுவாரா? சொல்கிறார். என்ன சொல்கிறார். If they continue to support our enemies we will have to look for support from another quarter. இந்தியாவைப்பற்றிக் குறிப்பிடுகிற பொழுது, 'எங்களுடைய எதிரிகளை அவர்கள் தொடர்ந்து ஆதரிப்பார்களானால் நாங்கள் வேறுபுறத்திற்குத் திரும்புவோம்' ஆகவே, அங்குள்ள தமிழ் மக்களை அங்குள்ள குடிமக்களாக அவர்கள் கருதவில்லை; அந்த நாட்டு மக்களாக எண்ணவில்லை. அவர்கள் உள்ளக்கிடக்கையை அவர்களாகவே ஆத்திரம் வந்தவுடன் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த உள்ளத்தில் தமிழ் மக்களை அன்னிய மக்களாக பகைவர்களாகக் கருதுகிறார்களே தவிர வேறு அல்ல. அப்படிக் கருதுகின்ற வரையிலும் எப்படி அந்த நாட்டிலே ஒற்றுமை வளரும்? எப்படி இறையாண்மை இருக்கும்? அதை நாம் போய் எப்படி உருவாக்க முடியும் என்பது நிச்சயமாக இந்த அரசுக்குத் தெரியவில்லை.

அதோடு மட்டுமல்ல, இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் களும் எடுத்துச் சொன்னார்கள். அந்நாட்டுப் பிரதமர் பிரேம தாசா அவர்கள் மேலும் கூறுகிறார். We are not prepared to go in for a political solution. அரசியல் தீர்வுக்கு நாங்கள் தயார் இல்லை. யாராவது அரசியல் தீர்வு வேண்டுமென்று, எந்த நண்ப ராவது சொன்னால் அந்த நண்பர் மிகப் பெரிய எதிரி என்கிறார். எதிரிகளை என்பதை மூன்று விதமாகச் சொல்லலாம். எனிமி நம்பர் 1—முதல் என்று சொல்லலாம். ஓர்ஸ்ட் எனிமி என்று சொல்வார்கள்; மிக மோசமான எதிரி என்று சொல்லலாம். ஆனால் இவர் சொல்வது பிக்கஸ்ட் எனிமி—அதாவது இந்தியா வைக் குறிப்பிடுகிறார் ஏனென்றால் இந்தியா என்பது பெரிய



1987 ஏப்ரல் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

பாகமாகத் தெரிகிறது. அவர்களையும் அறியாமலேயே அவர் களிடத்திலேயிருந்து என்ன வருகிறது என்றால், அரசியல் தீர்வு என்று சொல்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் Woost enemy அல்ல ; first enemy அல்ல : biggest enemy என்கிற உணர்வு வருகிறது என்றால் இந்திய அரசையும், நம்மை யும் பற்றி அவர்கள் எத்தகைய மனப் போக்கைக் கொண்டிருக்கி றார்கள் என்பதற்கு இது ஒன்றே போதும். ஆகவே தான் அந்த இலங்கை மக்களின் சார்பிலே நடை பெறுகின்ற அரசினுடைய Content and Character பினுடைய தன்மைகள் அமையும். பேச்சு வார்த்தையே கூடாது. அதைப் பொறுத்துத்தான் பேச்சுவார்த்தை என்பது நமது நோக்கம் அல்ல.

(நண்பகல் 12-00)

பேச்சுவார்த்தை மூலம்தான் எந்தத் தீர்வும் ஏற்படும். இரு வேறு முகாம்களில் பல ஆண்டுகளாகப் பிரிந்து இருக்கிற சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் கூட பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். அவ்வளவு சொல்வானேன். அங்கே இருக் கிற தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக் கிற விடுதலைப் புலிகள் கூட பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராக இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கான சூழ்நிலைகள் இல்லை என்றுதான் சொல்கின்றார்கள்.

ஆனால் இலங்கை அரசைப் பொறுத்தவரையில் பேச்சு வார்த்தையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. பேச்சுவார்த் தையை அவர்கள் விரும்பவில்லை. பேச்சுவார்த்தையை அவர்கள் ஏற்கமுடியாமல் பயன்படுத்துகிறார்களே தவிர, உண்மையிலேயே அவர்கள் இராணுவத் தீர்விலேதான் மிகுந்த நம்பிக்கை வைத்து, அதற்குத் திட்டமிட்டு செயல்படுகிறார்கள் என்பதுதான் நம் முடைய கணிப்பு கருத்து. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமரிடமும் இந்திய அரசிடமும் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கடந்த பிப்ரவரி மாதம் பாரதப் பிரதமரைச் சந்திக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் கொடுத்தபோதும் தெளிவாகச் சொன்னார்கள். பிரதமர் எடுத்த பல்வேறு முயற்சிகளை குறிப்பிட்டுக் காட்டி விட்டு, நமது முதல்வரவர்கள் கடிதத்தில் கூறுவதாவது: Inspite of your sincere efforts, we feel that, all on a sudden, the Sri Lankan Government has switched over to military option instead of arriving at a political solution.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

உங்களுடைய உண்மையான முயற்சிகளுக்கு மாறாக, இலங்கை அரசு அரசியல் தீர்வை விரும்பவில்லை; அதற்கு மாறாக இராணுவத் தீர்வுக்கு அவர்கள் சென்று விட்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம் என்பது அதோடு மட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பயணத்திலே இருந்தபோது நம்முடைய முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு அடித்த தந்தியில் குறிப்பிட்டார்கள்.

**"These reports only confirm our fear that the Sri Lankan Government has decided to find a military solution to the ethnic problem by annihilating the Tamils."**

9—3—1987 அன்று கொடுத்த அந்தத் தந்தியில் எங்களுக்கு வருகின்ற தகவல்கள் இதை உறுதிபடுத்துகின்றன. இலங்கை அரசானது இராணுவத் தீர்வை நடத்துவதற்கு முடிவு எடுத்து விட்டது என்று தான் நாங்கள் கருதுகிறோம்.' அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய கடிதத்தில்

**"Innocent civilians are being massacred. The operations of the Sri Lankan Government against the Tamil people of the Jafffna peninsula have a full military character."**

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள்மீது இலங்கை அரசு முழு இராணுவத் தாக்குதலைத் தொடங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தன் சொந்த நாட்டு மக்கள்மீது முப்படைகளையும் ஏவியிருக்கிறார்கள். இராணுவத்தின் மூலம் தாக்குதல் நடத்துகிறார்கள்; விமானமூலம் குண்டு வீசுகிறார்கள். தமிழர்கள் தப்பித்து வெளியே செல்ல முடியாமல் கடல் வழியையும் தடை செய்கிறார்கள்: இப்படிப்பட்ட அவல நிலையை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களுடைய உள்ளக் கிடக்கையை, நாணயத்தை சந்தேகிக்க வேண்டிய கட்டத்தில் இன்றைய தினம் நாம் இருக்கிறோம்.

**"Sri Lanka is not fighting for a political solution, but to protect and preserve its unity and integrity".**

என்று இலங்கைப் பிரதமர் பேசுகிறார். அமைதியை ஏற்படுத்திய பிறகு தான் நாங்கள் பேச்சு வார்த்தைக்கு வருவோம் என்றால் அமைதி எப்போது ஏற்படும்? நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த அரசு கேட்பதெல்லாம் அமைதி என்றால் சுடுகாட்டு அமைதியா? **Do they want the peace of the grave yard?**



1987 ஏப்ரல் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

விடுதலை இயக்கம் செய்த தவறு என்ன? கொழும்பிலே குண்டு வைத்தார்கள் அல்லது திரிகோணமலையில் குண்டு வைத்தார்கள் என்றால் ஓர் அரசின் கடமை என்ன? குண்டு வைத்தது யார் என்பதைக் கண்டு பிடித்து, குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும், தண்டிக்கட்டும். தமிழகத்தில் அரியலூரிலே குண்டு வெடித்த சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். அரியலூரிலே குண்டு வெடிப்பு நடந்தது. நாம் என்ன செய்தோம்? அரியலூரிலே விமானத் தாக்குதல் நடத்தி குண்டு வீசி, அங்கே இருக்கிற மக்களை எல்லாம் அழித்து, தரை மட்டமாகவா ஆக்கினோம்? கொழும்பிலே யார் குண்டு வைத்தார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டாமா? ஆனால் அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, ஏற்கெனவே திட்டமிட்டபடி, தமிழர் பகுதிகளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். வன்முறைகள் எங்கு நடந்தாலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்வது இல்லை.

இங்கே மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதையேதான் பிரேமதாசா அவர்கள் கூட சொன்னார்கள். 'உங்கள் நாட்டிலே போராளிகள் தவறு செய்கிறபோது அவர்களை கைது செய்கிறீர்கள்; ஆனால் எங்கள் நாட்டில் தவறு செய்து விட்டு அங்கே வந்தால் அவர்களை இஷ்டம்போல உலாவ விடுகிறீர்கள், பிரேமதாசாவும் அதேதான் கேட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மனோகரன் அவர்களும் அதையேதான் கேட்டார்கள், கேட்பவர்கள் இரண்டு பேர்களாக இருந்தாலும் கேள்வி ஒன்றுதான்.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, நான் என்ன பிரேமதாசா மாதிரியா பேசுகிறேன்; பொறுப்பாகப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பதில் வருகிறபோது கோபம் வரக்கூடாது. அருமை நண்பர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், பிரேமதாசா அவர்கள் என்ன கேட்கிறார்.

**"When they created a problem there, in India, they were arrested, but nothing was done when they killed hundreds of people in Sri Lanka".**

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

என்று கேட்கிறார். எனவே நான் பிரேமதாசா அவர்களுக்கும், அவரைப் போன்று கேள்வி கேட்கிறவர்களுக்கும் ஒன்றைச் சொல் கிறேன். இங்கே There is rule of law. கண்டவர்களை எல்லாம் கைது செய்து சிறையில் போட்டு சித்திரவதை செய்து சுட்டுத் தள்ளுகிற பழக்கம் நமக்கு இல்லை. இங்கே போராளி களானாலும், சாதாரண மக்களானாலும், இந்திய ஜனநாயகத்தில் தவறுகள் செய்கிறபோது நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் இலங்கையில் அப்படியல்ல. தமிழர்கள் என்றால் நடவடிக்கை எடுக்கிறீர்கள்—தவறுகள் செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை.

In Sri Lanka, there is no rule of law but only the law of jungle. அதனால் இலங்கை அரசினுடைய போக்கு, அது கையாளுகின்ற தன்மை, அதனுடைய பண்பு, அதனுடைய இயல்பு இவற்றை எல்லாம் பார்க்கிறபோது அவர்களுடைய பேச்சுவார்த்தையைப் பற்றியோ அல்லது அவர்கள் கையாளுகின்ற முறையைப் பற்றியோ கட்டாயம் தீர்க்கமாகச் சிந்தித்து தமிழ் மக்களுக்குச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த நாட்டின் பிரதமர் கூறுகிறார், "We want to tell our friends in the world that they should help us to destroy those sections which are trying to destroy democracy in this country." அவர்களுடைய நாட்டிலே உள்ள ஜனநாயகத்தை அழிப்பதற்கு முயலுகிற சில பிரிவினரை அழித்து ஒழிப்பதற்கு உலகத்திலே உள்ள அவர்களின் நண்பர்கள் உதவி செய்ய வேண்டும். நான் கேட்க விரும்புவது, Is there any such thing as democracy in Sri Lanka? இலங்கையில் ஜனநாயகம் என்று ஒன்று உண்டா? பாராளுமன்றத்திலே இருப்பவர்கள் மக்களைச் சந்தித்து தேர்ந்தெடுக்கப் படாமலேயே தங்களுடைய பாராளு மன்ற காலத்தை நீட்டித்து கொண்டார்களே, இதுதான் ஜனநாயகமா? அவ்வளவு சொல்வானேன் ஜனநாயகம் என்பதே தமிழர்கள் வாழ்கிற இலங்கையின் கிழக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் எங்கே இருக்கிறது. இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒன்று கால்கால் துறை ராஜ்யம் இல்லை என்றால் இராணுவ இராஜ்யம். இன்றைக்குப் They are under military rule. They never enjoyed democracy.





1987 ஏப்ரல் 27] [திரு ச. இராமச்சந்திரன்]

ஒருவேளை சிங்களவர்களுக்கு வேண்டுமானால் ஜனநாயகம் இருக்கலாம், தமிழர்களைக் கொல்கிற ஜனநாயகமாக அது இருக் கலாம். ஒன்றை அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். எந்த நண்பர்கள் அவர்களுடைய ஜனநாயகத்தைக் காப்பார்கள் என்று அவர்கள் நம்புகிறார்களோ அந்த நண்பர் களுடைய கடந்த கால வரலாறு என்ன? எங்கெல்லாம் ஜனநாயம் இருந்ததோ அதையெல்லாம் சீர்குலைத்து, ஒன்று இராணுவ சர்வாதிகாரி அல்லது தங்களுக்கு வேண்டிய சர்வாதிகாரிகளை வைத்து தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக்கொண்ட வரலாறுதான் அவர்களுடைய கடந்த கால வரலாறு என்பதை இலங்கை அரசு தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இலங்கை அரசுக்கு எப்பொழுதும் ஒரு பழக்கம் உண்டு. அது என்னவென் றால் யார்மீதாவது பழிபோடுவது; பிறகு வேண்டுமென்றே தமிழர்களைப் பழிவாங்குவது.

விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த ஆண்டுத் துவக் கத்தில் தங்களுடைய ஈழப்பகுதியைத் தனி நாடு என்று அறிவிக் கப் போகிறார்கள் என்று பழி போட்டார்கள். விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 'அப்படி எல்லாம் இல்லை. அங்கே நிர்வாகம் இல்லை, சிவில் அட்மினிஸ்ட்ரேஷன் அதாவது உள் ளூரில் தகராறுகள் போன்றவை வந்தால் அவற்றைப் பார்த்துக் கொள்கிற மாதிரிதான் ஏற்பாடு இருக்கிறதே தவிர, தனி நாடு என்று அறிவிக்கவில்லை' என்று மறுத்தார்கள். ஆனால் இலங்கை அரசு அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இலங்கை அரசு என்ன செய்கிறது என்றால் அப்படிச் சொல்லிவிட்டு உடனே பொருளா தாரத் தடை போட்டார்கள். சாதாரண மக்கள், அப்பாவி மக்கள், வேலைக்குப் போக முடியாது, சம்பாதிக்கவும் முடி யாது. சாப்பிடுவதற்கும் உணவுப் பொருள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் மற்றவர்களும் பேசுகிறபோது இதை எடுத்துச் சொன்னார்கள்.

அதேபோன்று கொழும்பிலே நடந்த வெடிகுண்டுச் சம்பவத்தை வைத்துக்கொண்டு அதனை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் செய்தார்கள் என்று பழியைப் போட்டு தமிழ்ப் பகுதிகளில் தாக்கு தல் நடத்தியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இப்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

போது இந்தியாவின் மீதும் பழிபோட ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியாவின் மீது பழிபோட்டு இலங்கையினுடைய சுதந்திரத்தை தங்கள் எஜமானர்களுக்கு அடகு வைத்தால் கூட வைக்கலாம்; அது நடக்காது என்று நினைப்பதற்கு இல்லை; அதுவும் நடக்கலாம். ஆக இதைப் பற்றி, அந்த அரசின் போக்கு பற்றி, அந்த அரசின் செயல்பாடு பற்றி, அந்த அரசின் நடவடிக்கை பற்றி நாம் மட்டுமல்ல; இலங்கையிலே இருக்கின்ற தமிழ் மக்கள் மட்டுமல்ல; இலங்கையிலே இருக்கின்ற சிங்கள மக்களும் சிந்தித்துப் பார்த்தால், தங்களுடைய சுதந்திரம் கூட பறி போவதற்கான முயற்சியில் அந்தச் சர்க்கார் வேகமாகப் போகிறதோ என்று அஞ்ச வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

இந்தச் சூழ்நிலையின் காரணமாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பாதகங்கள் இலங்கையில் உள்ள அரசியல் சமூக பொருளாதார வாழ்வு சீர் குலைவும். இந்தியாவுடன் பகை, இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம், குமரி பெருங்கடலில் பதட்டம். இதற்கு மேலாக அண்டை வீட்டிலே தீ பிடித்தாலே ஆபத்து, புறக்கடையிலே தீ பிடித்தால் இன்னும் பேராபத்து என்பது போல் தமிழ் நாட்டை பிரண்ட் லைன் ஸ்டேட்டாக மாற்றுகிறார்கள். போர் முகாமின் முன்னணி மாநிலமாக ஆக்குகிறார்கள். ஆகவே இந்த ஒட்டு மொத்தமான பிரச்சினையைப் புரிந்துக் கொண்டு தான் இதை அணுகவேண்டும் என்பதில் மாநில சர்க்கார் மிகத் தெளிவாக இருக்கிறது. இலங்கை அரசு அத்தகைய போக்கிலேயே போகுமானால் அது பாசிச போக்காக மாறும், அதனுடைய விளைவு மிகப்பெரிய போராகத்தான் முடிவதற்கான வாய்ப்புகள், சூழ்நிலை இருக்கிறது. அதை எச்சரிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும் என்பதையும் இந்தியாவுக்கு விரோதமாக இந்தியாவின் பாதுகாப்புக்கு விரோதமாக இந்திய மக்களுக்கு எதிராக, இந்தியப் பெருங்கடல் அமைதிக் கடலாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு விரோதமாக, இலங்கை தமிழர்களுக்கு விரோதமாக ஏன் இலங்கை சிங்கள மக்களுக்கே விரோதமாக செயல்படுகின்ற ஒரு போக்கை நாம் கூர்ந்து நோக்குகிற போதுதான் இந்தப் பிரச்சினையின் உண்மையான நிலைமை நமக்குத் தெரிகிறது.



1987 ஏப்ரல் 87] [திரு. ச. இராமச்சந்திரன்]

இவற்றை எல்லாம் இன்றைக்கு எதிர்த்து அரசியல் தீர்வுகாண
வேண்டுமா அல்லது ராணுவ தீர்வு காணவேண்டுமா என்றெல்லாம்
இங்கே பேசப்பட்டது. அந்தத் தீர்வை காண வேண்டியது
நாமல்ல. முதலில் நாம் அதைத் தெளிவாக புரிந்து கொள்ள
வேண்டும். அந்த தீர்வை காண வேண்டியது அங்குள்ள மக்கள்
இந்தப் போக்கை எதிர்த்து அவர்கள் தான் போராடுகிறார்கள்.
அங்குள்ள தமிழ் மக்கள் போராடுகிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப் போல சிங்கள மக்க
ளிடையே இருக்கக் கூடிய முன்னணியினர் முற்போக்கு எண்ணம்
படைத்தவர்களும் தமிழ் மக்களுடன் சேர்ந்து போராடுகிறார்கள்.
ஆக போராட்டத்தில் முன்னணியில் இருக்கக்கூடிய அந்த மக்க
ளுக்கு வேண்டிய உதவிகளை, அந்த மக்களுக்கு வேண்டிய
உற்சாகத்தையும் தருவதிலேதான், அந்த மக்கள் இத்தகைய
போக்கை முறியடிப்பதற்கும், இலங்கை அரசின் முகமூடிகளை
கிழித்து எறிவதற்கும் வாய்ப்பு இருக்குமே தவிர. நாம் இங்கே
இருந்துகொண்டு அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா என்று
பேசுவது மட்டும் சரியாக ஆகாது. அரசியல் தீர்வுதான் காண
வேண்டுமே தவிர ராணுவ தீர்வு நிரந்தரமான தீர்வு ஆகாது.

விடுதலை இயக்கங்களின் வரலாற்றை படித்தவர்களுக்குத்
தெரியும். விடுதலை உணர்வு கொண்டவர்கள் சிறுபான்மை மக்க
ளானாலும் சரி, அந்த நாட்டினுடைய பெரும்பான்மை மக்களா
னாலும் சரி, எந்த பெரிய ஏகாதிபத்திய வல்லரசுகளானாலும்
சரி அவர்களை வீழ்த்த முடியாது என்பது உலக நாடுகளின் வர
லாறு. வேண்டுமானால் சில வெற்றிகள் அங்கும் இங்கும் கிடைக்
கலாம். சில 'பேட்டல்களில்' வெற்றி பெறலாம். War will be
won by liberation forces. ஆகவே ஒரு இயக்கத்தின் மீது
இரண்டு மூன்று குண்டுகள் போடுவதானாலும் 100, 200 பேர்களின்
மீது தாக்குதல் நடத்தி கொன்றுவிட்டதனால் வெற்றி பெற
லாம் என்று நினைத்தால் அது பகல் கனவாக முடியுமே தவிர
வேறு அல்ல. உறுதிகொண்ட ஒரு டிட்டர்மெண்ட் பீப்புள்
ஒரு நேஷனாலிட்டி உள்ள பீப்புள் அவர்களுடைய பிரச்
சினையை அறிந்து நியாயம் வழங்குவதன் மூலமாகத்தான் எந்த
பிரச்சினைக்கும் தீர்வு காண முடியுமே தவிர ராணுவ தீர்வை
மேற்கொண்ட நிச்சயமாக காண முடியாது. இராணுவ தீர்வை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

நாடுகள் உலகத்தில் எப்படியெல்லாம் பிரிந்தன, என்ன வகையிலே சாதனைகளை என்பதைத்தான் பார்க்க முடியுமே தவிர நிச்சயமாக அவர்களுக்கு அதனால் பலன் விளைந்ததாக வரலாறு கிடையாது. அப்படிப் பாதுகாப்பாக பார்க்கிறபோது இன்றைக்கு இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக விடுதலைப் புலி இயக்கம் எல்.டி.டி.இ. அமைப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு துணையாக ஈரால் இருக்கிறார்கள். மற்ற இயக்கங்கள் இல்லை என்று சொல்லவில்லை. இருக்கிறார்கள். அங்கே இருந்து அவர்களால் பணியாற்ற முடியவில்லை. சிங்கள இராணுவத்திற்கு எதிராக அங்கே தன்னந்தனியாக நின்று போராடி உயிர் தியாகம் செய்து வருகிறார்கள். சொல்வார்களே கண்ணீரும் செந்நீரும் கொட்டி சுதந்திர பயிர் வளர்த்தார்கள் என்று அப்படி அவர்கள் வளர்க்கிறார்கள்.

பொதுவாக ஆண்கள் செந்நீரை சிந்துவார்கள், பெண்கள் கண்ணீரை சிந்துவார்கள். ஆனால் இலங்கை தமிழ் பகுதியைப் பொறுத்தவரைக்கும் பெண்களும் ஆண்களோடு சேர்ந்து செந்நீரை சிந்துகிறார்கள். ஆண்கள் ஆனாலும் சரி, பெண்கள் ஆனாலும் சரி அத்தனை பேரும் சேர்ந்து இலங்கை அரசின் சர்வாதிகார போக்கை, அந்த பாசிச போக்கை எதிர்த்து உயிர்த் தியாகம் செய்கிறார்கள். அவர்களை எல்லாம் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஜனவரி மாதத்திலிருந்து ஏற்பட்ட பொருளாதார தடையின் காரணமாக நலிந்து மெலிந்து வாடி வதங்கி வாழ வழியற்று, வீட்டிலும் கூட இருக்க முடியாமல் வீதியிலே கூட நடமாட முடியாமல் காடுகளிலேயும் புதர்களிலேயும் மறைந்து வாழ்கிற லட்சோபலட்சம் ஏழைகளுக்கு அவர்களுக்கு உண்ண உணவு உடுக்க உடை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டிய மருந்துகள் கொடுக்கக்கூட வழி இல்லாத நிலைமை இருக்கிறது. நம்முடைய தாய் உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் அந்த மக்களுக்கு மனிதாபிமானத்தோடு மனித நேயத்தோடு நம்மால் ஆன உதவிகளை, அவர்களுக்கு வேண்டிய உணவு வகைகளை அல்லது மருந்துகள் மற்றவைகள் கொடுக்கும் வகையில் அங்கேயிருந்து ஓடி இங்கே வந்திருக்கக்கூடிய தமிழர்களுக்கும், அங்கேயே இருக்கிற தமிழர்



1987 ஏப்ரல் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

களுக்கும் ஏதாவது வகையில் பயன் தர முடியுமா என்று யோசித்து அப்பொழுது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலே புரட்சித் தலைவர் அவர்கள் தங்களது தலையாய விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபடுகிற இயக்கங்களுக்கு நாம் நம்முடைய ஆதரவையும், உதவியையும் செய்கிற அந்த நேரத்திலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிற வகையிலும், சாதாரண மக்களுக்கு உதவுகிற வகையிலும், இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டு மக்கள் ஏற்கனவே சுமார் ஐந்து கோடி ரூபாய் நிதியுதவியாகத் தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஐந்து கோடி ரூபாயிலிருந்து உடனடியாக நான்கு கோடி ரூபாயை பாதிக்கப்பட்டிருக்கிற அந்த மக்களுக்கு உணவு வகையிலும், உடுக்கிற உடை வகையிலும், மருந்து வகையிலும், மற்ற மற்ற தேவைகளிலும் உதவிட அந்த மக்களை காப்பாற்றுவதற்கு அரசு இன்றே உத்தரவு வழங்கவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். மத்திய அரசு அரசியல் ரீதியாக அல்லது உலக ரீதியாக எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் மாநில அரசைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் நலன் காக்கப்பட வேண்டுமென்ற உன்னத லட்சியம் ஒன்றை மட்டும் வைத்து செயல்பட வேண்டுமென்று இங்கே பேசுகிறபோது தெரிவித்தார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலும் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு அந்தத் தமிழ் மக்களுக்காக, இங்கே மட்டுமல்ல, அங்கேயும் போராடுகிற மக்களுக்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் என்னென்ன உதவிகளைச் செய்யவேண்டுமோ அதை இந்த அரசு செய்ய முன் வரும். இதற்கு பிறகாவது இலங்கை அரசு—சிறுத்தைகள் கூட தங்களுடைய புள்ளிகளை மாற்றிக் கொண்டாலும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் ஜெயவர்த்தனா மாற்றிக் கொள்வாரா என்று தெரியவில்லை. ஆனாலும் சொல்கிறோம். தன்னுடைய

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

போக்கை மாற்றிக் கொள்ளுமானால் இலங்கையில் இருக்கிற மக்களுக்கு அவர்கள் பாதுகாப்பைத் தேடியவர்களாவார்கள், அங்கேயிருக்கிற மக்களுக்கு ஜனநாயகத்தை உருவாக்கியவர்களாவார்கள், அங்கே இருக்கிற மக்களுக்கு சமவாழ்வு உருவாக்கியவர்களாவார்கள். அந்தப் போக்கிற்கு மாறான போக்கை கடைபிடிப்பார்களானால் வரலாறு அவர்களை கட்டாயம தூற்றும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே இலங்கைத் தமிழர்கள் பிரச்னை குறித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திடீரென்று எழுந்து பேசக் கூடாது. அதுபற்றி அன்றைக்கே பேசி விட்டோம். விவாதம் முடிவுற்றது.

2. வரவு-செலவுத் திட்டம், 1987—88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 48 ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,91,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

**திரு. மு. இராசாங்கம்:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தின் அருகில் உள்ள தொழில் வளர்ச்சி நிறுவன வளாகத்தில் பட்டு நூல் முறுக்கு ஆலை அமைக்கப்பட வேண்டிய அவசியம் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 48 ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,91,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1987 ஏப்ரல் 27]

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** தலைவர் அவர்களே, கிராமங்களில் செங்கல் தொழிற்சாலை, ஓடு செயயும் தொழிற்சாலை, மண் பாண்ட தொழிற்சாலைகளை நிறுவுபவர்களுக்கு குளங்களில் மண் எடுக்க உரிமையும், கடன் வசதியும் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை 48 ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,91,11,000-ல் ரூ 100 குறைக்க வேண்டும்."

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும், உசிலம்பட்டி தொகுதி பகுதியில் புதிய ஊரகத் தொழிற் கூடங்கள் துவங்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை 48 ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,91,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :**

Sir, to discuss the need to develop Coir Industry I move—

"That the allotment of Rs. 13,91,11,000 under Demand 48—Rural Industries be reduced by Rs. 100."

(ஆ) கோரிக்கை எண் 57—ஊரகத் தொழில்கள் குறித்த
[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,20,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

[1987 ஏப்ரல் 27

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,20,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி :** தலைவர் அவர்களே, சாத்தான் குளம் தொகுதியில் சிறு தொழில் முனைவோருக்கு மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,20,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரை யாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை 48 பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு** அவை முன் வைக்கப்பட்டுள்ளது. அதை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு குறிப்பில் ஏற்றிக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைச் சொன்ன பிறகு கடைசியாக என்னுடைய பதிலுரையைத் தருகிறேன்.

(பிற்பகல் 12-20)

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கோரிய ஊரகத் தொழில்கள் மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். புதிய 20

** 137—185 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற் றுள்ளது



1987 ஏப்ரல் 27] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

அம்சத் திட்டத்தின் கீழ் கிராமத் தொழில், குடிசைத் தொழில், சிறுதொழில் ஆகியவைகளைச் சீரான நிலைக்குக் கொண்டு வந்து, மக்களுக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு உருவாக்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் தொடங்குவதற்கு மாவட்டத் தொழில் மையம் வழி காட்டியாக இருந்து வருகிறது. ஆனால் அவர்கள் பரிந்துரை செய்கிற கடன்களை வங்கிகள் காலதாமதப்படுத்துகிறார்கள். தொழில் மையத்தில் இந்த தலைமை வங்கிகளைச் சேர்ந்த அலுவலர்கள்தான் கடன் உதவி மேலாளராக இருக்கிறார்கள். அப்படி இருந்தும் ஏன் இதில் காலதாமதாகிவிடுகிறது என்பது நாம் சிந்திக்க வேண்டிய விஷயமாக இருந்து வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே, சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இருப்பதாக இந்த அறிக்கையிலே பார்த்தேன். இது முறையாக நடந்து வருகிறதா? என்பதை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்றன. அவர்கள் வேலைக்காக எப்படி அலைகிறார்களோ, அந்த அளவிற்கு தொழில் மையத்திற்கும், வங்கிகளுக்கும் அலைந்து கொண்டிருக் கிறார்கள். இதற்கு என்ன வழி? இதைச் சீக்கிரமாக முடிவு செய்வதற்கு என்ன செய்யலாம், என்ன முடிவு செய்யலாம் என்பதையும் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டிக் கூட்டுறவுத் தொழில்கள் பல இடங்களில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதனுடைய புண்டல் கள் உற்பத்தியும், வருமானமும் குறைந்து கொண்டே வருகிறது. கூட்டுறவுத் துறையில் ஏன் அப்படி குறைகிறது? அதோடு எங்களுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலே 22 ஆதி திராவிட கூட்டுறவு தொழில் சங்கங்கள் அமைத்து, அதை சமீபத்திலே தொடங்கி வைத்தார்கள். அவைகளில் ஒருசிலதான் வேலை செய்கின்றன. எங்களது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்

அதைப் பார்த்து ஆவன செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் மட்டும் போதாது, அவைகள் நன்றாக இயங்குகின்றனவா என்பதை கவனிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இது மிகவும் நல்ல தொழில். மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்ற தொழில். எனவே இதை இன்னும் பல இடங்களில், வேலைவாய்ப்பே இல்லாத இடங்களில், வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையில், இந்த தொழில்களைத் தொடங்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக அக்கநாய்க்கன்பட்டி, நானாகிணறு, மருதல் வாழ்வு, சொக்கநாதபுரம், கொல்லன்கிணறு, புதூர், கொடியன் குளம், கைலாசபுரம், கீழ்க்கோட்டை போன்ற பல கிராமங் களுக்கு இந்த மாதிரியான கூட்டுறவுத் தீப்பெட்டி தொழிற் சங்கங்களை அமைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் கதர் பயிற்சி நிலையத்தை 6 இடங்களில் கட்டினார்கள். பல மாதக் கணக்காகியும், அவைகள் அப்படியே திறக்காமல் இருக்கின்றன. ஒரு இடத்தில் மாத்திரம் அதைத் திறந்து இப்போது அது வேலை செய்து கொண்டிருக்கிறது. எனவே இதுமாதிரி மற்ற இடங் களிலும் திறந்து அவைகள் செயல்புரிவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், சிட்கோ, நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. 49 தொழில் பேட்டைகளில் 2149 தொழில் கூடங்களை அமைத்திருக் கிறார்கள். இன்னும் பல இடங்களில் அமைக்க இருக்கிறார்கள், இப்படி அமைத்திருக்கிறார்களே, அவைகளை கிராமங்களிலே, நகரங்களிலே, தாலுக்கா தலைமையிடங்களிலே ஏன் அமைக்கக்கூடாது? இதுவரை அனைத்தையும் நகரத்திலே தான் வைத்திருக்கிறார்கள். நகரங்களிலே ஒரு பக்கத்திலிருந்து எதிர்பக்கத்துக்கு கடக்கவே முடியவில்லை. கடந்து செல்லவே முடியவில்லை. மேலும் ஜனப்பெருக்கம் அதிகமாகிக் கொண்டே





இருக்கிறது. தாலுக்கா தலைமை இடங்களிலே இடங்கள் இருக் கின்றன. ஓட்டப்பிடாரம் தாலுக்காவாக இருக்கிறது. அங்கே, ஓட்டப்பிடாரம் பகுதியில் தொழிற்பேட்டையை அமைக்கலாமே! பஞ்சாலக்குறிச்சியிலே ஒரு கோட்டையை இதற்கு முன்னாலே இருந்த முதல்வர் கட்டினார்களே, அங்கே ஒரு தொழிற்பேட்டை யும் கட்டியிருந்தால் அங்கே ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை செய்து இருப்பார்களே, அந்தப் பகுதி நன்கு வளர்ந்து இருக் குமே, செழித்து இருக்குமே, அந்தப் பகுதி மக்கள் பாராட்டி இருப்பார்களே. ஓட்டப்பிடாரத்தில் நல்ல இடங்கள் இருக் கின்றன. நகரத்திலே ஒரு செண்ட் நிலம் 20 ஆயிரம் கொடுத்து வாங்கவேண்டும். ஆனால் ஓட்டப்பிடாரத்திலே 200 ரூபாய்க்கு ஒரு செண்ட் நிலம் கிடைக்கிறது. அங்கே அமைக்கக் கூடாதா? அது வளராதா? அந்தப் பகுதிகள் முன்னுக்கு வரக் கூடாதா? இனிமேல் அமைக்கக்கூடிய தொழிற் பேட்டைகளை இந்த இடத்திலே அமைக்குமாறு மிகவும் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

'டிட்கோ' அறிக்கை வெளியீடு மிகவும் அழகாக இருக்கிறது. தமிழக முதல்வர் அவர்களுடைய படத்தையும் அதிலே அச்சிட்டு இருக்கிறார்கள். அதை முழு வதுமாக நான் படித்துப் பார்த்தேன். அதிலே ஓட்டப்பிடாரம் தாலுக்காவை, தாலுக்கா மானியம் பெறும் தகுதியிலுள்ள தாலுக்காக்களிலே சேர்த்திருக்கிறீர்களா என்று பார்த்தேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய இரண்டு தாலுக்காக்களை சேர்த் தார்கள். ஓட்டப்பிடாரம் தாலுகா அதில் ஒன்றாக இருந்தும். அந்த அளவில் மிகவும் தொழிலே இல்லாத, 10 பேருக்கு மேலே வேலை செய்யும் ஒரு தொழிற்சாலை கூட இல்லாத பகுதியாக இருக்கின்றது. அந்த ஓட்டப்பிடாரம் தாலுக்காவையும், கயத் தாறு ஒன்றியத்தையும், மத்திய மாநில மானியம் தரக்கூடிய பகுதியாக அதை சேர்க்கக் கூடாதா? அதை செய்து, அதை உயர்த்தக் கூடாதா? இதுகுறித்து மத்திய அரசுக்குப் பரிந் துரை செய்யக் கூடாதா? செய்யுமாறு தமது அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 27

அதோடு, தமிழ்நாடு தொழில் முதலீடு நிறுவனம், 'டிக்' நல்ல
முறையிலே சேவை செய்து கொண்டிருக்கிறது. 10 காரியங்
களுக்கு முதலீடு செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லாமே
நன்கு நடைபெறுகிறது. அதிலே ஒன்று, போக்குவரத்து : கார்கள்,
டாக்சிகள், ஆட்டோக்கள், சைக்கிள்கள் வாங்க கடன் கொடுத்து
வந்தார்கள். ஆனால் இப்போது கொள்கை விளக்க
அறிக்கையைப் படித்தேன். அதிலே 25-வது பக்கத்திலே ஒன்று
சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து எனக்கு ஒரு
சந்தேகம் வந்தது. அதிலே "போக்குவரத்துக்கு 31—12—1986
ஆம் நாள் வரை இந்த திட்டத்தின் மூலம் 7,144 விண்ணப்பங்
களுக்கு 76.44 கோடிக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எனக்கு ஒரு சந்தேகம்
ஏற்படுகிறது. அதற்குப் பின்னாலே அந்தத் திட்டம் கைவிடப்
பட்டுவிட்டதோ, அந்த மாதிரி கொடுக்கப்படுகின்ற திட்டம் இனி
மேல் விட்டுவிட்டீர்களோ என்ற எண்ணம் எனக்குத் தோன்று
கிறது. நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்
துக்கு கொண்டு வர விரும்புகிறேன். வாடகைக் காரை ஓட்டு
கின்ற டிரைவருக்கு சொந்தக் கார் வேண்டுமெனில் இந்தத்
திட்டத்தை தயவுசெய்து கைவிட்டுவிடாதீர்கள். அவர்களை
காருக்குச் சொந்தக்காரர்களாகவும், ஆட்டோவுக்குச் சொந்தக்
காரர்களாகவும், சைக்கிளுக்குச் சொந்தக்காரர்களாகவும்
ஆக்குங்கள். இந்த நல்ல திட்டத்தில் அதற்குப் போதுமான
ஆதாரமும் இருக்கிறது. இந்த திட்டத்தை கைவிட்டுவிட்டீர்
களா என்று எனக்குத் தெரியாது. ஒரு சந்தேகத்தின் பேரிலே
இதை நான் கேட்கிறேன். அப்படி இருந்தாலும் அதை மீண்டும்
பரிசீலனை செய்து இதற்கு மீண்டும் தொடர்ந்து அதிகப்படி
யான உதவியை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்-டான்சி-பெயர் அழகாக
இருக்கிறது. அதில் செய்கின்ற பொருள்களின் விலை அதிகமாக
இருக்கிறதே அதற்கு என்ன காரணம்? அதிகக்கணக்கானோர்
அங்கே வேலை செய்கிறார்களே, அதுவும் ஒரு காரணமா
என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 27] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

(பிற்பகல் 12-30)

அந்தத் தொழிலில் லாபம் இதுவரைக்கும் காட்டவில்லை.
ஆனால் இப்போது நல்ல அற்புதமான காரியங்களை எல்லாம்
அவர்கள் செய்து கொண்டு முன்னேற்றமான ஒரு தன்மைக்கு
வந்து கொண்டு இருக்கிறார்கள். நீரேற்றும் பம்புகளையும்
சத்துணவுத் திட்டத்திற்குத் தேவையான சமையல் பாத்திரங்
களையும் செய்கிறார்கள். அதை நானும் பார்த்தேன். கணீர்
என்று சத்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு நன்றாக இவைகளை
எல்லாம் செய்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரி
வித்துக் கொள்கிறேன். நமது மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்கள் மூலமாக நமது அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்
வேன், இந்த ஆண்டிலிருந்து டான்சி நிறுவனம் லாபத்தில் நடை
பெறவும், வெற்றிகரமாக நடைபெறவும் ஏற்பாடு செய்யும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் டால்கோ. அது ஏழை
மிரிவினர் செய்கின்ற நல்ல தொழிலாகும். இந்தியாவிலேயே
தமிழ்நாட்டில் தான் அதிகமானவர்கள் அந்தத்
தொழிலை செய்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள்
அதிகமாக இருக்கிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள்
இப்போது காலணி திட்டம் ஒன்றை பள்ளிச் சிறுவர்களுக்கும்,
ஏழை தாய்மார்களுக்கும் வழங்குகின்ற திட்டத்தை அறிவித்து
இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மிகவும் பணிவன்
போடு சமர்ப்பித்துக்கொள்வேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்
சேர்ந்தவர்கள் இந்த காலணி தயாரிப்பவர்களில் பலர் பன்றியை
வளர்த்து வந்தார்கள். இப்போது மூளைக் காய்ச்சல் என்ற
ஒரு வியாதியின் பெயரை வைத்துக்கொண்டு பன்றிகளை எல்லாம்
கொன்று வருகிறார்கள். அவர்களுக்கு அந்தத் தொழிலும்
குறைந்து வருகிறது. மூளைக் காய்ச்சலுக்கு என்ன
நடவடிக்கை எடுத்தீர்கள் என்று அதிகாரிகளைக் கேட்டால் 100
பன்றிகளை நாங்கள் கொன்று குவித்து விட்டோம் என்று
சொல்கிறார்கள். அந்த நிலையில் அவர்களுக்கு ஒரு உப
தொழில் போய்விட்டது. எனவே எது எப்படி இருந்தாலும்

[திரு. ஆர். எல். ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 27

அந்த ஏழைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த அவர்கள் இந்தக் காலணி தைக்கும் தொழிலை வைத்து நடத்துகிறார்கள். இந்தக் காலணி வழங்கும் காரியத்திற்கும் அவர்களிடமிருந்து அதை வாங்கி உபயோகிக்கும்படி பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுப் பூச்சி வளர்க்கும் விஷயத்தைப்பற்றி ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு விவசாய நாடு. இந்த நாட்டில் பட்டு உற்பத்தியில் நாம் சிறந்து விளங்க வேண்டாமா? அதிலும் இப்போது உஷ்ணமான இடத்திலும் முசுக்கட்டை உண்டாக்கலாம் என்ற நிலைமை வந்திருக்கிறது. நல்ல விவசாயிகள் இங்கே இருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய முசுக்கட்டை செடியை வளர்க்கலாம் என்ற நிலை வந்தபோதும் அதில் பின் வாங்கலாமா? ஒன்றை நான் படித்துப் பார்த்தேன். நம்மைவிட கர்நாடகாவில் இருப்பவர்கள் நெசவிலே அதுவும் மரபு தொழிலாக இருக்கிற காரணத்தாலே அவர்கள் முன்னேறி இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் அந்தத் தொழிலை நம் தமிழகத்திலும் மரபுத் தொழிலாகக் கொண்டவர்கள் இல்லையா? இல்லாவிட்டாலும் பாக்கி பேர்கள் அதைக் கற்றுக்கொள்ள முடியாதா? அந்தத் தொழிலில் நாம் முன்னுக்கு வரமுடியாதா? அந்தத் தொழிலில் நாம் முதன்மை வகிக்கக் கூடாதா? நாம் வகித்து அதிகமான இடங்களில் முசுக்கட்டை பயிரை வளர்த்து நல்ல ஆதாயமாக இருப்பதாலே அதையும் செய்யுமாறு மிகவும் பணிவன்போடு நான் கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவையின் மற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஊரகத் தொழில் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 27] [திரு. கே. உச்சி]

பொதுவாக கிராமங்கள் நன்கு வளர்க்கப்படவேண்டும், கிராம மக்கள் அந்த அந்த வட்டாரங்களில் உள்ள பொருட்களைக் கொண்டு சிறு தொழில்களைச் செய்யவேண்டும். அப்படி செய்தால்தான் அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதோடு உற்பத்தி பெருகுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்ற நோக்கத்தில்தான் இந்த கிராமத் தொழில் வளர்ச்சியில் அரசு அதிக அக்கறை காட்டவேண்டும் என்பதை மறுக்க முடியாது. ஆனால் எங்களுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முக்கியமாக அங்கே அதிகமாக விளைவது தேயிலைப் பயிர். அந்தத் தேயிலைப் பயிரை ஒரு காலத்தில் தனியார்கள்தான் அதை பதப்படுத்துகின்ற தொழிலை நடத்திக் கொண்டு இருந்தார்கள். அந்தத் தனியார்கள் சாதாரண சிறு மற்றும் குறு விவசாயிகளுடைய அக்கறையில் வளர்ச்சியில் அக்கறை காட்டாமல், அவர்களை எந்த அளவிற்கு ஏமாற்ற முடியுமோ, அந்த அளவிற்கு ஏமாற்றி, தனிப்பட்ட தொழிற்சாலை அதிபர்கள், வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதை ஒடுக்கவேண்டுமென்ற நோக்கத்தில்தான் அந்தத் தனியார்களின் கொள்ளை லாபத்திலிருந்து அந்தச் சிறு மற்றும் குறு விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற தூய நோக்கத்தோடு அங்கே கிட்டத்தட்ட 13 கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்கள். அது நடைமுறையில் பல நன்மைகளை மக்களுக்காக செய்து கொண்டிருந்தது. 1984-85 ஆண்டு வரை அதில் பல லாபத்தில் இயங்கிக் கொண்டு இருந்தன. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் 1985-86, 1986-87 ஆகிய ஆண்டுகளில், 1986 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில், அந்த 13 தேயிலைத் தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்றால், சரியான பதப்படுத்தப்பட்ட தேயிலையை தனியாரோடு போட்டி போட்டு விற்கமுடியவில்லை. அதற்கு என்ன காரணம்? நம்முடைய அதிகாரிகள் எத்தனையோ பேர் இன்றைக்கு இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அதில் அதிக அளவில் நஷ்டத்தைத் தடுத்து, அதை லாபத்தில் நடத்தவில்லை. நஷ்டம் என்பது மட்டுமல்ல. அந்த நஷ்டம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே

வருகிறது. இந்த நிலையில்தான் புரட்சித் தலைவர் அரசு நீலகிரி மாவட்டத்தில் கடைக் கோட்டைப் பகுதியில் கிண்ணப்பாறை என்ற பகுதியில் புதியதாக ஒரு தேயிலைத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று அதனுடைய கட்டுமானப் பணிகள் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அதேநேரத்தில் அந்தக் கிண்ணப்பாறை ஏறத்தாழ கோளாவினுடைய பகுதியை ஒட்டிய ஒரு பகுதி. இருந்தாலும் அங்கே ஒரு தொழிற்சாலை வேண்டுமென்ற நிலையில், அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

அதேபோன்று கோத்தகிரி பகுதியை எடுத்துக்கொண்டால், கோத்தகிரியின் கீழ்ப்பகுதியில் இரண்டு தொழிற்சாலைகள் உண்டு. அதன் இன்னொரு பகுதியான நெடுகுலா என்ற பகுதியில் ஏராளமான சிறு மற்றும் குறு விவசாயிகள் இருக்கின்றனர். அங்கே அவர்கள் தனியார்களின் ஆதிக்கத்தில்தான் தங்களுடைய தேயிலைக் கொழுந்துகளைப் பதப்படுத்துகிறார்களே தவிர, சொந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலை இல்லை. ஆகவே அந்தப் பகுதியினுடைய மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அந்தப் பகுதியில் ஒரு புதிய தேயிலைத் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் விடுக்கின்றேன். சிறு மற்றும் குறு விவசாயிகளை தனியார்த் தேயிலைத் தோட்ட அதிபர்களின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றவேண்டுமென்ற நோக்கம் மிக நல்ல நோக்கமாகும். ஆனால் இன்று வரையில் தனியார்கள் பச்சைத் தேயிலைக்கு அதிக விலை கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் அந்த அளவிற்குப் போட்டி போடமுடியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா கூட்டுறவுத் தொழிற்சாலைகளும் இன்று நஷ்டத்தில் இயங்கி வந்தாலும்கூட, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குன்னூர் வட்டத்தை சிறு தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திருக்கிறார்கள். அதாவது நஷ்டம் என்பதைப் பார்க்காமல், மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் குன்னூர் வட்டத்தை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திருந்தும், கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன, எந்த ஒரு சிறு தொழிலும் அங்கே ஆரம்பிக்கப்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட



விரும்புகிறேன். இத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்படி கவனம் செலுத்தினால்தான் நம்முடைய புரட்சித் தலைவருடைய நல்லெண்ணம் அங்கே செயல்வடிவம் பெற வாய்ப்பாக அமையும் என்று கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

கூடலூர் வட்டத்தைப் பொறுத்தவரையில், அதையும் தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கவேண்டும். இன்கோ-டீ1 குந்தாவிலுள்ள எடக்காடு பகுதியில் 1, 2 என்று இருந்தது, இன்று அதனுடைய நன்மைகள் 9-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டன. அதற்கு என்ன காரணம் என்றால், அங்கே யுள்ள ஒரு சில அதிகாரிகள் தங்களுடைய சுய லாபத்திற்காகவோ, என்னவோ அப்பகுதியிலுள்ள தேயிலையை நல்ல விலைக்கு விற்க முயற்சி செய்யவில்லை. அந்தத் தேயிலையை மோசமான விலைக்கு ரூ. 7, ரூ. 8 என்ற அளவில்தான் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே தேயிலை உபயோகிப்பாளர்கள் ரூ. 25, ரூ. 30 என்ற அளவில்தான் வாங்குகிறார்கள். இதிலே அந்த இடைத் தரகர்கள்தான் லாபத்தை அனுபவிக்கிறார்கள். இடைத் தரகர்களைக் குறைத்து, நல்ல நோக்கத்தோடு, அந்த விவசாயிகள் நல்ல லாபம் பெற்று பயன்பெற வேண்டுமென்று கோருகிறேன். தொழிற்சாலைகளை நவீனப் படுத்தி அவைகளை நஷ்டத்தில் இயங்காவண்ணம் அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதே சமயத்தில் கூடலூரில் உள்ள எருமாட்டுப் பகுதியில் கூட ஒரு தொழிற்சாலை இன்று வேலையைத் துவங்கி இருக்கிறது. 1963, 1965-ல் துவங்கப்பட்ட தேயிலைத் தொழிற் சாலைகள் நஷ்டத்தில் இயங்கினாலும் கூட, இப்போது புதியதாக துவங்கப்பட்ட தேயிலை தொழிற்சாலைகளும் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆக இதுபோன்ற நிலைகளிலிருந்து அந்த தேயிலைத் தொழிற்சாலைகளை காப்பாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போல கூடலூரிலே இட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே ஒட்டுப் பலகை செய்ய வேண்டுமென்று ஒரு தொழிற் சாலையை கட்டி முடித்தோம். கட்டுமானப் பணிகள் எல்லாம்

[திரு. கே. உச்சி] [1987 ஏப்ரல் 27

முடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று அந்த தொழிற்சாலை
நடைபெறவில்லை. காரணம் அதிகாரிகளைக் கேட்டுப்பார்க்கும்
போது, அங்கேயுள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலே
கேட்டுப் பார்க்கும்போது அந்த ஒட்டுப் பலகைக்கான மரங்கள்
கூடலூர் பகுதியிலே இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி
யானால் அந்தக் கட்டுமானப் பணிகளை நடத்தும்போது அந்த
மரங்கள் கிடைக்கின்றனவா எங்கே கிடைக்கின்றன என்
இப்போது கிடைக்கவில்லை என்பதை ஆராய்ந்து அதை
செயலாக்கியிருக்க வேண்டும். உடனடியாக அதற்கு மென்
மரங்களை எங்கே கிடைக்கின்றதோ அங்கிருந்து வாங்கி அந்த
ஒட்டுப்பலகை தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிக்க
வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றேன். மசனகுடி
பகுதியில், அப்பகுதியிலே உள்ள மக்கள், விவசாயத்தை நம்பியும்
விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். ஆகவே அங்கே செங்கல்
சூளையை ஏற்படுத்துவது மிகவும் லாபகரமாக இருக்கும். அங்கே
வீடுகளுக்குத் தேவையான செங்கற்கள் மேட்டுக்குடியிலிருந்து
தான் வரவேண்டும். அது மிகவும் தூரமான பகுதி. அங்கே
அதற்கான வசதி இருக்கிறது. அங்கே செங்கற் சூளை
தொழிற்சாலையை ஏற்படுத்தித்தர வேண்டும். அதே நேரத்தில்
அங்கே ஏராளமான மூங்கில்கள் இருப்பதால் அந்த மூங்கில்
களைக் கொண்டு ஒரு காகித தொழிற்சாலையை ஏற்படுத்தித்தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குந்தா பகுதியைச்
சார்ந்த பிக்கட்டி என்ற இடத்தில் புதியதாக ஒரு தொழிற்
சாலையை அமைக்க வேண்டுமென்று அதற்குண்டான பதிவு
வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. அங்கேயுள்ள படுக இன
மக்களும், ஆதிவாசிகளான கோத்தர் இன மக்களும் நீண்ட
நாட்களாக அந்த தேயிலை தொழிற்சாலையை கட்டிமுடிக்கப்பட
வேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால்
எந்த இடத்தில் கட்ட வேண்டும் என்பதிலே பட்டா நிலத்தில்
கட்ட வேண்டுமா அல்லது அரசுக்கு சம்பந்தப்பட்ட ரெவின்யூ
நிலத்தில் கட்ட வேண்டுமா என்ற இருவேறு கருத்துக்கள் அங்கே
இருக்கின்றன. கிண்ணக்கொரையில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்
சாலையிலே வெகுவேகமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்
கின்றன. ஆனால் பிக்கட்டியில் இன்னும் அந்த தொழிற்சாலை



1987 ஏப்ரல் 27] [திரு. கே. உச்சி]

நடைபெறவே இல்லை. எனவே உடனடியாக அரசு தலையிட்டு
அந்த தொழிற்சாலை பணிகள் துவக்கப்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலையைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டிற்கு,
இந்தியாவிற்கு மிக அதிகமான அளவில் அந்நியச்
செலாவணியை ஈட்டித்தரக்கூடிய தொழில். ஆகவே
வெளிநாட்டிற்கு அதிக அளவில் நல்ல தரமான தேயிலையை
ஏற்றுமதி செய்வதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து அதை
துரிதப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய
இராணுவத்திற்கு எத்தனை அளவு தேயிலை தேவையோ
அவற்றை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக, இன்கோசர்வ்
மூலமாக விநியோகிக்க அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்று
நம்முடைய அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.
சில நேரங்களில் மைய அரசு சி.டி.சி. தேயிலைகளை
ஏற்றுமதிக்கு அனுமதிப்பதில்லை. சி.டி.சி. தேயிலைகளை
அனுமதிக்க வேண்டும். இதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கக்கூடாது
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்கோசர்வை பொறுத்த
வரையில் அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக
இருந்தார். இதற்குபிறகு நம்முடைய தொழில் டைரக்டர்
அவர்கள் இப்போது தலைவராக இருக்கிறார். ஒவ்வொரு நாளும்
அங்கே இன்கோசர்வ் என்பது 13-ம் புதியதாக உள்ள 2-ம் சேர்த்து
ஆக 15 தேயிலை தொழிற்சாலைகளில் நடக்கக்கூடிய
நிர்வாகத்தை கண்காணிக்க வேண்டும். இங்கேயுள்ள டைரக்டர்கள்
அடிக்கடி சென்று அதை கண்காணிக்க முடியாது. ஆகவே
ஜனநாயக முறைப்படி அங்கேயுள்ள 15 தொழிற்சாலைகளில்
ஒருவரை அங்கே தேர்தல் மூலமாக தேர்ந்தெடுத்து அதற்கு
தலைவராக நியமித்தால் அங்கே தவறுகள் நடக்காமல்
இருப்பதற்கும், அந்த தவறுகளை கண்காணிப்பதற்கும் ஏதுவாக
இருக்கும் என்பதை நான் பல நேரங்களில் சொல்லியுள்ளேன்.
அதை இப்போது அமல்படுத்தவேண்டும் என்று நம்முடைய
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முதலிலே சொன்னது போல, 1984 வரை இலாபத்தில்
ஓடிய தேயிலைத் தொழிற்சாலைகள், 1985-86, 1986-87-இல்
நஷ்டத்தில் ஓடுகின்றன. அங்கே தேயிலைத் தொழிலைப்

பொறுத்தவரையில், இணை இயக்குநர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் எல்லா நிர்வாகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அந்த அதிகாரங்களை 'இன்கோசர்வ்' என்ற ஸ்தாபனத்திலுள்ள அந்த எம்.டி.-க்கு மாற்றி அமைத்துள்ளதாக அறிகிறேன். ஆனால் முழுமையாக இருவரும், மற்ற தொழிற் சாலைகளிலுள்ள நிர்வாகிகள், அந்த நிர்வாக இயக்குநர்கள், இந்த இன்கோசர் எம்.டி.-யை ஃபாலோ செய்யவேண்டுமா? அல்லது இணை இயக்குநர் (தேயிலை) அவர்களை ஃபாலோ செய்ய வேண்டுமா என்பதிலே தடுமாற்றம். அந்தத் தடுமாற்றத்தின் காரணமாகத்தான் அங்கே அதிக நஷ்டம் தொடர்ந்து ஏற்படுகிறது. ஆகவே, நீங்கள் அதை முறைப்படுத்தி, யாருக்கு அதிகாரம்—தேயிலைத் தொழிற்சாலையினுடைய இணை இயக்குநரா அல்லது இன்கோசர்வுடைய நிர்வாக இயக்குநரா, யாருக்கு அளிக்கவேண்டும் என்று பார்த்து அளிக்க வேண்டும். அப்படி அளித்தாலொழிய, அந்த நிர்வாகம் சரிவராது என்று சொல்லிக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகள் தங்களுக்கு வேண்டிய எரிபொருளுக்காக, கற்பூர மரத்தைத்தான் பயன் படுத்துகிறார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான கற்பூர மரங்கள் விளைகின்றன. அந்தக் கற்பூர மரத்தை மேட்டுப்பாளையத்திலுள்ள விஸ்கோஸ்-க்கு அனுப்பி விடுகிறார்கள். அதனால், அங்கே எரிபொருள் இல்லாமல், நீலகிரியிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளன. அதைக் குறைக்க நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்த 15 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஓரளவுக்காவது, அந்த விஸ்கோஸ்-க்குக் கொடுக்கக்கூடிய அதே விலையில் இவைகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

நீலகிரியில் வளர்க்கும் கற்பூர மரங்களை அதிக அளவில் வளர்க்கக்கூடாது என்பது அங்குள்ள மக்களுடைய ஒரு எண்ணம். அதையும் காப்பாற்றவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.





இறுதியாக, உதகை தாலுக்காவிலுள்ள தூனேரி ரெவின்யூ பிர்க்கா, கடுமையான வறட்சியின் காரணமாக மிகவும் அவதிப் படுவதால், அங்கே உள்ள மக்கள் தேயிலையைப் பயிராக்க வேண்டும்; அப்படி பயிரிடுவதால் அவர்கள் வறுமையிலிருந்து மீள முடியும் என்பதற்காக, இரண்டு ஆண்டுகளாக 75 விழுக்காடு அளவில் அவர்களுக்கு மானிய விலையில் தேயிலை நாற்றுக் களைத் தந்து வருகிறோம். அவர்கள் தொடர்ந்து இரண்டாண்டு களாக தேயிலைத் தொழிற்சாலையிலே நாட்டம் கொண்டிருக் கிறார்கள். இன்னும் ஓராண்டில் அங்கேயும் ஒரு தேயிலைத் தொழிற்சாலை போடவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதையும் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'டான்-டீ'-ஐப் பொறுத்தவரையில், இரண்டு தொழிற்சாலைகள் உள்ளன. மூன்றாவது தேயிலைத் தொழிற்சாலை 'நாடுகாணி'-யில் இப்போது புதிதாக கட்டப்பட்டிருப்பது குறித்து, அதனுடைய செயல்முறையும் சிறப்பாக அமையும் என்று கூறி, அதையெல்லாம் தந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக, தேயிலைக்கு 'பேஸ் இயர்' என்று இல்லாமல் எல்லாத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் ஒரே மாதிரியான வரி விதிக்கவேண்டும். 'பேஸ் இயர்' என்பது ஒரு வருடத்திற்கு முன்னால், 1962-க்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட அந்தத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஒருவித வரியும், 1962-க்குப் பிறகு உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அதிக வரியும் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிக வரி விதிக்கிறார்கள். அது கூடாது. எல்லாத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் ஒரே மாதிரியான வரி விதிக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ச. குமரகுருபர ராமநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு போக்குவரத்து மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிற ஊரகத் தொழில் மற்றும் சிறு தொழில் மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு

பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தக் கூட்டுறவு தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்கள் மிகவும் நசித்துப் போய்விட்டன. பல சங்கங்கள் மூடப்பட்டுவிட்டன. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

குறிப்பாக விளாத்திகுளத்தில் கூட்டுறவு முறையில் ஒரு தொழிற்சாலை கூட இயங்கவில்லை. அங்குள்ள சிறுதொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம் என்ன ஆனது என்றே தெரிய வில்லை. இதில் ஏற்பட்ட இழப்புக்கு இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன? சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் கட்டிய டிபாசிட் தொகை என்ன ஆனது? இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலுரையில் விளக்கமாக எடுத்துக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

வைப்பாரில் குச்சி தயாரிப்புக்காக இந்த அரசு தாட்கோ மூலம் கட்டிய தீப்பெட்டி குச்சி தொழிற்சாலை 8 ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றனவே இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். சிவகாசி, சாத்தூர், விருதுநகர் மற்றும் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தென்மாவட்டங்களில் 14 வயதுக் குக் கீழ்பட்டவர்களை வேலைக்கு வைக்கக் கூடாது என்று மத்திய அரசு சட்டமியற்றியும்கூட இன்னும் அங்கெல்லாம் நடை முறைப்படுத்தப்படவில்லை. அப்படிப்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு அரசு வழங்க இருக்கும் பரிகாரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கங் களின் தேவைகளை நிறைவேற்ற குன்றக்குடியில் ஆரம்பிக்கப் பட்ட குன்றக்குடி குளோரைடு தொழிற்சாலை ரூ. 6.50 லட்சம் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 44 உறுப்பினர்களைக் கொண்ட பங்கு மூலதனம் உடையது—எந்தவித உற்பத்தியும் இன்றி கிடக்கிறது; எனவே அங்கே வெகு விரைவில் உற்பத்தியைத் தொடங்க ஏற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது விளாத்திகுளம் தொகுதியில் தருவைக்குளம் முதல் மேல்மாந்தை வரை கடலோரக் கிராமங்களில் உப்பை உற்பத்தி செய்கின்ற வகையில் உப்பளங்கள் உள்ளன. சுமார்





40-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இதில் ஈடுபடுகிறார்கள். பெரும் பாலும் தனியார் துறை மூலமாக உற்பத்தி நடைபெறுகிறது. உப்பளத் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் உப்பு உற்பத்தி செய்ய இதுவரை எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்க வில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வைப்பார் ஊராட்சியைச் சேர்ந்த துலுக்கன்குளம், கலை ஞானபுரம் ஆகிய கிராமங்களில் அரசு புறம்போக்கில் ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் உள்ளன. உப்பை மூலதனமாகக் கொண்ட தொழில் ஆரம்பிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், உப்புத் தொழிலாளர்களுக்கு வேப்ப லோடையிலும் ஒட்டப்பிடாரத்திலும் சமுதாயக் கூடம் அமைத் திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள் கிறேன். இது குறித்து ஏற்கெனவே அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டிருப்பதன் காரணமாக இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக விளாத்திகுளம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. படித்த மாணவர்கள் பலர் வேலை வாய்ப்பு இல்லாமல் அங்கே இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, விளாத்திகுளத்தை மையமாக வைத்து சிட்கோ ஏஜென்சியின் பிரிவு ஒன்றை அமைத்திட வேண்டுமென்று அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சியே இல்லாத பகுதியாக இருப்பதால், மத்திய மாநில அரசுகளின் தொழில் களும் இல்லாத பகுதியாக இருப்பதால் தொழில் வளர்ச்சி ஏற்படுகிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மின்வெட்டு இருப்பதால் சிறுதொழில் பெருமளவில் பாதிக்கப் படுகிறது. இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். விளாத்திகுளம் அருகில் குளத்தூர், விளாத்திகுளம் ஆகிய பகுதி களில் பவர் ஸ்டேஷன் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பிரேரணை களை விரைவில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறு தொழில்களினுடைய முக்கியத் துவம் கருதி, அதனுடைய வளர்ச்சியிலே ஏற்படும் தடைகளை

[திரு. ச. குமரகுருபர ராமநாதன்] [1987 ஏப்ரல் 27

முதற்வரை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலாவது இடத்தைப் பெற்று இருக்கிறது.

இயற்கை தொடர்ந்து சதி செய்து கொண்டு வருகிற காரணத்தால், நம்முடைய தமிழ் மக்கள் எல்லாம் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகிற ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறார்கள். அதேபோன்று, கிராமங்களில் குடிசைத் தொழில் அல்லது சிறு தொழில் முழுமையாக வளர்ச்சி பெறவில்லை. எனவே, அவற்றைப் பெருமளவில் ஏற்படுத்தி அபிவிருத்தி செய்யவேண்டும். வேலை வாய்ப்புக்களை அதிக அளவில் உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கினை அடைவதற்காகவும், சிறு தொழிலை வளர்ப்பதற்காகவும் வங்கி மூலம் நிதியுதவி அளித்து நகர மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலே சிறுதொழில் வசதிகளை ஏற்படுத்தவேண்டும். நம்முடைய நாட்டிற்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு இந்தியாவில் தேசியக் கவி பாரதியார் அவர்கள் "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் அமைப்போம், கல்வி சாலைகள் அமைப்போம்" என்று பாடியிருக்கிறார். ஆனால் நாடு சுதந்திரம் அடைந்து நாற்பது ஆண்டுகள் ஆகியும், சிறுதொழில்கள் முழுமையாக வளர்ச்சியடையாதது மிகுந்த வேதனைக்கு உரியதாக இருக்கிறது. இந்தியாவில் ஒரிசா, பஞ்சாப் சிறுதொழிலில் முன்னணியில் இருக்கின்றன. ஆனால் நம் தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இரண்டாம் உலகப் போரில் சின்னாபின்னப்படுத்தப்பட்ட ஜப்பான் இன்று சிறுதொழில் வளர்ச்சியில் அமெரிக்காவோடு போட்டிபோட்டுக் கொண்டு முன்னேறுகிறது.

தமிழகத்தில் கிராமப்பகுதிகளைத் தொழில்மயமாக்குதல் என்னும் கொள்கைகளும், திட்டங்களும் பல்வேறு முகவாண்மைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தொழில்



1987 ஏப்ரல் 27] [திரு. ச. குமரகுருபர ராமநாதன்]

துறைக்குத் தேவையான இடுபொருட்களை அளிக்கத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய அரசின் சிறுதொழில் பணி நிறுவனம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை போன்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன. இதனால் வேலை வாய்ப்பின்மை குறையும் என்று கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார வல்லுநரும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் இந்த அரசின் தொழிற் கொள்கைக்கு மிகப் பெரும் நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார். கடந்த சில ஆண்டுகளாகவே தமிழகத்தில் தொழில் வளர்ச்சி வேகம் மந்தமாக இருக்கிறது. மாநில அரசு சுமார் ரூ. 229.59 கோடி அளவுக்கு முதலீடு செய்துள்ள 73 தொழில்களில் இதுவரை ரூ. 118.18 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 44 நிறுவனங்களைப் பொறுத்தவரை அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனத்தைவிட அதிகமாக உள்ளது. நஷ்டத்தொகை ரூ. 509 கோடி அளவுக்கு அரசாங்கம் முதலீடு செய்துள்ள 62 அரசுத் துறை நிறுவனங்களில் இதுவரை மொத்தம் ரூ. 112.9 கோடிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் நிறுவனங்களில் (டிட்கோ) நஷ்டமடையும் போக்கே காணப்படுகிறது. சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) நடைமுறைகள் சிக்கலாயிருப்பதால் காரியங்கள் தாமதமாகவே நடக்கின்றன. ஆராய்ச்சி நிறுவனங்கள் கண்டுபிடிக்கும் புதிய தொழில் நுட்ப நடைமுறைகளை தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார். எனவே, சிறுதொழில் வளர்ச்சி நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்க போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையின்கீழ் தீப்பெட்டி குடிசைத் தொழில்கள் தீப்பெட்டி உற்பத்தி செய்வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனினும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கிராமத்தில் உள்ள மகளிர் நலனுக்காக கூட்டுறவு முறையில் தீப்பெட்டி தயாரிக்க பல்வேறு சங்கங்கள் உருவாக்கப்

[திரு. ச. குமரகுருபர ராமநாதன்] [1987 ஏப்ரல் 27

நீக்கி, காலணி, சத்துணவு போன்றவை எப்படி அவசியமோ
அதே போன்று நிரந்தரப் பரிகாரமாக சிறு தொழில்களை
வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு சுய வேலை
வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகளில் கடன் பெற கடும் நிபந்
தனை இருக்கிறது. அதைத் தளர்த்தி கடன்பெற வசதியளிக்க
வேண்டும். சிறு தொழில்கள் தமிழ்நாட்டில் வேகமாக வளர்
வதற்கும் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் காலத்திற்கு விற்பனை
வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். மேற்கு வங்காளம்.
மராட்டிய மாநிலங்களில் விற்பனை வரி விலக்கு உள்ளது.
எனவே நம் மாநிலத்திலும் அந்த விற்பனை வரிச் சலுகைகளை
அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் ஊக்குவிப்புச் சலுகைகளை அளிக்க வேண்டுமென்று
தொழில் துறையில் உள்ளவர்கள் எவ்வளவோ முறையிட்டுக்
கொண்டும் தமிழக அரசு அதற்கு செவிசாய்ப்பதில்லை.
தொழிற்சாலைக்கு இட வசதி கிடைக்கும் விஷயத்தில் செல்வாக்கு
வாய்ந்தவர்களின் நிர்பந்தங்கள் காரணமாகப் பல தடங்கல்கள்
ஏற்படுகின்றன. கட்டிடங்களுக்குத் துரிதமாக அங்கீகாரங்கள்
கிடைப்பதில்லை. மின் இணைப்பு கிடைப்பதிலும் தாமதங்கள்
ஏற்படுகின்றன. இதனால்தான் பின்தங்கிய பகுதிகளில்
தொழில்களைத் தொடங்க தொழில் அதிபர்கள் தயங்கும் நிலை
இருக்கிறது.

அடுத்து மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் அந்தந்த
மாவட்டங்களில் முக்கியமான இடங்களில் சிறு தொழில்
சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள் நடத்திட அரசு உத்திரவு பிறப்
பிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன். அப்பொழுதுதான் சிறு தொழில் முனைவர்கள் அரசு
தருகின்ற உதவிகளை பெறுவதற்குரிய வழிகளை நல்ல முறையில்
தெரிந்துகொள்ளவும், தங்கள் பகுதியில் கிடைக்கும் மூலப்
பொருட்களைப் பெறுவதற்கான வழி முறைகளைத் தெரிந்து
கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.



1987 ஏப்ரல் 27] [திரு. ச. குமரகுருபர ராமநாதன்]

அடுத்து, காயர் போர்டு, கயிறு தொழில் மேம்பாட்டிற்காக
கயிறு உற்பத்தியாளர்கள், கயிறுப் பொருட்களை கூட்டுறவுச்
சங்கங்களுக்கு விற்பனை செய்கிறபோது 20 சதவிகிதம் சப்சிடி
கொடுக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. மத்திய
அமைச்சரகம் மாநில அரசுக்குக் கடிதம் எழுதி, மாநில அரசு
10 சதவிகிதம் சப்சிடி கொடுத்தால் மத்திய அரசு 10 சதவிகிதம்
சப்சிடி கொடுக்கும் என எழுதியது. தமிழ்நாடு போக மற்ற
மாநிலங்கள் இதை ஒத்துக்கொண்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு
10 சதவிகிதம் சப்சிடி கொடுக்க சம்மதம் தெரிவிக்காததால் தமிழ்
நாடு கயிறுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு கயிறுப் பொருள்
விற்பனையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிற மாநிலங்களில்
80 ரூபாய்க்கு விற்கும் கயிறுப் பொருள்கள் தமிழ்நாட்டு
உற்பத்தியாளர்களால் 100 ரூபாய்க்கு விற்கப்படும் நிலை உள்ளது.
இதனால் கயிறுத் தொழில் நலிவு தமிழகத்தில் ஏற்படும்.
இதைத் தடுக்க, நமது அரசு மத்திய அரசுக்கு 10 சதவிகிதம்
சப்சிடி கொடுக்க சம்மதம் தெரிவிக்குமா என்பதை அமைச்சர்
அவர்களிடம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பனைத் தொழில் செய்கிற பனை வெல்லக்
கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கும், உப்பை மூலதனமாகக்
கொண்ட உப்பளத் தொழிலாளர்களுக்கும், மீன் பிடித் தொழிலை
மேற்கொண்டிருக்கிறவர்களுக்கும் சிறு தொழில்களிலே வாய்ப்பு
கொடுத்து, அந்தத் தொழிலாளர்களும் தமிழகத்திலே ஓரளவுக்கு
முன்னேற்றம் அடைய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

* திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த
மானியக் கோரிக்கையை வரவேற்று, ஒருசில கருத்துக்களைக்
கூற விழைகிறேன். 1986-87-ல் 20 அம்சத் திட்டத்தின்கீழ்
6000 புதிய தொழில்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற இலக்கு
இருக்க, அதற்கு மேலே சென்று, 8400 புதிய தொழில்களை
அமைத்து சாதனை செய்துள்ள இதய தெய்வம் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பாராட்டி ஒரு சில
கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 27

சிறு தொழில்கள் என்று சொல்லும்போது, அதிகமான அளவிலே இலாபம் ஈட்டக்கூடிய மாவட்டமாக அண்ணா மாவட்டம்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல் பகுதியிலே தோல் தொழிலானது மிகவும் சிறப்பான தொழிலாகக் கருதப்பட்டு வருகிறது. வாணியம்பாடி, ஆம்பூர், திண்டுக்கல் என்று சொன்னால், தமிழகத்தில் இந்த 3 ஊர்களில்தான் அதிகமாகத் தோல் தொழில் செய்யப்பட்டு வருகிறது. தோல் தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீர் காரணமாக எந்த அளவுக்கு பாதிப்பு இருக்கிறது என்றால், மிகவும் பரிதாபப்படக்கூடிய அளவுக்கு, வருத்தப்படக்கூடிய அளவுக்கு திண்டுக்கல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உவர் நிலங்களாக திண்டுக்கல் பகுதியில் இருக்கின்றது. அங்கேயுள்ள குடிநீர் கெட்டு, குடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் மாற்றுவதற்கு அரசு நல்ல முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தோல் சுத்திகரிப்பு நிலையமானது ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நான் சட்டமன்றத்தில் பல முறை எடுத்துக்கூறி இருக்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்புப் புத்தகத்திலே, 31 ஆம் பக்கத்திலே ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். எவ்வாறு வாணியம்பாடியில் தோல் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்படவுள்ளதோ அதைப்போல திண்டுக்கல்லிலுள்ள தோல் பதனிடுவோர்க்கான ஒரு பொது சுத்திகரிப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லி, அதன்மூலம் 40, 50 தோல் பதனிடுவோர்கள் பயனடைவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். வாணியம்பாடியில் 40 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். திண்டுக்கல்லுக்கு, 40 இலட்சம் ரூபாய் செலவில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதானது நிச்சயமாக பயன்படக்கூடிய ஒன்றாக இராது. எனவே அதை அதிகப்படுத்தி, 1 கோடி ரூபாய் செலவிலே சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 27] [திரு. ஆ. பிரேம்குமார்]

(பிற்பகல் 1-00)

அடுத்து, இங்கே இருக்கக்கூடியவர்கள் தோல் பதனிடுவோராக மட்டும்தான் இருக்கிறார்கள். அங்கே பினிஷ்டு பிராக்ட் செய்யக்கூடிய ஒரு நிலையம் ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் பகுதியிலே வண்ணத் தோல் நிலையம் என்று ஒரு நிலையத்தை ஏற்படுத்தி அங்கே வண்ணத் தோல்களை மிக அருமையான முறையிலே பதம் செய்து வருகின்றார்கள். அந்த வண்ணத் தோல் நிலையத்திலே செருப்புகள், பர்ஸ்கள், கைப் பைகள் போன்றவற்றைச் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் நல்ல முறையிலே ஏற்படுத்தவேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அந்நியச் செலாவணி கிடைக்கக்கூடிய, ஏற்றுமதி அதிகமாக ஆகக்கூடிய பொருளாக தோல் இருக்கின்றது. இன்றைக்கு, இந்த ஃபினிஷ்ட் புராடக்ட்களுக்கு நல்ல மார்க்கெட் இருக்கின்றது. ஆகவே ஏற்றுமதிக்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இவற்றைச் செய்வோமானால், இன்னும் சிறப்பான முறையில் வாய்ப்புகள் மேலும் மேலும் அதிகமாகும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

லேக் ஆஃப் டெக்னிஷியன்ஸ். அதாவது அந்தத் தோல் சுத்திகரிப்பு தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய டெக்னிஷியன்ஸ் என்று எடுத்துக்கொள்வோமானால், அவர்கள் மிகமிகக் குறைவாகவே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஏறத்தாழ ரூ. 1,000-லிருந்து ரூ. 10,000 வரை சம்பளமாகப் பெறக்கூடிய இந்த டெக்னிஷியன்கள் மிகமிகக் குறைந்த அளவிலேதான் இருக்கின்றார்கள். திண்டுக்கல்லில் ஏறத்தாழ நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன. திண்டுக்கல் பகுதியில் அந்த டெக்னிஷியன்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றன. டெக்னிஷியன் பயிற்சி பெற்றவர்கள் மேல் நாடுகளிலே கூட வரவேற்கக் கூடிய அளவுக்கு இருக்கின்றார்கள். அங்கே இருப்பவர்கள் எல்லாம் அயல் நாட்டிற்குச் சென்று வேலைப்பார்க்கக்கூடிய அளவுக்கு உன்னதமான நிலைமைகள் இருந்து கொண்டிருக்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 27

கின்றன. ஆகவே இன்றைக்கு லேக் ஆஃப் டெக்னிஷியன் என்ற அந்தச் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த டெக்னிசியன்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கூட சென்னையிலே இந்த டிப்ளமோ கோர்ஸ் என்று ஒரு லெதர் டெக்னாலஜி கோர்ஸ் அதற்கு 40 பேர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு திண்டுக்கல்லிலே மிக அருமையான சூழ்நிலை இருக்கின்றது. தோல் உற்பத்தி தோல் பதனிடும் தொழிலுக்கும் ஏற்ற இடமாக இருக்கின்றது. அங்கே ஏறத்தாழ நூறு பேர்களுக்கு மேல் இப்படிப்பட்ட டெக்னிஷியன்களை உருவாக்கக் கூடிய உன்னதமான வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு அங்கே லெதர் டெக்னாலஜி கோர்ஸ் ஒன்று ஏற்படுத்தி இந்தத் தோல் தொழிலை நல்ல முறையிலே முன்னேற்ற ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'நீல் அண்ட் டை' என்று சொல்லக்கூடிய ஒரு நிறுவனமானது திண்டுக்கல் பகுதியிலே இருக்கின்றது. அந்த நீல் அண்ட் டை மூலமாக பூட்டு தொழிலுக்கும் மற்றும் என்னென்ன அச்சுத் தொழில் இருக்கின்றனவோ அதற்கும் வேண்டிய டை-க்களை மிக அற்புதமாக செய்யக்கூடிய ஒரு மிகமிக முக்கிய நிறுவனமாக இருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொழில் இருக்கின்றது. ஒரு வகுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதை முன்னேற்றும் வகையில் இன்னும் அதிகமான சீட்களைக் கொடுத்து, அந்தத் தொழிலை முன்னேற்றக்கூடிய வகையிலே, அதை ஊக்குவிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பூட்டுத் தொழிலை எடுத்துக்கொள்வோமானால், தமிழகத்திலே சிறப்பான முறையில் பூட்டு உற்பத்தி செய்வது திண்டுக்கல்தான். பூட்டுக்கள் என்று சொன்னால் திண்டுக்கல் தான் நினைவுக்கு வரும். அந்த வகையிலே அலிகார் பூட்டு, நவ்தால் பூட்டு என்றும் வருகின்றன. இவைகளைவிட திண்டுக்கல் பூட்டுதான் சிறப்பான முறையிலே இருந்துகொண்டு இருக்கின்றன. மற்ற பூட்டுக்கள் எல்லாம் ஒரே ஒரு டைப்பட்ட



1987 ஏப்ரல் 27] [திரு. ஆ. பிரேம்குமார்]

பூட்டுகளாக இருக்கின்றன. ஆனால் திண்டுக்கல் பூட்டுக்கள் பொறுத்தவரையில், பேட்லாக்ஸ் என்று சொன்னால் மேல் பூட்டுக்கள், ஃபிமேல் பூட்டுக்கள், டபுள் லாக் என்றும், மல்ட்டி லாக்ஸ் என்றும், டிரிக் லாக்ஸ் என்றும் பலவகையான பூட்டுக்கள் இருக்கின்றன. அங்கே அந்தத் தொழிலை மிக அற்புதமான முறையிலே செய்து வருகிறார்கள். அந்தத் தொழிலுக்கு விளம்பரங்கள் இருக்கிறதா என்று சொன்னால், விளம்பரங்களே இல்லை என்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

அரசு நிறுவனம் ஒரு சிட்டுத் தொழிலை செய்து வருகிறார் கள், நல்ல லாபத்துடனே நடைபெற்று வருகிறது. ஆனால் அதே சமயத்திலே கிரிடிட் பேசிஸ்-லே இந்தப் பூட்டுக்களை விற்கக் கூடிய நிலைமைகள்தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக் கின்றது. அங்கே தொழில் செய்பவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இந்தப் பூட்டுத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின் றார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் செய்யக்கூடிய பூட்டுக் களை உடனே விற்றுவிட்டு, அதற்குரிய பணத்தைப் பெறக்கூடிய சூழ்நிலை, அதை விற்றுவிட்டு முதலீடு செய்யக்கூடிய நிலைமை கள் இருக்கிறதா என்றால் இல்லை. அவர்கள் அங்கே இருக்கக் கூடிய வியாபாரிகளிடம் கொடுத்து ஏறத்தாழ 10 நாட்களில் அல்லது ஒரு மாதம் கழித்துத்தான் அந்தப் பூட்டுக்கு உரிய தொகை பெறக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலையைக் கருதி அங்கே கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அந்தப் பூட்டு தொழில் செய்பவர்களுக்கு உதவவேண்டும். அந்தத் தொழில்களை அங்கே அதிகமாக நிறுவ கடன் தந்து அதன் மூல மாக இந்தத் தொழில் அழிந்துவிடாதபடி செய்யவேண்டும். நல்லான்பட்டி, பெருமாள் கோயில்பட்டி ஆகிய இந்த பகுதியிலே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான பூட்டு செய்பவர்கள், அவர்கள் அந்தத் தொழிலிலே லாபம் கிடைக்கின்ற சூழ்நிலை இல்லாததால், உடனடியாக பூட்டை விற்று அதற்குரிய பணம் கிடைக்காத நிலைமையும் இருப்பதால் இன்றைக்கு அவர்கள் மாற்றுத் தொழிலை செய்யக் கூடிய நிலைமைகள் அங்கே ஏற்பட்டுக்கொண் டிருக்கின்றன. இன்றைக்கு குறிப்பிலே 7 வது பக்கத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஊரகத் தொழில் திட்டத்தின்கீழ் கிராம கைவினைஞர்களுக்கு 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதுபற்றி

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 27

சொல்லியிருக்கிறார்கள். ஜனவரி மாதம் வரை சிறு தொழில்களுக்கு 36.58 லட்சம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் இன்னும் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இதுவரை ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் தான் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே மீதியுள்ள தொகையை பூட்டுத் தொழிலுக்கு வழங்க வேண்டும். அதுபோல இந்தப் பூட்டுகளுக்கு விளம்பரம் இல்லையென்ற நிலையை மாற்ற வேண்டும். சிந்தாமணி மற்றுமுள்ள கூட்டுறவு அங்காடிகளில் எல்லாம் இந்தப் பூட்டுக்களைத் தான் வாங்க வேண்டுமென்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து, இந்தப் பூட்டுகள் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் நேர்த்தியாக இருக்கின்றன. பூட்டு சம்பந்தப்பட்ட தொழில் மானியம் பற்றி இங்கே விவாதம் நடைபெறுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆளுக்கு ஒரு பூட்டு கொடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அதற்குரிய ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, அங்கேயுள்ள சிறுமலையில் மா, பலா, கொய்யா போன்ற மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஏராளமாக அங்கே இதுபோன்ற பழ வகைகள் விளைகின்றன. அதுபோல மருந்துப் பொருள்களுக்கு மிகவும் தேவையான ஒரு பொருளை எலுமிச்சப் பழத்திலிருந்து எடுத்து மேல்நாடுகளுக்கு கூட அதனை ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே, சிறுமலை பகுதியில் ஏராளமாக எலுமிச்சம் பழம் விளைகிற காரணத்தால் அங்கே இதுசம்பந்தமாக தொழிற்சாலை ஒன்றை அவசியம் ஏற்படுத்த வேண்டும். அதுபோல திண்டுக்கல், கொடைக்கானல், சிறுமலை போன்ற இடங்களில் பலவகையான பழவகைகள் அதிகமாக விளைவதால் அவசியம் அங்கே பழம் பதப்படுத்தும் நிலையம் ஒன்றை ஏற்படுத்தி நல்லமுறையில் இதில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் திண்டுக்கல் பகுதியில் குறிப்பாக நத்தம், ஆத்தூர் போன்ற பகுதிகளில் தென்னம் நாற்றுகள் தேவை என்றால் அவைகளை



1987 ஏப்ரல் 27] [திரு. ஆ. பிரேம்குமார்]

அதிகமான அளவில் அய்யம்பாளையத்திலிருந்து தான் மக்கள் வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கெனவே அந்தப் பகுதியில் பல கயிறு தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த கயிறு தொழிற்சாலையில் வெறும் கயிறு பொருள்களை மட்டும் உற்பத்தி செய்கிறார்களே தவிர பினிஸ்ட் ஐட்டம்களான சோபா செட், தரை விரிப்புகள் போன்றவற்றை தயாரிப்பதில்லை. ஆகவே அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்தி நல்லமுறையில் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புகையிலை அதிகமான அளவில் அண்ணா மாவட்டத்தில் உற்பத்தியாகிறது. அதனை சிறப்பான முறையில் சில தனியார் தான் செய்கிறார்கள். அங்கே அதிகமாக புகையிலை கிடைக்கிற காரணத்தால் ஒரு மினி சிகரெட் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் அரசு ஏற்படுத்தினால் அது வரவேற்கத்தக்கதாக இருக்குமாதலால் இதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, டான்சியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே பல தொழில் நுட்ப கலைஞர்கள் அங்கே வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகமான அளவில் ஏற்படுகின்ற இழப்பை சரிசெய்ய அவ்வாறு அவர்கள் அங்கே நீக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற தொழில் நுட்ப வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்தி இரும்புக் கட்டில், நாற்காலிகள் போன்றவைகளைச் செய்து, நல்ல முறையில் வேலைவாய்ப்பினையும் அதிகப்படுத்தி உரிய முறையில் வாய்ப்புகளை மேலும் மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதுசம்பந்தமாக ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக மேலும் விதம் விதமான பொருள்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கு, அவர்கள் மக்களுக்கு நன்மை செய்கிறார்கள் என்கிற அளவில், எந்த அளவுக்கு நன்மை செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு நன்மைகளை செய்து அவர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அதுபோல விதம் விதமான முறையில் நல்ல பொருள்களை உற்பத்தி செய்ய முன்வருபவர்களுக்கு லோன் வழங்க வேண்டும். இன்றைக்கு மின் சக்தி மிக மிகத் தேவையான ஒன்று.

ஜெனரேட்டரை எடுத்துக்கொண்டால் அதற்கு அதிக விலை. ஆகவே, குறைந்த விலையில் அவைகளை எந்த அளவுக்கு தயாரிக்க முடியுமோ அந்த அளவிற்கு தயாரிப்பு முறைகளை கண்டுபிடிப்பவர்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்கிற முறையில் விளம்பரம் செய்து அதுகுறித்து தகுந்த நடவடிக்கைகளை இளம் வயதினரான மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்கள் என்கிற என்னுடைய நம்பிக்கையை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சுய வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்களுக்கு தான் 15 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் தருகின்ற நிலை இருக்கிறது. அதுவும் பாஸ் செய்தவர்கள் என்றால் அவர்கள் தொழிலைத் தொடங்கிவிட்டு வேறு ஏதாவது வேலை வாய்ப்பு கிடைத்து விட்டால் உடனே அங்கே சென்று விடுகின்ற நிலை இருக்கிறது. ஆனால் தேர்ச்சி பெறாதவர்களுக்கும் இப்படிப்பட்ட சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் லோன் தந்தால் அவர்கள் கடைசி வரை தங்கள் தொழிலில் ஈடுபட்டு, தொழிலை முன்னேற்ற வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அண்ணா மாவட்டத்தில் மிக அதிகமான அளவிற்கு மல்லிகையானது கிடைத்துக்கொண்டிருக்கிறது. மதுரை மல்லி என்றும், திண்டுக்கல் மல்லி என்றும் சொல்லி கொடை மல்லி என்று சொல்லக் கூடிய அளவிற்கு மிகச் சிறப்பான முறையிலே அந்த மல்லிகைத் தோட்டங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, மல்லியிலிருந்து—அந்தப் பூவிலிருந்து சென்ட் எடுக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாம்பூலத்திற்குப் பயன்படக்கூடிய வெற்றிலையானது மிக அதிகமான அளவிற்கு அந்தப் பகுதியிலே கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி சிறப்பான முறையிலே அங்கு ஏதாவதொரு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





திண்டுக்கல் கூட்டுறவு பாலித்தீன் பைகள் தயாரிக்கக் கூடிய நிறுவனமானது திண்டுக்கல் பகுதியிலே, பெண்களே சேர்ந்து செய்யக்கூடிய அளவிற்கு மிக அதிகமான அளவிலே இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாக இன்று நடைபெற்று வருகிறது. அப்படிப்பட்ட அந்த நிறுவனத்திலே பிளாஸ்டிக் கோணி பைகளையும் செய்யக்கூடிய நிறுவனமாகச் சேர்த்து அதனுடைய வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிக் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்வார்கள்—பழைய நிறுவனங்கள். அவைகளை வாங்கும்பொழுது அவர்களுக்கு அந்த சப்சிடியைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆனால், அரசினுடைய பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டிலே அதைக் கொடுக்க முடியாத சூழ்நிலையும் இருக்கின்றது என்பதை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம். அவர்களை ஊக்குவிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு லோனைக் கொடுத்து அல்லது ஏதாவது ஒரு தொகையை நிர்ணயம் செய்து அவர்களுக்குக் கொடுப்போமேயானால் இன்னும் சிறப்பாக செயல்பட ஒரு நல்ல செய்தியை, எப்படி பஞ்சாப், அரியானாவிலே இந்தச் சிறுதொழில்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவோ அப்படிப்பட்ட ஒரு நிலையானது வருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருக்கின்றவர். ஆகவே, சிறுதொழில் என்று சொல்லக்கூடிய வகையிலே மோட்டார் உதிரி பாகங்களான டைனமோக்கள், டயர்கள், டியூப்கள் மற்றும் தமிழகத்திலே மோட்டார் வாகனங்களுக்கு வேண்டிய அந்தச் சிறுதொழில்கள் எந்த அளவிற்கு வேண்டுமோ அந்த அளவிற்கு வர அவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஒவ்வொரு தொகுதியிலேயும் அந்தப் பகுதியிலே என்னென்ன ரா மெட்டீரியல்ஸ் மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவோ, அந்த மூலப்பொருட்களைக் கருத்திற்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 27

கொண்டு அவைகளை ஆராய்ந்து அந்தந்தப் பகுதிகளிலே தொழில்களை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு குறைந்தபட்சம் அந்தந்தப் பகுதிகளில் ஒரு தொழிற்சாலையாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறை பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப் ப . வேண்டுமென்று சொல்லி, இந்த அளவிற்கு வாய்ப்பு கொடுத்த மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், **நன்றி.**

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்குக் கிராமத் தொழில் களையும், சிறுதொழில்களையும் ஏற்படுத்துவது அரசினுடைய நோக்கம் என்று கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. நோக்கம் நல்லதாக இருக்கிறது ; வரவேற்க வேண்டியதுதான் ; அதை ஆதரிக்க வேண்டியதுதான். அதிலே சந்தேகத்திற்கே இடமில்லை. ஆனால் இன்றைக்கு நிலைமை எங்கே சென்றிருக் கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சரவர்களாலே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கொள்கைக் குறிப்பிலே ரூரல் இன்டஸ்ட்ரீஸ் புரோகிராமைப் பொறுத்த அளவிற்கு என்ன சொல்லப்படுகிறது என்றால், 1986-87-லே ஒதுக்கப்பட்ட பணம் 72 இலட்சம். ஆனால் செலவு செய்யப்பட்டது, 1987 ஜனவரி முடிய 36.58 இலட்சம். அதே போன்று இன்னொரு பகுதியிலேயும் அவர்கள் சொல்கிறார்கள். செல்ப்-எம்ப்ளாய்மெண்ட் புரோகிராம் சம்பந்தமாக. சுய வேலை வாய்ப்புத் திட்டம் இன்றைக்கு இந்த நாட்டிலே பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலைவாய்ப்பில்லாமல், வேலையைத் தேடி அலைந்து திரியக்கூடிய இந்த நாட்டிலே செல்ப்-எம்ப்ளாய் மெண்டுக்கு ஒதுக்கப்பட்டதைப் பொறுத்தவரையில், அதிலே 1983-லேயிருந்து அந்தப் பட்டியலுக்கு நான் போகவில்லை. 1986-87-க்கு மட்டும் சொல்கிறேன். 18,100 பேர் டார்கெட் ; ஆனால் அதிலே மாவட்ட தொழில் மையங்களின் சிபாரிசு செய்யப்பட்ட எண்ணிக்கை 25,776. ஆனால் பணம் வங்கிகளால் கொடுக்கப்பட்டது 12,025. அப்பொழுது என்ன பார்க்கிறோம் என்றால், என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் மார்ச் 1987



ஆவணக்காப்பக ... 600 008

1987 ஏப்ரல் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

முடிவடைவதற்கு முன்பாகவே இவைகளையெல்லாம் கொடுத்து விடுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி இந்த விஷயத்தைப்பற்றி நாம் விவாதிக்கிறோம். மார்ச் 1987-க்குள் எவ்வளவு கொடுக்கப் பட்டிருக்கிறது என்ற பட்டியலைக் கொடுத்திருக்க முடியும். ஆகவே, நான் என்ன குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் என்றால், அரசினுடைய எண்ணம் இன்றைக்கு இப்படி யிருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத அளவிற்கு நாட்டுமக்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அதை எப்படி நாம் மாற்ற வேண்டும், அதற்கான திட்டம் அரசினிடத்தில் என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினையாக நாம் பார்க்க வேண்டும். நான் அதற்கு இன்றைக்குச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது ; அமைச்சரவர்கள் வந்திருக்கக்கூடிய ஈரோடு, கோயம்புத்தூர் பகுதிக்ளிலேகூட பல நூற்றுக்கணக்கான சிறு என்ஜினியரிங் தொழிற்சாலைகள் இன்றைக்கு வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் இருக்கின்றன.

இன்று அரசில் ஏற்படுத்தியிருக்கிற உதவிகளைப் பயன் படுத்திக் கொள்ள முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. காரணம் என்ன? ஒழுங்கான முறையில் மூலப்பொருள்கள் கிடைப்பதற்கான வசதிகள் செய்யப் படவில்லை. அவர்களுக்குத் தேவையான மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை. அவர்களுக்குத் தேவையான இரயில் போக்குவரத்து சரியாக இல்லை. சிறுதொழில்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் என்ன என்ன முறையில் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமோ அந்த முறையில் வேலைகளைச் செய்வதற்கு அரசு போதுமான அளவு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதனால் நான் அரசை குற்றஞ் சொல்லவில்லை ; நிலைமை அப்படி இருக்கிறது. காரணம் என்ன? மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிற பொருளாதாரக் கொள்கை அப்படி இருக்கிறது. மத்திய அரசின் இந்தக் கொள்கையை நான்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

மட்டும் சொல்லவில்லை. மாநில அரசே தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறது. மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கம்மி பண்ணாமல் சிறு தொழில்கள் வளரக்கூடிய நிலைமை இல்லை. அவர்களுக்கு என்னென்ன உதவிகள் கிடைக்க வேண்டுமோ அந்த உதவிகளைச் செய்து கொடுத்தால்தான், அதற்கு தகுந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்தால்தான் நிச்சயமாக சிறு தொழில்களைப் பாதுகாக்க முடியும். இன்றைக்கு அந்தமுறையில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. திறமையான ஒரு அமைச்சர் இந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர்கள் இதை நல்லமுறையில் பரிசீலனை செய்து, அவர்களுடைய திறமையைப் பயன்படுத்தி, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய உள்சந்தை அமைப்பை எந்த அளவுக்கு பரவலாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்ய நடவடிக்கை எடுக்காமல் தொழில்களை வளர்த்துக்கொள்ள முடியாது. மக்களுடைய வாங்கும் சக்தி கீழே போய்விட்டது. தீபாவளி விற்பனையைப் பார்த்தாலே அது தெரியும். பல கோடி ரூபாய்க்கான் கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. சென்ற கால் தீபாவளி விற்பனையை விட மிகவும் குறைந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்? மக்களுடைய வாங்கும் சக்தி கீழே போய்விட்டது; மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்காமல், அந்தவகையில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைக்காமல், அதிலே நாம் அக்கறை காட்டாமல் நிச்சயமாக நம்முடைய மாநிலத்தில் தொழில்களைப் பாதுகாக்க முடியாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கைத்தறியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். கயர் தொழிலைப் பொறுத்த



1987 ஏப்ரல் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வரையில் எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை இங்கே தெரிவிக்கிறேன். ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய்க்குமேல் மத்திய அரசிலிருந்து இந்தத் தொழில் அபிவிருத்திக்காக நீங்கள் வாங்கி யிருக்க வேண்டும். அதை வாங்கத் தவறிவிட்டீர்கள். நீங்கள் கேட்டதோ அல்லது அவர்கள் கொடுத்ததோ ஏறத்தாழ 9 அல்லது 10 இலட்சம் ரூபாய்தான். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவி கிடைக்காமல், அவர்களுடைய தொழில் முறைகளை அபிவிருத்தி செய்துகொள்ள முடியாமல், நூற்றுக் கணக்கான கயர் தொழில் கூடங்கள் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல், உற்பத்தியான பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன.

எங்களுடைய மாவட்டத்தில் கொல்லங்கோடு என்ற ஒரு இடம் இருக்கிறது. கயர் போர்டு அதை ஒரு மாதிரி கிராமமாகத் தேர்ந்தெடுத்தது. ஆனால் இன்றுவரையில் மாதிரி கிராமத்திற்குத் தேவையான குறைந்தபட்ச வேலைகூட அங்கே நடக்கவில்லை. அதே நேரத்தில் [illegible] மாநிலங்களில் கயர் போர்டு மாதிரி கிராமங்களாக எடுத்துக்கொண்ட கிராமங்கள் நல்லமுறையில் வளர்ச்சியடைந்திருக்கின்றன; அவைகளுக்காக பல இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இதிலே நம்முடைய மாநில அரசு ஏனோ தானோ என்று இருக்கிறதா என்பது தெரிய வில்லை. எங்கள் மாவட்டத்து மக்கள் அப்படி நினைக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இந்த கயர் தொழிலை பெரிய தொழிலாகத் தொடங்க முடியும். அங்கே இருக்கிற 'டாக்புளோர்கோ' என்பது ஒரு தனியார் ஸ்தாபனம். அந்த நிறுவனம் இன்றைக்கு சரியாக இயங்கவில்லை. அதிலே அவர்களுடைய பணம் மட்டும் இல்லை. அவர்கள் ஒரு சிறு தொகைதான் முடக்கியிருப்பார்கள்.

(பிற்பகல் 1-20)

ஆனால் அரசினுடைய ஃபைனான்ஷியல் சோர்ஸைப் பயன்படுத்தித்தான் அந்த ஆலை அங்கே நடக்கிறது. அந்த ஆலையை எந்த முறையில் செயலாற்ற வைக்க முடியுமோ அந்த அளவுக்குச் செயலாற்ற வைக்க அந்த நிர்வாகம் தயாராக

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

இல்லை. அதை ஏற்று நடத்தி நல்ல முறையில் அந்த ஆலையைப் பயன்படுத்தக்கூடிய முறைக்கு வரவேண்டும் என்று நான் பணிவன்போடு இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் முந்திரித் தொழில். இன்றைக்கு ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கச்சா முந்திரி இல்லாததன் காரணமாக அவர்களுக்குத் தொழில் இல்லை. வேலை இல்லை; வருவாய் இல்லை. அவர்கள் இன்று இருக்கக்கூடிய நிலைமை பட்டினி. இதற்குக் காரணம் என்ன? மத்திய அரசினுடைய கொள்கைதான் காரணம். ஏகபோக முதலாளிகளை ஆதரிக்கவேண்டுமென்ற கொள்கை காரணமாக ஆலைகளில் வேலை செய்யக்கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சிக்கல் பற்றி இந்த அவையிலே பேசப்பட்டது; விவாதிக்கப்பட்டது. அங்கே கச்சா முந்திரி வாங்குவதற்கான நடவடிக்கையில் உதவி செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வேதனையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரூரல் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிப்பதற்குரிய திட்டம் பற்றி கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஆட்டோ இண்டஸ்ட்ரீஸ் பார்ட்ஸ் தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன். இந்த மாநிலத்தில் எந்தப் பகுதியில் தொழில் வந்தாலும் அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பவன் நான். ஆனால் அதேநேரத்தில் ஒன்றை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் உற்பத்தியாகக்கூடிய ரப்பரைப் பயன்படுத்தி நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் ஒரு டயர் ஃபேக்டரி அல்லது அந்தமாதிரி உள்ள தொழிற்சாலையை



1987 ஏப்ரல் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கக்கூடாதா? ஏற்கெனவே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. எந்தக் காரணத்தாலோ அது நிறைவேறவில்லை. டான்சி அதற்கான நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்தில் ஆட்சித்தலைவராக இருந்தவர், இன்றைக்கு டான்சி தலைவராக இருக்கிறார். எங்களுடைய மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த முயற்சித்தவர் அவர். எனவே எங்களுடைய மாவட்டத்தில் கிடைக்கிற ரப்பரைப் பயன்படுத்தி போக்குவரத்துத் துறைக்கு உதவி செய்யக்கூடிய முறையில் ஒரு தொழில் ஸ்தாபனத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதிலும் இன்றைக்கு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரியை நடத்தக்கூடியவர்கள் என்ன சொல்கிறார்கள்? அரசினுடைய விற்பனை வரிக் கொள்கை காரணமாக அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய சங்கத்தின் முடிவுகள் கூட இன்றைக்குப் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. காயர் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் என்ன சொல்கிறார்கள்? சேல்ஸ் டாக்ஸில் 20 சதவீதம் சப்சிடி கொடுத்தால்தான் காயர் தொழிலைப் பாதுகாக்க முடியும் என்று சொல்கிறார்கள். காயர் போர்டும் சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது. மற்றைய மாநிலங்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ துரதிருஷ்டவசமாக தமிழக அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியாது. அது உண்மையாக இருந்தால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உதவக்கூடிய முறையில் அந்த நிலை குறித்து நிச்சயமாகப் பரிவோடு பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காயர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சிறு உதவியாக அது அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டரைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய அனுபவம் அந்தக் கருத்தோடு என்னை இணைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சங்கம் பதிவு செய்யப்படுவதற்காக 1978 ஆம் வருஷம் மனு கொடுக்கப்பட்டது. 1981 ஆம் வருஷத்தில் அது பதிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களும், இப்போது அமைச்சரவையிலிருந்து விலகி இருக்கும் மாண்புமிகு திரு. கே.ஏ.கே. அவர்களும் எங்கள் மாவட்டத்திற்கு வந்து அந்த ஸ்தாபனத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள் 1983 ஆம் ஆண்டில். அன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் ஒரு வருட காலத்திற்குள்ளாக அந்த ஸ்தாபனம் உற்பத்தியை அடையக் கூடிய அளவுக்கு டிசைன்கள் அமைக்கப்படும் என்று. ஆனால் இன்னும் இல்லை. துரதிருஷ்டவசமாக என்ன நிலைமை என்றால் 86-வது வருடத்திலே அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இயந்திரங்கள் வாங்க வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். டைரக்டர் ஆபிசில் சொல்லுகிறார்கள் அந்த விண்ணப்பம் எங்களுக்கு கிடைத்தது நாங்கள் அதை தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தலைமைச் செயலகத்தில் என்ன சொல்லுகிறார்கள் என்றால் எங்களுக்கு இன்னும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இயந்திரம் வாங்குவதற்கு 3 லட்சம் ரூபாய் ஐ.ஆர்.டி.பி., மூலமாக கொடுக்கப்பட வேண்டும். அந்தத் தொழிலின் காரணமாக பலனை அனுபவிக்கப் போகிறவர்கள் அந்தக் கிராமத்து மக்கள். ஆகவே அது கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டால் ஐ.ஆர்.டி.பி.-யிலே அதைக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று திருப்பிக் கேட்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. நான் எதையும் உள்நோக்கத்தோடு



1987 ஏப்ரல் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சொல்லவில்லை. இருந்தாலும் அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது என்பதற்காக புறக்கணிக்கப்படுகிறதோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அமைச்சர் அவர்களை குறை சொல்வதற்காக நான் சொல்லவில்லை. அவர்கள் மீது பெரும் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறவன் நான். ஆனால் துரதிருஷ்டவசமாக என்ன நிலைமை என்றால் ஒரு சில ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அமைச்சர் அவர்கள் பெயரைப் பயன்படுத்தி சில வேலைகளைச் செய்து வருகிறார்கள். எப்படி என்னுடைய தொகுதி என்பதனால் அது புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு என்னால் எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல முடியும். நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடத்திலும் அது பற்றி பேசியிருக்கிறேன்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் உங்களுடைய ரூட்டிலே பஸ் விட வேண்டும் என்றால். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை :** அந்த சப்ஜெட் எல்லாம் இதிலே வேண்டாம். இது போக்குவரத்து மானியம் அல்ல. இந்த மானியம் குறித்து உங்கள் தொகுதியில் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அந்த சப்ஜெக்ட் இங்கே எதற்கு?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** அதை ஒரு எடுத்துக்காட்டாக சொல்ல நினைக்கிறேன். அமைச்சருடைய பெயரைப் பயன்படுத்தி எப்படி எல்லாம் செய்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்த மாவட்டத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களின் தொகுதிகளைத் தவிர மற்ற தொகுதிகளில் பேருந்து விட வேண்டும் என்றால் அந்த ஆளும் கட்சி பிரமுகரின் அனுமதியை வாங்க வேண்டும் என்று என்னிடமே சொல்லுகிறார்கள். அந்த முறையில்தான் இந்த சொசைட்டி சம்பந்தமாகவும் நடக்கிறதோ என்று எனக்கு சந்தேகம். யாராவது அப்படி வேண்டும் என்றே தடை செய்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. எங்களுடைய

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 27

மாவட்டத்திலே ஆட்சித் தலைவராக இருந்தவர்தான் இன்றைக்கு டைரக்டராக வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் பெயரிலே எனக்கு சந்தேகம் கிடையாது. அவர் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இருந்தால்கூட அவர் அதற்கு இடம் கொடுக்க மாட்டார் என்று தான் நம்பு கிறேன். நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால் 81-வது வருடத்தில் அது பதிவு செய்யப்பட்டது. 1983-வது வருடத்திலே அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார்கள். அப்படிப் பட்ட ஒரு தொழில் ஸ்தாபனம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்றால் பொதுமக்கள் எங்களைத்தான் வந்து கேட்கிறார்கள். எம்.எல்.ஏ. அவர்களே நீங்கள் தானே பணத்தை வசூல் பண்ணினீர்கள் எங்கே தொழிற்சாலை என்று என்னிடம் வந்து கேட்கிறார்கள். நான் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் வேதனைப்படுகிறேன். அதை வேதனை யோடு சொல்கிறேன். அப்படிப்பட்ட போக்கிற்கு காரணம் 'டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரிஸ் சென்டர்' மற்றும் அந்தத் துறை எந்த அளவிற்கு உதவிகளை வழங்கி கவனிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு கவனிக்காமல் இருப்பது தான் என்று எண்ணு கிறேன். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

(பிற்பகல் 1-30)

இன்னொரு விஷயத்தை சுட்டிக்காட்டி முடித்துக் கொள் கிறேன். தீப்பெட்டி கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி குறிப்பிட் டிருக்கிறார்கள். இன்றைக்கு பல தீப்பெட்டி கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டிருப்பதன் காரணமாக அவற்றில் ட்ரெயினிங் எடுத்த ஆட்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. சில கூட்டுறவுச் சங்கங்களில் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் நல்ல முறையில் நடத்தாதக் காரணத்தால் அந்த மாட்ச் பாக்டரிஸ் களை மூட வேண்டிய நிலை வந்தது என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதை எந்தமுறையில் விசாரிக்க வேண்டுமோ அந்த முறையில் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுவதற்கான நடவடிக்கை களை அரசு எடுக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அடுத்து இன்றைக்கு செரி கல்ச்சர் பற்றி ஒரு குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தாழ்மையான கருத்து என்னவென்றால் அரசுக்கு நிறைய புறம்போக்கு இடங்கள் இருக் கின்றன. அந்த புறம்போக்கு நிலங்களை நிலமற்றவர்களுக்கு கொடுத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் கொடுத்து இந்த மல்பரி செடிகளை வளர்க்கிற முறையில் ஒரு திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக் கின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது இரண்டு லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

**திரு. கே. சுப்பராயன் :** மாற்றுத்தலைவர் அவர்களே, கோரம் இல்லாமல் பேரவை நடந்து கொண்டிருக்கலாமா என்று அறிய விரும்புகிறேன். அவையில் கோரமில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** கோரம் இருக்கிறது. திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** ஆகவே செரி கல்ச்சர் சம்பந்த மாக நிலமற்றவர்களுக்கு நீங்கள் நிலத்தைக் கொடுத்தால் நிச்சய மாக அவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பு கிடைக்கும்; இந்தத் திட்டத்தை அபிவிருத்தி செய்யலாம்; மாநிலத்தினுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்து அதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் இந்தத் துறைக்கு சம்பந்தமில்லாத இன்னொரு துறைக்கு இருக்கிற ஒரு சின்ன பிரச்சினையை தெரிவித்த காரணத்தால் இப்போதே அவருக்கு பதில் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். பலர்கள் அவர்கள் தொகுதியில் விடுகிறபோது ஆளும் கட்சியைச் சார்ந்த வர்கள் நிறுத்தி விடுகிறார்கள் அல்லது அவர்களுடைய அனுமதி

யில்லாமல் விடுவதற்கு வாய்ப்பில்லை என்ற கருத்தைத் தெரிவித் தார்கள். அந்தக் கருத்திலே எனக்கு உடன்பாடில்லை. என்ன காரணமென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத் தில் வந்து எந்தெந்த வழித்தடங்களில் பேருந்து வேண்டுமென்று கேட்டு எழுதிக் கொடுத்தவுடனே சம்பந்தப்பட்ட நிர்வாக இயக்குநர்களுக்கு சொல்லி அந்த நடவடிக்கையை நேரடியாக நானே எடுத்திருக்கிறேன். சில நேரங்களில் சிக்கல் எங்கே ஏற்படுகிறதென்றால் ஒவ்வொரு பேருந்தும் விடுகிறபோது அதற்காக ஒரு நிகழ்ச்சி வைக்க வேண்டும், விழா நடத்த வேண்டு மென்று நிலை வருகிறபோது அங்கே இந்தச் சூழ்நிலை உருவாகி விடுகிறது. காரணம் ஏறத்தாழ ஆயிரம், ஆயிரத்து ஐநூறு வண்டிகளை புதியதாக அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் விட்டுக் கொண்டிருக்கிறபோது இந்த 1,500 நிகழ்ச்சிகளை நடத்த வேண்டு மென்று ஒவ்வொரு பகுதியிலும் விரும்புகிறபோது நடைமுறை யிலே பல சிக்கல்களை, கஷ்டத்தை ஏற்படுத்தி விடுமென்ற காரணத்தால், சில இடங்களில் பொது மக்களுக்கு இந்தத் துறையின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று அந்த அபிப்பிராயத்திலே ஆங்காங்கு சில நிகழ்ச்சிகளை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த நிலையில் சில சிக்கல் ஏற்பட்டிருக்கலாமே தவிர, வேறு உள்நோக்கத்தோடு இருக்க முடியாது என்று கருதுகிறேன். எனவே எதிர்காலத்தில் அப்படியிருக்குமானால் அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கையை நான் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. **எஸ். என். இராமசாமி**: தலைவர் அவர்களே. ஊரகத் தொழில்கள் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இருபது அம்சத் திட்டத்தின் மூலமாக சிறுதொழில்களைப் பெருக்க, வறுமையைப் போக்க இன்றைக்கு கிராமத் தொழில் களை பெருக்க முனைந்துள்ள அரசைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சிறு தொழில்களைச் செய்பவர்களுக்கு இன்றைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்படி பயிற்சி அளிக்கக்கூடிய நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங் களில்தான் இருக்கிறதே தவிர கிராமங்களில் இந்த பயிற்சி நிலை





யங்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே கிராமங்களில் பயிற்சி நிலையங்களை அமைத்து கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு அதனைச் சொல்லித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று குடிசைத் தொழில்களை இன்றைக்கு கிராமங் களில் விரிவுபடுத்துகின்ற திட்டம் இருந்து வருகிறது. எந்தெந்தக் கிராமங்களில் என்னென்ன பொருட்கள் உற்பத்தியாகின்றன, என்னென்ன பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையைப் பார்த்து, அந்த நிலைக்கு ஏற்ப அந்தந்த கிராமங் களில் குடிசைத் தொழில்களை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் இன்று எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் பாங்குகளில் இந்தக் கடன் வழங்கிய பத்திரங்களைக் கொண்டு போய்க் கொடுத்தால், பாங்குகள் இந்தக் கடன்களை வழங்குவதில்லை. அதில் சில சிரமங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே இது போன்ற நிலைகள் கிராமங்களிலே நடைபெறாமல் இருக்க நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்து பாஸ் செய்தவர்களுக்குத்தான் இந்த சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படு கின்றன. பாஸ் செய்யாதவர்களுக்கும் இந்த சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

கிராமங்களில் செங்கல் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் அதிகம் பேர்கள் இருந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்குத் தேவையான கச்சாப் பொருட்களாக உள்ள அந்த மண்ணை எடுக்கக்கூடிய அளவிற்குத் தேவையான இடங்கள் அதிகமாக இல்லை. ஆகவே அரசாங்கம் இதற்கு ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று கடம்பா, கருங்குளம் போன்ற பகுதி

களில் பெரிய குளங்கள் மேடுகளாக இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த கடப்பா போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய குளங்களை ஆழப்படுத்துவதற்கு வாய்ப்பாக, செங்கல் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு அங்கே லைசென்ஸ்கள் வழங்கப்பட்டு, இந்த கடம்பா பெரிய குளத்திலே செங்கற்கள் உற்பத்தி செய்வதற்கு—லைசென்ஸ் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் உப்பு செய்பவர்கள் சமீபத்திலே தூத்துக்குடியிலே அதிகமான பேர்கள் அங்குள்ள உப்பளங்களில் உப்புகளை உற்பத்தி செய்கிறார்கள். இந்த உப்பிலிருந்து என்னென்ன பொருட்களை தயார் செய்ய முடியும் என்ற நிலை பற்றி, சரியான முறையிலே அட்டவணை வெளியிடவில்லை. ஆகவே உப்பிலிருந்து என்னென்ன பொருட்களை தயாரித்து வழங்க முடியும் என்ற அட்டவணையை அரசாங்கம் வெளியிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பனையிலிருந்து தும்புகளைப் பயன்படுத்தி, கான்கிரிட் பலகைகளை தயார் செய்ய முடியும் என்ற நிலை இருந்து, கதர்த்துறை மூலமாக இதை செயலாக்க இருக்கிறார்கள். ஆகவே இந்த தும்பிலிருந்து கான்கிரிட் பலகைகளை செய்ய முடியுமா என்று நன்கு ஆராய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரை ஓரங்களில் இன்று மீன் பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வாய்ப்பாக மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும், அதனை அடைப்பதற்குத் தேவையான டப்பா தொழிற்சாலை ஒன்றையும் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று செய்துங்கநல்லூர் என்ற பகுதி என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதியாகும். அங்கே கருங்கல் அதிகமாக இருந்து வருகிறது. ஆகவே இந்தக் கருங்கற்களை

உடைக்கக்கூடிய கிரஷர்களை அங்கே அமைத்து, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பன்னம்பாறை என்ற ஒரு பகுதியில் வெள்ளைக் கற்கள் அதிகமாக இருந்து வருகிறது. இந்த வெள்ளைக் கற்கள் மூலம் என்னென்ன பொருட்களை தயார் செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு, இந்த வெள்ளைக் கற்கள் மூலம் பொருட்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுப்பூச்சி வளர்ப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. கருங்குளம், அரசகுளம் போன்ற பகுதிகள் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கான, வசதியான இடங்களாக அமைந்திருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியிலே பட்டுப்பூச்சி வளர்க்கும் நிலையத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாத்தாங்குடி பகுதியில் தனியார் மூலமாக பொன்னாங்கன்னி இலையைப் பயன்படுத்தி சித்த மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாக நான் அறிகிறேன். இந்த மருந்தை தயார் செய்யக் கூடியவர்களை அணுகி அவர்கள் இந்த இலையிலிருந்து என்னென்ன மருந்துகளைத் தயார் செய்கிறார்கள் என்பதை தெரிந்து, அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டி கூட்டுறவுத் தொழில்கள் இன்று அதிகமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஆனால் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் முறையாக விற்காமல் இதில் தேக்கம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. எனவே சிறுதொழில் மூலமாக தயார் செய்யப்பட்ட இந்தத் தீப்பெட்டிகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 ஏப்ரல் 27

(பிற்பகல் 1-40)

தஞ்சாவூரில் உள்ள மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம், இரண்டு துணை மையங்களை, கோயம்புத்தூரில் ஒன் றையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றையும் துவக்கியுள்ள தாக இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதனை எனது தொகுதியிலுள்ள தட்டாமடம் என்ற பகுதியிலே, அந்தப் பகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக இருப்பதன் காரண மாக, தட்டாமடத்திலே ஒரு கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நோக்திலே இந்த தென்னை மரங்களின் மூலமாக சில சிறு தொழில்களுக்கு வேண்டிய உபகரணங்கள் கிடைப்பதாக அறிகிறேன். அதனை கிராமப்புறங்களில் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கிராமங்களில் சிறு தொழில்களுக்கான மூலப் பொருட்கள் கிடைத்து வருகின்றன. மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக எந்தெந்த பகுதிகளில் எந்தெந்த சிறு தொழில் செய்வதற்கு மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதை அறிந்து மூலப் பொருள்கள் கிடைக்கக்கூடிய பகுதிகளை தொழில் மையங்களாக அறிவித்து தருவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டு இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது ஆறு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை சொல்லி யிருக்கிறார்கள். முப்பது உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக பல்வேறு உணர்வுகளை வலியுறுத்தி இருக்கிறார்கள். அதிலே 6 பேர் கொள்கை விளக்கம் பற்றியும் கேட்டு இருக்கி றார்கள். அதற்கு குறிப்புகளிலேயிருந்து அவர்களுக்கு பதில் கிடைத்து இருக்கும். 13 உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி களிலே புதிதாக தொழிற்பேட்டைகளும், தொழிற்சாலைகளும் துவக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஒரு 10 தொழில் முனைவோர் ஒன்றாக தொழில் ஆரம்பிப் பதற்கான வாய்ப்பை உடையவர்களாக முன் வருவார் களேயானால் அந்தந்தப் பகுதிகளிலே தொழிற்பேட்டைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சியை நிதிநிலைமைக்கு ஏற்ப இந்த



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

நிறுவனம் முயற்சியை மேற்கொள்ளும் என்பதை நான் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று நிதி வசதியைப் பற்றி 5 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கி றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டு வரும் மாவட்ட தொழில் மையம் இதுசம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதிலே சிக்கல்கள் வருகிறபோது சம்பந்தப்பட்ட துறையிலே இருக்கிற மேல் அதிகாரிகளுக்கோ, அல்லது அமைச்சருக்கோ தெரிவிக்கிறபோது அதிலே சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தீப்பெட்டித் தொழிலிலே இருக்கிற பிரச்சினைகளைப்பற்றி பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இரண்டு மாண்புமிகு உறுப் பினர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள் இதைப் பொறுத்தவரை இன்றைக்கு மத்திய அரசாங்கத்திலேயிருந்து— ஏற்கெனவே நான் சொன்னேன்—கலால் வரி பற்றி, ஒரு கேள்விக்கு பதில் சொல்கிறபோது கலால் வரி சம்பந்தமாகவும், மற்ற சில பிரச்சினைகள் சம்பந்தமாகவும், மத்திய அரசாங்கத்திற்கு இந்த மாநில அரசினுடைய சார்பாக பரிந்துரை செய்யப்பட்டிருக் கிறது. சமீபத்திலேகூட கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு சாதகமான முடிவு வருமேயானால் நிச்சயமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதோடு விட்டுவிடாமல் அதிகாரிகளை அனுப்பி அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்திலே இயங்குவதற்கான கார ணத்தை ஆய்வு செய்ய வேண்டுமென்ற முயற்சியை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கயிறு தொழிலுக்கு நிதி ஒதுக்கீடு பெறவேண்டுமென்று தெரி வித்து இருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார். 1987-88 ஆம் ஆண்டிற்கு 14 லட்சம் ரூபாயை அதற்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. 7½ லட்சம் ரூபாயை மொத்தமாக மத்திய அரசிலேயிருந்து நாம் பெற்று கொடுத்து இருக்கிறோம். மேலும் 75.76 லட்சத்திற்கு மத்திய அரசினுடைய நிதி தேவை என்ற பரிந்துரையையும் இந்த அர சாங்கம் அனுப்பி இருக்கிறது. அதேபோன்று கும்பகோணம்

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

நகரத்திலே கைவினைஞர்கள் பொருள்கள் அங்காடி ஒன்று அமைக்கவேண்டுமென்று உறுப்பினர் ஒருவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார். இது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. அதேபோன்று கும்பகோணத்திற்கு அருகிலே பட்டுநூல் முறுக்கு ஆலை ஒன்று அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கும்பகோணத்திலே, தனியாரிடத்திலே நிறைய இருக்கின்ற காரணத்தால் இந்த இடத்திலே ஒன்றை அமைப்பது அவசியம் என்று இந்த அரசு கருதவில்லை. அதேபோன்று சாத்தான்குளம் தொகுதியிலே, ஆசூரிலே பட்டுப்புழு உற்பத்தி செய்வதற்காக பட்டுப்புழு முட்டை தயாரிக்கும் நிலையம் ஒன்றை அமைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலே, குற்றாலத்திலே ஏற்கெனவே ஒன்று இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே இது அவசியமா என்பதை இப்போது நாம் யோசிக்கவேண்டிய நிலையிலே இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சிறந்த கருத்துக்களையும் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். குறிப்பாக, சிறு தொழில்களிலேதான் மிக அதிகமான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்று இந்த அரசாங்கம் நம்புகிறது. அதுமட்டுமல்ல ஒரு நம்பிக்கையோடு, ஒருவர் ஒரு தொழிலை துவக்கி மிகப்பெரிய ஒரு உன்னத நிலையை அடைவதற்கு இந்தத் துறை மிகப் பயன் உடையதாக இருக்கும் என்று நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த உணர்விலேதான் இன்றைக்கு பல்வேறு முன்னேற்றத்தை இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் இதற்கு முன்னாலே செய்ததைவிட மிக பல மடங்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்கு பின்பு செய்து சாதித்து இருக்கிறது, முடித்து இருக்கிறது என்பதை கூட இங்கே சில புள்ளி விவரங்களைச் சொல்லி நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரு பிரச்சினையைப்பற்றிச் சொன்னார்கள். கால தாமதத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதை நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும் என்பதையும், உள் நோக்கத்தோடு செய்யப்படவில்லை என்றும் நான் சொன்னேன். அப்படி இருந்து இருக்குமானால் இரண்டு அமைச்சர்கள் அங்கே வந்து அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அல்லது அவர்கள் நினைக்கிறபடி இருக்குமானால் வேறு இடத்தில்கூட அதை அமைத்து இருக்கலாம். பக்கத்து ஊரில் கூட அதை அமைத்து இருக்கலாம். அந்த நோக்கத்தோடு அது நடக்கவில்லை. ஏதாவது சூழ்நிலை காரணமாக கால தாமதம் ஏற்பட்டிருக்கலாமே ஒழிய உள்நோக்கம் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு பெரியவர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஓட்டபிடாரத்தைப்பற்றி மிக அதிகமாகச் சொன்னார்கள். அவர்கள் இன்னும் பல மிக அவசியமான சில கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முசுக்கொட்டை வளர்ப்பு பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பின்னாலே நான் புள்ளி விவரத்தை சொல்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்கள் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஊட்டியைப் பொறுத்தவரையில் மிக அதிகமாக இருக்கின்ற தேயிலையைப் பற்றி சொன்னார்கள். அதிலே இந்த அரசு தனிக் கவனம் எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுருபர ராமநாதன் அவர்கள் 40 ஆண்டு காலமாக இந்த நாடு சுதந்திரம் பெற்ற பின்பும் தொழில் துறையில் நாம் முன்னேறவில்லையே என்ற வேதனையை அவர்கள் இங்கே சொன்னார்கள். அவருக்கு இந்த புள்ளிவிவரங்கள் முழுமையாக தெரிகிறபோது நிச்சயமாக இந்த அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரேம் குமார் அவர்கள் சில கோரிக்கைகளை குறிப்பாக தோல் பொருட்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையும், பூட்டு சம்பந்தமான கோரிக்கைகளையும் வைத்து இருக்கிறார்கள். அதையும் எந்த அளவுக்கு செய்ய முடியும் என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, பூட்டு செய்கின்ற உறுப்பினர்களுக்கு எல்லாம்

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

கொடுக்கக்கூடாதா என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அந்த அந்த அறைகளிலே பூட்டு போட்டிருப்பார்கள் என்றுதான் நான் கூட கருதுகிறேன். இன்னும் ஒன்று, எல்லா மானியக் கோரிக்கை களிலும் இப்படி அந்த மானியம் சம்பந்தப்பட்ட ஏதாவது கொடுக்கவேண்டும் என்று கேட்பது சட்டமன்ற உறுப்பினர் களுக்கு கூட சில நேரத்தில் ஆபத்தில் கொண்டுபோய் விடும். சிறைச்சாலை மானியம் இப்படி எத்தனையோ மானியங்கள் வருகிறபோது எல்லாவற்றிலும் கேட்டுக்கொண்டு இருப்பது அது சரியாக இருக்காது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு). இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். விளம்பரம் அதிகமாக திண்டுக்கல் பூட்டுக்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். 234 பூட்டுகளை வாங்கிக் கொண்டுவந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அவர்கள் கொடுப்பார்களானால் அது கொஞ்சம் நல்ல விளம்பரம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டால் கூட இந்த அரசு வரவேற்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் டயர் தொழிற்சாலையைப்பற்றி ஏற்கனவே சொன்னார்கள். இதை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அமைக்கலாமா என்ற ஒரு ஆய்வு செய்யப்பட்டு அந்த ஆய்விலே அவ்வளவு வெற்றிகரமாக அது அமைவதற்கு வாய்ப்பு இருக்காது என்று ஒரு ரிப்போர்ட் தான் எங்களுக்கு கிடைத்து இருக்கிற காரணத்தால் அது அப்படியே விடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறு தொழில் அதை வைத்து வேறு ஏதாவது செய்வதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதைப்பற்றி நாம் ஆய்வு செய்யலாம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். என். இராமசாமி அவர்கள் பனைத் தும்புவை வைத்து கான்கிரீட் பலகை அமைப்பது பற்றிச் சொன்னார்கள். வெளிநாடுகளில் இப்படி செய்வதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கொண்டு வந்து கூட இங்கே காட்டினார்கள். எனவே அது சம்பந்தமாக தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டை



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

செய்யலாம் என்பதை நான் இங்கே தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே குறிப்பாக சிலவற்றை மட்டும் மேலோட்டமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே நாம் சுதந்திரம் பெற்ற பின்பு கூட தொழிலில் அவ்வளவு அக்கறை காட்டவில்லையோ, இந்த அரசு அவ்வளவு செய்யவில்லையோ என்று ஒரு சந்தேகத்தைச் சொன் னார்கள். சில உதாரணங்களை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். பதிவு செய்யப்பட்ட தொழில்கள் 1967-லிருந்து 1977 வரை ஏறத்தாழ 7,011 தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன. ஆனால் இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 1977 லிருந்து 1987 வரை ஏறத்தாழ 61,861 தொழில்களைப் பதிவு செய்திருக்கிறது. இன்றைய நிலையில் இருக்கின்ற தொழில்கள் ஏறத்தாழ 80,685 தொழில்களை இந்த அரசு பதிவு செய்திருக் கிறது. நாங்கள் பொறுப்பு ஏற்கும்போது 18,824 தொழில்கள் பதிவு ஆகி இருந்தது. எனவே இதிலே அரசு அக்கறை காட்டி யிருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்று நான் கருதுகிறேன்

அதேபோல் வேலைவாய்ப்பை நீங்கள் எடுத்துக்கொண்டால் கூட 1967-லிருந்து 1977 வரை 30 ஆயிரம் பேருக்கு மட்டும்தான் இந்த சிறுதொழில் துறையிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்திருக்கிறது. ஆனால் இந்த அரசு 1977-லிருந்து 1987-க்குள் 7 லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறது.

(பிற்பகல் 1-50)

அதேபோன்று முதலீட்டைப் பொறுத்தவரையில், ரூ. 100 கோடி என்று இருந்ததை இன்றைக்கு ரூ. 1,000 கோடி ஆக உயர்த்தியிருக்கிறது. உற்பத்திகூட, ஐந்து மடங்காக உயர்ந்திருக் கிறது என்று சொல்கிறபோது, இந்த அரசாங்கம் தனிக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது, சிறப்பாக செயற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

சுய வேலைவாய்ப்பைப்பற்றித் தெரிவித்தார்கள். தமிழக அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் ஒருவர் அவருக்காக வேலை வேண்டுமென்று கேட்டு அலைவதைவிட, தனக்கென்று ஒரு தொழிலை ஆரம்பித்துக் கொள்வது, தன்னுடைய குடும்பத்திற்காக மட்டுமல்லாமல், இந்த நாட்டிற்கே ஒரு மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமென்று கருது கிறார்கள். அதன் காரணமாகத்தான் கல்வியிலேகூட இந்த அரசாங்கம், குறிப்பாக தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு மிகப் பெரிய மாறுதலை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதிலே கூட ஒரு மாறுபட்ட கருத்து சொல்லப்பட்டது. எதற்காக இவ்வளவு இஞ்சினீயரிங் கல்லூரிகள் தேவை, எதற்காக இவ்வளவு பாலிடெக்னிக்குகள் தேவை, ஐ.டீ.ஐ க்கள் தேவை என்றும், நாளைய தினம் இவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடுவார்களே, அதற்கெல்லாம் என்ன ஏற்பாடு என்றெல்லாம் கேட்கப்பட்டது. அப்போது அரசினுடைய சார்பாக சொல்லப்பட்ட பதில். ஒருவர் பி.ஏ. படித்துவிட்டு, எம்.ஏ. படித்துவிட்டு, வேலையில்லாமல் திண்டாடுவதைவிட டிப்ளமா படித்துவிட்டோ, இஞ்சினீயரிங் படித்துவிட்டோ, ஐ.டீ.ஐ. படித்துவிட்டோ வேலை இல்லை என்று சொல்வது என்பது நிச்சயமாக இந்த நாட்டிற்கு ஆபத்தானதல்ல, மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருக்குமென்ற ஒரு கருத்து அரசினுடைய சார்பில் சொல்லப்பட்டது. என்ன காரணம் என்று சொன்னால், ஒரு எம்.ஏ. படித்தவன், பி.ஏ. படித்தவன், அவனுக்கு ஒரு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால் நிச்சயமாக, சுய வேலை வாய்ப்பைத் திறமையாக ஏற்று செயல்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஒருவேளை அப்படியே அவர்கள் திறமையாகச் செய்தாலும்கூட, அவர்களைவிட திறமையானவர்கள் இந்த டிப்ளமா படித்தவர்கள், அதாவது இஞ்சினீயரிங் படித்தவர்கள், இப்படிப்பட்ட தொழில் நுட்பப் படிப்பை படித்து இருக்கக்கூடியவர்கள், அவர்களைவிட சிறப்பாக நடத்தமுடியும். அந்தத் தொழிற்சாலையிலே தங்களை முன்னாலே கொண்டுவந்து விடமுடியும் என்ற நம்பிக்கையிலேதான் இந்த நாடு தொழில்மயமாக ஆகவேண்டுமென்ற நிலையில், தொழிற் கல்வி படித்தவர்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்ற உணர்வோடுதான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை இன்றைக்கு செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் உத்தரவாதமாகச் சொல்கிறேன். இன்னொரு 15 ஆண்டுக் காலத்தில் இந்தக் கல்வி துவக்கப்பட்ட காரணத்தால், ஆரம்பக் கல்வியிலிருந்து தொழிற்கல்வியை நாம் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற காரணத்தால், தொழிற் கல்வியை இந்த நாட்டிலே பரப்பவேண்டுமென்ற உணர்வோடு சொல்கின்ற காரணத்தால் இன்னும் ஒரு 15 ஆண்டுகாலத்தில் நிச்சயமாக மிகப் பெரிய தொழில் நிறுவனங்களை அவர்கள் ஆரம்பிக்கக் கூடிய ஒரு வாய்ப்பையும், ஒரு தொழில் மயமான நிலையையும் இந்த நாட்டிலே உருவாக்கமுடியும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். குறை சொல்லக் கூடியவர்கள் கொஞ்சம் பொறுமையாக அமர்ந்து, ஆலோசிப்பார்களேயானால் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அங்கேகூட, கூட்டுத் தொழிற்சாலையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். சாதாரணமானவர்களும் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒருவன் படித்துவிட்டு வரும்போது அதை இன்னும் கொஞ்சம் சிறப்பாகவும், நவீனமாகவும், சிறந்த முறையிலும் மற்றவர்களோடு போட்டி போடுகின்ற தன்மையோடும் துவக்கவேண்டுமென்ற அந்த உணர்வு ஏற்படும். அதைத்தான் இந்த அரசாங்கம் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறது. எனவே அடிப்படையில் மாறுதலை இந்த அரசாங்கம் ஏற்படுத்துகிறபோது, நிச்சயமாக எதிர்காலம் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பாக இருக்குமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





சுய வேலைவாய்ப்பை நீங்கள் பார்த்தால், மத்திய அரசு என்ன இலக்கீட்டை நிர்ணயித்ததோ, அதிலே கடந்த 4 ஆண்டுகளாக நாம் அவர்கள் இலக்கீட்டிற்கு மேலே எட்டி வந்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 82,000 பேருக்கு அதிலே வேலைவாய்ப்பை இந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. ஏறத்தாழ ரூ. 141 கோடி அதிலே முதலீடாக செய்யப்பட்டிருக்கிறது.

[திரு. சு. முத்துசாமி] [1987 எப்ரல் 27

அதேபோன்று மின் அணு தொழில். இதிலே அதிக கவனம் செலுத்தப்படாமல் இருந்தது. 1977-ல் 156 தொழிற்சாலைகள் மட்டுமே இருந்தன. இன்றைக்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு 600 ஆக அது உயர்ந்திருக்கிறது. உற்பத்தியைப் பார்த்தால் கூட, இன்றைக்கு அது பத்து மடங்காக உயர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களிலே அதிகமான அளவில் கவனம் செலுத்தவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு இது மிக உறுதுணையாக, மிகப் பெரிய கருவியாக அமைந் திருக்கிறது. அதிலே உற்பத்தியைப் பார்த்தால் 1977-லே நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறபோது ஏறத்தாழ ரூ. 11 கோடி இருந்தது, இன்றைக்கு ஏறத்தாழ ரூ. 83½ கோடியாக உற்பத்தி உயர்ந்திருக்கிறது. விற்பனையைப் பார்த்தால் ரூ. 13 கோடியாக இருந்தது, இன்றைக்கு ரூ. 105 கோடியாக உயர்ந்திருக் கிறது. வேலை வாய்ப்பைப் பார்த்தால். 21,000 என்று அன்றைக்கு இருந்த நிலைமாறி, ஒரு லட்சம் பேருக்கு மேலே இன்றைக்கு அது தாண்டி வந்துகொண்டிருக்கிறது.

அதுபோன்று தொழிலாளர் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு சாதாரண தொழிலாளர்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. பொருளாதாரத்தில் பின்தங்கி யிருக்கிற காரணத்தால் இந்த நாட்டில் அடிமைகள் என்று சொல் லப்படுகிறார்களே, அப்படிப்பட்டவர்களை மீட்டு, வெளியிலே கொண்டுவருவதற்கு, ஒரு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கு இது மிகப் பெரிய பயனுடையதாக இருக்கிறது. குத்தகைதாரர் களுடைய கையிலே மாட்டிக்கொண்டு சிரமப்பட்டுக்கொண்டிருக் கின்ற அந்த தொழிலாளிகளுக்கு மிகப் பெரிய பாதுகாப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலே இது அமைந்திருக்கிறது. இது இன்னும் பரவலாக அவர்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலே வரவேண்டும் என்பது இந்த அரசினுடைய ஆசை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று 42 திட்டங்களை எடுத்து நவீனமயமாக்குவது சம்பந்தமாக ஆய்வுசெய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே போன்று சிட்கோ சம்பந்தமாக ஏற்கெனவே இங்கே பேசியவர்கள்



1987 ஏபரல் 27] [திரு. சு. முத்துசாமி]

தெரிவித்தார்கள். வளர்ச்சி மையங்களை அமைத்தல், மற்றும் மாநில, மைய அரசினுடைய மானியத்தைப் பெற்றுத்தருதல் இப்படி பல்வேறு தொழிலைச் செய்வதற்கான வாய்ப்பு வசதிகளைப்பெற என்ன வழிவகைகள் என்பதை யெல்லாம் கூறுதல், மின் கட்டண மானியம் பெறுதல், ஏற்றுமதி இவைகள் எல்லாவற்றிற்கும் ஒரு முன்னோடியாக இருந்து அவர்கள் செய்வதற்கான ஏற்பாட்டை இன்றைக்கு சிட்கோ நிறுவனம் செய்து கொண்டிருக்கிறது. இதிலே இப்போது சம்பத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கை. அபராத வட்டி என்று ஏறத்தாழ 19½ சதவிகிதம் என்று இருந்ததை 13 சதவிகிதம் ஆக குறைத்து அதிலே இருப்பவர்களுக்கு இருந்த பளுவை இந்த நிறுவனம் குறைத்துக் கொடுத்திருக்கிறது. மானியத் தொகை பெறுவதற்கு மாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று பொது மக்களுக்கு இருக்கின்ற குறைகளைப் போக்குவதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சி இப்போது எடுக்கப்பட்டு இருக்கிறது. தவணை முறையிலே தொழிற் கூடம் என்று நீங்கள் பார்த்தால் ஏறத்தாழ 315 என்று இருந்ததை 1,176 ஆக இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. அதிலே வேலைவாய்ப்பை நீங்கள் பார்த்தால் 6,300 என்று இருந்ததை 23,520 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. மத்திய முதலீட்டு மானியம் வழங்குவது சம்பந்தமான கணக்கை நீங்கள் பார்த்தால் வேலைவாய்ப்பு 4,153 என்று இருந்ததை 49,370 என்று உயர்த்தியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு நிறுவனமும் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்திருக்கிறது. சில முன்னேற்றங்களை மிகச் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று தொழில் முதலீட்டு நிறுவனம். டி.ஐ.ஐ.சி. 1967-லே கடன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 1,912. இன்றைக்கு ஏறத்தாழ 33,773 நிறுவனங்களுக்கு நாம் கடன் கொடுத்துக் கொண்டிருக் கிறோம். எனவே எவ்வளவு தூரத்திற்கு அதிகமான இடத்திலே இது பரவலாக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கொடுத்த கடன் 1967-லிருந்து 1977 வரை ஏறத்தாழ 73 கோடி. ஆனால் 1977-லேயிருந்து 1987 வரை நாம் கொடுத்திருக்கின்ற கடன் ஏறத்தாழ 508 கோடி ரூபாயாகும். அதேபோன்று 1967-லிருந்து 1977 வரை பயன் பெற்றவர்

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

ஏறத்தாழ 65,600 பேர்கள். இன்றைக்கு ஏறத்தாழ
2½ இலட்சம் பேர்கள் அதிலே பயன் பெறுகின்ற நிலையை இந்த
அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. 1987-88-க்கு
110 கோடி கடன் வழங்குவதற்கு திட்டமிட்டு 25,000 பேர்கள்
அதிலே பயன் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறது.
இதிலே இன்னொரு விசேஷமான அமைப்பு என்னவென்று
சொன்னால் தொழில்நுட்ப படிப்பை படித்திருப்பார்கள்.
தொழிலை அவர்கள் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை
அவர்களுக்கும் இருக்கும். ஆனால் முதலீடு செய்கின்ற வாய்ப்பு
அவர்களுக்கு இருக்காது. எனவே அந்த வாய்ப்பு இல்லாதவர்கள்,
இதற்கு முன்னால் அவர்களுடைய குடும்பம் வேறு எந்தத்
தொழிலிலும் ஈடுபட்ட அனுபவம் இல்லாதவர்கள், இப்போது
தான் அந்தக் குடும்பத்திலிருந்து ஒருவர் படித்துவிட்டு வெளியே
வந்து தொழில்நுட்ப அறிவோடு இருக்கிறார். அப்படிப்பட்ட
நிலையில் இருப்பவர்களுக்கு குறைந்த வட்டி 1 சதவிகிதம்
வட்டியிலே கடன் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை
எடுத்துக்கொண்டிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டு 102 இலட்சம்
அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டு
194 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டு
220 இலட்சம் அப்படி கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை
யெல்லாம் இங்கே சொல்வதற்குக் காரணம் இது விளம்பரமாக
வரவேண்டும். மற்றவர்களுக்கும் இது தெரிய வேண்டும். அவர்கள்
இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதை
யெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். அதே
போன்று 5 ஆண்டு காலத்திற்கு மேலே இருக்கின்ற தொழிற்
சாலைகளை நவீனமயமாக்க வேண்டும், புதுப்பிக்க வேண்டும்
என்பதற்காக நாம் தனியாக கடன் கொடுத்துக்கொண்டிருக்
கிறோம். எனவே அப்படிப்பட்டவர்களும் குறைந்த வட்டியிலே
இப்போது கடனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். தொழிலை
ஆரம்பித்து நலிந்துவிட்ட தொழிற்சாலைகள் மீண்டும் புத்துயிர்
பெறவேண்டும் என்பதற்காக, மறுமலர்ச்சி பெறவேண்டும்
என்பதற்காக இந்த நிறுவனம் கடன் கொடுத்துக்கொண்டிருக்
கிறது. அதிலே கூட இங்கே கொடுத்திருக்கின்ற கணக்குப்படி
1985-86 ஆம் ஆண்டிலே 69 இலட்சம் ரூபாயைக் கடனாக
கொடுத்திருக்கிறார்கள். 1986-87-லே 125 இலட்சம் ரூபாய்



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி என்னிடத்
திலே இங்கே கணக்கு கொடுத்திருக்கிறார்கள். சிறிய மருத்துவ
மனை ஆரம்பிப்பதற்காக கூட இதிலே கடன் கொடுக்கப்படுகிறது.
இது சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணம்.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** 1984-85-இலே ஏறத்தாழ
196.54 இலட்சம் இலாபமாக அவர்கள் ஈட்டியிருக்கிறார்கள்.
1985-86-இலே 195.40 இலட்சம், 1986-87-இலே சுமாராக
200 இலட்சம் வரும் என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள்.
இங்கே இவற்றையெல்லாம் சில பேர் குறிப்பிட்டார்கள்.

டான்சிலைப் பொறுத்தவரை ஒரு சுணக்கமான நிலை அதிலே
இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால்
இந்த அரசு எடுத்த தீவிரமான நடவடிக்கையின் காரணமாகவும்,
அதிலே இருக்கின்ற அதிகாரிகள் இன்றைக்கு சிறப்பாக எடுத்துக்
கொண்டிருக்கிற நடவடிக்கையின் காரணமாகவும் அதிலே ஒரு
மறுமலர்ச்சியை நம்மால் ஏற்படுத்த முடிந்திருக்கிறது என்பதை
மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள்
எதிர்பார்க்கிறபடி, அடுத்த ஆண்டு அநேகமாக நஷ்டமே இல்லை
என்ற நிலையை உருவாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு
இருக்கிறது. உதாரணமாக, 1986-87 ஆம் ஆண்டு ஏறத்தாழ
150 இலட்சமாக அந்த நஷ்டம் குறைந்திருக்கிறது. ஏற்கெனவே
இருந்த நஷ்டம் ஏறத்தாழ 420 இலட்சமாக இருந்திருக்கிறது.
எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அது குறைக்கப்
பட்டிருக்கிறது. நிச்சயமாக அது நல்ல நிலைக்கு வரும் என்ற
நம்பிக்கையை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதைச்
சீரமைப்பதற்காகவும், நவீனப்படுத்துவதற்காகவும் எல்லா
முயற்சிகளையும் அந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

அதேபோன்று, தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம். அது தமிழக முதல்வர் அவர்களால் 1983 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 10 கோடி ரூபாய் மூலதனம் அதற்காகப் போடப்பட்டிருக்கிறது. அதிலே இங்கே பேசிய உறுப்பினர்கள் சொல்லியதைப்போல, சாதாரண அடிமட்டத்திலே இருக்கின்ற அந்த சமுதாயத்திலே பல காலமாக ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, அவர்கள் வாழ்க்கையிலே மறுமலர்ச்சியைப் பெறுவதற்கு அந்த நிறுவனம் நிச்சயமாக மிகப் பெரிய உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் இந்த அரசு அதைத் துவக்கி இருக்கிறது. அது மட்டுமல்ல. தோல் உற்பத்தியிலே இன்றைக்கு நம்முடைய மாநிலம் மிகச் சிறப்பான இடத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. எனவே அந்த அமைப்பு இதிலே இன்னும் மிகப்பெரிய வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தால் அது துவக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது அந்தத் துறையிலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக, வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

ஏற்கெனவே அந்தத் தோல் தொழிலைச் செய்து கொண்டிருந்த நம்முடைய நிறுவனங்கள் மிக அதிகமான நஷ்டத்திலே இயங்கக் கூடிய நிலை ஏற்பட்டது. ஆனால் இது ஒரு தனி நிறுவனமாக, தனி அமைப்பாக ஏற்படுத்தப்பட்ட பின்பு நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் அந்த நஷ்டம் போக்கப்பட்டு இலாபத்திற்குக் கூட கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அடுத்த ஆண்டு முழுவதுமாக இலாபத்திற்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையை, நம்முடைய அதிகாரிகள், நான் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, பட்டு வளர்ச்சித் துறையிலே மிகப் பெரிய வேலைவாய்ப்பை நம்மால் ஏற்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு மிக வேகமாக அதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறது. இங்கே சொன்னார்கள். புறம்போக்கு நிலங்களில், தனியார்களுக்கு நீங்கள் கொடுத்து அதைச் செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கம் இதிலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற கருத்தையும் அவர்கள் கேட்டார்கள்.



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

முசுக்கொட்டைச் செடி பயிரிடுகிற பரப்பளவைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், 1977-இலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறபோது, 11,460 ஏக்கர் நிலத்தில் மட்டும்தான், முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டது. இன்றைக்கு ஏறத்தாழ 74,952 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகிறது. 11,000 ஏக்கரிலிருந்து ஏறத்தாழ 75,000 ஏக்கராக உயர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோன்று முட்டை உற்பத்தியை நீங்கள் பார்த்தால் 15 இலட்சமாக இருந்தது, இன்றைக்கு ஏறத்தாழ 147 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. 15 இலட்சத்திலிருந்து 147 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

அதேபோன்று பட்டு உற்பத்தியை நீங்கள் எடுத்துப் பார்ப்பீர்களேயானால், 0.16 இலட்சம் கிலோவாக இருந்தது. இன்றைக்கு ஏறத்தாழ 3.10 இலட்சம் கிலோவாக உயர்ந்திருக்கிறது. வேலைவாய்ப்பைப் பார்த்தால், 57 ஆயிரம் ஆக இருந்தது, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு ஏறத்தாழ 4 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

நிதி ஒதுக்கீடுகூட, ஏறத்தாழ ரூபாய் 93 இலட்சம் என்று இருந்தது. இன்றைக்கு ரூ. 257½ இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட மிகப் பெரிய முயற்சியின் காரணமாக, இன்னும் விரிவாக அதிகமாகச் சொல்ல முடியவில்லையெனினும், இதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் தீவிரமாக எடுத்திருக்கிறது என்பதை நிச்சயமாக நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். தொழிற் பேட்டைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப்படவேண்டும் என்று நீங்கள் தெரிவித்தீர்கள். ஏற்கெனவே எங்கெங்கே தொழிற்பேட்டைகள் இல்லாத மாவட்டத் தலைநகரங்கள் இருக்கின்றனவோ, எந்த வட்டங்களில் தொழிற் பேட்டைகள் இல்லையோ அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதைச் செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

இன்னொன்று, தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கும்போது இந்த இடத்திற்கு ஒரு தொழிற்பேட்டை வேண்டும் என்பதைவிட அந்த இடத்தில் எந்தத் தொழில் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பார்த்து, அந்தத் தொழிலைச் செய்ய முன்வருகிறார்களா என்பதைப் பார்த்து ஆரம்பிக்க வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. அப்படி இல்லையென்றால் நாம் எடுக்கிற முயற்சிகள் தோல்வியடைந்துவிடுவதோடு, வாய்ப்பு வேண்டும் என்று அதிகமாகக் கேட்கிற இடத்தை விட்டுவிட்டு, வேண்டாம் என்று சொல்லுகிற இடத்தில் நாம் தொழிற் பேட்டையை ஆரம்பித்தால் அதனால் நிச்சயமாக இந்த நாட்டிற்கு இரண்டு வகைகளில் நட்டம் ஏற்படும் என்கிற காரணத்தால் அதை ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கே தொழிற்பேட்டை வேண்டுமென்று கேட்டாலும் அந்த இடத்தை ஆய்வு செய்து அங்கே அவசியம் இருக்குமானால் நிச்சயமாக அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் இப்போது புதிதாக ஒரு ஆய்வைச் செய்து கொண்டிருக்கிறோம். அதாவது ஒரு கருத்து எங்கள் பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதை ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கிறார்கள். என்றாலுங்கூட இன்னும் கொஞ்சம் விரிவாக எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன தொழிலை ஆரம்பிக்கலாம் என்றும் அப்படி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் என்னென்ன இருக்கின்றன என்பதைப்பற்றியும், அதற்குத் தேவையான கச்சாப் பொருள்கள் எங்கிருந்து, எப்படி கிடைக்கின்றன என்பதைக் குறித்தும், தயாரிக்கும் பொருள்களுக்கு விற்பனை—மார்க்கெட் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றியும் ஆய்வு செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்டம் என்று எடுத்துக் கொள்வதைவிட, அதையேகூட என்னும் எடுத்துக்கொள்வதைவிட, தொகுதி அளவில்கூட [illegible] செய்யலாமா என்பது எங்கள் எண்ணம் என்ற இருக்கிறது. ஒன்றிய அளவில் ஆய்வு செய்யலாமா என்று அரசு



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. காரணம் தொழிற்சாலை என்பது பரவலாக்கப்பட வேண்டும். அப்படிப் பரவலாக்கப் பட்டால்தான் எல்லா இடங்களுக்கும் நியாயம் கிடைக்கும் என்ற காரணத்தால் ஒன்றிய அளவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கலாமா என்று ஆலோசனை செய்யப்படுகிறது.

தொழிற்கூடங்களைக் கட்டுவது என்பதுபற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழிற் பேட்டைகளை அமைப்பது என்பது சாத்தியம் இல்லை என்ற காரணத்தால் நான் இந்த மாமன்றத்தின் உறுப்பினர் களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் தொகுதியில் இருக்கிற ஒவ்வொரு ஒன்றியத்திலும் அமைத்து விடுவீர்களானால், அதற்குத் தனியார் யார் முன்வந்தாலும் எப்படியாவது தனியார் மூலம் ஆரம்பிக்க முயற்சி எடுத்துக் கொள்வீர்களானால், நிச்சயமாக இந்த அரசு அதற்கு முழுமை யாக ஒத்துழைப்பு தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசே முன்னின்று அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கும் உங்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு தருவதற்கும் தயாராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஓராண்டுக்கு என்று நீங்கள் கணக்குப் போட்டால் ஐந்தாண்டு காலம் ஒருவர் சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கிற அவர் தொகுதியில் ஐந்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் வாய்ப்பு வரும்போது ஒருவர் தொழில் ஆரம்பித்து அதன்மூலம் முதலாளி ஆகிறார் என்பதைவிட ஒரு தொழிற்சாலை 10 பேருக்கு வேலை கொடுக்கிறது என்கிற வகையில் ஐந்து தொழிற்சாலையில் 50 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற நிலைமை ஏற்படும் என்கிற காரணத்தால், அந்த முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தனிப்பட்ட முறையில், தொழில் ஆரம்பிக்கும்போது ஒரு தொழிற்பேட்டையில் இருக்கிற வசதிகளைவிட அதிகமாக அவர்கள் செய்து கொள்ள முடியும். அந்த வகையில் அதற்கான

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 27

முழு ஒத்துழைப்பையும் கூட அரசாங்கம் கொடுக்க முன்வரும், அதற்கான ஏற்பாட்டைச் செய்யும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து ஜப்பானோடு சேர்ந்து ஒரு திட்டத்தை நாம் வகுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்—அதுவும் மைய மாநில அரசுகளால் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் 12 தொழில்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்றன. 12 இடங்களில் தொழிற்சாலைகளை —தொழிற்பேட்டைகளை—ஜப்பான் அரசோடு—அவர்கள் நிதி உதவியோடு, அவர்கள் தொழில் நுட்ப அறிவோடு—நாமும் சேர்ந்து செய்வதற்கான ஏற்பாட்டை நாம் இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முயற்சி அநேகமாக வெற்றிகரமாக முடியும் என்று நான் கருதுகிறேன். அந்தத் திட்டத்திற்கு மொத்தமாக ரூ. 108 கோடி செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அதில் மருந்து தயாரித்தல்—மருத்துவத் தொழிலுக்குத் தேவையான கருவிகள் தயாரித்தல்—தோல் பொருள்கள் தயாரித்தல், கல்விக்குத் தேவையான சாதனங்கள் தயாரித்தல், ஆடைகள் தயாரித்தல் இப்படிப் பல்வேறு தொழில்களை ஆரம்பிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. எனவே இவைகளை ஒவ்வொரு பகுதியிலும் ஆரம்பிக்கும்போது பல்பேருக்கு வேலை வாய்ப்பு உருவாவதோடு, தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படுகிற வாய்ப்பினையும் நாம் ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். எனவே இந்தத் துறையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மிகப் பெரிய மகத்தான சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இன்னும் தீவிரமான வளர்ச்சியை ஏற்படுத்த இம்மாமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு நிச்சயமாக இந்த அரசு செயல்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்துக் கொண்டு, அதற்குள் தொழிற் துறையில் ஒரு முன்னேற்றத்தை உருவாக்க வேண்டுமென்பதோடு பல



1987 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

பேருக்கு வேலைவாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகப் புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்க இருக்கிறது. பல கழகங்கள் நட்டத்தில் நடைபெறுவதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித் தார்கள். அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அவற்றை எப்படி இலாபத்தில் செயல்படச் செய்வது என்பதைப்பற்றியும் நிர்வாகத்தில் இருப்பவர்கள் நிச்சயமாக முயற்சிகளை எடுப் பார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று கருதினாலும் நேரமின்மை காரணமாகவும் நீங்களும் பல்வேறு விஷயங்களை நிறைய அறிந்திருக்கிற காரணத்தாலும் இதோடு என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங் களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கை கள் இரண்டையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 2-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.**

திருவாளர்கள் மு. இராசாங்கம், ஜே. ஹேமச்சந்திரன் ஆகிய வர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் எஸ். ரெத்தினராஜ், பி. கே. எம். முத்துராம லிங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,91,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.**

திருவாளர்கள் கே. சுப்பராயன், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,20,84,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (28—4—1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதி
களில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய
அறக்கட்டளைகள் துறையின் 8—12—1986 ஆம் நாளிட்ட 1243
ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ம்
ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.]

83. பூந்தமல்லி, ஊரக வேலைவாய்ப்புத் திட்ட சங்கத்தினரால்
தயாரிக்கப்படும் பொருட்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து
விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள்
துறையின் 18—12—1986 ஆம் நாளிட்ட 1297 ஆம் எண் அரசா
ணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு
தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

84. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (பத்
தாவது திருத்த) சட்டத்தின் வழிவகைகள் நடைமுறைக்கு வரும்
தேதியினை அறிவிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்
கட்டளைகள் துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1322 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம்
ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது].

85. தூத்துக்குடி அல்காலி இரசாயனம் மற்றும் உரத் தொழிற்
சாலைக்கு 'ஸ்பிக்' நிறுவனத்தாரால் விற்கப்படும் அம்மோனியா
வாயுவிற்கு விதிக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்
களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள்
துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1323 ஆம் எண் அரசா
ணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்
நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

186. 1982-83 ஆம் ஆண்டிற்கான தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

187. தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில்களும், சிறு தொழில்களும்), 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

188. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

189. 1986-87 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி இயக்குநரகம் பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ், ஆங்கிலம்).

190. 'தமிழகத்தில் தொழில் கூட்டுறவு வளர்ச்சி' என்கிற புத்தகம். (தமிழ்).

191. 'சிறு தொழில்களுக்கு சிட்கோவின் பெரும் உதவி' என்கிற புத்தகம் (ஆங்கிலம்).





## இணைப்பு

(72 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் கொள்கையும், திட்டங்களும்

சிறு தொழில்களையும், ஊரகத் தொழில்களையும் பெருமளவில் ஏற்படுத்தி மேம்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பை அதிக அளவில் உருவாக்குவதே, தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் தொழில் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். வேலை வாய்ப்பின்மையின் அளவையும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையையும் குறுகிய காலத்தில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் குறைப்பது என்பதே தொழில் திட்டங்கள், முதலீடுகள் ஆகியவற்றின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதில் அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. இன்றியமையாத அளவிற்குத் தேவையுள்ளவையும் தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ளவையுமான பகுதிகளில் குடிசைத் தொழில் கிராமத் தொழில் அல்லது சிறு தொழில் (குறுந்தொழில், வீட்டுத் தொழில் உட்பட) என்றழைக்கப்படும் ஊரகத் தொழில்களை ஏற்படுத்தி, மேம்படுத்தி, வளர்ச்சியடையச் செய்ய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய இருபது அம்சத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கினை அடைய முழு நம்பிக்கையுடன் சிறு தொழில்களை ஏற்படுத்தி வளர்ப்பதற்கு வங்கிகள் மூலம் நிதியுதவி அளிப்பதன் வாயிலாக நகர், கிராமப் பகுதிகளில் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்த அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது.

அந்தந்த ஊர்களில் கிடைக்கும் நிதி வாயில்கள், மூலப் பொருட்கள் மனித சக்தி, ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராமப் பகுதிகளைத் தொழில் மயமாக்குதல் என்னும் அரசின் கொள்கைகளும் திட்டங்களும் தொழில் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு முகவரமைப்புகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு ஊரக தொழில்களை ஏற்படுத்துவதையே முக்கிய பணியாக இந்த முகவரமைப்புகள் கொண்

டுள்ளன. இன்றியமையா அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயல்படாத தொழிற் பிரிவுகளை செயல்பட வைக்க உதவி அளிக்கப்படுகிறது. நிதியுதவி, நிருவாக உதவி, அங்காடி வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வளர்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில் துறைக்குத் தேவையான இடு பொருட்களை அளிக்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய அரசின் சிறு தொழில் பணி நிறுவனம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை போன்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன. இதனால் வேலை வாய்ப்பின்மை குறையும். மோட்டார் வாகன பகுதிகள், பம்புகள் மற்றும் மோட்டார்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறுதொழில்களுக்கு உதவும் வகையில், பம்புகள், மோட்டார்கள் உற்பத்தி மற்றும் வடிவ முறைகளை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஒன்றினை கோயம்புத்தூரிலும், மோட்டார் வாகன அபிவிருத்தி மையம் ஒன்றை சென்னையிலும், மற்றும் மத்திய கருவியியல் நிலையம் ஒன்றை கோயம்புத்தூரிலும் ஆக மூன்று திட்டங்கள் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. ஐக்கிய நாடுகளின் சர்வதேச வளர்ச்சி நிறுவனம் நிறுவக்கருதியிருக்கும் பிராந்திய இயந்திரக் கருவிகள் நிறுவனத்தை சென்னையில் கிண்டி தொழிற்பேட்டைக் கருகில் நிறுவ வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ளார்கள். ஜப்பான் நாட்டின் யென் கடன் ரூபாய் 60.00 கோடி ரூ. 48.00 கோடி நாணய மதிப்பீடு அடங்கிய மொத்தத் தொகையான ரூ. 108.00 கோடிக்கான திட்டம் குறித்த தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயற் குறிப்பை தமிழ்நாடு அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

இத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், பட்டுப்பூச்சி வளர்ப்பு இயக்ககம், தமிழ்நாடு கைத்திறப்பொருள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை அடங்கும். அரசின் மேற்கூறிய



பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. அத்திட்டங்களின் முக்கிய கூறுகள் வருமாறு :

1. **தொழில் வணிக இயக்ககம்.**—பெருரக மற்றும் நடுரகத் தொழில்களின் வளர்ச்சியையும் குறிப்பாக தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, அபிவிருத்தி செய்திடும் பொறுப்பு தொழில் வணிக இயக்ககத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில்களின் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கென ஒருசில மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும், தொழில் வணிக இயக்ககம் அவற்றுள்ள முக்கியமான ஒன்றாக விளங்கி வருகிறது. தொழில் வணிக இயக்ககமும் அரசு தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்த முறையில் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு நிலையங்களில் தேவைப்படும் உதவிகளை அளித்திடக்கூடிய வகையில் அவற்றின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தொழில் வணிக இயக்ககம், தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தொழில் துவங்குவதற்கு ஊக்குவிக்கிறது. சிறு தொழில்களுக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பதிவுச் சான்றிதழ்களை அளிக்கிறது. இப்பதிவுச் சான்றிதழ்களின் அடிப்படையில் தொழில் நிறுவனங்களும், இதர நிதி நிறுவனங்களும் தேவையான உதவிகளை வழங்குகின்றன. இந்த இயக்ககம், பெருரக மற்றும் நடுரகத் தொழில்களிடமிருந்து பெறப்படுகின்ற விண்ணப்பங்களை, இந்திய அரசின் உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கு பரிந்துரை செய்கிறது. சிறுதொழில்களைப் பொறுத்தவரை, இந்த இயக்ககம், பல்வேறு உதவிகளை அளிக்கிறது. பரிசோதனை வசதி, தரக்கட்டுப்பாட்டு உதவிகள் மற்றும் விற்பனை வசதிகளை வழங்குவதோடு சட்ட ரீதியான அனுமதிகள், தேவையான நிதி உதவி, கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள் பெறுதல் ஆகியவற்றிலும் உதவி அளிக்கிறது. பரிசோதனை மற்றும் பொருள் உருவாக்கும் உதவியளிப்பதோடு மின்னணுத் தொழில்களுக்கு உற்பத்தி திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், தொழிற்கூடங்கள் செப்பனிட்ட மனைகள் வழங்குதல் போன்ற சிறப்பு உதவிகளையும் வழங்குகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தொழில் நுட்ப, நிர்வாக மற்றும் நிதியுதவிகள் அளிக்கப்படுகின்றன.

**2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ).**—தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) தமிழக அரசினால் 1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்தங்கிய பகுதிகளின் தொழில் மேம்பாட்டுக்காக சிறுதொழில்கள் பரவலாக தொடங்குவதற்கான பணிகளை மேற்கொள்வது அதன் குறிக்கோளாகும். இந்நிறுவனம் தன் பணிகளை 1971 ஆம் ஆண்டு முதல் தொடங்கி தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்துள்ளது :—

(1) சிறு தொழில் நிறுவுவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் கொண்ட வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துதல், தொழிற்கூடங்களைக் கட்டுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட உள்ளமைப்புகளடங்கிய மனைகளை கொடுத்தல்.

(2) மத்திய மாநில மானியம் அளித்தல், நலிவுற்ற தொழில்களுக்கு முன்வரம்புத் தொகை உதவி வழங்குதல்.

(3) பற்றாக்குறையுள்ள மூலப் பொருளான இரும்பு, எஃகு, நிலக்கரி, தீப்பெட்டி, மெழுகு, ஃபாரபின் மெழுகு (Parafin wax) , பொட்டாசியம் குளோரைட், மிருகக் கொழுப்பு, ஃபேட்டி ஆசிட் ( Fatty Acid ) துத்தநாகம், ஈயம் மற்றும் மூலப் பொருள்களை விநியோகித்தல்.

(4) விற்பனை வசதி திட்டத்தின் கீழ் விலை முன்னுரிமை பெற்றுத் தருதல், அரசு கொள்முதல் செய்யும்போது முன்னுரிமை பெற்றுத் தருதல்.

(5) சிறு தொழில்கள் தங்கள் பொருட்களை ஏற்றுமதி, செய்ய வாய்ப்பை உண்டாக்குதல்.

(6) தொழில் முனைவர்களுக்கு வழிமுறைகள் கூறுதல்.

(7) மின் கட்டண மானியம் வழங்குதல்.

**3. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.**—தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் நிறுவனம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ் துவக்கப்பட்ட, முதல் மாநில நிதியுதவி நிறுவனமாகும். இந் நிறுவனம் தொழில் தொடங்குபவர்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிகபட்சம் ரூ. 60.00 இலட்சம் வரை



நிதியுதவி வழங்குகிறது. இது சிறிய சின்னஞ் சிறிய தொழில் நிறுவனங்கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு முதன்மை அளிக்கிறது. இந்நிறுவனத்தில் மொத்த நிதியுதவியில் 90 சத வீதத்திற்கும் மேல் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**4. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).**—தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில், தற்பொழுது 47 தொழிற் கூடங்களையும் மற்றும் 7 விற்பனை நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பல்வேறு வகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஓர் நிறுவனமாகும். இத் தொழிற்கூடங்கள் ஆரம்ப காலத்தில், தொழில் மற்றும் வணிகத் துறையினரால் வியாபார நோக்கமின்றி, பயிற்சி மற்றும் பராமரிப்பு, சேவை நிலையங்களாக தொடங்கப்பட்டு, பின்பு வர்த்தக ரீதியில் இத் தொழிற்சாலைகளை இயங்கச் செய்யும் நோக்குடன், 1965 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதி முதல் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. இந்நிறுவனத்தின் உற்பத்தித் தொழிற்கூடங்களை (1) கட்டுமானம், (2) கருவிகள் மற்றும் அதன் சார்பு பொருட்கள், (3) பொறியியல், (4) இரும்பு பொருட்கள் வடிவமைப்பு, (5) வார்ப்படம், (6) மரப் பொருட்கள், (7) பல்வகை மற்றும் சிறப்பு என வகைப்படுத்தலாம். டான்சி நிறுவனத்திலுள்ள பெரும்பாலான தொழிற்கூடங்கள், இரயில்வே, தபால் தந்தித்துறை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் போன்ற அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் நிலையான வாரியங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் பணிகளை நிறைவேற்றுவதுடன், தனியார் நிறுவனங்கள் வழங்கும் குறிப்பிட்ட பணி ஆணைகளையும் நிறைவேற்றுகின்றன. "யூனிசெப்" நிறுவனத்தின் தர நிர்ணயப்படி "இந்தியா மார்க் II" என்ற ஆழ்துளை நீரேற்றக் கைப்பம்புகளையும் மற்றும் அதன் உதிரி உறுப்புக்களையும் உற்பத்தி செய்து வழங்குவதினால் "கிராமப்புற நீர் வழங்கல்" திட்டத்தினை அரசு நிறைவேற்றுவதற்கு டான்சி நிறுவனம் பெரும் பணி புரிகிறது.

[1987 ஏப்ரல் 27

5. **தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ).**—1983-ல் 10 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் நிறுவப்பட்ட தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டில் தோல் தொழில் வளரவும் அதன் கைவினைஞர்கள் வளர்ச்சி அடையவும் திட்டங்களை தீட்டி வருகிறது. தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கும் விற்பனை வசதிகளை செய்து கொடுப்பதில் உதவி புரியும் ஒரு முகவரமைப்பாக இந் நிறுவனம் செயல்படுகிறது. இந்நிறுவனம் தோல் தொழில் அடிப்படை கைவினைஞர்களுக்கான திட்டம், பெண்களுக்கான பயிற்சி நிலையங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தோல் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் ஆகியவற்றை மிக அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு இருப்பதால் இவற்றுக்கான திட்டங்களை கூட்டுத்துறையில் நிறுவவும் திட்டம் தீட்டியுள்ளது. பொது நோக்கு சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு முன் வரும் தோல் பதனிடுவோர்களுக்கு இந்நிறுவனம் தேவையான உதவியை அளிக்கிறது.

**தொழில் வணிக இயக்ககம்.**

**இயக்ககத்தின் பணிகள்.**—பெருரக மற்றும் நடுரகத் தொழில்களின் வளர்ச்சியையும் குறிப்பாக தொழில்களின் வளர்ச்சினை ஊக்குவித்து, அபிவிருத்தி செய்திடும் பொறுப்பு தொழில் வணிக இயக்ககத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில்களின் வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கென ஒரு சில மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், தொழில் வணிக இயக்ககம் அவற்றுள் முக்கியமான ஒன்றாக விளங்கி வருகிறது. தொழில் வணிக இயக்ககமும் அரசு தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்த முறையில் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு நிலைகளில் தேவைப்படும் உதவிகளை அளித்திடக் கூடிய வகையில் அவற்றின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தொழில் வணிக இயக்ககம், தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தொழில் துவங்குவதற்கு ஊக்குவிக்கிறது; சிறு தொழில்களுக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பதிவுச் சான்றி



1987 ஏப்ரல் 27]

தழ்களை அளிக்கிறது. இப்பதிவுச் சான்றிதழ்களின் அடிப்படையில், தொழில் நிறுவனங்களும், இதர நிதி நிறுவனங்களும் தேவையான உதவிகளை வழங்குகின்றன.

இந்த இயக்ககம், பெருரக மற்றும் நடுரகத் தொழில்களிடமிருந்து பெறப்படுகின்ற விண்ணப்பங்களை, இந்திய அரசின் உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கு பரிந்துரை செய்கிறது. சிறு தொழில்களைப் பொறுத்தவரை, இந்த இயக்ககம், பல்வேறு உதவிகளை அளிக்கிறது. பரிசோதனை வசதி, தரக்கட்டுப்பாட்டு உதவிகள் மற்றும் விற்பனை வசதிகளை வழங்குவதோடு சட்டரீதியான அனுமதிகள், தேவையான நிதியுதவி, கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள் பெறுதல் ஆகியவற்றிலும் உதவி அளிக்கிறது. பரிசோதனை மற்றும் பொருள் உருவாக்கல் உதவியளிப்பதோடு மின்னணுத் தொழில்களுக்கு உற்பத்தி திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், தொழிற்கூடங்கள்/செப்பனிட்ட மனைகள் வழங்குதல் போன்ற சிறப்பு உதவிகளையும் வழங்குகிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தொழில் நுட்ப, நிர்வாக மற்றும் நிதியுதவிகள் அளிக்கப்படுகின்றன.

1. **சிறு தொழில்கள் பதிவு.**—தொழில் வணிக இயக்ககத்தால் வழங்கப்படும் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள், சிறு தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு ஒரு அளவுகோலாக விளங்குகிறது. அண்ணா, தர்மபுரி, காமராசர், கன்னியாகுமரி, மதுரை, வட ஆற்காடு, பசும்பொன்முத்துராமலிங்கம், புதுக்கோட்டை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 1978 மார்ச் இறுதியில் 39-2 சதவீதமாக இருந்த சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் 1985 டிசம்பர் மற்றும் 1986

நவம்பரில் முறையே 41 சதவீதம் மற்றும் 42.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது பின்தங்கிய பகுதிகளுக்கும் முன்னேற்றம் பரவியுள்ளதை தெளிவு படுத்துகிறது. மின்னணுவியல் இயந்திர கருவிகள் மற்றும் இரசாயனத் தொழில்களில் கண்டுள்ள முன்னேற்றம், நுட்பமான தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டுகிறது.

1. (அ) **இலக்குகள் மற்றும் சாதனைகள்.**—1986—87-ல் 10,000 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கல் வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1987 பிப்ரவரி திங்கள் வரையில் 9,648 பதிவுச் சான்றிதழ் வழங்கி சாதனை செய்யப்பட்டது. அதே போல் 1986—87-ல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 6,000 புதிய தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1987 பிப்ரவரித் திங்களுக்குள் 8,400 புதிய தொழில்கள் அமைத்து சாதனை செய்யப்பட்டுள்ளது.

2. **மாவட்ட தொழில் மையங்கள்.**—மாநிலத்தில், தொழில் வளர்ச்சியினை விரைவு படுத்துதல், அதன் பயன் பின்தங்கிய பகுதிகளுக்கும் பரவச் செய்தல் போன்றவற்றில் மாவட்டத் தொழில் மையங்கள் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்த ஓராண்டு காலத்தில், நான்கு புதிய மாவட்ட தொழில் மையங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. இவைகளுடன் சேர்த்து தற்போது மொத்தம் 18 மாவட்ட தொழில் மையங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட சிதம்பரனார் மாவட்டத்தில், மாவட்ட தொழில் மையம் ஏற்படுத்தப்பட உள்ளது. குறிப்பிட்ட ஒரு சில நடவடிக்கைகளில் மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றத்தினைக் காட்டும் அட்டவணை, இணைப்பு I-ல் தரப்பட்டுள்ளது.

3. **ஊரகத் தொழில் திட்டம் மற்றும் கிராமக் கைவினைஞர் திட்டம்.**—ஊரகத் தொழில் திட்டத்தின் கீழ் 1986—87-க்குரிய மொத்த ஒதுக்கீடான ரூ. 72 இலட்சத்தில், 1987 சனவரி இறுதி வரை சிறுதொழில்களுக்கு ரூ. 36.58 இலட்சம் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 1987 மார்ச்சுத் திங்களுக்குள் ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்படும். கிராமக் கைவினைஞர் திட்டத்தின் கீழ் 1986—87-ல் ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டது.



4. **படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்.**—கடந்த மூன்றாண்டுகளில், இத்திட்டத்தில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | இலக்கு. | மாவட்ட தொழில் மையங்களின் பரிந்துரை எண்ணிக்கை. | வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்டவை எண்ணிக்கை. | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1983–84 .. | 17,500 | 33,290 | 22,162 | 3,240 |
| 1984–85 .. | 21,700 | 28,790 | 22,500 | 4,181 |
| 1985–86 .. | 18,100 | 23,038 | 18,722 | 3,269 |
| 1986–87 .. (20–3–1987 வரை) | 18,100 | 25,776 | 12,025 | 2,100.93 |

எஞ்சியுள்ள இனங்களுக்கும் ஒப்புதல் வழங்கி 1987 மார்ச் திங்களுக்குள் இலக்கை எட்டும். ஏழாவது திட்ட காலத்தில் கீழ்க்காணும் சில மாற்றங்களுடன் இந்த நிதியாண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயலில் இருக்கும் :—

1. தொழில் பயிற்சி நிலையங்களில் தேர்வு பெற்ற 18 முதல் 35 வயதிற்குட்பட்ட நபர்கள், தொழில் மற்றும் பணிநிலையங்களை அமைப்பதற்கு இத்திட்டத்தின் கீழ் உதவி பெறலாம்.

2. ஒப்பளிப்புகளில் குறைந்த அளவு 30 சதவீதமானது ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு அளிக்கப்படும்.

3. 1986—87 லிருந்து தொழில்களைத் துவங்குவதற்குரிய கடன் தொகை ரூ. 25,000-லிருந்து ரூ. 35,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பணி நிலையங்களுக்குரிய கடன் தொகை ரூ. 25,000 ஆக தொடர்ந்து இருக்கும். வாணிப முயற்சிகளுக்குரிய உதவி ரூ. 15,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மானிய தொகை தொடர்ந்து 25 சதவீதமாக இருக்கும்.

[1987 ஏப்ரல் 27

4. இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்புபவரின் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 10,000-க்கு மேற்படலாகாது. இதற்கென கடன் பெற விரும்புபவர்கள் உறுதி மொழிப் பத்திரம் தர வேண்டும்.

**5. ஒரே கூரையின் கீழ் பிரச்சினைக்கு தீர்வு:**—ஒரே கூரையின் கீழ் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான குழுக்கள் 1—4—1986 முதல் 31—1—1987 வரை, 151 முறை கூடி 1831 பிரச்சனைகளில் 1417-க்கு தீர்வு கண்டுள்ளன.

இத்துறையின் இதர சில பிரிவுகளின் முன்னேற்றம் பின் வருமாறு:—

6. இரசாயனப் பிரிவு:—இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகள்—

1. இப்பிரிவுடன் இணைந்துள்ள ஆய்வுக் கூடங்களில் பரிசோதனை வசதிகள் அளிப்பது;

2. இரசாயனப் பொறியியல் பிரிவில், இரசாயனத் தொழில்கள் சம்பந்தப்பட்ட சோதனைக் கூட ஆய்வு வசதிகளை வழங்குவது;

3. இரசாயனத் தகவல் வங்கியில், இரசாயனம் மற்றும் அதன் சார்புடைய தொழில்கள் பற்றிய திட்டத் தொகுப்புகள் மற்றும் தொழில் நுட்ப தகவல்கள் தருவது;

4. இரசாயன சிறுதொழில் நிலையங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டவை உட்பட கிடைப்பதற்குரிய மூலப் பொருள்களைப் பெறுவதில் உதவியளிப்பது;

5. வேண்டுகோளின் பேரில், தகுதிபெற்ற நபர்களுக்கு, பரிசோதனை செய்வதில் செய்முறைப் பயிற்சி அளிப்பது.

இப்பரிசோதனை கூடங்கள் அளிக்கும் வசதிகளை பெற்று பயனடைந்த தொழில்கள் பற்றிய எண்ணிக்கை பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. பதிவு பெற்ற சிறுதொழில்களுக்கு 50 சதவீதம் பரிசோதனை கட்டணச் சலுகை வழங்கப்



1987 ஏப்ரல் 27]

படுகிறது. முத்திரை சான்றிதழ் திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற சிறு தொழில்களுக்கு 33 1/3 சதவீதம் கட்டணச் சலுகை இந்திய தரக்கட்டுப்பாடு நிலையம் வழங்குகிறது.

இரசாயன பிரிவிலுள்ள சோதனை கூடங்கள் அளித்த பரிசோதனை வசதிகள்:

| ஆண்டு. | மாதிரிகளின் எண்ணிக்கை. | வசூலிக்கப் பட்ட பரி சோதனை கட்டணம். | பயனடைந்த தொழில் களின் எண் ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1984—85 .. | 10,820 | 5.79 | 4,401 |
| 1985—86 .. | 10,239 | 7.41 | 4,761 |
| 1986—87 .. (1987 பிப்ரவரி வரை) | 10,681 | 7.21 | 4,365 |

ஃபாம்பேட்டி அமிலம், தீக்குச்சி மெழுகு, பாரபின் மெழுகு போன்ற மூலப் பொருள்களை சிறு தொழில் அலகுகள் பெறுவதற்கு இந்த இரசாயன பிரிவு உதவி செய்கிறது. 1985—86 மற்றும் 1986—87 (1986 நவம்பர் வரை) வழங்கப்பட்ட மூலப் பொருள்கள் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1985—86. | 1986—87 (நவம்பர் வரை). |
|---|---|---|
| | மெட்ரிக் டன். | மெட்ரிக் டன். |
| பாரபின் மெழுகு .. .. | 5,060 | 4,120 |
| தீக்குச்சி மெழுகு .. .. | 2,280 | 1,980 |
| ஃபாம்பேட்டி அமிலம் .. .. | 1,[illegible] | 165.945 |

**7. நலிந்துள்ள சிறுதொழில் நிலையங்களுக்கு முன் வரம்புத் தொகை உதவி.**—நலிந்துள்ள தொழில் நிலையங்கள், வங்கிகளில் அவர்களது பங்காக கோரப்படும் முன்பணத் தொகையைப் பெற்று மீட்பு உதவித் திட்டத்தின் கீழ், கூடுதல் நிதியுதவி பெறும் பொருட்டு, 1979-ல் அரசு முன்வரம்புத் தொகை உதவித் திட்டத்தை வகுத்தது. இத் தொகை, நான்காண்டு இடைவெளிக் குப் பிறகு, 9 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கடன் தொகைக்கு வட்டி இல்லை. 1983 வரை, இத்தகைய உதவி பெறத் தக்க தொழில்களை நலிந்த தொழில் மறு வாழ்வுக்

[1987 ஏப்ரல் 27

குழு தேர்வு செய்தது. 1984 லிருந்து, இப்பணி, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிறு தொழில் பணி நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், மற்றும் முதன்மை வங்கி ஆகியவைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவிற்கு, தொழில் துறை ஆணையர் மற்றும் செயலர் தலைவராவார். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் குழுவின் அமைப்பாளராவார். மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட உதவியை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் வழங்குகிறது. இத்திட்டம் தொடங்கியது முதல் 1986 நவம்பர் திங்கள் வரை, 51 சிறுதொழில்களுக்கு ரூபாய் 104.97 இலட்சம் முன்வரம்பு உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

8. **மூலப் பொருள் உதவி.**—கிடைப்பதற்கரிய மூலப் பொருள்களைப் பெறுவதில், சுமார் 5,500 சிறு தொழில்களுக்கு உதவியளிக்கப்பட்டது. போலியான தொழில் நிலையங்களைக் களைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இயந்திர சாதனங்கள் மற்றும் மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி உதவி பிரிவு 1986—87-ல் (31—12—1986 வரை) 190 சிறுதொழில்களுக்கு ரூ. 12.02 கோடி அளவிற்கு இன்றியமையாத் தேவைச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. கீழே தாப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து கடந்த சில ஆண்டுகளில் இவ்வகையில் அளிக்கப்பட்ட உதவி பற்றிய விவரங்களைக் காணலாம்.

| ஆண்டு. | வழங்கப்பட்ட இன்றியமையாத் தேவைச்சான்றிதழ்களின் மொத்த எண்ணிக்கை. | மதிப்பு. | வழங்கப்பட்ட இறக்குமதி உரிமங்களின் மதிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983—84 .. | 269 | 1,025 | 1,346 |
| 1984—85 .. | 298 | 1,227 | 1,661 |
| 1985—86 .. | 329 | 1,373 | 1,510 |
| 1986—87 .. (31—12—1986 வரை) | 190 | 1,202 | 422 |



1987 ஏப்ரல் 27]

நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சிறு தொழில் பணி நிறுவனத்தின் 42 முன்னோடித் திட்ட ஆய்வறிக்கைகள் தொடர் நடவடிக்கைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

9. **தொழில் கூட்டுறவு.**—கிராமப் பகுதிகளில் வறுமை, வேலையின்மை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசுக்கு உதவுவதில் மாநில அரசின் தொழிற் கூட்டுறவுத் துறை ஓர் முக்கிய கருவியாக உருவெடுத்துள்ளது. இத் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தொழில்கள் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு வழி கோலிடும் வகையில் அமைந்துள்ளன. 1977—78-ல் தமிழகத்திலிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 297 ஆக இருந்தது. அரசு அளித்து வரும் பல்வேறு உதவிகளின் விளைவாக, இச்சங்கங்களின் எண்ணிக்கை 1986 டிசம்பர் இறுதியில் 590 ஆக உயர்ந்துள்ளது 1977—78-ல் இச் சங்கங்களின் விற்பனை ரூ. 17.86 கோடியாக இருந்தது. இது 1986 டிசம்பரில் ரூ. 74 கோடியாக உயர்ந்துள்ளது. இப்பிரிவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாகும். ஒரு சில தொழில்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வரும் பத்திகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

(அ) **தேயிலை தொழில் கூட்டுறவு சங்கங்கள்.**—நீலகிரி மாவட்டத்தில் 15 தேயிலை தொழில் கூட்டுறவு தொழிற்சாலைகள் உள்ளன. இவைகளில் 13 தொழிற்சாலைகள் ஏற்கெனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. மற்ற இரண்டு தொழிற்சாலைகள் சமீபத்தில் தான் துவங்கப்பட்டவை. இந்த தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில், 18,997 ஏக்கர் தேயிலை தோட்டத்தின் உடமையாளர்களும், சிறிய அளவில் தேயிலை வளர்ப்போருமான 8,773 பேர் உறுப்பினராக உள்ளனர். இத்தொழிற்சாலைகள் 58,083 பேருக்கு மேல் மறைமுகமாகவும் மற்றும் நேர்முகமாகவும் வேலை வாய்ப்பு அளிக்கின்றன. தமிழ்நாட்டில் தேயிலை உற்பத்தியில் இத்தொழிற்சாலைகள் 10 சதவீதம் உற்பத்தி செய்கின்றன. 'இன்கோசர்வ்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் நீலகிரி சிறிய அளவில் தேயிலை வளர்ப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் அனைத்து தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும் மத்திய சங்கமாக செயல்படுகிறது.

தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தேயிலைகளை சேமித்து வைக்கும் வசதிக்காக கூனூரில் ஒன்றும், கொச்சியில் ஒன்றுமாக இரண்டு சேமிப்பு கிடங்குகளை இச்சங்கம் கட்டியுள்ளது. வறுக்கப்பட்ட தேயிலைகள் மற்றும் தேயிலை தூகள் 100, 250 மற்றும் 500 கிராம் எடையுள்ள பொட்டலங்களை சிறிய அளவில் விற்பனை செய்யும் பணியினையும், இச்சங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. 'இன்ட்கோ' தேயிலையின் விற்பனையை அபிவிருத்தி செய்ய, சிறப்பங்காடிகள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், அவைகளின் தேயிலை தேவைகளை 'இன்கோசர் விடம்' கொள் முதல்செய்யவேண்டும் என்று கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

(ஆ) மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் பணி தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.—இம்மாதிரி சங்கங்கள் அமைப்பதற்கு முன் ஜவ்வரிசி தொழில் இடைத் தரகர்கள் மற்றும் ஒரு சில வியாபாரிகள் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது. ஜவ்வரிசி அலகுகள் தங்கள் உற்பத்தி பொருள்களை விற்பதற்கு இவர் களையே நம்பியிருக்க வேண்டியிருந்தன. இடைத்தரகர்களை விலக்குவதற்கும், அவர்களுடைய பிடியிலிருந்து ஜவ்வரிசி அலகு களை காப்பாற்றுவதற்காகவும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் களின் நன்மைக்காகவும் பணி தொழில் கூட்டுறவு சங்கம் அமைப்பது அவசியம் என்று அரசு உணர்ந்தது. சேலம் மாவட்டம் மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் பணி தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட், தொழில் எண். 1421, 21—7—81-ல் பதிவு செய்யப்பட்டு 19—10—81 முதல் செயல்பட துவங்கி 27—1—82 முதல் விற்பனையை ஆரம்பித்துள்ளது. இச் சங்கம் ரூ. 41.43 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்து 28—2—87 வரையிலும் 18.03 இலட்ச ரூபாய் இலாபம் அடைந்துள்ளது. 31—10—86 படி, 7.89 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனத்துடன் 623 உறுப்பினர்கள் இச்சங்கத்தில் உள்ளனர். சேலம் வருவாய் மாவட்டத்திற்குள் இச்சங்கத்தின் நடவடிக்கை கள் குறுக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.



(இ) தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கங்கள்.—தமிழ்நாட்டில் பாதுகாப்பு செய்யப்பட்ட தீக்குச்சி கள் உற்பத்தி செய்வதில் கூட்டுறவு சங்கத்தின் கீழ்வரும் தீப் பெட்டி குடிசை தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வறுமைக்கோட்டிற்கு கீழ்வரும் கிராமப்பகுதியில் வாழும் பெண் களின் நன்மைக்காக கூட்டுறவு முறையில் சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தீப்பெட்டி தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கங்கள் துவங்கப் பட்டன. தீப்பெட்டி தொழிலாளர் சங்கங்கள் அருகிலுள்ள தீப்பெட்டி பணி சங்கங்களிடம் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்கின்றன. தீப்பெட்டி தொழிலாளர்களுக்கு தொடர்ந்து மற்றும் இலாபகரமான வேலை கொடுப்பதற்காக இச்சங்கங்கள் துவங்கப்பட்டன. தீப்பெட்டி தொழில் அலகுகளுக்கு மூலப் பொருள்கள் விநியோகிப்பது, அவர்களுக்கு சாதகமான விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்வது, தீப்பெட்டி தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பணி சங்கங்களும் உற்பத்தி செய்த தீப்பெட்டிகளை விற்பனை செய்யும் பொறுப்பு ஆகிய பணிகளை தீப்பெட்டி பணி சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிவரையிலும், 78 சிறிய தீப்பெட்டி உற்பத்தி யாளர் பணி சங்கங்கள், 5.73 கோடி ரூபாய் மதிப்புள்ள தீப்பெட்டி களை விற்பனை செய்துள்ளன.

(ஈ) கயிறு தொழில்.—31—3—86-ல் தொழிற் கூட்டுறவுத் துறையின் கீழ், 62 தென்னை நார்த் தொழில் நிலையங்கள் இருந்தன. இவற்றில் 13 நார் பிரித்தெடுக்கும் நிலையங்களாகும். இந்த 13 நிலையங்களும் அவற்றில் நிறுவப்பட்டுள்ள முழு உற்பத்தித் திறன் அளவிற்குச் செயல்படும்போது ஆண்டிற்கு சுமார் 15,600 மெட்ரிக் டன் தென்னை நார் உற்பத்திச் செய்ய இயலும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 300 நபர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவர். 1986—87-ல் மேலும் நான்கு சங்கங்கள் அமைக்கப்பட்டன; இவற்றையும் சேர்த்து தற்பொழுது 66 கயிறுச் சங்கங்கள் உள்ளன.

[1987 ஏப்ரல் 27

தஞ்சாவூரில், கயிறு வாரியத்தின் மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு நிலத்தை தந்து உதவியுள்ளது. கயிறு வாரியம், ரூ. 50.90 இலட்சம் செலவில் பயிற்சி நிலையத்திற்குரிய கட்டிடத்தை கட்டியுள்ளது.

கிராமக் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு கயிறு வாரியம், தஞ்சாவூரிலுள்ள மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் இரண்டு துணை மையங்களை கோயம்புத்தூரில் ஒன்றையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றையும் துவக்கியுள்ளது. சேலத்தில் இன்னுமொரு துணை நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூரிலுள்ள மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் ஆராய்ச்சி மையப் பிரிவு அமைப்பதற்கும், மாணவர்கள் விடுதி கட்டுவதற்கும் ரூ. 4.15 இலட்சத்தை அரசு ஒப்புதலளித்துள்ளது.

(உ) **கூட்டுறவு மயமாக்கும் திட்டம்.**—மத்திய அரசு 7-வது ஐந்தாண்டு திட்டத்தில் கயிறு தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு கயிறு வாரியத்தின் மூலம் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது. இந்த நிதி உதவியில் கடன் மற்றும் மான்யமும் அடங்கும். அதனை மைய அரசும் மாநில அரசும் 50:50 என்ற கணக்கில் பங்கீடு செய்துகொள்ளும். மைய அரசின் இந்த கூட்டுறவு மயமாக்கும் திட்டத்தின் கீழ் கயிறு வாரியத்தின் மூலம் கீழ்க்கண்ட வழிகளில் உதவி வழங்கப்படுகிறது :—

1. பங்குத் தொகை உதவி.
2. நிர்வாக மானியம்.
3. இயந்திர உதவி.
4. விற்பனை உதவி.

(ஊ) **பாலித்தீன்.**—மாநிலத்தில் 16 பாலித்தீன் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் மூலமாக சுமார் 730 பேருக்கு வேலையளிக்கப்பட்டு வருகிறது. இவர்களில் பெரும்பாலோர், சமுதாயத்தில் நலிந்துள்ள பிரிவினரைச் சார்ந்தவர்களாவார்கள். இந்த ஆண்டில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் தென்னாற்காடு மாவட்டத்தில் மற்றுமொரு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.





**பாலித்தீன் கோணிப்பை தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.**—செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்தில் ஒன்றும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் ஆத்தங்குடியில் ஒன்றுமாக, இரண்டு பாலித்தீன் கோணிப்பை தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மதுராந்தகத்திலுள்ள சங்கம், ஏப்ரல் 1985-ல் உற்பத்தியைத் துவங்கியது.

பாலித்தீன் சங்கங்களுக்கு மூலப்பொருள்கள் பெறுவது, தேவைக்கேற்ப உற்பத்திப் பொருளை மாற்றியமைப்பது, விற்பனை வசதி மற்றும் நிர்வாக உதவி ஆகியவற்றை அளிக்கும் பொருட்டு, மாநில அளவிலான பணிச் சங்கத்தை சென்னையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெளியேற்றப்படும் பாலித்தீன் கழிவுப் பொருள்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு மறு பக்குவப்படுத்தும் சங்கம் ஒன்று சென்னையில் அமைக்கப்படும். இச் சங்கம் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

1987—88-ல் மாநில அரசின் பங்கு உதவியாக ரூ. 2.00 இலட்சத்தைத் திருப்பூரில் அக்ரிலிக் துணி வகைக்கான சாயம் ஏற்றும் நிலையம் (Dye house) ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ) **நிலக்கரி பணிச் சங்கங்கள்.**—சென்னையில் ஒரு முதன்மைச் சங்கம் உள்ளிட்ட, ஒன்பது நிலக்கரி, பழுப்பு நிலக்கரி மற்றும் சிமிட்டி பணிச் சங்கங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவை, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் சுரங்கங்களிலிருந்து, நிலக்கரியைத் தருவித்து, அவற்றின் உறுப்பினர்களுக்கும், நிலக்கரி ஒதுக்கீடு அட்டை பெற்றிருப்பவர்களுக்கும் பகிர்ந்தளிக்கின்றன.

ஏற்கனவே உள்ள சேர நாடு சிறுதொழில்கள் பணிக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சேலம் மற்றும் வேலூரில் நிலக்கரி சேமிப்பிடங்கள் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்தது. ஒவ்வொரு சங்கத்திற்கும் பங்கு மூலதனமாக ரூ. 4.00 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது.

மதுரவாயிலில், செங்கற்பட்டு மாவட்ட செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிப்பாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிலக்கரி சேமிப்பிடம் அமைக்கும் திட்டத்தை 1986—87 ஆம் ஆண்டு பகுதி II திட்டமாக ஏற்றுக் கொண்டு ரூ. 4.00 இலட்சத்தை அரசு பங்குத் தொகையாக ஒப்புதலளித்துள்ளது. இத்தொகையும் சங்கத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டச் சிறுதொழில்கள் பணிக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், கடலூரில் நிலக்கரி சேமிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கும், ரூ. 4.00 இலட்சம் பங்குத் தொகையாக வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஏ) **கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.**— ஆவடியில் தமிழ்நாடு காவலர் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொழில் எண் 1693, 4—12—1985-ல் பதிவு செய்யப்பட்டு, 7—12—1985-ல் துவக்கப்பட்டது. இது ஆவடியில் 30 பகுதிகளில் தங்கியுள்ள காவல் பணியாளர் குடும்பங்களுக்கு வேலையளிப்பதற்காக அமைக்கப்பட்டது. இச்சங்கத்தில், ரூ. 97,500 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் 50 உறுப்பினர்கள் உள்ளனர். இது, இந்தியாவில், கூட்டுறவுத் துறையில் மின்னணுப் பொருட்கள் தயாரிக்கும் புதுமையான சங்கமாகும்.

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ):**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) தமிழக அரசினால் 1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்தங்கிய பகுதிகளில் தொழில் மேம்பாட்டுக்காக சிறுதொழில்கள் பரவலாக தொடங்குவதற்கான பணிகளை மேற்கொள்வது அதன் குறிக்கோளாகும்.





1. தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்காக திட்டமிட்டு ஒருங்கிணைந்து செயல்படுவது இந்நிறுவனத்தின் முக்கிய பணியாகும். அதன் முன்னேற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு :—

(1) சிறுதொழில் நிறுவுவதற்குத் தேவையான, அடிப்படை வசதிகள் கொண்ட வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துதல், தொழிற்கூடங்களைக் கட்டுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட உள்ளமைப்புகளடங்கிய மனைகளைக் கொடுத்தல்.

(2) மத்திய, மாநில மானியம் அளித்தல், நலிவுற்றத் தொழில்களுக்கு முன் வரம்புத் தொகை உதவி வழங்குதல்.

(3) பற்றாக்குறையுள்ள மூலப்பொருளான இரும்பு, எஃகு, நிலக்கரி, தீப்பெட்டி, மெழுகு, ஃபாரபின் மெழுகு (Paraffin wax) பொட்டாசியம் குளோரேட், மிருகக் கொழுப்பு, பாம் ஃபேட்டி ஆசிட் (Palm Fatty Acid) துத்தநாகம், ஈயம் மற்றும் மூலப்பொருள்களை விநியோகித்தல்.

(4) விற்பனை வசதித் திட்டத்தின் கீழ் விலை முன்னுரிமை பெற்றுத்தருதல், அரசு கொள்முதல் செய்யும்போது முன்னுரிமை பெற்றுத்தருதல்.

(5) சிறுதொழில்கள் தங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்பை உண்டாக்குதல்.

(6) தொழில் முனைவர்களுக்கு வழிமுறைகள் கூறுதல்.

(7) மின்கட்டண மானியம் வழங்குதல்.

**1. (1) தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்தல் :**

இதுவரை 2,149 தொழிற்கூடங்களை, 49 தொழிற்பேட்டைகளில் கட்டி, ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சமீபகாலத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில், ஆலந்தூரில் மருந்துகள் தயாரிப்பதற்கென்றே தனியாக நிறுவப்பட்ட தொழிற்பேட்டையும் அடங்கும்.

தொழில் முனைவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, நடப்பு ஆண்டு 1986—87-ல் வெவ்வேறு இடங்களில் 251 தொழிற்கூடங்களைக் கட்டி வருகிறது. அதில் 201 தொழிற்கூடங்கள் முடிவுறும் நிலையிலும், மற்றவைகளின் கட்டுமானப் பணி வெவ்வேறு நிலைகளிலும் இருக்கின்றன.

பல தொழிற்கூடங்களின் தேவை அதிகரித்து வருவதை அடிப்படையாகக் கொண்டு 1987—88 ஆம் ஆண்டு மேலும் பல தொழிற்கூடங்கள் கட்ட இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

மேலும், இந்நிறுவனம், கிராமப்புறங்களில், சுயவேலைத் தொடங்க விரும்பும் கைவினைஞர்கள் மற்றும் சுய வேலை வாய்ப்பை நாடுவோருக்காக, 105 இடங்களில், 1,844 சிறு தொழிற்கூடங்களைக்கட்டி, ஒதுக்கீடு செய்துள்ளது.

**1. (2) நிதிச் சலுகைகள் :**

(அ) **மத்திய முதலீட்டு மானியத் திட்டம்.**—மத்திய முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ், இந்நிறுவனம், 1986—87 ஆம் ஆண்டில் நிறைய மனுக்களை பரிசீலித்து, பிப்ரவரி 1987 முடிய ரூ. 175 இலட்சம் வழங்கியுள்ளது.

(ஆ) **மாநில முதலீட்டு மானியத் திட்டம்.**—வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 60 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகை இரண்டு தவணையில் வழங்கப்பட்டது.

**(இ) நலிவுற்ற தொழில்களுக்கு முன்வரம்புத் தொகை உதவி வழங்கி, மறுவாழ்வு அளித்தல்.**

நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கு மறுவாழ்வு அளித்தல், சிட்கோ நிறுவனத்தின் முதன்மை பணிகளில் ஒன்றாகும். இத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரி 1987 முடிய ரூ. 33.78 இலட்சம் விநியோகித்துள்ளது. நலிவுற்ற பிரிவுகளை அடையாளம் கண்டு, புத்துயிர் அளிக்க ஓர் தனியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சுமார் 200 பிரிவுகள் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

(ஈ) **குறைந்த அழுத்த மின்கட்டண மானியம்.**—சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அரசு, மின்மானிய திட்டத்தை 1980 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இத் திட்டம் சிட்கோ நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. 1986—87-ல் ரூ. 14.75 இலட்சம் மின்மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



**1. (3) மூலப்பொருள் விநியோகம் :**

1986—87-ல் (1987 பிப்ரவரி வரை) இந்நிறுவனம் 41,011 மெட்ரிக் டன் அளவிலான மூலப்பொருள்களை விநியோகித்துள்ளது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், மூலப்பொருளின் பெயரும். (1) | | அளவு (2) (மெட்ரிக் டன்னில்). | மதிப்பு ரூபாய் (3) (இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1 | இரும்பு எஃகு .. .. | 17,466 | 1,397.28 |
| 2 | தீப்பெட்டி மெழுகு .. .. | 2,537 | 276.02 |
| 3 | ஃபாரபின் மெழுகு .. .. | 4,813 | 523.64 |
| 4 | கோக் .. .. | 12,698 | 280.88 |
| 5 | பொட்டாசியம் குளோரேட் .. | 376 | 53,29 |
| 6 | ஃபேட்டி ஆசிட் .. .. | 826 | 88.38 |
| 7 | துத்தநாகம் .. .. | 1,951 | 604.81 |
| 8 | ஈயம் .. .. | 344 | 55.51 |
| | | 41,011 | 3,279.81 |

இந்நிறுவனம் மேலும் வெவ்வேறு மூலப்பொருள்களை தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்து, விநியோகிக்க மேலும் பல கிடங்குகளையும், உட்கிடங்குகளையும் திறக்க முடிவு செய்துள்ளது. சமீபத்தில் இந்நிறுவனம் காட்பாடியிலும், ஓசூரிலும் கிடங்குகளைத் திறந்துள்ளது.

**சிட்கோ நிறுவனத்தின் இதர செயல்கள் :**

நடப்பு நிதியாண்டில் (1986—87) சிறுதொழில் அதிபர்களின் வேண்டுகோளின்படி, இந்நிறுவனம் அபராத வட்டியை, நியாயமான அளவிற்குக் குறைத்துள்ளது. மேலும், குறித்த காலத்தில் தவணையை கட்டி முடிக்கும் சிறுதொழில் பிரிவுகளுக்கு 0.5 சதவிகிதம் சலுகை அளிக்கவும் முடிவு செய்துள்ளது.

[1987 ஏப்ரல் 27

இந்நிறுவனம் "ஒட்டுமொத்த சலுகைகள் திட்டம்" (Package of Assistance Scheme) ) என்ற திட்டம் ஒன்றை உருவாக்க உள்ளது. இத்திட்டத்தில் வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும், வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும், மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், தொழில் தொடங்க முனைபவர்களுக்கும், முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, அடிப்படை வசதிகளுடன் கூடிய வெவ்வேறு, அளவுகளில் உள்ள தொழிற்கூடங்களும், மற்றும் இயந்திரங்களும் தவணை முறையில் வழங்கப்படும்.

இந்நிறுவனம் அனுப்பியுள்ள ஜப்பான் நாட்டின் "யென்" கடன் ரூ. 60.00 கோடி மற்றும் 48.00 கோடி ரூபாய் நாணய மதிப்பீடு அடங்கிய மொத்தத் தொகையான ரூ. 108.00 கோடிக்கான திட்டத்திற்கு ஆரம்ப கால செயற்குறிப்பை, தமிழ்நாடு அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

### 1. முன்னுரை:

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ் துவக்கப்பட்ட முதல் மாநில நிதியுதவி நிறுவனமாகும். இந்நிறுவனம் தொழில் தொடங்குபவர்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிகபட்சம் ரூ. 60 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. இது சிறிய சின்னஞ்சிறிய



1987 ஏப்ரல் 27]

தொழில் நிறுவனங்கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு இந்நிறுவனம் முதன்மையளிக்கிறது. இந்நிறுவனத்தின் மொத்த நிதியுதவியில் 90 சதவீதத்திற்கும் மேல் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 2. நிறுவனமும் மாநில நிதியுதவிச் சட்டமும்:

இந்நிறுவனம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட போதிலும், 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இயங்கிவரும் மாநில நிதியுதவி நிறுவனமாகும். தற்போது நம் நாட்டில் மேகாலயா உட்பட 19 மாநில நிதியுதவி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு ஏற்ப இயங்கி வருகிறது. இந்நிறுவனம் கிட்டத்தட்ட இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெறும் மற்ற மாநில நிதியுதவி நிறுவனங்கள் போல் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் நிதி ஆதாரம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியில் (DBI) மறுநிதியுதவி (Refinance) பத்திரங்கள் (Bonus) மற்றும் பங்கு மூலதனங்களின் மூலமும் கிடைக்கிறது. 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் அன்று நிதி ஆதாரத்தின் விவரம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) | மறுநிதியுதவி (இந்திய தொழில் வளர்ச்சி வங்கி) | 127.10 |
| (2) | பத்திரங்கள் .. .. .. .. | 65.99 |
| (3) | பங்கு மூலதனம் .. .. .. | 29.99 |

[1987 ஏப்ரல் 27

3. மூலதனம் :

தற்சமயம் இதன் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 40 கோடியாகும். இந்நிறுவனத்தின் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையான பங்கு ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (1) | பங்கு மூலதனம் மார்ச் 31 அன்றுள்ளபடி 1986. (2) (ரூபாய் இலட்சத்தில்.) | சதவீதம். மார்ச் 31 அன்றுள்ள படி 1986. (3) சதவீதம். |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு .. .. | 1,602 | 53.42 |
| 2 | இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி | 1,350 | 45.00 |
| 3 | பாண்டிச்சேரி அரசு .. .. | 15 | 0.50 |
| 4 | ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்பரேஷன் ஆப் இந்தியா, அதன் கிளைகள் .. | 8 | 0.26 |
| 5 | இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் | 4 | 0.13 |
| 6 | கூட்டுறவு வங்கிகள் உட்பட ஏனைய வங்கிகள் .. .. .. | 20 | 0.69 |
| | | 2,999 | 100.00 |

4. கடன் அனுமதிப்பு மற்றும் விநியோக வரம்பு ;

இதன் அலுவலர்கள் அதிகாரிகளின் தற்போதைய கடன் அனுமதிப்பு வரம்பு ;—

| | | | |
|---|---|---|---|
| 1 | கிளை அலுவலகம் | .. | ரூ. 2 இலட்சம் வரை. |
| 2 | மண்டல அலுவலகம் | .. | ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 2.50 இலட்சங்கள் வரை. |
| 3 | தலைமை அலுவலகம் | .. | ரூ. 5.00 இலட்சங்களிலிருந்து ரூ. 10.00 இலட்சங்கள் வரை. |
| 4 | செயற்குழு | .. | ரூ. 10.00 இலட்சங்களிலிருந்து ரூ. 25.00 இலட்சங்கள் வரை. |
| 5 | இயக்குநர் குழு | .. | ரூ. 25.00 இலட்சங்களுக்கு மேல் |



1987 ஏப்ரல் 27]

இது தவிர கிளை மேலாளர்கள் ரூ. 10.00 இலட்சங்கள் வரை மண்டல மற்றும் தலைமை அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட கடனுதவியை விநியோகிக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

5. நிதியுதவி செய்யும் திட்டங்கள்:

இந்நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது :—

1. நடுத்தர தொழில் நிறுவனங்கள்.
2. சிறு தொழில் நிறுவனங்கள்.
3. சுலபக் கடன் உதவி.
4. ஜெனரேட்டர்.
5. உணவு விடுதிகள்.
6. பதிவு பெற்ற மருத்துவர்கள்.
7. போக்குவரத்து வாகனங்கள் ஓட்டுநர்.
8. சிறுவகைக் கடன் (Mini Loan) ரூ. 50,000-க்கு உட்பட்ட உதவி.
9. மீன்பிடி படகுகள்/இயந்திரப்படகுகள்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, துணிவகைகள், இரசாயனம், மற்றும் இரசாயனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் உற்பத்தி, உலோகப் பொருட்கள், காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், உலோக மல்லாத கனிப்பொருட்கள் முதலிய தொழில்களுக்கு செய்துள்ள நிதியுதவியில் இந்நிறுவனத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிறுவனம் திருப்பூர்—பனியன் உற்பத்தி, கோவை—துணி உற்பத்தி தொழில், உலோக வார்ப்பு பட்டறை (Foundaries), சேலம், தர்மபுரி—பட்டு நூல் உற்பத்தி, ஜவ்வரிசி உற்பத்தி, சிவகாசி வண்ண அச்சுத் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்ற சிறப்புத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு பெருமளவு உதவியுள்ளது.

6. நிறுவனத்தின் செயல்பாடுகள் :

நிறுவனம் துவங்கப்பட்ட நாள்முதல் அனுமதி வழங்கப்பட்ட கடன், விநியோகம், வசூல் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 27

| வருடம். (1) | ஒப்புதல். (2) | விநியோகம். (3) | வசூல். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1949 முதல் 1978 வரை (30 வருடங்கள்). | 121.29 | 98.90 | .. |
| 1978–79 .. | 12.06 | 9.05 | 10.15 |
| 1979–80 .. | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 .. | 36.90 | 22.59 | 12.15 |
| 1981–82 .. | 52.13 | 35.07 | 15.76 |
| 1982–83 .. | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 .. | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 .. | 68.11 | 48.70 | 32.38 |
| 1985–86 .. | 92:39 | 63.44 | 42.30 |
| 1986–87 .. (31—12—1986 வரை) | 70.17 | 44.39 | 31.32 |

7. சிறு தொழில்களுக்கு நிதியுதவி ;

நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி பின்வருமாறு :

| வருடம். (1) | மொத்த ஒப்புதல். (2) | சிறு தொழில்களுக்கு ஒப்புதல் (3) | மொத்தத்தில் சிறு தொழில்களுக்கு. (சதவிகிதம்.) (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1949–78 வரை .. | 121.29 | 29.63 | 24.4 |
| 1978–79 .. | 12.06 | 5.80 | 48 |
| 1979–80 .. | 17.19 | 8.86 | 52 |
| 1980–81 .. | 36.90 | 22.68 | 61 |
| 1981–82 .. | 52.13 | 44.44 | 85 |
| 1982–83 .. | 55,87 | 48.59 | 87 |
| 1983–84 .. | 59.74 | 53.53 | 90 |
| 1984–85 .. | 68.11 | 62.69 | 92 |
| 1985–86 .. | 92.39 | 86.06 | 93 |
| 1986–87 (31–12–1986 வரை), .. | 70.17 | [illegible] | [illegible] |



1987 ஏப்ரல் 27]

8. மான்யம் :

மத்திய மற்றும் மாநில அரசு, மாநிலத்தில் உள்ள சில தாலுக்காக்களை திட்டத்தின் நிரந்தர சொத்தில் 15 சதவீதம், 10 சதவீதம் மானியத்திற்கு தகுதியுள்ளதாக அறிவித்துள்ள இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் மத்திய, மாநில மான்ய உதவித் தொகையை வட்டியில்லாமல் மாநில அளவிலான குழு ஒப்புதல் அளித்த பிறகு தனது நிதியிலிருந்து வழங்குகிறது. அவ்வாறு அளிக்கப்பட்ட மானிய நிதியுதவி தொகை இந்நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் 31—12—1986 ஆம் நாள் வரை பின்வருமாறு ஆகும் :—

| (1) | எண் (2) | தொகை (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மத்திய மானியம் 15 சதவீதம் .. | 2174 | 639.68 |
| மாநில மானியம் 10 சதவீதம் .. | 745 | 469.78 |
| | 2919 | 1109.46 |

9. நிறுவனத்தின் நிகர லாபம் :

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு கிடைத்த நிகர லாபம் (வரி ஒதுக்கீட்டிற்கு பின்) பின் வருமாறு :—

| வருடம். (1) | தொகை. (2) |
|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1981–82 .. | 13.11 |
| 1982–83 .. | 161.15 |
| 1983–84 .. | 133.16 |
| 1984–85 .. | 196.54 |
| 1985–86 .. | [illegible] |

[1987 ஏப்ரல் 27

10. வேலை வாய்ப்பு :

இந்நிறுவனத்தால் உதவி பெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் (1978—79-லிருந்து 1985—86 வரை) வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை 2,43,443 ஆகும். 1986—87-ல் (31—12—1986 வரை) 18,300 எண்ணிக்கை ஆகும்.

11. சிறப்புத் திட்டங்கள் :

(அ) சுலபக் கடன்—

சொந்தத்தில் போதுமான அளவு வசதிகள் இல்லாமல் ஆனால் தொழில் நுணுக்கம் தெரிந்த முதல் தலைமுறை தொழில் வினைஞர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் இக்கழகம் 'சுலபக்கடன்' திட்டத்தின் கீழ் அதிக பட்சம் ரூ. 4 இலட்சங்கள் மிகக் குறைந்த வட்டியாக 1 சதவீதத்தில் கடனாகக் கொடுக்கிறது. இந்தத் தொகை தொழில் தொடங்குபவரின் பங்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் அளித்த நிதியுதவி வருமாறு :—

| வருடம். (1) | | எண்ணிக்கை. (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1981—82 | .. | 50 | 7 |
| 1982—83 | .. | 59 | 24 |
| 1983—84 | .. | 181 | 59 |
| 1984—85 | .. | 206 | 102 |
| 1985—86 | .. | 362 | 194 |
| 1986—87 | .. | 137 | 100 |

ரூ. 4 இலட்சங்களுக்கு மேல் சுலபக் கடன் தேவைப்பட்டால் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் 'விதைமூலதனக்' கடன் இதே நிபந்தனைகளுடன் கிடைக்கும். 31—12—1986 ஆம் நாள் வரை இந்நிறுவனம் 1,0[illegible] நிறுவனங்களுக்கு சுலபக்கடன் திட்டத்தில் ரூ. 5·30 கோடிகள் நிதியுதவி வழங்கியுள்ளது.



1987 ஏப்ரல் 27]

(ஆ) மின் உற்பத்தி இயந்திரம் வாங்க நிதியுதவி :

தடையில்லாமல் உற்பத்தி செய்ய வேண்டி, தொழில் நிறுவனங்களுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்க முதன்மை அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. 31—12—1986 ஆம் நாள் வரை இந்நிறுவனம் 1,191 நிறுவனங்களுக்கு ரூ. 11·57 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

(இ) தொழில் வல்லுநர்கள் திட்டம் :

சான்றிதழ் பெற்று தகுதி வாய்ந்த பொறியியல் வல்லுநர்களுக்கும் இத்துறையில் போதிய அனுபவமும் வல்லமையும் உள்ளவர்களுக்கும் இக்கழகம் தாராளமாக நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 31—3—1986-ம் நாள் வரை 569 நபர்களுக்கு ரூ. 7.63 கோடிகள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) போக்குவரத்துத் திட்டம் :

வாடகைக் கார்கள், லாரிகள், டிராக்குகள், சாமான்கள், வண்டிகள், போன்ற போக்குவரத்து வாகனங்கள், சொந்தமாக ஓட்டுபவர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. 31—12—1986 ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 7,144 விண்ணப்பங்களுக்கு ரூ. 76.44 கோடிகள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(உ) பதிவு பெற்ற மருத்துவர்கள் திட்டம் :

மருத்துவ தகுதிபெற்ற நபர்களுக்கு அதிகபட்சம் ரூ. 15 இலட்சங்கள் வரை இந்நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது. அதாவது கிராமப்புற/புறநகர் பகுதிகளில் சிகிச்சை இல்லம்/கிளினிக் கட்டுவதற்கு ரூ. [illegible] இலட்சங்களும், தமிழ் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் மருத்துவத் தொழிலுக்கு உதவும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ. 15 இலட்சங்களுமாகும். இதுவரை 261 மருத்துவர்கள் ரூ. 4·19 கோடிகள் கடனுதவிப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

(ஊ) புதுப்பிக்கும் திட்டம் :

உற்பத்தித் திறனை அதிகரிக்கக்கூடிய உபகரணங்களை சம்பாதித்தல், பழைய இயந்திரங்கள் தளவாடங்களை மாற்றுதல் அல்லது புனர் நிர்மாணம் செய்தல் போன்றவைகளுக்குந் தான்

[1987 ஏப்ரல் 27

இப்புதுப்பிக்கும் திட்டமாகும். தொழில் நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ள இடத்தைப் பொருட்படுத்தாமல் வட்டி விதம் 11.5 சதவீதமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

(எ) உபகரண மறுநிதியுதவித் திட்டம்:

நன்கு நிறுவப்பட்ட மற்றும் சிறப்புப் பெற்ற நிறுவனத்திற்கு உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்த உபகரணங்கள் வாங்குவதற்கு விரைவில் நிதி தேவைப்பட்டால், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடனுதவி அளிக்கிறது. அதற்குரிய தகுதிகள்:

(1) கடந்த நான்கு ஆண்டுகளாக நிறுவனம் செயல்முறையில் இருக்க வேண்டும்.

(2) முந்திய இரண்டு நிதியாண்டுகளிலும் இலாபம் பெற்றிருக்க வேண்டும் அல்லது மூலதன பங்கிற்கு இலாபப் பங்கு அறிவித்திருக்க வேண்டும்;

(3) வங்கிகள் நிதி நிறுவனங்களுக்கு தவணை செலுத்தத் தவறி இருக்கக்கூடாது.

வாங்க வேண்டிய மூலப் பொருள்கள்/உபகரணங்களின் விலையில் 80 சதவீதம் கடனுதவியளிக்கப்படும், அதற்கு வட்டி 14 சதவீதமாகும்.

12. எதிர்கால திட்டங்கள்:

1986—87 ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட குறியீடும் சாதனைகளும் பின்வருமாறு:—

| | | (ரூபாய் கோடியில்) 31-12-1986 வரை. | |
|---|---|---|---|
| | குறியீடு. | சாதனை. | சாதனையின் சத விகிதம். |
| (1) | (2) | (3) | (4) |
| கடன் அனுமதி .. | 100.00 | 70.17 | 70.2 |
| கடன் விநியோகம் .. | 75.00 | 44.39 | 59.2 |
| கடன் வசூல் .. | 53.00 | 31.32 | 59.1 |



1987 ஏப்ரல் 27]

1987—88 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட தோராய செயல் முறைகள் பின் வருமாறு:

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| கடன் அனுமதி | .. | 12.0 |
| கடன் விநியோகம் | .. | 6.5 |
| கடன் வசூல் | .. | 6.0 |

13. முடிவுரை:

தற்போது இந்நிறுவனம் 17 கிளை அலுவலகங்களையும், 4 மண்டல அலுவலகங்களையும் கொண்டு இயங்குகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையிலுள்ளது.

இந்நிறுவனம் அதன் பல்வேறு திட்டங்களின் மூலம் புதிய 20 அம்ச திட்டத்தை நிறைவேற்ற அக்கறை கொண்டுள்ளது.

உற்பத்தியையும் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கும் வாய்ப்புகளுடைய தொழில்களை தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் துவங்குவதற்கு வேண்டிய நிதியுதவியை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று பயனடைய தொழில் வினைஞர்களை இந்நிறுவனம் அழைக்கிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).

டான்சி (தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்) இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் தற்பொழுது 47 தொழிற்கூடங்களையும் மற்றும் 7 விற்பனை நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பல்வேறு வகைப்பொருட்களை உற்பத்தி செய்யும் ஓர் நிறுவனமாகும். இத்தொழிற் கூடங்கள், ஆரம்பக் காலத்தில் தொழில் மற்றும் வணிகத் துறையினரால் வியாபார நோக்கமின்றி, பயிற்சி மற்றும் பராமரிப்பு சேவை நிலையங்களாக தொடங்கப்பட்டு, பின்பு வர்த்தக ரீதியில் இத்தொழிற்சாலைகளை இயங்கச் செய்யும் நோக்குடன் 1965 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதி முதல் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன.

2. இந்நிறுவனத்தின் உற்பத்தித் தொழிற் கூடங்களை (1) கட்டுமானம், (2) கருவிகள், மற்றும் அதன் சார்பு பொருட்கள், (3) பொறியியல், (4) இரும்பு பொருட்கள் வடிவமைப்பு, (5) வார்ப்படம், (6) மரப்பொருட்கள், (7) பல்வகை மற்றும் சிறப்பு என வகைப்படுத்தலாம். டான்சி நிறுவனத்திலுள்ள பெரும் பாலான தொழிற்கூடங்கள், இரயில்வே, தபால் தந்தி துறை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் போன்ற அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் மத்திய, மாநில அரசு களின் நிலையான வாரியங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பணி களை நிறைவேற்றுவதுடன், தனியார் நிறுவனங்கள் வழங்கும் குறிப்பிட்ட பணி ஆணைகளையும் நிறைவேற்றுகின்றன. 1985—86 மற்றும் 1986—87 ஆம் ஆண்டுகளில் தமிழக முதல்வரின் மதிய சத்துணவுத் திட்டத்திற்காகவும் மற்றும் வெள்ள நிவாரணத் திற்காகவும் சில வகைப்பட்ட சமையல் பாத்திரங்களை டான்சி வழங்கியுள்ளது. 'யூனிசெப்' நிறுவனத்தின் தர நிர்ணயப்படி "இந்தியா மார்க் II" என்ற ஆழ் துளை நீரேற்றுக் கைப்பம்பு களையும் மற்றும் அதன் உதிரி உறுப்புகளையும் உற்பத்தி செய்து வழங்குவதினால், "கிராமப்புற நீர் வழங்கல்" திட்டத்தினை அரசு நிறைவேற்றுவதற்கு டான்சி நிறுவனம் பெரும்பணி புரிகிறது.

3. 1976—77-ல் டான்சியின் உற்பத்தியின் மதிப்பு மற்றும் விற்பனை முறையே ரூபாய் 1,062 இலட்சம் மற்றும் ரூபாய் 1,022 இலட்சம் ஆக இருந்தது முறையே ரூபாய் 2,479 இலட்சம் மற்றும் ரூபாய் 2,420 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது. டான்சியின் இழப் பிற்கு பழைய எந்திரங்கள், சிக்கனமில்லாத உற்பத்தி முறையும் உபரித் தொழிலாளர்கள் /அலுவலர்கள், நுணுக்க தொழில்நுட்பத் திறமையின்மையும், ஆயத்தீர்வைச் சுமை மற்றும் கடன்கள் மீது ஏற்பட்ட வட்டிப் பளுவுமே காரணமாகும்.

4. உற்பத்தியை மேம்படுத்துவதற்காக மனித சக்தியின் ஆற்ற லின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களின் அறிவுத் திறன் மற்றும் ஆற்றல் திறனை அந்தந்த துறையில் பயிற்சிகள் அளிப்பதன் மூலம் வலுப்படுத்த ஒருமித்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.





5. 1—4—1985 அன்று நிலுவையில் காணப்பட்ட மொத்த அரசுக் கடன் தொகையான ரூபாய் 13.6 கோடியில் ரூ. 3.6 கோடிக் கடனை அரசு பங்குத் தொகையாக மாற்றி மேலும் நிலுவையில் உள்ள மீதிக் கடன் தொகையான ரூ. 10 கோடிக்கு முதல் கட்டமாக 1985—86 ஆம் ஆண்டுக்கு வட்டி விலக்கு அளித்துள்ளது.

**ஆயத்தீர்வை சலுகைகள் :**

டான்சியின் தொழிற்சாலைகளை ஆயத்தீர்வை சலுகைகளுக் காக சிறுதொழில் நிறுவனங்களாக கருத வேண்டும் என்ற டான்சியின் கோரிக்கை ஏற்கப்பட்டு, 1986—87 ஆம் ஆண்டில் மத்தியில் பெரும்பாலான தொழிற்சாலைகளுக்கு இச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அளிக்கப்பட்ட இச்சலுகைகள் எல்லா தொழிற்சாலைகளாலும் முழுமையாக இப்பலனை அடைய முடிய வில்லை. இந்த சலுகைகள் முழுமையாக டான்சிக்கு அளிக்கப் பட்ட பின் போட்டியிடும் தன்மையும், பணி ஆணைகளில் ஆதாயம் ஈட்டும் தன்மையும் வெகுவாக முன்னேறும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த சலுகைகளை பெறுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**1986—87 ஆம் ஆண்டில் செயல்பாடு :**

1986—87 ஆம் ஆண்டில் ரூபாய் 2,300 இலட்சத்திற்கான உற்பத்தியையும் மற்றும் ரூபாய் 2,516 இலட்ச விற்பனையையும் டான்சி அடையவிருக்கிறது. இந்த அளவிலான உற்பத்தி மற்றும் விற்பனையில், இந் நிறுவனம் 1986—87 ஆம் ஆண்டில் ரூ. 34.63 இலட்சம் செயல்முறை (Operating Profit) ஆதாயத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு செயல்முறை இழப்பு ரூபாய் 270 இலட்சமாகும். 1986—87 ஆம் ஆண்டில் மொத்த இழப்பு ரூ. 150 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு டான்சி அடைந்த மொத்த இழப்பு ரூபாய் 420 இலட்சம்.

1986—87 ஆம் ஆண்டில் கிடைத்த பெரும்பணி ஆணைகளின் மதிப்பு கட்டுமானம் (தொழிற்கூடங்கள் ரூ. 315 இலட்சம்), பொறியியல் (ரூ. 125 இலட்சம்), இந்தியா மார்க்-11 ஆழ்துளை நீரேற்று கைப்பம்பு போன்ற சிறப்பு வகை தொழிற்சாலை (ரூ. 250 இலட்சம்), மரத் தளவாடங்கள் (ரூ. 35 இலட்சம்) ஆக மொத்தம் ரூபாய் 762 இலட்சம் ஆகும்.

[1987 ஏப்ரல் 27

1987—88 ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடு:

1987—88 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு ரூ. 2,420 இலட்சங்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியளவில், ஆயத்தீர்வை சலுகைகளின் பலனால் ஆதாயம் ஈட்டும் திறன் உயர்ந்தும், மூலப் பொருட்களைச் சிக்கனமாக உபயோகப்படுத்துவதில் காட்டப்படும் தீவிரக் கட்டுப்பாடு மற்றும் கழிவுகளைத் தவிர்த்தல் போன்றவைகளால், டான்சி அதன் தற்போதைய செயல்முறையில் மாற்றம் கண்டு, 1987—88 ஆம் ஆண்டு முதல் ஆதாயம் ஈட்டத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயத்தீர்வையில் அளிக்கப்படும் சலுகைகளின் பலனை அடையும் பொருட்டு "தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனை ஒத்த பொருட்கள் (டையாய்) உற்பத்தி நிறுவனம்" என்ற டான்சியின் துணை நிறுவனம் ஒன்று தனி நிறுவனமாக அமைக்கப்பட்டு 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அதன் உற்பத்தியை தொடங்கியுள்ளது.

உயர்ந்த தொழில் நுட்பங்களைக் கொண்டதாகவும் மற்றும் உயரிய விலை மதிப்புடையதாயும் உள்ள புதிய பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில், ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூபாய் 250 இலட்சம் செலவில் சில புதிய திட்டங்களை செயலாக்க டான்சி எண்ணியுள்ளது.

தற்சமயம், டான்சியில் சுமார் 3,860 பேர் பணிபுரிகிறார்கள். தொழில்முறை உறவு, நன்றாக செயல்படுகிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ):

1983-ல் 10 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் நிறுவப்பட்ட தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ் நாட்டில் தோல் தொழில் வளரவும் அதன் கைவினைஞர்கள் வளர்ச்சி அடையவும் திட்டங்களை தீட்டி வருகிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்கள் 1987-88-ல் தொடரப்படும்.



1987 ஏப்ரல் 27]

(1) காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் கைவினைஞர்களுக்கான உதவிகள்:

சிறிய அளவில் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் தயாரிக்கும் கைவினைஞர் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேகரிக்க, பெரம்பூர் மற்றும் உதகமண்டலத்தில் பொருட்கள் சேகரிக்கும் மையங்களை நிறுவியுள்ளது. இவ்வகையான உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்கள், கூலி முன்பணம் முதலியவைகளை கைவினைஞர்களுக்கு கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்களை சேகரிக்கிறது. இப்பொருட்கள் டால்கோ மத்திய அலுவலகத்திலுள்ள "ரூப்ரா" விற்பனை நிலையம் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியிலும், மற்றும் பிற அரசு பொருட்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இம்முறை பெரம்பூர் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கைவினைஞர்களை கவர்ந்துள்ளது. இதனால் 155 நபர்கள் நன்மை அடைகின்றனர். இந்த வகையான பொருட்கள் சேகரிக்கும் நிலையங்கள் வரும் 1987-88-ம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தொடங்கப்படும்.

(2) சிறிய அளவில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களது திறமையை ஊக்குவிக்கத் திட்டங்கள்:

இந்து ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஆடவர் மற்றும் பெண்டிர்களின் நலனுக்காக டால்கோ ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துள்ளது. இந்த பயிற்சி அவர்களது திறமையை அதிகரிக்கும் வகையிலும், அவர்களது வருவாயை அதிகரிக்கக்கூடிய வகையிலும் உதவி புரிவதாக இருக்கும். இந்தப் பயிற்சி நிலையம் இருபது ஆண் மற்றும் பெண் பாலர்களுக்கு ஒன்பது மாத கால பயிற்சி அளிக்கும். இவர்களுக்கு மாதம் ரூபாய் இருநூறு உதவித்தொகை அளிக்கப்படும். இது தவிர தோல் பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களையும் இலவசமாக அளிக்கும். இவர்கள் பயிற்சி காலத்தை முடித்து வெளி வந்த பிறகு சுயவேலைவாய்ப்பைப் பெறுவர். இவர்கள் பல குழுக்களாகச் சேர்ந்து உற்பத்தி செய்யும் காலணிகள் மற்றும் தோல்பொருட்கள் டால்கோ மூலமாக விற்பனை செய்ய வழி

வகை செய்யப்படும். தற்சமயம் ஒரு பயிற்சி நிலையம் பல்லா வரத்தில் இயங்கி வருகிறது. வரும் ஆண்டில் 1987-88-ல் மேலும் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும்.

**(3) உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் :**

சிறிய அளவில் காலணிகள் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் நல்ல தரமான காலணிகள், மூடுகாலணிகள், உற்பத்தி கூட மூடுகாலணிகள் முதலியவைகளை டால்கோ வாங்கி விற்பதற்கான திட்டத்தை ஏற்றுள்ளது. இந்த திட்டத் தில் ஈடுபடுவதற்கான முனைப்பினை காண்பிக்கும் உற்பத்தி யாளர்களை டால்கோ நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளும் படி டால்கோ நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வகையான உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் ஷு லாஸ்ட், வடிவமைப்பு முதலியவைகளை டால்கோ அளிக்கும். இவர்கள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்கள் டால்கோ வினால் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படும். இதனால் இந்த உற்பத்தியாளர்களுக்கு நிரந்தரமான சந்தை வாய்ப்பு ஏற்பட இருக்கிறது. மேலும் சீரான வருவாயையும் அளிக்கும்.

**(4) தோல் பதனிடுவோர்களுக்கான உதவிகள்:**

வாணியம்பாடி, கச்சேரி ரோடில் அமைந்துள்ள தோல் பதனி டும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைப் பதப் படுத்த ஒரு பொது நோக்கு சுத்திகரிப்பு நிலையத்தை டால்கோ நிறுவ இருக்கிறது. இதற்காக டால்கோ வாணியம்பாடி தோல் பதனிடுவோர் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு நிறுவனம் என்ற நிறுவனத்தை கம்பெனிகள் நிறுவனச் சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ளது. இதற்குத் தமிழக அரசு ரூ. 15 இலட்ச ரூபாயும் மைய அரசு ரூ. 25 இலட்சமும் பங்குத் தொகையாக அளித் துள்ளன.

இதே போன்று திண்டுக்கல்லிலுள்ள தோல் பதனிடுவோர்க் கான ஒரு பொது சுத்திகரிப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் 40—50 தோல் பதனிடுவோர் பயனடைவர்.



இதைப் போன்ற பொது நோக்கு சுத்திகரிப்பு நிலையங்களை, நிறுவுவதற்கு முன் வரும் தோல் பதனிடுவோர்களுக்கு டால்கோ தேவையான உதவியை அளிக்கும்.

**(5) சிறு தோல் பதனிடுவோர்க்கான உதவிகள் :**

டால்கோ நிறுவனம் மூன்று மூலப் பொருட்கள் வங்கியை திண்டுக்கல் (அண்ணா மாவட்டம்) ஈரோடு (பெரியார் மாவட்டம்) மற்றும் பேரணாம்பட்டு (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் நிறுவி உள்ளது. இந்த வங்கிகள் தோல் பதனிடு வதற்குத் தேவையான ரசாயனப் பொருட்கள், வாட்டில் திரவம் பிசிடி பவுடர், புங்கம் எண்ணை முதலியவைகளை இறக்குமதி மூலமாகவும் உள்ளூர் சந்தையிலும் பெற்று விற்பனை செய் கின்றன. நல்லதரமான பொருட்களை குறுகிய கால அளவில் இந்த வங்கிகள் தோல் பதனிடுவோர்க்கு வழங்குகின்றன. இந்த வங்கிகள் மூலமாக 50-75 தோல் பதனிடுவோர் பயனடை கின்றனர். மாதத்திற்கு ரூ. 3 இலட்சம் பெறுமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

1987—88-ம் ஆண்டில் மேலும் இரண்டு மூலப் பொருள் வங்கிகள் பல்லாவரம் மற்றும் வாணியம்பாடியில் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன. இதனால் 120 சிறிய தோல் பதனிடுவோர் பயனடைவர்.

**6. தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர்க்கான உதவிகள் :**

தோல் பொருட்கள், காலணிகள், மூடு காலணிகள், தோல் உடைகள் மற்றும் கையுறைகள் தயாரிக்க முன்வரும் முனைப்பான தொழில் முனைவோர்க்கு டால்கோ நிறுவனம் உதவி செய்யும். மேலும் 10 தொழிற்கூடங்களை கட்டமைத்து இந்தத் தொழில் முனை வோர்க்கு வழங்கப்பட இருக்கிறது. இந்தக் கூடங்கள் தவணை முறையில் தொழில் முனைவோர்க்குத் தரப்படும். தொழில் துவங்குவதற்கான அடிப்படை வசதிகளான மின்சாரம், தண்ணீர் முதலிய வசதிகள் இங்கு இருக்கும்.

[1987 ஏப்ரல் 27

7. கூட்டு நிறுவனங்கள் :

மூடுகாலணிகள், மூடுகாலணிக்கான மேற்தோல்கள் முதலிய வைகளை உற்பத்தி செய்ய தனியார் துறையுடன் சேர்ந்து கூட்டு நிறுவனங்களை ஏற்படுத்த, டால்கோ நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது. இந்த வகையான கூட்டு நிறுவனங்களை நிறுவு வதற்கான தனியார் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதில் டால்கோ நிறுவனம் தற்பொழுது ஈடுபட்டுள்ளது. தனியார் ஒருவருடன் ரூ. 1.20 இலட்சத்தில் கூட்டு நிறுவனம் ஒன்றை நிறுவும் முயற்சியில் டால்கோ ஈடுபட்டுள்ளது.

8. தோல் தொழிற்கூடங்கள் :

டால்கோ நிறுவனத்தின்கீழ் இரண்டு தோல் பதனிடும் தொழிற்கூடங்கள் விண்ணமங்கலம் மற்றும் மாதவரத்திலும், காலணி உற்பத்திக் கூடங்கள் பெரம்பூர் மற்றும் பல்லாவரத்திலும் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்கூடங்கள் இந்த ஆண்டில் ரூ. 2.17 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது. இந்தத் தொழிற்கூடங்கள் டான்சி நிறுவனத்தின்கீழ் இலாபகரமற்றதாக இயங்கி வந்த காரணத் தால், வரும் ஆண்டில் இக்கூடங்களை உற்பத்தித் திறன் கூடிய தாக உருவாக்கும் பணியில் டால்கோ ஈடுபட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித் துறை.

இந்தியாவில், முசுக்கொட்டை செடி பயிரிடுதல், பட்டு வளர்ப்பு தொழில் சம்பந்தமான தேசப்படத்தில் முழுவதுமாக சேர்க்கப்பட்டுள்ள பெரிய மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. ஆனால் தமிழ்நாட்டில் கர்நாடக மாநிலத்தின் எல்லை அருகில் உள்ள சில வட்டங்களில் மட்டும் பட்டு வளர்ப்பு தொழில் மரபு வழியாக நடைபெற்றன. பட்டு வளர்ப்பின் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், இம்மாநிலத்தில் இத் தொழிலை நன்கு வளர்ச்சியடையச் செய்யவும், 1979 ஏப்ரல் மாதம் சேலத்தை தலைமையிடமாகக்கொண்டு பட்டு வளர்ச்சித் துறை தனியாக ஏற்படுத்தப்பட்டது.



1987 ஏப்ரல் 27]

2. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் இந்த மாநிலத்தில் முசுக்கொட்டை சாகுபடியின்கீழ் இருந்த நிலத்தின் மொத்தப் பரப்பளவு 16,000 ஹெக்டேர்கள் மட்டுமே. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆரம்பத்தில் இதன் அளவு 26,800 ஹெக்டேர்கள். 1990-ம் ஆண்டிற்குள் சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தேவையான ஊக்க ஊதியம் கொடுப்பதின் மூலம் நிலத்தின் அளவை 40,000 ஹெக் டேர்களுக்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. இம்மாநிலத்தில் பட்டு வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை தடைப்படுத்தும் சிக்கல்களில் ஒன்று இம்மாநிலத்தில் போதிய அளவு நூற்பு வசதி இல்லாததாகும். இம்மாநிலத்தில் போதிய அளவு நூற்பு வசதிகள் இல்லாத காரணத்தாலும், பட்டு கூடுகள் விரைவில் அழியக்கூடிய பொருளாக இருப்பதால் இதனை அதிக நாட்களுக்குச் சேமித்து வைக்க முடியாது என்பதாலும் இம் மாநிலத்தில் உற்பத்திச் செய்யப்படும் பட்டு கூடுகளில் கணிசமான அளவு கர்நாடக மாநிலத்திற்கு தொடர்ந்து கொண்டுசெல்லப்படு கின்றன. கர்நாடக மாநிலத்திலுள்ள அனுபவமிக்க மற்றும் மரபு வழியாகச் சிறந்து விளங்குகின்ற பட்டு நூற்பாளர்களுடன் இம்மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் போட்டியிட இயல வில்லையாதலால், புதிய தொழில் முனைவோர்கள் இம்மாநிலத்தில் பட்டு நூற்பு பிரிவுகளைத் துவக்குவதற்கு விருப்பமற்றவர்களாக உள்ளனர். இம்மாநிலத்தில் கச்சாப் பட்டு உற்பத்தி ஒரு ஆண்டில் 90,000 கிலோ கிராமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுவதால், பட்டுநூல் நூற்பதற்காக 150 புதிய ஏனங்கள் மற்றும் சர்க்காக்கள் நிறுவ உதவி செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

4. மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்கள் முக்கியமான இடங் களில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்கின்றன. ஒரு மாவட்ட பட்டு வளர்ப்பு மையமானது (1) ஒரு பட்டுக்கூடு அங்காடி; (2) ஒரு நூற்பு தொழிற்சாலை (3) ஒரு பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் (4) ஒரு பட்டு வித்தகம் (சில இடங்களில் பயிற்சி மையமும் இணைந் திருக்கும்) ஆகியவற்றைக் கொண்டதாகும். இத்தகைய மையங்கள் பட்டுக் கூடுகளை விற்பனைச் செய்யவும் தேவையான

[1987 ஏப்ரல் 27

விதைகள் வாங்கவும், தகுந்த காலத்தில் தொழில் நுட்ப உதவி பெறவும் பட்டு விவசாயிகளுக்கு பெரிதும் வழிசெய்கின்றன. தற்சமயம் நான்கு பட்டு வளர்ப்பு மையங்களே உள்ளன. அவைகள் (1) வாணியம்பாடி, (2) கோயம்புத்தூர், (3) திண்டுக்கல் மற்றும் (4) சேலம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. மதுரை, காஞ்சீபுரம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பட்டு வளர்ப்பு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

5. 1987—88-ம் ஆண்டில் பட்டு வளர்ப்பின் கீழ் பின்வரும் கூடுதல் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(1) முசுக்கொட்டை செடி பயிரிடுதலை விரிவுபடுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கு நிதிஉதவி அளிக்கும் திட்டம்:**

**1987—88-ம் ஆண்டில் கூடுதலாக 1,000 ஹெக்டேர் நிலம் மல்பரி** நடவின்கீழ் கொண்டுவரப்பட உள்ளது. வழங்கப்படவிருக்கும் உதவிகள் (1) ரூ. 100 வீதம் 1,500 விவசாயிகளுக்கு நடவு மானியம் ரூ. 1.50 இலட்சம் மற்றும் (2) பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள்வதற்காக, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பரி நடவு ஆகியவற்றில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 500-ல் பயிற்சி உதவித்தொகை மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் வழங்குதல், 1987—88-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 9-00 இலட்சம். இத்திட்டம் 1,500 பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(2) மாநிலத்தில் பட்டு நூற்புத் திறனை அதிகரித்தல்:**

பட்டு நூற்புத் தொழில் மரபுவழி இல்லாமல் நடைபெறுவதாலும், கர்நாடகா மாநிலத்தின் தேர்ந்த நூற்பாளர்களின் கடும் போட்டி காரணமாகவும் பெரும்பாலான பட்டு நூற்பு ஏனங்கள் நலிவடைந்ததன் காரணமாக பட்டுக்கூடுகள் மற்ற அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்றன. பட்டு நூற்பு சிறு தொழில் பிரிவுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று நடைமுறை மூலதனக்கடன் மீதான அதிக வட்டி வீத ஆகும். புதிய பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கவும், நலிவடைந்த பழைய ஏனங்களைப் புதுப்பிக்கவும், பட்டு நூற்பாளர்கள் வாங்கியுள்ள நடைமுறை மூலதனக்கடனின் அதிக வட்டியை மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதால் 1987—88-ம் ஆண்டில் 75 புதிய ஏனங்களும், 75 புதிய சர்க்காக்களும், 100 பழைய ஏனங்களும் பயனடையும். இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 4.38 இலட்சம்.



1987 ஏப்ரல் 27]

**(3) மத்திய நிதி உதவித் திட்டங்கள்:**

**(அ) இரு சுழற்சியின பட்டுக் கூடுகளுக்கு ஊக்கத் தொகை:**

பெங்களூரில் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் கருத்தின் அடிப்படையில், 1987—88-ம் ஆண்டில் 15 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகளை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 4.50 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இரு சுழற்சியின பட்டு வளர்ப்பில் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடுசெய்ய ஒருகிலோ பட்டுக்கூடுகளுக்கு ரூ. 5 வீதம் ஊக்கத் தொகையாக பட்டு வளர்ப்போருக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காகும் செலவான ரூ. 22.50 இலட்சத்தை மாநில அரசும் மத்திய பட்டு வாரியமும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

**(ஆ) இரு சுழற்சியின பட்டிற்கு ஊக்கத் தொகை:**

இரு சுழற்சியின பட்டுக் கூடுகள் மாநிலத்திலிருந்து செல்வதைத் தடுக்கவும், இரு சுழற்சியின பட்டு உற்பத்தியை மேற்கொள்ள, பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கவும், ஒரு கிலோ பட்டிற்கு ரூ. 50 வீதம் ஊக்கத் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதத்தை மாநில அரசும் மீதமுள்ளதை மத்திய பட்டு வாரியமும் ஏற்றுக் கொள்ளும். 45,000 கிலோ இரு சுழற்சியின பட்டிற்கு ஊக்கத் தொகை வழங்க ரூ. 22.50 இலட்சம் செலவாகும். இதனை மாநில அரசும் மத்திய பட்டு வாரியமும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

[1987 ஏப்ரல் 27

**(இ) பயிர் காப்பீடு:**

அயல் இனமான இரு சுழற்சியின பட்டுப் புழு வளர்ப்பு கவனமாக கையாளப்பட வேண்டும். இதனால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்ய, 100 நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு ரூ. 20 வீதம் பயிர் காப்பீடு பிரிமியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15 இலட்சம் நோயற்ற இரு சுழற்சியின முட்டை தொகுதிகளுக்கு காப்பீடு பிரிமியம் வழங்க ரூ. 3.00 இலட்சம் செலவாகும். இதில் 25 சதவீதத் தொகையினை விவசாயிகள் ஏற்றுக் கொள்வார்கள். மீதமுள்ள 75 சதவீதத்தை மத்திய பட்டு வாரியமும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்துக் கொள்ளும். மாநில அரசின் பங்கு ரூ. 1.12 இலட்சம் ஆகும்.

**(ஈ) சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல்:**

மாநிலத்தின் பீடபூமிப் பகுதியில் மானாவாரி நிலத்தில் மூசுக் கொட்டை பயிரிடுவதை மேம்படுத்த சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் பெண்களே ஈடுபடும் பட்டு நூற்பு மற்றும் இளம்புழு வளர்ப்பு திட்டங்கள் ரூ. 212.13 இலட்சம் செலவில் தீட்டப்பட்டுள்ளன. இத் திட்டங்களுக்கான செலவில் எழுபத்தி ஐந்து விழுக்காட்டினை சுவிஸ் அபிவிருத்தி நிறுவனமும், மத்திய பட்டு வாரியமும் பகிர்ந்து கொள்ளும். மீதமுள்ளதை மாநில அரசு ஏற்றுக் கொள்ளும். முதல் கட்டத்தின் கீழ் முதல் ஆண்டில் இந்த 9 திட்டங்களையும் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் ரூ. 51.55 இலட்சத்தில் மாநில அரசு தனது பங்கான ரூ. 12.89 இலட்சத்தை ஏற்றுக் கொள்வதென்று தீர்மானித்துள்ளது. இத்திட்டங்கள் சுமார் 600 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

6. மாநில திட்டங்கள் தவிர, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம் ஆகியவற்றின் கீழ் பட்டு வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும்



1987 ஏப்ரல் 27]

போர்டு பவுண்டேசன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

7. 1985—86 மற்றும் 1986—87 ஆம் ஆண்டுகளில் முக்கியமான பணிகளில் செய்யப்பட்ட சாதனைகள், 1987—88 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்படவிருக்கும் குறியீடுகள் பற்றிய விவரங்கள் இணைப்பு II-ல் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

**தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்:**

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், இம்மாநிலத்தில் கைத்திறன் பொருட்களின் வளர்ச்சிக்குப், அதன் விரிவாக்கத்திற்கும் தனியானதோர் எழுச்சியையும், புதிய வழி முறைகளையும் உருவாக்கி கைத்திறத் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதற்காக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்தின் கொள்கைகளில் ஒன்றின் அடிப்படையில், கைவினைஞர்களுக்கான உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருள்களை தமிழ்நாட்டிலும் மற்றும் இதர மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் சமீபகால சாதனைகள் கீழ் வருமாறு:—

**விற்பனை:**

1985—86 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் விற்பனை ரூபாய் 292.57 இலட்சமாகும். 1986—87 ஆம் ஆண்டிற்கான இலக்கு ரூ. 300 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும், இந் நிறுவனம் ஜனவரி 1987 வரை ரூ. 223.37 இலட்சம் விற்பனை செய்துள்ளது.

[1987 ஏப்ரல் 27.

1985—86 ஆம் ஆண்டின் உற்பத்தி ரூபாய் 80.31 இலட்சமாகும். 1986—87 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு ரூபாய் 88 இலட்சமாகும். இந்த நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கில் ஜனவரி 1987 வரை உற்பத்தி ரூ. 73.45 இலட்சமாக உள்ளது.

அகில இந்திய கைத்திறன் பொருள்கள் வாரத்தில் விற்பனையின் பேரில் தள்ளுபடி கொடுக்கும் உதவியை முறையே 1984—85 மற்றும் 1986—87-ல் நீட்டித்துள்ளது. 1985—86-ல் செயல் விளக்கப் பயிற்சிக்காகவும் வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் போன்றவற்றிற்காகவும் ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**1987—88-க்கான திட்டங்கள் :**

சென்னையில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், காஞ்சிபுரத்தில் சிறப்பக் கலைக் கூடம் நிறுவுவதற்குமாக அரசின் பங்கு மூலதனமாக ரூ. 8 இலட்சம் 1987—88-ம் ஆண்டில் கொடுத்து உதவுவதற்கான செயற் குறிப்புகள் உள்ளன.

**நிதி நிலைமை :**

**1983—84 மற்றும் 1984—85-ம் ஆண்டுகளில் நிறுவனம் ரூ. 2.35 இலட்சம் மற்றும் 0.76 இலட்சம் (தோராயமாக) நிகர இலாபம்** ஈட்டியுள்ளது. 1985—86-ல் இலாபம் ரூ. 1.07 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இணைப்பு—I

1986—87-ல் மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றம்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1978–79 முதல் 1986–87 முடிய வழங்கப்பட்ட நிரந்தரப் பதிவு சான்றிதழ்கள். | 1978–79 முதல் 1986–87 வரையிலான வேலை வாய்ப்பு. | 1978–79 முதல் 1986–87 வரை (31–1–1987) மாவட்ட தொழில் மையங்கள் மூலம் நிதியுதவி. தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 திருச்சிராப்பள்ளி .. | 3,491 | 35,868 | 1,803 | 3.858 |
| 2 புதுக்கோட்டை ... | 1,766 | 17,864 | 1,239 | 1.950 |
| 3 தஞ்சாவூர் .. | 2,729 | 23,919 | 964 | 1.969 |
| 4 தென்னாற்காடு .. | 3,329 | 28,153 | 759 | 1.264 |
| 5 வட ஆற்காடு .. | 4,049 | 39,195 | 835 | 2.128 |
| 6 செங்கற்பட்டு .. | 6,310 | 72,564 | 4,820 | 77.583 |
| 7 கோயம்புத்தூர் .. | 9,144 | 1,00,521 | 1,336 | 14.599 |
| 8 நீலகிரி .. | 597 | 7,533 | 61 | 0.011 |
| 9 பெரியார் .. | 3,204 | 32,911 | 1,111 | 0.851 |
| 10 சேலம் .. | 7,193 | 34,417 | 3,853 | 4.849 |
| 11 தர்மபுரி .. | 1,869 | 19,503 | 835 | 2.477 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-1?

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

| செயல் பணி. | அலகின் அளவு. | சாதனை 1985-86. | சாதனை 1986-87 (ஜனவரி 1987 வரை.) | குறியீடு 1987-88 (நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவை.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 4 கச்சாப் பட்டின் உற்டத்தியை அதிகரித்தல். | இலட்சம் கிலோ கிராம் | 3.00 | 2.73 | 3.00 |
| 5 நூற்புத் திறனை மேம்படுத்துதல்.— | ஏனங்களின் எண்ணிக்கை. | | | |
| (அ) அரசுத் துறை .. | .... | 80 | .. | .. |
| (ஆ) கூட்டுறவுத் துறை .. | .... | 100 | .. | .. |
| (இ) தனியார் துறை .. | .... | 302 | .. | .. |
| (ஈ) புது ஏனங்கள் வட்டி மானியத்துடன். | .... | .. | 150 | 75 |
| (உ) புது சர்க்காக்கள் வட்டி மானியத்துடன். | .... | .. | 140 | 75 |
| (ஊ) பழையஏனங்களை செயல்பட செய்தல் வட்டி மானியத்துடன். | .... | .. | 152 | 100 |



**தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம், காஞ்சிபுரம்.**

**1985-86 மற்றும் 1986-87-ம் ஆண்டுகளில் முக்கியமான பணிகளில் செய்யப்பட்ட சாதனைகள் மற்றும் 1987-88-ம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்படவுள்ள குறியீடுகள்.**

| செயல் பணி. | அலகின் அளவு. | சாதனை, 1985-86 | சாதனை, 1986-87 (ஜனவரி 1987 வரை). | குறியீடு 1987-88 (நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவை.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கச்சாப்பட்டு நூலை கொள்முதல் செய்தல். | கிலோ கிராம்கள் | 1,14,312 | 1,36,841 | 1,35,000 |
| கச்சாப்பட்டு நூலை விற்பனை செய்தல். | ஷை. | 1,10,728 | 1,32,359 | 1,35,000 |

135526